116605

MTMI,N
1.72
116605

உ

கடவுள்துணை.

நாளுமந்திரிவிலாசம்.

திருவள்ளுவகுலதிலகராகிய

குளும்பேடு

ச. முத்துகிருஷ்ணதேசிகர்

பௌத்திரரும்

செய்யூர்

சோதிடம்இராமசாமிபக்தரது

புத்திரருமாகிய

பாலகவி

திருமூர்த்திநயினார்

நூதனமாகஇயற்றி,

திரிசிரபுரம் - மஹாவித்வஜ்ஜனசேகரராகிய

வி. கோவிந்தபிள்ளையவர்கள்

குமாரர்

நாராயணசாமிபிள்ளையவர்களால்

பிழையறப்பரிசோதிக்கப்பட்டு,

—:o:—

பால்குரிகி

குமாரையரவர்களது

களாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமோதூத௵ ஐப்பசி௴.

0-892 M7M1, N
M72

116605

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

சிறப்புப்பாயிரம்.

ம-ா-ா-ஸ்ரீ,

மஹாவித்வஜ்ஜன் சேகரராகிய

திரிசிரபுரம்,

வி. கோவிந்தபிள்ளையவர்கள்குமாரர்

நாராயணசாமிபிள்ளையவர்களியற்றிய

எழுசீர் ஆசிரியவிருத்தம்.

குளகம்.

நீர்தரும் பதும வேத னங்களை யீந்த செங்கையி னிரங்கனென்
சூர்தரும் புதல்வ னொன்ற ளித்தருளு மாதி மூலபர னாரணன்
கார்தரும் பசிய மேனி மாயனொளிர் கண்ணன் விண்ணவர்க ணாயகன்
சீர்தரும் பொறியி னேச னீன்றபுவி சேரு மோர்திலக மானதால். (க)

மீதுவா னளவு சோலை சூழ்வ திமை யோரி னீணகரை வெல்வதூர்
மோதுவா ளையுகள் செய்ந்நி றைந்ததிக மொய்த்த மூதமர்செய் யூரில்வாழ்
கோதுவா சகமு ருதவன் கொடிய நட்டர்நே சமற கொரன்கிலான்
ஓதுவா ருசெய்கு ரூரர் நெஞ்சதிர வுண்மை சொல்லுமதி யின்மையான். (உ)

முன்ன ரொன்றுசொலி யெய்க்கு மூட்முழு லோபர் தங்களை முருக்குவோன்
நன்னர் நெஞ்சமதி லஞ்செழுத் தமதி நாரம் வேய்ந் தவனை யன்றியே
பின்ன ரொன்றுமுன லாத வன்பெறு ப்ரதாப முத்தமி ழுணர்ந்தவன்
மன்னர் நீதியுணர் நீர னன்றிகொ ளிராம சாமிதவ மைந்தனே. (ங)

ஒத்த விஷ்கபட நெஞ்ச ரன்மறை யுரைத்த வள்ளுவர்கு லத்தினன்
மூத்த க்ருஷ்ணனது பேர னைந்திரு மூர்த்தி யெனநு மபிதானவன்
சித்த பஸ்பமுற வென்று அர்க்கையரு டேரி யொண்ணளகை மன்னனோர்
தத்து கஷ்டமுற வித்த நீதியறி சத்யமங் திரிக ணல்லவரால். (௪)

உற்ற காதையைவி லாச ரூபமென வொப்ப விற்பன முதிக்கநூல்
கற்ற ஞானவழி யுற்ற மேலவர்க ளிக்க வேளையர்து ளிர்க்கவே
பெற்ற வேழிசை விரித்த மாண்விதி பிறக்க வின்சுர மிருக்குமால்
சுற்ற வேபரத மேவி ராகமொடு சொற்ற தாளமினை சேரவே. (ரு)

மூலவா சகமொ ழிந்த நேர்மையின் முதிர்ந்த செந்தமிழ் விரிந்தபாக்
கோலமா னதரு செஞ்சொ லின்சொலொடு கூட நன்மையுற வோதியே
சாலவா கனமொ டொட்டுநீங் கிருதொ ளாயிரத் தருரு சக்லவான்
டேனுமா னிமதி யேயரங் கமதி லேற்றி யச்சிசைசெய் தானரோ. (சு)

சிறப்புப்பாயிர முற்றிற்று.

சாற்றுக்கவிகள்.

உ
காஞ்சூர். வேதகிரிமுதலியார்குமாரர்

ஆறுமுகமுதலியார்சொல்லிய

வெண்பா.

செய்யூ ரிராமசா மிப்பக்தன் சேயாகும்
மெய்யன் றிருமூர்த்தி மேதக்கோன்-வையம்
உலாசமுற நாலுமந்த்ரி யொன்கதையைப் பாவாய்
விலாசமதாய்ச் செய்தான் விரித்து.

இ. கோ. நாராயணசாமிபிள்ளையவர்கள்

மாணாக்கருளொருவராகிய
பழவேர்க்காடு,

இரத்தினவேலுமுதலியாரவர்களியற்றிய

ஆசிரியவிருத்தம்.

அம்புவியினம்பகமெனும்புகழியம்பிடவறம்படவிளம்புகவிஞன்
ஆண்மைமிகுவள்ளுவனெனப்பெயரடைந்தோங்குமவர்மரபின்வந்திசைகள்
இம்பரிலுமெம்மையர்கடம்மனையெனும்பெயரிதிம்புலவரும்புத்தியில்
ஏறுதிகரித்தலமிதற்குவலமையாகுமென்றேங்குசெய்யூர்ப்பதியினன்
அம்புயனெனும்பர்தமருமபரிசெிம்புகழறஞ்சோதிடங்கற்றவேள்
ஆதிரனிராமசாமிப்பக்தனகுமார்க்தனிர்த்தசேயென்னுமதிஞன்
வெம்பலொடிடம்பமுகுதம்புரவரின்பமுறமேன்மைமிகுநாலுமந்த்ரி
விலாசமதியற்றினன்றிருமூர்த்தியென்னுமொருவிசிதவபிதானத்தனே.

தஞ்சை,
அ. வே. பாலவைரக்கண்

வேலாயுதப்புலவரியற்றிய

விருத்தம்.

உலாசமுடன்புவியிலுள்ளோர்தொன்றுதொட்டுவாசித்துள்ளுவக்குகின்ற
சொலாசமுள்ளநாலுமந்திரிக்கதையைச்செந்தமிழாற்சொற்சோர்வின்றி
விலாசமெனப்பாடியரங்கேற்றியச்சேந்திரந்திவிட்டுவிளங்கச்செய்தான்
குலாசமுடன்றிருமூர்த்திநாயகனொன்றனைக்குங்குரிசின்மாதோ.

சென்னை-புரசை,

சோதிட. முத்திருளப்பண்டிதரியற்றிய

ஆசிரியவிருத்தம்.

சொற்சுவைபாம்பாடமனஞ்சற்றுமேதான் சோராமலின்பங்கள்சுரந்துகா
ட்டும்-சுந்தரஞ்சேர்நான்கமைச்சர்கீதியாகத்தொடுசரிதைவிலாசமதாய்த்தொகுத்
தநேராய், பற்பலராகந்தாளங்கானத்தோடுபாடியரங்கேற்றியச்சிற்பதித்தான்மி
க்க-பதிவளமும்பாலிகதிருள்முஞ்ஞூம்பத்தர்மிகுதொண்டைநாட்டுப்பதியமேவு

ம், சிற்சுகமும்பேறுதருசெய்யூர்வாழ்வோன்சி[illegible]னடியைத்தினமறவாதேத்துமக
னல்-சித்தர்பலநூலாய்ந்துதேர்ந்தநிலைச்செம்மல்சோதிடராமசாமிபக்தன், அற்பு
தஞ்சேருந்தவத்திற்றோன்றுஞ்சேயன்அழகுறுநல்விவேகமுளவரசர்மெச்சு - அற
ஞ்செய்குணபாலகவிதிருமூர்த்தியென்னும்அலங்காரக்கீர்த்திபிரஸ்தாபனன்றே.

இராயபேட்டை,

நா. வி. ஆ. அப்பாவுபண்டிதரியற்றிய

வெண்பா.

நாலுமந்தி ரிக்கதையை நல்விலாச மாப்பாடி
நூலறிஞ ராற்பலகா ணேக்குற்றன் - பாலதிரு
மூர்த்தியெனப் பேர்திகழு முத்தமிழி னிற்குழகன்
சீர்த்திசந்ரா மச்சுவாமிச் சேய்.

கல்யாணபுரமெனும் பெங்களூர்,
அரகுமாநகரம்

சு. இராமசாமிப்புலவரியற்றிய

நேரிசையாசிரியப்பா.

கடலேழினையுமருங்கினிலுடுத்த, நெடும்புவிதன்னினீர்வளமிலவள், மிக்குசா
தாகிவிளங்கும்பொய்கையிற், பக்குவமாகப்படர்ந்திலகியகற், குமரைத்தாளிற்ற
ாளமுதிர்க்க, வரமபொற்சிறகனமயர்ந்துகண்வளரப், பணைகளிற்களித்துப்பாய்
வராலினங்கண், மணமுறும்பலர்வின்கனியினையுதிர்க்கக், கதிரவன்றடந்தேர்கட
க்கொணுமதில்சூழ், பதியெனுஞ்செய்யூர்வாழ்பல்கலைதெரி, இராமசாமியெனும்
பெயர்வருத்த, கோமான்றவத்திற்குவலயங்களிக்க, வுதித்தசேயனும்பருந்திடுக்கி
டக், கதித்தசெந்தமிழ்பகர்கல்விக்கட்லோன், முப்புரமெரித்தமுக்கணன்சேவடி,
ஒப்புறப்பதித்தோனுயர்மதன்வெள்கும், வடிவினனிசையுணர்வல்லான்கவிஞர்
படிமிசைப்புகழும்பாக்யன்சிலாக்யன், சீர்த்திங்கிறந்ததிங்கள்முகன்றிரு, மூர்த்
திநயினார்முச்சகம்வியக்க, நாலுமந்திரிநிடகம்புகன்றன், மாலிதைக்கேட்டே
வளைகடல்படுத்தான், அரன்கலையங்கிரியதிற்புகுந்தொளித்தான், விரிஞ்சனும்
பொருட்டுள்விழைவொடுபுகுந்தான், அறுமாவடைந்தேமுருகன்றியத்தான், கு
றுமுனிபொதியமலையினையடைந்தான், இருசகஸ்திராவெழாமற்சேடன், உர
கருலகமோடினனென்றாற்,புலவர்களிந்நூற்புலமைதேர்ந்து, சொலவியல்பாமோ
நலஞ்சொளிக்கீர்த்திநாட்டினன்மாதோ.

இராமசமுத்திரம்,

க. திருவேங்கடஸ்வாமிநாச்சரியற்றிய

ஆசிரியவிருத்தம்.

விஞகவிகைமதவேளெறிந்தமலரால்நெற்றி விழியாலெரித்தபரமன் வேண்
டியதனஞ்சயன் கானமதைவேட்டுவநல் வேடந்தரித்துவந்தே, எதிர்நின்றுவீண்ச
மர்புரிந்தேவரந்தந்த வென்குணத்தோனணிசரண் 'எஞ்ஞான்றிறைஞ்சிடும்சிவசு
மையமணிதீபம் இசைவளர்ந்நிலகுருமுனன், மதுமலர்த்தண்டலைகள்சூழுமா
செய்யூரன் மாசிலாநன்னெறியினன் வாதிடுங்கருதலர்மடங்கலான்றிருமூர்த்தி
வளருமுத்தமிழாகரன், நதிகுலத்துங்கமந்த்ரிகளுல்வர்சரிதையினை நன்னாடகம்
பகர்ந்தே நன்மையுறவச்சிட்டளித்தானெனர்மடமைய னடுக்கியுளடங்கிறனே.

வேலூர்,

சுப்பராயதேசிகர்குமாரர்

அரங்கசாமிதாசரியற்றிய

விருத்தம்.

நதியணிந்தவேணியன்ருள்மறவாத்தீரர்நான்கடிச்சர்சரிதைதனைநாலேழும்
உதகமின்சவாழ்மாக்களுங்களிக்கவுக்கமிருபாவனருசிதமென்ன
நிதிபூத்தவயல்கணிறைசெய்யூர்வாசன்நிபுணர்புகழ்ராமவேளீதனின்ற
மதிவதனன்றிருமூர்த்திவித்வரத்தினன்மதூரமுறநாடகம்யவசனித்தானே.

மதுரைநகராள்வேந்தநால்வர்விட்ட வண்மைசொன்னன்வர்த்தகன்றன்
வாதுசொன்னன், விதுரனளகாபுரிக்கோனியல்பைச்சொன்னன்வேதாந்திதர்க்
கையுரைவிபரஞ்சொன்னன், புதுமைதர்யாருகதையறுதிசொன்னன்போதவா
த்ரமடந்திரிபுகறைச்சொன்னன், சதிமுன்றும்போனவகைச்சூட்சமஞ்சொன்னன்
தனஞ்சயனுந்திருமூர்த்திதகைமையோனே.

திரிசிரபுரம்,

வீ. ஸ்ரீநிவாசதாசரியற்றிய

விருத்தம்.

இருநிலம்புரக்குமாதியிணையடிவணங்குந்அயோன்
திருமூர்த்திநயினர்பூவிற்றிருவுளங்களிந்துசொன்ன
பெருமைசேரமைச்சர்நால்வர்பேசரும்விலாசத்தின்சீர்
உரைசெயவெண்கணன்மாவாகனும்மடங்குவாரோ.

இஃது.

வல்லிபுரம்,

எ. நாராயணசாமிதாசரியற்றிய

ஆசிரியவிருத்தம்.

நீர்பரவுமுல்லைகொடியினிலைமைத்தருள்செய்திருமலன்சரணதோத்ர
நீடுவயல்சூழ்திருச்செய்யூரில்வாழும்நன்னிதிசற்பாத்ரபுனிதன்
பேர்பரவுசோதிடவிராமசாமிக்குரிசில்பெட்புடனளித்தசெம்மல்
பேரானகவிவேந்தர்புவிவேந்தர்மகிழ்வுடன்பெருமையாய்ப்பேசுநிபுணன்
சீர்பரவுபாலகவிதிருமூர்த்திநாவலன்நீந்தமிழினூற்கூறிய
திறமைமிகுநாலுமந்திரிவிலாசத்தினதுசீர்மையைச்செப்புதற்கே
ஏர்பரவுஇவிரியன்நாகனும்வேதியனுமிக்கொரிதேவர்முதலோ
ரினைத்துமவம்வாடிநுசென்னிலேயாமிதையியம்பவியலாதுமாதோ.

சென்னைபுரை,

சுப்பராயதாசரியற்றிய

ஆசிரியவிருத்தம்.

கார்கொண்டமுகிலினம்வளமருவுமலைகளுங்கக்கமூலங்கள்பலவும், கமழ்மி
ன்றாமரைமலர்ச்சோலையொடுவாவியுங் கதிர்பரவுசெய்யூரில்வாழ், பேர்கொண்ட

சோதிடவிராமசாமிப்பக்தர்பிரியத்துதித்தமைந்தன், பிரபலச்சகுணகெம்பீரதிரு
மூர்த்திவேள்பிழையிலாப்பனுவலொன்ருய்,ஏர்கொண்டநான்மந்திரிக்கதைவிலா
சமாயினியசொற்பொருளியாப்புடன், இசைமோனையொடுகூடியீகாந்திலக்ஷண
மியன்றதனைசிதையாமலே,நேர்கொண்டதாளங்கள்காலமதுதவருமனேராயெடு
த்துரைத்து,நீட்டினன்புகழவுங்காட்டினன்றன்கீர்த்திதிறவினன்புவியின்மாதோ

இஃது.

சேவலைப்புரை,

சின்னசாமிப்பண்டிதரியற்றிய

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நீர்கொண்டரஞ்சிதகனந்திரள்பொழிந்திட நிதஞ்சருவசம்ப்ரமங்க ணெரு
ங்கியவளங்களுறுபொங்கமதுதங்குநல நீணிலத்துலவுஞ்சுர, வார்கொண்டதந்த
கண்மலிந்துலவுதந்திர மடங்கலுமுணர்ந்துதேர்ந்து மஞ்சொடுகலந்ததமருதந்
த்ரமதியொன்றுநான் மந்திரிகளின்கதைதனைத், தார்கொண்டசங்கீதமாவலங்கிர்
தவிலா சம்புனைந்தவனொனில் தண்கமலமுங்கமுகுமெங்கணுமடர்ந்தவிரி தரு
காவனங்கள்சூழுஞ், சீர்கொண்டநன்செய்வளர்புன்செய்வளமுங்குலவு செய்யூ
ரிலுறைமங்களன் சிறந்திடுசிதந்தவழருங்கலையொருங்குமுணர் திருமூர்த்திபுல
வனன்றே.

விட்டகுறைதொட்டகுறையொட்டியவதிட்டமுறுவித்தகவிவேகசாரம் மி
க்குறுகலைப்புணரியிற்பதபயிற்சிவிளை வித்தகமலர்ந்துபின்னைத்,திட்டமுடனிப்புவி
யினிற்பெயர்புகழ்ப்படவி சித்திரபுராணகாவ்யஞ் செப்புறுபலப்பலகவிப்பயிர்வி
யப்பெழச் செய்குவாரறிஞரன்ன, பட்டடர்மகத்துவ திருக்குலவியற்செபூர்ப்ப
திஜோஷ்யராமசாமி பத்தர்பிரியத்தவசுதித்ததிருமூர்த்திவிற் பனர்நாலுமந்த்ரிக
தையை, நட்டுவரினம்பலர்நடித்துநடனம்புரிவி லாசமாய்ச்செய்துமகித லர்க்கு
மெளிதிற்பரவவச்சதனிவிட்டலகி லாப்புகழையுற்றனனரோ.

சென்னைப்-புதுபேட்டை,

பெ. திருவேங்கடஸ்வாமிபண்டிதரவர்கள்மாணுக்கரிலொருவராகிய,

கு. சபாபதிபக்தரியற்றிய

ஆசிரியவிருத்தம்.

எம்மரபிற்பெரும்புகழோன்றிருமூர்த்திபுருஷோத்தமன் இயம்புநால்வர்
செம்மல்விலாசத்தினையோர்ந்தரனேறும்விடையைவிட்டான் சிலைவேடந்தை
சிம்மதமேலயர்வுற்றுத்துயில்புரிந்தான்கலைமகளும் சிந்தைநொந்தாள்
எம்மையிலுஞ்சேடனும்வாய்விடுவதிலெனறமையைப்போல்இருக்கின்றனே,

புதுவை.

நா. பா. பொன்னுசாமியவர்களியற்றிய.

விருத்தம்.

மணிவளருமணிகணிறைபொழில்சூழ்செய்யூர்மாசில்திருவள்ளுவனூர்மரபி
ல்வந்தோன், பணிவளருஞ்சோதிடநூல்பருக்கவல்லோன்பற்றுனனிராமவேள்ப.

க்தனற்சேய், அணிவளருந்திருமூர்த்திகவிஞர்கோமான்அன்னையைப்போற்றவைய நிறைந்தாதரிக்குஞ்சீமான், திணிவளருஞ்சதுரமைச்சர்காதைதன்னைத்தென்மொழிவிலாசமதாய்ச்செப்பினனே.

சாற்றுக்கவிகள் முற்றின.

இ ஃ து.

மஹா - ள - ள - ஸ்ரீ. பிரபு-புதுவை,

சி. சோமசுந்தரமுதலியார்அவர்களுக்கு

இந்நூலாசிரியர்எழுதிய

சீட்டுக்கவி.

ஆசிரியவிருத்தம்.

திருவளருமகிலபிண்டச்சராசரமெலாம்சிஷ்டித்தளித்தழிக்கும்
திரிதொழிலுடாத்துமெய்ஞ்ஞானதேசோமயத்தீதற்றகருணும்பரன்
சீதவாரிதியிடைத்துயிலுமால்பிரமனுடுசிவனெனவுநின்றவள்ளல்
செந்தாளையனுதினஞ்சிந்தைவிட்டகலாதசீர்த்தியோன்பார்த்திவன்காண்
தருவளருமெழில்புதுவைநகராதிபன்செல்வதனதனெனவந்தமேலோன்
தன்மவுருவலுமசிதம்பரனதிகுலத்துயர்தவத்தினிலுதித்தரத்தினன்
தமிழினுவலர்சொலும்பாமாலைவேய்ந்தபொன்றளராமலருள்மனதிறைன்
தஞ்சமெனவந்தடுத்தோரல்லல்போக்குவித்தாதரித்திடுமுண்மையான்.
கருணைநிறைமுகிலனையவுபகாரனன்பிலாக்கசடலாக்காறுதவன்
ககனமேரடங்கலும்புகழ்ந்திடும்புண்ணியன்கன்னனைநிகர்த்ததிண்யன்
கந்தர்ப்பவேளொனுஞ்சோமசுந்தரப்ரபலகனவானெதிர்ந்துகாண்க
கங்குல்போல்முகமுங்கறுத்திடுமூழுந்தனைக்கருதாமலுனைநாடினேன்.
அருணிறைந்திடுமன்னைபிள்ளையமுமோசைகேட்டமுதமூட்டிக்காப்பதாய்
ஆதரித்தெனதகலிபோக்குவதியாதென்னிலடலுற்றநான்கமைச்சர்
அரியசரிதையைமதுரமொழுகுநல்விலாசமாயவனியர்செவிக்கின்பமாய்
ஆக்கியப்பாக்களைக்கேட்டகக்களியாகியன்புறுவதென்றுபுகழே.

உதவிச்சிறப்பு.

செக்கந்திராபாத் கிரான்சிட் ஆபிசு

புதுவை. வேளாளர்குலதிலகராகிய

பிரபு-மஹா - ள - ள - ஸ்ரீ.

சோமசுந்தரமுதலியாரவர்கள்மீதியற்றிய

விருத்தம்.

மதிகதிர்சூழ்ந்தழகொழுகும்புவியின்மீதுவசுவிருந்தமீகையிலர்வசைபே
ர்நாண, நிதியொடுரத்தினமிழைத்தசால்வைதந்தான்நித்திலமாலிகைதந்தான்நி

றைந்தான், பதிதந்தான்கரிதந்தான்புரவிதந்தான்பாவலர்க்கேயளிக்கப்பரிவு கொண்டான், நதிகுலவேள்புதுவைசோமசுந்தரக்கோமற்கசகந்தந்திட்டலைகவி லப்போமோ.

செஞ்சொல்லுரைபாவாணைக்கண்டேங்கிச் சித்தமலைந்தரிவையர்க்கேசெம் பொன்னியும், வஞ்சமடாரவனிமிசைக்குடிகொண்டென்னவாழ்ந்தெனவிறந்தென் னவண்மையுண்டோ, நெஞ்சமலரிற்கருணையகலாச்செம்மல்நீணிலத்தில்புகழில கிசிலைக்குமேலோன், பஞ்சதருவெனச்சோமசுந்தரப்பூபதியன்றிமற்றுரைப்பக ர்தலின்றே.

இவ்வருக்குவும் ஸ்ரீ அருநியிலிவ்விலாசமரங்கேற்றியதற்குதவிய

பொருட்சகாயஸ்தருடைய

அபிதானம்.

	கூ.		கூ.
ஜோப்பேர். வீ. சின்னையாபத்தர்	ச	தி. சி. காட்டையன்	க
மெஸ்பட்லர். பி. ஆ. பிராஞ்சீஸ்	ய	வீ. மாரிமுத்து	க
பூ. ஐ. அன்னும்மல்	ஞ	மு. ஆறுமுகம்	உ
தி. சி. திருவேங்கடசாமி	ஞ	வே. இரா. இராமசுவாமி	க
வீ. வீராசாமி	ஞ	இராமசாமி	க
பி. தருகையன்	ரு	நா. திருவேங்கடம்	க
பி. பொன்னையன்	உ	சி. டி. சக்கேரியா	க
வீ. வேலாயுதம்	ரு	பி. தனியஸ்	க
டி. பி. அல்லிராஜா	உ	சே. மு. பார்த்தசாரதி	க
பி. ஆ. ஐயாக்கண்	ஞ	அ. தருகு	க
மோமட் இயாகூப்சாய்ப்	க	செகத்குருமுனிசாமி	க
தீம். கிஷ்ணசாமிபண்டிதர்	உ	சா. மெய்க்கேல்	உ
மே. இ. இன்னாசி	க	கூ. மு. வையாபுரி	உ
சுல்தான். எல்லையன்	க	காப்பிரியேல்	உ
பொட்டுக்கார. வீராசாமி	உ	சி. அனந்து	உ
மு. முத்துசாமி	ஸ	சா. சாலமோன்	உ
சி. மாசிலாமணி	உ	மெய்க்கேல்	ரு
தே. அந்நீக்	உ		

புத்தகக்கையொப்பக்காரர்கள்

பெயர்.

பெயர்	பிரதி.	பெயர்	பிரதி.
உ. இ. அரங்கசாமிபிள்ளை	க	க. திருவேங்கடஸ்வாமி	க
அ. ஜெகநாதமுதலியார்	க	தி. சி. திருவேங்கடஸ்வாமி	க
கொத்தவால். முனிஸ்வாமிபிள்ளை	க	தி. சி. அரங்கசாமி	க
ஆ. முனிஸ்வாமிமுதலியார்	க	மே. இலாசர்	க
மகமத்காசிம்சாபேு	க	மெ. அண்ணாமலை	க
டி. போஸ்ட்மாஸ்டர்பி,திம்மையா,	க	நா. பா. பொன்னுசுவாமி	க
தி. இரா. ஸ்வாமிபிள்ளை	க	மே. இ. இன்னாசிமுத்து	க
ம, வி. சின்னையாபக்தர்	க	இ. பொன்னுசுவாமி	க
வீ. வீராஸ்வாமி	க	பி. சி. மானுவேல்	க
ஜான்அப்பு	உ	மு. முத்துசுவாமி	க
சி. டி. சக்கரியா	க	வே. பெ. பொன்னுசுவாமி	க
செ. தா. காளி	ங	வே. பெ. சின்னப்பு	க
வை. வேலாயுதம்	க	மாரிமேஸ்திரி	க
அ. அப்பாஸ்வாமி	க	ஞா. மரியான்	க
வீ. மாரி	க	மு. எ. நாதியப்பன்	க
டேவிட்-ப. அல்விராஜன்	க	பி. துருகையன்	க
நா. திருவேங்கடம்	க	பி. சாமிகாயேல்	க
வே.செ. முத்துசாமி	க	வே. க. வீரப்பன்	க
து. சி. பெருமாள்	க	ஞா. தானியல்	க
சி. மாசிலாமணி	க	மாஞ்சிக்	க
ஆ.சி. முனிஸ்வாமி	க	பொ. வீராசுவாமி	க
நாகமுத்து	க	சு. இராமலிங்கம்	க
க. நாராயணன்	க	அ. மரியகுசை	க
முனிஸ்வாமி	க	திரேசர். அ. சி. முத்துசுவாமி	ங
மதுரை	க	க. மதுரை	ங
கருப்பண்ணன்	க	தி. க. அரங்கசுவாமிதாஸ்	க
யோ. மதுரவாசகம்	க	மாரிமுத்துஉபாத்தி	க
தி. தோ. தானியல்	க	இர. இரங்கசுவாமி	க
பி. தலியஸ்	உ	ஐயாசுவாமி	ந
சு. அரங்கஸ்வாமிதாஸ்	க	பொன்னம்பலம்	க

உ

சிவமயம்.

நாலுமந்திரி விலாசம்.

பாயிரம்.

விநாயகர்காப்பு.

வெண்பா.

பொன்றுருந் திங்கள் புனைசடையோ னீன்றவிரும்
நன்று லஞ்சாக்ஷரக் கணத்தலைவனை - இன்றோர்
அரியவிலா சம்பாட அன்பரகத் துள்ளுறும்
கரிமுகவி நாயகனருள் காப்பு.

வேலவன்துதி விருத்தம்.

ஆலமதமுதாஉண்டோ னென்றுகாலனையுதைத்த
சூலபாணியனுமைக்குஞ் சுதனெனவந்தசோதி
நீலமாகவிரமிற நீணிலம்வலமாய்வந்த
வேலவனெழிற்பொற்பாதம் விருப்பமாயகத்துள்வைப்பாம்.

சதாசிவன்துதி விருத்தம்.

மேதினியெலாமளித்தவையுஞ்சித
வேலையிடைத்துயில்பச்சைமேனிமாலும்
வாருபுரிசிவனுமென்னமூன்றுமானோன்
வண்மைபெறுஞ்சிறுத்தொண்டர்வளயிலேசிசு
காதலுடன்செயினையுண்டுவகையுற்றோன்
சான்றபனிசைத்தவரங்கனமாயீந்தோன்
நாதகிருடியதோளனைவீசன்
சலசமலரிருதாளைத்தலைமேற்கொள்வாம்.

சீதரன்துதி விருத்தம்.

கூர்மாவதாரத்தானைக் குன்றினைத்தாங்கினானை
ஏர்வராகமதானானை இரணியாசுரனைக்கொன்றானைச்
சீர்பெறும்பிரகலாதன் செப்பியதூணின்றானைக்
கார்முகின்மேனியானைக் கனவிலும்போற்றுவோமே.

உமையவள்துதி விருத்தம்.

சுந்தரிவிமலிநீலி சொல்லருஞானசீலி
அந்தரியமலிமாலி யம்பிகையாதிமூலி

தந்திரமேமிவாபி நாண்டவன்மகிழும்பாரி
கந்தனையீன்றமாதின் கழல்களேபோற்றிபோற்றி.

திருமகள் துதி விருத்தம்.

பொன்னிணைப்பழிக்குமெய்யாள் பொருந்துசெம்பவளவாயாள்
பன்னுமிக்திரையாக்கத் தான்பாற்கடலிற்பிறந்தாள்
கன்னல்வில்மதனையீன்ற கமலையாந்திருவின்றாள்கள்
சென்னிமேல்வைத்துநாளுஞ் செயண்டனிட்டிறைஞ்சுவோமே.

கலைமகள் துதி விருத்தம்.

ஆகமவேதநான்கு மருங்கலைபலவுமிங்கு
வாகையாய்த்தழைக்கத்தந்து மால்மருமகளாய்வந்தே
நாகமாயுலகளித்த சதுர்முகனுவில்வாழும்
மாசகலவாணிசெந்தாள் மனதினிற்போற்றிசெய்வாம்.

குருவணக்கம் விருத்தம்.

இருமருவுமெய்ஞ்ஞானபரசபாணி
செஞ்சடையினிற்றரித்தசீதக்கங்கை
மரபிலெழின்மணியெனவேயவதரித்தோன்
மாநிலிலங்கனைவிலக்யமறைநான் காரும்
பெருமைபெறவுரைத்தமிழ்மாக்கடலையுண்டு
பிறங்குபுவிமேற்பொழிந்தபெலைதிகழ்ந்சம்
இருளறவேவொழிக்கவல்லமியீசென்றேதி
எனையாண்டதேசிகன்றாளிறைஞ்சினேனே.

அவையடக்கம்.

அலைகடலிற்சவுநாணசீருஞ்சேர்ந்த
லங்கதனைக்குலமலவென்றகற்றலுங்டோ
கலைமறைநூலாய்ந்துணர்ந்தபுலவர்முன்னிற்
கழறுமறிவீனர்மொழிகசடென்பாரோ
நிலைபெறவேமாகிலத்துநாலமைச்சர்
நிபுணர்கதைநாடகமாய்கிகழ்த்தலன்பால்
குலவுறிறுபாலர்களுஞ்சோசிக்கியென்றே
கூறவதைப்போதுவகைகொள்ளுவீரே.

தரு. தோடையம் - நாட்டை - ஜம்பைதாளம்.

திருவளருமழகேசபுரியையாள் இரணாகேசவேந்தருக்
ஒருவமமந்திரிகளுல்வர்காதையை உலகில்நாடகஞ்சொல்லவே — ஜெ-ஜெ-ஜெ.
சுருதியாகமசாஸ்திரங்களைக் கோத்தறியஞானருபனும்
கரிமுகனெங்சரணடனே நகைக ழல்களுருந் துணையே — ஜெயஜெய.
கள்ளமழவிலாதுள்ளமுங்கலை கருதுமழவினிற்சேர்ந்தவர்
தெள்ளுந்திரிகாலமதிந்துரைக்கின் நின்புயர்சதைவைக்கு நமே — ஜெ-ஜெ-ஜெ.

புள்ளிமாமயிலேறிப்புவிவலம் புகழுடன்வந்தவறுமுகன்
வள்ளிதெய்வானைபிருவருடனிங்கு வந்தருள்புரிந்துகாக்கவே — ஜெயஜெய.
வயலிலதரளமுஞ்சேல்கள்மிளிர்ந்திடும் வண்மைசூழ் ளைகநகரில்வாழ்
புயபலமிகுந்தநால்வர்காதையைப் பூமிசைநாடகஞ்சொல்லவே — ஜெ-ஜெ-ஜெ.
கயமுரித்தவன்புரமூன்றெரித்தவன் காலனையுதைத்தசாம்பவன்
பைரவிசிவசத்தியம்பிகை பார்வதியோடெனைக்காக்கவே — ஜெயஜெய
சற்குணவிரதஞ்சாத்திரவிவேகந் தழைக்குமறைமுதல்யாவையும்
நற்படியுலாசெய்நால்வர்காதையை நாடகத்தமிழால்சொல்லவே — ஜெ-ஜெ-ஜெ.
பற்குணவிரதசாரதியாகியே பாரதத்திட்டமாயனைப்
பொற்கொடியிடைத்திருமகளுடன் போற்றுமடியனைக்காக்கவே — ஜெயஜெய.
போதவாதித்தன்போதசந்திரன் போதவிபூஷணன்வியாபகன்
நீதிபுள்ளவிற்பன்னர்காதையை நிகழும்நாடகஞ்சொல்லவே — ஜெ-ஜெ-ஜெ.
ஆதரையும்பற்பலவுயிர்களி யாவையுமளித்தநான்முகன்
போதாரவினில்வாழுங்கலைமகள் பொன்னடிகடுனைசெய்குவாம். — ஜெயஜெய.

நூல்.

விநாயகர் வருகை.

விருத்தம்.

சுரர்நவமுனிவோர்பூவோர் தொண்டர்களிறைஞ்சிப்போற்ற
அரனயனமரர்தோக்கு மண்டபிண்டங்களுக்கும்
ஒருபொருளா சிந்தென் றேழு ... த்தோன்
குருப ... தஜஸ் குஞ்சரமுகத்தோன்வந்தான்.

தரு. இராகம் - புன்னாகவராளி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

குஞ்சரமுகக்கணபதிவந்தார் - சபைதனிலிதோ - குஞ்சரமுகக்கணபதிவந்தார்.

அநுபல்லவி.

பஞ்சாக்ஷரத்தினி லாடுந்தாயகன் பன்னருமந்திர வித்யாவிநாயகன்
தஞ்சமென்றோரிடர்தீர்க்கும்சற் சாகரன்
சதங்கைதண்டைகுலுங்கும் திவாகரன் (குஞ்சா)

சரணங்கள்.

கங்கையாளகமகிழ்ந்திடு சுபுத்திரன் - வேதாகமக்கலை
கற்பித்திருணீக்கிடு மித்திரன்
துங்கஞளவைக்குக்கைலை தந்தவன்
சுப்ரமண்யர்க்குமுன்னேன்றிபுகந்தவன்

கங்குந்றேகவன்னன் மருமகன்
கரத்திலங்குசபாசமேந்துஞ் சகன் (குஞ்சர)
அயல்பெறும்வல்லபைமருவும் நேசன் - சகலர்நீவினை
யகற்றிவிலாரனைசெய்யுமுல் லாசன்
நயமுகமிலகுந்திரிநேத் திரன்
நாடுமன்பருளம்வாழ்நலக்ஷேத் திரன்
ஜெயஜெயசித்திரமிருமேக தந்தன்
இகழ்ந்திடுஞ்சீதச்சரனுர விந்தன் (குஞ்சர)
சிலமுனிவர்போற்றிடும்விக் நேசன் - நீதியாநந்தன்
சீர்கொண்மூஷிகமேல்வரும்பிர காசனே
ஆலமுண்டசிவன்றனக்குந் தவமே
ஐம்பத்தோரக்ஷரத்திலாடும் நவமே
நாலுமந்திரிகாதைதனக்குக் துமே
நாவில்மெய்குருந்திக்கமகிழ்ந் துமே (குஞ்சர)

பொதுவசனம்.

அகோ அதெப்படியென்றால் நீர்வளம் நில்வளம் என்றுஞ் செழித்திலகிய அளகாபுரிப்பட்டணத்தையாளும் சூரியவம்சோத்தையன் அற்புத விற்பன சற்குணனாகிய அளகேந்திரமகாராஜன் கொலுவலங்கிருதஞ்செய்யக் கட்டியக்காரன் வருகின்றவிதங்காண்க.

கட்டியன் தோற்றம்.

விருத்தம்.

வட்டவாரிதிசூழ்ந்த மாநிலத்தோ[illegible]ங்கச்
பட்டயஞ்சூலம்[illegible]ய்யாள் பாங்குடன்கைப்பிடித்து
அட்ட இச்சகங்கும்போற்று மளகேந்திர பூபன்வாசல்
திட்டமாய்க்காக்கும்வல்ல ஸ்ரீகட்டியன்வந்தானே.

௬. இராகம் - அடாணு. தாளம் - ஆதி.

பல்லவி.

ஸ்ரீகட்டியன்வந்தானே-உக்ரப்ரதாப-ஸ்ரீகட்டியன்வந்தானே.

அநுபல்லவி.

ஞானளகேந்திர இராஜபூபதி
சுபசற்குணமநுநெறியிகவல்ல - சபையிகூணம்வருமெனவசொல்ல—(ஸ்ரீக)

சரணங்கள்.

மருவலருயிருண்ணுங் காலன் - உலகில்
மன்னரகமெச்சிடுஞ் சீலன்
பரிவுடன்சிரிப்புள்ள கோலன் - வெற்றிப்
பராக்ரமமிகரில்லா ஜாலன்

ஸ்ரமாய்ப்புஜங்கள்கொட்டிச் செங்கையால்துடைதட்டி
ஜெயமுறவெவர்களுங்கண்டுயிலங்கிடப்
பயமுடனமரருமெமனெனக் கலங்கிட (ஸ்ரீக)

குச்சுக்கொண்டை யின்னவே - இவனைக்கண்ட
கோதையர்சர ணென்னவே
பச்சைக்கற்பதக்கர் துன்னவே - இகமொழுகும்
பண்புறுமார னென்னவே
கச்சைகட்டிமொருவிக் கண்டவாளக்கருவி
உஜ்தநவமணிகளணிவல்ல வாட்டும்
உஜ்தமுகநுதலில்வெண்ணீறு இட்டும் (ஸ்ரீக)

சங்கைவேணியனைப் போற்றி - அளகேந்திர
காவலன்வருகை சாற்றி
அங்கப்பணிகள் பூட்டி - பாசபந்து
துலங்கவேகைக ளாட்டி
சிங்கத்தைப்போல்கர்ச்சித்து சிம்மாசனமெச்சித்து
இத்தியதிரிதிரிகிர்த்தக்கி டென
சத்துருவெவராகிலுயின முறண்டென (ஸ்ரீக)

கட்டியன்சொல் ஆசிரியவிருத்தம்.

திருமருவுதரணியிசை மணிமகுடவர்த்தனர்கள்
சேர்ந்துசரணென்றுவரவே
தெரிவையர்களடனமிட வேதமறையோர்களுஞ்
ஜெயஜெயாவென்றாற்றப்
பெருமையுளமந்திரி ப்ரதானிசேனதிபர்கள்
பின்னுமுன்னுந்தொடரவே
பேசரியவெகுபரிகளானைரதமேல்வரும்
பெருவேந்தர்திறைதருகவே
கருணைமிகுகரியமால் சேனைவெலன்கன்னன்
கண்டுமனம்நாணியொளியக்
காசினியெலாமொருதனிக்குடையிலாளுவோன்
கதிர்குலமுதித்ததிண்ணன்
அருமைகலைநீதிசாத்திரமுமநுமுறையாவும்
ஆய்ந்திடும்புருஷசிங்கன்
அளகாபுரிக்கதிநின்றுளுஞ்செயாதிபதி
அளகேந்திரன்வருசமையமே.

கட்டியன்சொல் வசனம்.

இராஜாதிராஜன் சூரியவம்சோத்தயன் அளகேந்திரபூபதி சபைக்குவருகிறார் எச்சரிக்கை எச்சரிக்கை.

இராஜன் தோற்றம்.

விருத்தம்.

தரியல ரகமொடுங்கத் தையலர்கவரிவீச
ஆரியவேதங்கள்சொல்லி அந்தணராசிகூறப்
பிரியமந்திரிகள்சூழப் பெட்புடன்செங்கோலேந்தி
அரசருக்கரசனான அளகேந்திரபூபன்வந்தான்.

தரு. இராகம் - சங்கராபரணம். தாளம் - ஆதி.

பல்லவி.

அரசர்க்கரசன்கீசுங் கதிர்குலமகிபதி — அளகேந்திரபூபன்வந்தானே.

அநுபல்லவி.

அருகியந்தணர்களுந் தவயோர்வந்தெதிர்வாழ்த்த
கவனிலாகிருபர்கள் தோற்றிச்சிரங்கள் தாழ்த்த
சுகந்தமலர்கனைத்தகைகொள் — வந்தியர்
புகழ்ந்திறைந்திடமகிழ்ந்து — மந்திரியர்
தொடர்ந்துமருகிலேகி — பேசிட
மடந்தையர்கள்வெண்சாமரைகள் — வீசிட (அரசர்க்)

சரணம்.

காலைக்கோடிசூரியர்கிரணவொளிபோலத்தன
காந்திச்சுடிகை — இலங்க - இரு
காதிற்குண்டலவொளிமாணிக்கப்புயத்தனைக்
கண்டிருபேரன் — கலங்க
கோலமுத்துமாலைகள்தொங்கவிருபுறமுங்
குவலயத்தோர்கை — குவிக்க - வல்ல
கொற்றவனேயென்றெதிர் பற்றார்திறைகொணர்ந்து
குறையகற்றென்று — துதிக்க
சாலமுத்தமிழ்க்கவிராஜாபம்படித்துச்
சங்கீதசுப — மியற்ற - பொற்
றண்டிகையவுதாக்கள் கொடிபடைபவிகள்
தனுவீரர்பிடித் — தயர்த்த
ஓலமிட்டுமேளம்போ லானைசதுரங்கசேனை
ஒபிலாசுநடந்து — வர - வாகர
ஒத்துகுசல்லரிமே ளமிர்தங்கமுமெக்காளம்
ஒலித்திசையினிது — தர
ஆலமதைபுண்ட வானிருபதம் — போற்றி
அவனியயோர்குடைக் கீழ்புரையறமது சாற்றி
ஆளும்விஜயதுரந்தரனெந் நாளும்புகழ்பெறும்வீரனுமன்
அரியகொலுவினிலரியசாசுநியாய்
ஒருமையாயரசாள — மாட்சியாய் (அரசர்க்)

அளகேசன் சிம்மாசனமீதிருந்துசொல்லும்

துதிவிருத்தம்.

அருளிறைந்துதியாரே னமலநிர்க்குணவிலாசன்
இருள்பகலாகியன்ப ரிதையத்துளாடுங்காட்சி
சுருதிநற்கலைகள்யாவுந் சொல்லருஞ்சுடராய்வீசும்
ஒருபொருளான்வீச னிளிர்கழல்களைத்துதிப்பாம்.

மநுநீதிமந்திரிசொல் விருத்தம்.

மாட்சியாமுலகமெல்லா மநுமுறைமுற்றுணர்ந்து
மாட்சியாயாளும்வல்ல தபாளமுமன்புமுள்ளாய்
மாட்சியுமரசர்நாளுங் கர்த்தனேயென்றிறைஞ்சும்
மாழ்ச்சியிலளகேசேந்த்ர சக்ரபூபாலாபோற்றி.

சேருவைக்காரன்சொல் விருத்தம்.

பார்விடுங்கதிர்குலத்தின் றுரைகள்ரத்தினமேபோற்றி
பவனிற்புகழ்பெற்றோங்கும் பார்த்திபாசரணம்போற்றி
பவினின்மாரனென்ன வந்துதித்தவனேபோற்றி
இடரின்றியெம்மையாளு மேந்தலேசரணம்போற்றி.

கட்டியன்சொல் விருத்தம்.

மன்னவர்களிருபுறமிறைஞ்சியேதிறைதந்துன் மலரடியிருந்துதிரா
பன்றுமொழிகேளாதநட்டவிகலரசரைப் பற்றுசிறையிட்டவீரா
கன்னன்மொழிமங்கையர்களுன்னெழிலையென்றுமே கனவின்மறவாதமாரா
சொன்னமிகுமரகதவினையரியவிறைசெல்வமிகு ளராஜனேபராக்கு.

மந்திரியை அளகேசன் அரசாட்சிசெய்கைவிசாரித்தல்.

அ. சிந்துநதிமுலனியிசை மாதமும்மாரிதான் செழிப்புறப்பொழிகின்றதா
ம. செங்கோன்முறைப்படிக் கனுவளவுதவறு சேருறப்பெய்கின்றதே.
அ. அந்திவனைனரிபிரம ராஜியப்பூசைதான் அன்பாய்நடக்கின்றதா
ம. அறைகுவேன்திரிகாலமும் மூவர்கம்பூசை அன்பாய்நடக்கின்றதே.
அ. பந்தைவம்பத்தாறு தேசராஜாக்களும் பகுதிதருகின்றார்களா
ம. பரிவினுடனேயட்ட திசைமன்னர்மறவாமல் பகுதிதருகின்றார்களே.
அ. சந்தமறையோரோதி சுநத்திரியர்குத்திரர்கள் தங்களிலேவிசகுகிறதோ
ம. சங்கையுடனுலுவரு ஆச்சிரமத்துங்களில் சாற்றுகுறையில்லையையா.
அ. புத்திமதிற்வாய்மாதர் கற்புடனவர்தம் புருஷனைத்தொழுகிறரா
ம. புருஷனைத்தக்ஷணமுமொன்றுமனதினிற் போற்றுகின்றார்மன்னவா
அ. அந்தமிருமதனிதே சத்திவினாக்குடிகளுக் கல்லலேதாகிலுண்டோ
ம. அல்லலில்லாமலே நமதுதேசக்குடிக ளார்வமிருகின்றார்களே.
அ. தொந்தமாய்ப்புவிபசு மோர்துறையினிற்புனல் தொன்மையாயுண்கின்றதா
ம. சொல்லிடும்படிதாற் சக்ரநெறியாளின்று தகளின்றிபுண்கின்றதே

அ. நிக்கஷ்ட்ரொகொலைகளவு குதுதூன்மார்க்கர்பகை யிகழ்த்தவேதாகிலுண்டா
ம. கிர்மூடர்பாதநர்கள் குலைகளவெனுஞ்சப்தம் கேர்கனவிலில்லைஎந்தாய்.

அளகேசஇராஜன்சொல் விருத்தம்.

கொற்றவர்களருகிருந்தாகளறுந்தீறும்
கோதறவேமநுமுறையைக்கூறவல்ல
உற்றருணையோசனைநற்செய்கைதீரம்
ஒண்மைபெறுமந்திரியேயோதக்கேளாய்
இறைறவனாந்தேசக்குடிகள்செல்வம்
இயம்பினதெலாங்கேட்டென்மனங்களித்தேன்
சிற்றிடைமீன்விழிமாதர்கொலுமுன்பாகத்
திறமுடனேநடனமிடச்செப்புவாயே.

வசனம்.

கேளாய் நன்மதியுற்ற மநுநீதிமந்திரியே, உலகத்தில் நன்றுந்தீதும் காரணகாரியங்களும், நமதுதேசக்குடிகளுக்குத் துயரமென்பதில்லாம தோஷத்தி லாழ்ந்திருக்கிறொன்றுஞ் சொன்னதை என்னிருசெவியாற் சந்தோஷமானேன் ஆதலால் நமநுகொலுமுன்பாக பாதாகமந்தேர்ந்த பெண்களை வரவழைப்பாய்மந்திரி.

மநுநீதிசொல் வசனம்.

அப்படியேவரவழைப்பேன மன்னவா.

மநுநீதிமந்திரி சேருவைக்குச்சொல் விருத்தம்.

கரிபரிபடைவேல்வஜ்ரங் கதாயதஞ்சூலம்பிண்டி
எரியும்வல்வீரர்க்கெல்லா மியம்புஞ்சேருவையேகேளாய்
கரிகுழன்மாதராஞேர் தோன்றலின்கொலுமுன்பாகப்
பரிவுடனடனமாடப் பண்பதாய்வரச்செய்வாயே.

வசனம்.

ஆடாஅடா வீரசேருவையே, நமதுஅளகேசமகாராஜன் கொலுமுன் காட்டியமாடும்பெண்களை வரச்செய்யும்பிள்ளாய்.

சேருவைசொல் வஞ்சித்துறை.

மன்னன்மந்திரியே, சொன்னசொற்படியே
மின்னிடையார்கொலு முன்னிலழைப்பேன்.

சேருவை கட்டியானுக்குச்சொல் விருத்தம்.

அடல்பெறுமகேசேந்த்ர வரசனுற்கொலுவைக்காக்குந்
திடமுறும்புஜபலத்துத் திரகட்டியனேகேளாய்
துடியிடைமாதராஞேர் நரேந்திரன்சபைமுன்பாக
நடனமேயாடுதற்கு நலமுடனழைத்திடாயே.

வசனம்.

வாரும்பிள்ளாய் கட்டியனே, நமதுமகாராஜன்கொலுமுன்பாகஆடப் பர தாட்டியமாடும்பெண்களை யழைத்துவாரும்பிள்ளாய்.

கட்டியன்சொல் வசனம்.

தங்களுத்தாரத்தின்படி யழைத்தோடிவருவேனையா.

நடனப்பெண்கள் தோற்றம்.

விருத்தம்.

உச்சிதசரிகைச்சேலை யுயரும்நன்முத்துமாலை
மெச்சருஞ்சித்ரவேலை மேவியதங்கவோலை
பச்சைக்கல்லிழைத்தநத்துப் பணிகளையலங்கரித்துக்
கச்சணிநடனமாதர் கடுகவேவருகின்றரோ.

தரு. இராகம் - பந்துவராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

சரசகுசிதாயஇனியமொழிவசனக் தழைக்கும்நடனமாதர்வந்தார்.

அநுபல்லவி.

விரிசைபெறும்விஜயனளகேசன் மகிழவே
மன்னுமூவுலகுளோர்நன்னயமாய்ப் புகழவே
வாருறுமூர்வசிரம்பையுமேனகை ஆகமெலிந்திடுவாரிவர்புன்னகை
வடிவுளதன்னடைசதங்கைகுலுங்கிட திடமுளமுனிவர்கணிலையுங்குலைந்திட—சரச.

சரணங்கள்.

அஞ்சவயதினிற்கொக்கோகம்-முற்றும் - ஆய்ந்துணர்ந்ததிற்பிரபுடகம்
மஞ்சுலாவிடுந்தங்கநேகம்-இவர்-வார்த்தையோசர்க்கரைத்தேன்பாகம்
கஞ்சமலர்வதனமின்னற்றலை யணிசிர்
காமனும்ரதிமாதுங்கழலைப்போற்றிப் பணிவார்
காதினலங்கிர்தருபசவுந்தர சிதமதிவதனதேசுலவுந்தர
கானசங்கீதசரங்களைப்பாடிக் கோனகமகிழ்ந்திடவேகொண்டாடி. சரச.

தேமற்பட்டிங்கிட்டலங்காரம்-வாகாய்த்-திரண்டவிருமுலைச் சிங்காரம்
காமன்வில்லேபுருவஜீரம்-இருள்-கந்தரம்நாணுங்கொண்டைப் பாரம்
வாமமிருஞ்சேற்செண்டைவரிவழியு மிரண்டு
வானுறையுமமரர்நிதிக்கிடுவார் மிரண்டு
மஞ்சரிடைகொடிமேவும்விநோதம் பஞ்சினிலுமதிகமெல்லியபாதம்
மாசிலாதநவமணிப்பணிபூட்டி ஆசைகூர்ந்திடவேயமுகங்காட்டி. சரச

சேலைபளபளென்னமின்ன - மிசை - திகழுமுத்துமாலைகள் துன்ன
வாலைப்பருவமின்னமன்ன - நடை - வாகாயசைந்துகலீ லென்ன
காலைக்கோடிச்சூரியர்கதிர்விடும்பொற் பதக்க
காந்தியொளியுஞ்சந்தக்கைவளையல் சதிக்க
கதம்பபன்னீருந்திமிர்ந்திடுவாசம் இதம்பெறமூவிருகாதமே வீசும் [சரச.
காட்டியிதென்றுலகோர்கனுஞ்சொல்ல மாட்சியுடனேகொலுச்சபைமுன்னில

கட்டியன்-நடனப்பெண்களுக்குச்சொல்-விருத்தம்.

சங்கீதமுச்சரித்துத் தாழ்விலாவிசைபடிக்குந்
தூங்கமேனகையுமற்றத் தோகையர்மூவர்தாமும்
மங்கையரோடெம்வேந்தன் வாழ்சபைமுன்னடிக்க
உங்களையழைக்கச்சொன்னார் ஓடிநீர்வருகுவீரே.

வசனம்.

ஊர்வசி மேனகை யரம்பை திலோத்தமையென்னுந் தெய்வமாதர்கள்மன தூநாணிப்பின்னிடும்படியாய்ச் சுரதகீதம்பாடி நடனமாடும்பெண்களே நமதுதி ராதிதிர ளளகேசபூபதி கொலுச்சமுகம்வரும்படி ஆக்ஞாபித்தார் ஓடிவருவீர்.

நடனப்பெண்கள்சொல் வசனம்.

அப்படியேமகாபாக்கியம்பாக்கியம், இதோவருகிறோம் கட்டியனே.

நடனப்பெண்கள்-இராஜனுக்குப்போற்றிகூறுதல்

கட்டளைக்கலிப்பா.

தேசதேசர்கள்வந்தடிபோற்றிடச்-செந்தமிழ்ப்புலவோர்களிசைத்திடப்
பூசுரர்மறைசொல்லியேவாழ்த்திடப்-பூவையர்கணறுமலர்தூற்றிட
நேசமாய்மந்த்ரிமார்களுஞ்சூழ்ந்திட-நிருபனேயென்றெவர்களுந்தாழ்ந்திட
ஆசையாயளகேசபுரியையாள்-அண்ணலேபொற்கழலிணைபோற்றியே.

இராஜன்-நடனப்பெண்களுக்குச்சொல் விருத்தம்.

அங்கசனிரதியுங்கண் டகமெலிந்தேயிருக்கத்
தூங்கமான்மருளுநேத்ரத் தோகைநல்லாரேவாழி
இங்குமாணமைத்தசெய்தி யேதெனிற்கொலுமுன்பாகச்
சங்கீதகீதம்பாடிச் சத்தினிநடஞ்செய்வீரே.

வசனம்.

ஆ! ஆ! வாரும்பெண்காள் இந்த இராஜசபையிலுள்ள துரைகள்யாவருங் கண்டிசயிக்கும்படியாய் சங்கீதகீதமீட்டி அபிநயப்பதங்களைப்பாடி நட்டுவபராக்கிரமங்களைச் சற்று ஆரம்பிப்பீர்கள் பெண்களே.

நடனப்பெண்கள்சொல் கொச்சகம்.

மன்னவனேநீருரைத்த வார்த்தைபிசகில்லாமல்
பொன்னுலகம்வாழுமந்தப் பூவையர்களுல்வருமே
சின்னமுறக்கீதபரஞ் செப்புசுரமுச்சரித்தே
அன்னநடையாய்நடந்தே ஆடுவோம்பார்த்தருள்வீர்

வசனம்.

கேளுமெங்களையாளுந் தயாநிதியே, அந்தச்சுவர்க்கத்தில்வாழும் ஊர்வசி மேனகை யரம்பை திலோத்தமை இவர்கண்மனம் நாணும்படியாய் வெகுவிநோதசுரமியற்றி அபிநயம்பாடிநடிப்போம் மன்னவா.

தரு. இராகம் - பிலஹரி. தாளம் - ஆதி.

பல்லவி.

முத்தர்தந்தாளுவாய்துரையே - அடியாளுக்கோர்-முத்தர்தந்தாளுவாய்துரையே.

அநுபல்லவி.

நித்தந்தர்மத்தைவளர்க்கும் நிபுணவளகேந்திரமன்னா (முத்த)

சரணங்கள்.

கும்பமுலைரண்டுமீற குவளைவிழிகளிர் சோர
அம்புகொண்டுமதன்சீற அகமெலிந்தும்மைக் கோர (முத்த)
மாலைமதியனலாக வாட்டுதேவிரக போக
மேலுமாகுதேசையோக வேந்தேயென்னையாளன் பாக (முத்த)
தென்றல்புலிபோருவுதே செவ்விதழ்ரச மேவுதே
நின்றுகோகிலங்கூவுதே நேசவுற வாகுதே (முத்த)

இராஜன்சொல் விருத்தம்.

மந்திரிவாராயிந்த வனிதையர்நடனங்கண்டு
சிந்தையுண்மிகமகிழ்ந்தேன் திகழுளரத்னமாலை
இந்திரவன்னப்பட்டு மெழில்பெறுஞ்சரிகைச்சேலை
விந்தையாயவர்தமக்கு வெகுமதிதந்திடாயே.

வசனம்.

கேளாய்மதுநீதிமந்திரியே நமது சபைமுன்பாக நாட்டியமாடிய பெண்களுக்கு விலையில்லாத இரத்தினமாலையும், முத்துமாலையும், நவரத்தினங்களாலிழைத்தபதக்கங்களும், ஆயிரம்பொன்பெற்ற இந்திரவன்னப்பட்டுகளும், சரிகைச்சேலைகளும் இன்னம்வர்க்குவேண்டியவெகுமதிகளைத்தந்தனுப்புவாய்மந்திரியே,

மதுநீதிமந்திரிசொல் வசனம்.

தங்களுத்தாரப்படியே கொடுத்தனுப்புகிறேன்மன்னவா,

மதுநீதிமந்திரிசொல் வஞ்சித்துறை.

பொருபுலிசேர்வையே, தெரிவையர்தமக்கே
அரசனுரைத்த, பரிசளிப்பாயே.

சேருவைசொல் வசனம்.

அப்படியேமகாபாக்கியம் கொடுத்தனுப்புகிறேன் மந்திரியே.

சேருவைசொல் வஞ்சித்துறை.

தகையுளவமைச்சே, வகையுடனுரைத்த
வெகுமதியெல்லா, மகிழவீந்தனனே.

பொது வசனம்.

அகோஅதெப்படியென்றால் அளகேந்திரபூபதி சபையில் நடனமாடியபெண்களுக்கு வேண்டிய வெகுமதிதந்தனுப்பினபிறகு அப்பட்டணத்தில்வாழும் வியாபாரவணிகன் மதுரைசெட்டியென்பவன் ஓர்கண்குருடும், வயிறுகூனும், வால்கூழையும், ஓர்கால்முடமும்பொருந்தி மற்றவவயவங்களிற் குறைவில்லாத பெண்ணொட்டகத்தைப்பிடித்துக்கொண்டு வருகின்றவிதங்காண்க.

மதுரைசெட்டி தோற்றம்.

விருத்தம்,

கண்ணொன்றந்தகம்வால்கூழை கான்முடம்வயிறுங்கூன்
பெண்ணொறுமொட்டகத்தைப் பெட்புடன்கைப்பிடித்தே

தின்னமாய்ப்பிரகை கட்டித் திருவெண்ணீறதுவுமிட்டு
வன்னமாய்வர்த்தகஞ்செய் மதுரைசெட்டியும்வந்தானே.

தரு. இராகம் - தோடி. தாளம் - ஜம்பை.

பல்லவி.

மதுரைசெட்டிநானே-பலபல-வர்த்தகஞ்செய்வேனே,

அநுபல்லவி.

சதுர்த்திசைவாழ்ந்திடுமன்னர்க்கு வேண்டிய
சரக்குகள்குவித்துத்தந்திடும் பாண்டிய (மதுரை)

சரணங்கள்.

பொய்யென்பதைச்சொல்வேன்-சொன்னால்-பொருந்திடும்படி வெல்வேன்
மெய்யைச்சூதென்னுவேன்-பொய்யை-மெய்யெனவே பண்ணுவேன்
கைதனில்வாங்கியரொக்கங்கள் சேர்த்தாலும்
கணக்கினில்பாக்கியென்றெழுதிடுவேன் மேலும் (மதுரை)

கடன்கொடுத்திடக்கெட்டி-யவர்களைக்-கண்டபோதெலாம் வட்டி
உடனுக்குடனேகட்டி-பாக்கியை-உயர்த்திடவில்லை யட்டி
திடமுடன்சரக்குகள்விற்றிட வல்லேன்
ஜெகமுழுதிலும்மென் பெருமைதன்முறை சொல்லேன் (மதுரை)

திருவமாளிகையிலுமே - என்றனைக் - கிளத்துமாகம நலமே
அளகைப்பதியில்நிலமே-என்றன்-அன்னைதந்தையர் தலமே
மறைமதிநதியணிசடையர் திருபதம்
மறவாமல்அதிபுரிந்தேத்தும் வேலிதம் (மதுரை)

ஒட்டகத்துக்கு-மதுரைசெட்டியார்சொல் விருத்தம்.

காற்றினிலுமதிவேகநடையும்வல்ல
கருதுமட்டகிரிகளெல்லாஞ்சிறிதேயென்று
ஏற்றசுமைசுமந்தெனதுவர்த்தகத்துக்
கெழில்பெறும்பெண்ணொட்டகமிந்நாளேவாராய்
சீற்றமிலாவளகேந்திரவரசன்சேவை
தெரிசித்துவருமளவுஞ்சீரோடிங்கு
சாற்றியுனக்கேயளிக்கும்பரிசிப்பையுண்டு
சந்தோஷமனதுடனேதானிருப்பாய்.

வசனம்.

அட்டகுலபர்வதங்களையெல்லாஞ் சுமையாய்ச்சுமக்கும் வல்லமையும், வாயுவேகத்திலு மதிகநடையாய்நடக்கும் என்னருமையாகிய பெண்ணொட்டகமே நாமிந்நாள்பரியந்தம் உலகமெங்குஞ்சுற்றிவந்ததும் மற்றகாரியங்களையும் நமதளகேந்திரபூபதிக்குச்சொல்லி யானவரைத்தெரிசித்து வருமளவும் இதோ உனக்குக்கொடுக்கும்பரிசிப்பைப் பொசித்துக்கொண்டு பதனமாயிரு பெண்ணொட்டகமே.

மதுரைசெட்டி - அரசனுக்குச்சொல் விருத்தம்.

சுத்தரன்மணியிழைத்த சுடிகைபூண்டவனேபோற்றி
இத்தரையெல்லாம்நாளு மின்புடனாள்வோய்போற்றி
சத்தியவிரதநீதி தயைநிறைந்தவனேபோற்றி
உத்தமவளகேசேந்த்ரா உன்னடிசரணம்போற்றி.

வசனம்.

சரணம்சரணம் அளகேந்திரபூபாலகா.

இராஜன்சொல் விருத்தம்.

வல்லமைக்கனவுபாய வர்த்தகத்தனத்தில்மெத்தச்
சொல்லுறுமுத்துசெட்டி சுதனெனவந்துநின்றோய்
எல்லையில்பலசரக்கு மெத்தவுடன்சேர்த்துவிற்கும்
நல்லமதுரைசெட்டி நலமுடன்வாழிவாராய்.

வசனம்.

வர்த்தகத்தொழிலில் உபாயசாமார்த்திய முத்துசெட்டியார்புத்திரராகிய மதுரைசெட்டியாரே, இந்நாள்பரியந்தம் நீயெங்குபோயிருந்தீர். என்னசங்கதி தெரியச்சொல்லும் செட்டியாரே.

மதுரைசெட்டிசொல் ஆசிரியவிருத்தம்.

திங்களார்முன்புநந்தேசத்தைவிட்டுவெளி சென்றனன்மச்சமுகதம்
செழிக்குமாளுவகுச்சதசாளுவக்கன்னட சிந்துமாராட்டிராடம்
பொங்கமிகுகாஸ்மீரகாம்போஜகாளிம்ப போஜகாம்பீரகொச்சி
புகழ்மதங்கக்காசிசரவீரத்ராவிடம் பொற்புறுஞ்சேரசோழம்
வங்கமுமிலிங்ககுருகுர்ந்திருந்தலகௌட வங்காளகௌளகேச
மதங்கைகோளகைவிபலகிரௌசமலையாள வாரிபுடைநிழ்மதியெலாம்
சங்கையறவெனதுபெண்ணொட்டகத்தோடுநான் சகலவிதபலசரக்குத்
தான்சேர்த்துமருவினேனேற்றையதினத்திலிற் சந்நிதியுன்சரணமே.

வசனம்.

சரணம் சரணம் மகிபதியே யென்வியாபாரப்பெண்ணொட்டகத்துடன் கடல்சூழ்ந்தமண்டலங்களெங்குஞ்சுற்றிப் பலவிதமாகிய சரக்குகள்வாங்கியும் விற்பனைசெய்தும் பலசரக்குகளோடு நேற்றையதினந்தான் நமதுபட்டணத்தைச் சேர்ந்தனன், ஆகையால் தங்கள்பாதசேவைகாண வந்தனன்மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

தாரணியெல்லாஞ்சுற்றிச் சரக்குகள்கொண்டுவந்த
சீரணிமதுரைவாழும் செட்டியேமிகமகிழ்ந்தேன்
பேரணியெனதுசேனைப் பெருங்குடிவீரர்க்கெல்லாம்
காரணப்பொருள்களியாவுங் கைவர்த்தகஞ்செய்வாயே.

வசனம்.

கேளாய்வர்த்தக மதுரைசெட்டியாரே, நீயுலகமெங்குஞ்சுற்றிச் சரக்குகள் கொண்டுவந்ததைக்குறித்து மிக்கசந்தோஷமானேன். இனி நமதுகொடிப்படைவீரர் குடிகட்கெல்லாம் கைவர்த்தகமாய் விற்பனைசெய்துகொண்டிரும்பிள்ளாய்.

மதுரைசெட்டிசொல் வஞ்சித்துறை.

ரத்தினக்குன்றே, சித்தமென்பாக்கியம்
உத்தமசொற்படிப், பத்தியாய்ச்செய்வேன்.

விருத்தம்.

வந்தானேரமாச்சு வல்லபெண்ணொட்டகந்தான்
சிந்தனைபலவுண்டாகித் திகைத்திடும்பசியினாலே
விந்தையாயதற்குகந்த வெகுபொசிப்பைப்பொசிக்கத்
தந்திடுவலாற்றிச் சரக்குகள்விற்பன்மேலே.

வசனம்.

ஓ! ஓ! நான்வந்துவெகுநேரமாச்சுதே, எனதருமையாகிய பெண்ணொட்டகம் எவ்வளவுபசியாயிருக்கின்றதோ, ஆதலால் நான்சீக்கிரம்போய் அதற்குவேண்டிய பொசிப்பைத்தந்து பின்விட்டெனதுவர்த்தகத்தொழிலைச்செய்வேனாக.

கொச்சகம்.

அருமனையிற்கட்டிவைத்த அழகியபெண்ணொட்டகத்தைத்
தரியலர்களெவர்கவர்ந்திச் சதிசெய்துசென்றாரோ
உரியபசியிருந்ததனித் தோடிவிட்டதோவனத்தில்
தெரியவில்லையாதென்றன் செயலிதுவோசங்கரனே.

வசனம்.

ஐயையோ காளகண்டதிரிநேத்ரா, சற்றுநேரத்திற்குமுன்பாக நானென்வீட்டிற் கட்டிவைத்துப்போன எனது பிரியப்பெண்ணொட்டகத்தை பகைவர்களோ, அல்லது கள்ளர்களோ, இன்னமெவர்கள் கொண்டுபோனார்களோ, தனியாய்ப்போய்விட்டதோ. எனக்கொன்றுந்தெரியவில்லையே யீஸ்வரா.

மதுரைசெட்டிபுலம்பல்.

கண்ணிகள். இராகம் - ஆகிரி. தாளம் - ஆதி.

என்னசெய்குவேனையோ எதுசெய்குவேனையோ — சூலபாணி - என்றன்
எழில்பெறுமொட்டக மெவ்விதம்போனதோ — சூலபாணி
மன்னுமிவ்வுலகெலா மாளாமலென்னுடன் — சூலபாணி - நான்
வாங்குஞ்சரக்குகளைத் தாங்கிவருகுமே — சூலபாணி
பழுதோர்விழியானாலும் பார்வையதிற்கதிகந் — சூலபாணி - என்றன்
பட்சத்திற்குகந்திடு முச்சிதவொட்டகந் — சூலபாணி
எழுபதுபொன்னைத்தந் தேங்கிவிட்டேனையோ — சூலபாணி - பூவில்
எல்லாவொட்டகத்திலும் வல்லமையுற்றது — சூலபாணி
சூலுவயிருனாலுஞ் சுமைசுமப்பதிற்கெட்டி — சூலபாணி - இதைச்
சொல்லுவார்வணிகர்க ளல்லவொட்டகமென்றே — சூலபாணி
மேதுமோரடிமுட மிக்கவாய்விளைட — சூலபாணி - பாரின்
மேருவதையுர்தூக்க வீரமதற்கதிகஞ் — சூலபாணி

வியாபாரத்தொழிற்கிது விளங்கமிகவுதவுஞ் — சூலபாணி - இனி
விற்பனைசரக்குக ளெப்படிதருவிப்பன் — சூலபாணி
நியாயமோஉனக்கிது நாயனேத்துயராக்கச் — சூலபாணி - இதை
நினைக்கநினைக்கவென் னெஞ்சந்துடிக்குதே — சூலபாணி
கள்ளத்தனமாயெனைக் கபடுசெய்தவராரோ — சூலபாணி - பசிக்
கரகவனத்திற்சென்று காய்கனிலையுண்குதோ — சூலபாணி
உள்ளமுருகியென் னுடல்நடுநடுங்குதே — சூலபாணி - அந்த
ஒட்டகம்போயெங்கு கட்டுப்பட்டிருக்குதோ — சூலபாணி
பட்டணமெங்கினும் பார்த்திட்டுங்காணேனே — சூலபாணி - எந்தப்
பாவிகள்கொண்டுபோய்ப் பதுக்கிவைத்தார்களோ — சூலபாணி
திட்டமதாயெங்குந் தேடியுங்காணேனே — சூலபாணி - வேறு
தேசஞ்சென்றுவிட்டதோ தெரியேனையிம்மூடன் — சூலபாணி

விருத்தம்.

ஒருபடிமாவைக்கிண்டி ஓரடையாய்ப்பொசித்தே
ஒருபொழுதிருந்துசேர்த்த வோரெழுபதுபொன்மட்டும்
அருமையாய்க்கொடுத்துவாங்கி யாதிருவருடமாகப்
பிரியமாய்வளர்த்துவந்த பெண்ணொட்டகங்காணேனே.

வசனம்.

ஐயையோ சிவசங்கரனே, நான்ஒருபொழுதிருந்து ஒரோபடிமாவடைசெய்து பொசித்தும் பொசியாமலும் வயிற்றைக்கட்டிச்சேர்த்துவைத்தபணங்கள் எழுபதுபொன்னையுங்கொடுத்துவாங்கி இந்தப்பன்னிரண்டுவருடகாலமாய்ப் பிரியத்தோடும்வளர்த்த பெண்ணொட்டகம்போனவழியறியேனே, பட்டணமெங்குஞ் சுற்றிப்பார்த்துங்காணேனே யிதற்கென்னசெய்வேன் சாம்பசிவனே.

விருத்தம்.

இடம்பெறவேயெனதுவர்த்தகத்திற்சாகத்
தேசமெங்கும்பலசரக்குத்திறமாய்க்கொண்டும்
அடைவுடனேசெய்தொழிற்சிரதுவும்போச்சே
ஆனதுவுமொட்டகத்தையறிந்திடாமல்
நெடியகடல்சூழ்ந்திடுமிவ்வுலகத்தின்க
ணெங்கிருந்தாலும்மதனைநிகழ்த்திக்காண்பேன்
உடனளகாபுரியைவிட்டுத்தெற்குநானே
ஓடியின்னமுத்திசையுந்தேடுவேனே.

வசனம்.

ஐயோ எனதுவர்த்தகத்திற்காகத் தேசங்களெல்லாம் அருமையாகிய பெண்ணொட்டகத்தைக்கொண்டு வேண்டியசரக்குகள்வாங்கி வியாபாரத்தொழிலைச்செய்து முயற்சியடைந்திருந்தேனே, என்னைச்சிறப்பில்வைத்த பெண்ணொட்டகத்தைப் பட்டணமெங்கெங்குந்தேடியுங் குறிப்பைக்காண்ட தரிதாச்சுதே, ஆனாலிந்தக் கடல்சூழ்ந்த உலகத்திலெங்கிருந்தபோதிலும் அனியணியாயாராய்ந்து

பிடிப்பதற்குச் சந்தேகமில்லை இனி கிழக்கு மேற்கு தெற்கு வடக்குமென்னும் நான்குதிசையிலுந்தேடிப்பார்த்துவருவேன்.

தரு. இராகம் - செஞ்சுருட்டி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

கீழ்த்திசையேகுவேன் - இச்சணமே - கீழ்த்திசையேகுவேன்.

அநுபல்லவி.

பாழ்த்ததெய்வஞ்சதிசெய்ததொட்டகத்தைப்
பார்ப்பேன்வெகுதிடம் தீர்க்கமாய்ப்பல்லிடம். (கீழ்த்)

சரணங்கள்.

பட்டணத்தைக் கடந்தேன்-நேராய்ப்போகும்
பாதையையான் றொடர்ந்தேன்
அட்டமேருபர்வதம்போல்வரைகளும்
ஆறுமுன்னந்தோற்றுதே கார்பனிதூற்றுதே (கீழ்த்)

எங்குவெளிப் பட்டதோ - அல்லது
எவராற்கட்டுப் பட்டதோ
திங்கள்சடையிலணிந்தோனேயானென்றும்
செய்யுந்தொழிற்போச்சே பையமுழிப்பாச்சே (கீழ்த்)

வெகுதூரம் வந்தேனே - ஒட்டையால்
மெலிந்துமனம் நொந்தேனே
குகையடவிகள்பாதைமுற்றும்பார்த்தும்
குறியையுமறியேன் வருகையுங்குறியேன் (கீழ்த்)

கட்டளைக்கலித்துறை.

கீழ்த்திசை வர்தன ஞெட்டகம் போன நைக்கிளக்கச்
சூழ்ச்சியு மில்லை களவதைச் செய்திட்ட துன்டர்களை
மாட்டி கொளுமர சன்சமுகத் தப்பன் வஞ்சமறத்
தாழ்ச்சியி லாமேற் கினிநோக்கிச் செல்லச் சமையமிதே.

வசனம்.

அரசரா சந்திரசேகரா, கிழக்குத்திசைக்கேகி மலைவனந்தாங்களெல்லாந் தேடிப்பார்த்தும் ஒட்டகமகப்படவில்லை, ஆனாலதைக் களவுசெய்தபாதகனைப்பிடித்து என்னரசன்சமுகம்விடுத்துத் தண்டனையிடுவிப்பன் இன்னம் மேற்குத்திசைபோய்த் தேடிப்பார்ப்பதேமேன்மை.

தரு. இராகம் - ஆனந்தபைரவி. தாளம் - ஆதி.

பல்லவி.

மேற்றிசைநோக்கிச்செல்வேன் - இப்போதேநான்
மேற்றிசைநோக்கிச்செல்வேன்.

அநுபல்லவி.

சாற்றருமனேகேந்திர தாயகனுக்குரைத்துக்
காற்றிலிலவம்பஞ்சாய்த்தூற்றிடுவேன்சதைத்து (மேற்றி)

சரணங்கள்.

ஒட்டையால்தொழில்போச்சே - இனிமேலெனக் - குதவில்லாப் பயனாச்சே
செட்டிகட்கெல்லாமேச்சே - பலபேரும் - செப்புவாரிதையோர் பேச்சே
திட்டமாய்க்கீழ்த்திசையைச்சென்றுபார்த்தாலு நோக்கேன்
கட்டிவைத்தவராரோகாரணமொன்றுந் தாக்கேன் (மேற்றி)

பனிரெண்டுவருடமதாய்க் - கனகத்தைப் - பண்பாவளர்த்தேன் வெகுவாய்
இனியென்னசெய்வேனிதவாய் - எத்திசையோதான் - ஒளிவிட்டதே மெதுவாய்
சனியெனைப்பிடித்தாரோ சரக்குவிற்பனை யெல்லாம்
அநியாயமாயினதே ஆரிட்டதிற் சொல்லலாம் (மேற்றி)

கருத்துடனேயான்சேர்த்து - வைத்தபணங் - களைத்தந்துகொண்டேன் பார்த்து
வருத்தமாயதைக்காத்து - இந்நாண்மட்டும் - வந்தனன்கனமா யேற்று
திருத்தமாய்ப்பிடித்ததைச் சென்றவனை யறியேன்
பருத்தஇவ்விடமெல்லாம் பார்த்துப்பார்த்துக் குறியேன் (மேற்றி)

விருத்தம்.

வேதபாராயணஞ்சொல் விற்பனனேதண்டம்தண்டம்
ஓதிருதிங்களாக வொட்டகங்காணேனையா
பாதையேவருகின்றீரோ பார்த்ததுண்டோவெனக்கே
ஏதமில்லாமலிப்போ தியம்பிடீரியம்பிடீரே.

வசனம்.

சரணமையாவேதியரே, இப்பாதையாகத்தாங்கள்வருகின்றீரோ பெண்ணொட்டகமேதாவது இம்மார்க்கம்போகக்கண்டீரோ இன்றுடனிரண்டுமாதமாகின்றதையனே.

பிராமணன்சொல் விருத்தம்.

வணிகர்தங்குலத்துதித்த வர்த்தகாஆசீர்வாதம்
கணிபெருஞ்சவுளதேசங் கடந்துமேக்ரவுஞ்சம்செல்வேன்
மணிவளரொட்டகத்தை வழியில்நான்கண்டதில்லை
அணைவனேயிம்மார்க்கம்நீ தொடர்ந்தினிச்செல்லுவாயே.

வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் ஓய்வணிகனே, நாம்சவுளதேசத்திருந்து க்ரவுஞ்சமலையாளமேகுகின்றோம். இப்பாதையிலுனது ஒட்டகத்தைக்கண்டதில்லை ஆனாலின்னந்தேடிப்பாரும்பிள்ளாய் வர்த்தகனே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

ஐயோநானென்னசெய்வே னருமைப்பெண்ணொட்டகத்தைப்
பையமேற்றிசைகிழக்கும் பார்த்துமேகிட்டவில்லை
செய்யப்ராமணனைக்கேட்டுந் தெரியாதென்றேகிவிட்டார்
ஐயதென்றிசையைநோக்கித் துரிதமாய்ச்செல்லுவேனே.

வசனம்.

அச்சுதன்யனரன் முச்சுடராகிய சச்சிதானந்தனே, கிழக்குமேற்குமலையடவிகளெங்குந்தேடியு மென்னருமையாகியபெண்ணொட்டகக்குறிப்பைக்காணே

ன் எதிர்நோக்கிவந்த பிராமணனைக்கேட்டும் பார்க்கவில்லையென்றார் இந்தகுடினை
மே தெற்குத்திசையைநோக்கிப்போவேன்.

தரு. இராகம் - மோகனம். தாளம் - ஆதி.

பல்லவி.

தேடிப்பிடித்துவருவேனே - இந்தத் - தென்றிசைநோக்கியுநானே.

அநுபல்லவி.

நீடும்வனத்திற்பலபக்ஷிக விளாச்சலும்
நெருங்கிச்சினத்தபுலிசிங்கமிருகளாச்சலும்
நெஞ்சுதிடுக்கிடச்செறிபுங்கோரம் சஞ்சலமாகுதென்செய்குவன்பாரம் (தேடி)

சரணங்கள்.

ஒட்டகத்துக்கோர்விழி யில்லை - ஆனால்
ஒன்மைப்பார்வையேயிந்த வெல்லை
அட்டகசங்கணிக ரில்லை - அதின்
அடலையுனாத்திடநா வல்லை
குட்டைவால்வயிறுறுதி சூலையோர் கால்முடம்
பட்டிருந்தாலும்ளடை பார்க்க மிருந்திடம்
பரிவுடனுன்செய்துவருதொழில் போச்சே
உருகியென்மனத்துயர்பெருகிட லாச்சே (தேடி)

கிழக்குமேற்றிசைசென்றுந் தேரேனே - ஒட்டகந்
கிடக்கைமேல்நடந்தலும் பாரேனே
செழிக்குங்குகைகளெங்கும் போனேனே - மெத்த
திரிந்துதிரிந்திளைப் பானேனே
எழுபதுபொன்னைக்கொடுத் தேங்கிவிட்டலைகின்றேன்
அழுதென்மனதுபுண்ணாகித்தயங்கி நின்றேன்
ஆதலாலெங்கிலுங்கோதறச் சுற்றிப்
பாதகராகியகுதரைப் பற்றி (தேடி)

பகையாலெவர்கள் சதியோ - அதற்குப்
பரமனன்றுவிதித்த விதியோ
வகைமோசமானதென்றன் மதிதான் - இனி
வருவதெப்படிமக விதிதான்
சுகமாயிவ்விடத்தினிற்சுந்தரக்குளமுஞ் சோலை
மகிழ்வாயிருக்கின்றதேமாலைதாயின்று காலை
மனதயராமலேகனகதஞ் சென்றதை
இனியாய்வடதிசைமுனையினிற் கண்டதை (தேடி)

விருத்தம்.

மேற்றிசைக்கிழக்குத்தெற்கும் விரைவுடன்றேடித்தேடி
எற்றியேசிலனைக்கேட்டு மியாதொன்றுந்தெரியாதென்றார்
நீற்றியகுளமுஞ்சோலை நெருங்குசாவடியும்வாகாய்த்
தோற்றினதாலிக்கன்னே அயின்றுசோலைச்செல்வேனே.

வசனம்.

திரிபுரதகனு அடியானை இவ்வாறு அன்பப்படுத்தலுனக்குத்தர்மமா, கிழக்கு தெற்கு மேற்கு மலைவனுந்தாங் குகைகளெங்குந்தேடியும் ஒட்டகக்குறிப்பு எப்படவில்லை இனி சூரியன்சாய்ந்து பொழுதுபோய்விட்டபடியால் இதோகுளிர்ந்தநடாகமும் வாசனைமிகுந்த சோலைசூழவு மழகுமிகுந்தவிந்தச்சாவடியில் நித்திரைசெய்து நாளையதிகாலையில் வடதிசைநோக்கிப்போவேன்.

பொதுவிருத்தம்.

சோலையுங்குளமும்நல்ல சுந்தரப்பதியுந்தோற்ற
மாலையுஞ்சானதாலே வர்த்தகன்மதுரைசெட்டி
சீலமாயுறங்கினன்பின் திகழ்மதுராபுரம்வாழ்
நாலமைச்சர்களின்செய்தி நலமுடனுரைசெய்வேனே.

வசனம்.

அகோஅதெப்படியென்றால் சூரியன்மறைந்துபொழுதுபோனதினால் வர்த்தகனாகிய மதுரைசெட்டி எதிரில்தோன்றின சித்திரச்சாவடியில்தங்கி நாளைவடதிசைபோக இருக்க மதுராபுரிப்பட்டணத்தில்வாழும் நாலுமந்திரிகள்செய்தியைச்சொல்லிவருவேனுக.

நாலுமந்திரிகள் தோற்றம்.

விருத்தம்.

கங்கைகுலமணிவிளக்காயவதரித்துக்
காசினிமேனுன்காறுங்கருத்துளாய்ந்தே
சங்கையின்றிமதுரேசவரசன்றன்பால்
சாற்றுமதுமந்திரிகளாய்ச்சதுரராக
அங்கத்தமன்னவனுலகமாசுற்ற
வல்லவினுற்கொடுங்கோன்மையகலாவிட்டால்
பங்கம்வருமென்றவர்களேகோபித்துப்
பன்றுவாரியோசனைகளெண்ணுவாரே.

தரு. இராகம் - அடாணு. தாளம் - ரூபகம்.

பல்லவி.

மாசில்லாமநுநீதிதேர்ந்திடும் மந்திரிகள்வந்தாரே.

அநுபல்லவி.

தேசலவுமெழின்வேன்முருகனென்னச்
சீதசந்திரமுகசுந்தர ஒதுநற்கலைமிகுதந்திர (மாசில்)

சரணங்கள்.

ஆயுசாத்திரம்வேதம்நான்கையு மாய்ந்துணர்ந்த நல்லோர் - இந்த
அதரையிலுளமந்திரிகளிலெவ ரறிவின்மிக வல்லோர்
அருங்காரியமனைத்தையுமன்னர்க்குச் சாற்றமிக வல்லார் - நீதி
சாகாவிற்பன்னகீர்த்தியும்நன்னெறி தழைக்கும்பேத யில்லார்
தேறும்விவேகத்திலாதிசேடனுந்
திகைக்குயராகிடவந்தோர் முந்தித்திரிகாலமறிந்தோர் (மாசில்)

ரத்தினமிழைத்தபணிகளலங்கிர்த ரஞ்சிதமுஞ் சிரத்தில் - கடி
ரனத்தமொளியெனப்புஜகீர்த்திகண்மின்ன காடியே கரத்தில்
மெத்தசோபிதகடகங்களொளியிலாய் விளங்கவெகு கிரத்தில்-எழில்
வெண்டரளமாலைப்பதக்கங்களசைவு மேவுஞ் சிரத்தில்
அத்தசரிகையாலிழைத்தலங்கிகள்
தொங்கப்புவியோரதிசயமெனத் தங்கப்பணிகள்பளபளவென் (மாதில்)
சாமளமிழைத்தவல்லவாட்டினைத் தனதன்கண்டு கலங்க - கரந்
தாங்கியவஸ்திரவேல்வில்லாயுத சக்கரந் அலங்க
நாமகள்திருமகள்ருமகளுமிவர் நன்முகத் திலங்க - பதி
னுன்குலகும்பெற்றகுண்டலம் நனியதா யிலக்க
வாமனன்பிர்ம்மன்சோமகனுருவாம்
வள்ளற்றினமனம்பணிசேசா் உள்ளத்துகளிலாவிசவாசர் (மாதில்)

முதலாமந்திரி-போதவாதித்தன்சொல் விருத்தம்.

என்மொழிசிரமமைத்தே யேதமொன்றுஞ்சொல்லா
நன்மைசேர்தம்பிமாரே நவின்றிடுமொழியைக்கேளீர்
கன்மத்தைமனதிலெண்ணிக் காவலன்மதுரோசன்றன்
புன்மைக்கோலோச்சுகின்ற புனைக்கிவியென்செய்வோமே.

வசனம்.

கேளீர்தம்பிமார்களே, நீதிசாஸ்திரங்கள் சொல்லுவதைத்தவிர்த்து நிமை யாகிய கர்ம்மகாரியங்களைமனதிலெண்ணி நாம்சொல்லும் நீதிகளைத் தன்செவிக் கேறவொட்டாமல் மதுரோசமன்னன் கொடுரகாலனைப்போற்கினந்து பேசுவதற் கென்னசெய்வதப்பா இளைஞரே.

இரண்டாமந்திரி-போதசந்திரன்சொல் விருத்தம்.

வஞ்சகமனத்தான்கபடன்பொய்வாயன் வார்த்தையிற்குரூரமாங்காலன்
தஞ்சமென்றவரைச்சேர்த்திடாதவனே சாமத்ரோகங்களின்மிகுந்தோன்
செஞ்சொன்முறையேவழுத்தினுமன்னன் செவியினிற்கேட்பதேயில்லை
அஞ்சிநாமிந்தவரசினிலிருந்தால் அவமதியாகுமெய்யண்ணேன்.

வசனம்.

கேளீரண்ணேன், கபடு வஞ்சகம் பொய் சாமத்துரோகமென்னுந் தீவினைக ளைமனதிலெண்ணி யிருக்கின்றான். நாம்சொல்லும் நீதிமொழிகளை இனியொருதா ளிலும் மதுரோசன்கேட்பதில்லை இவ்வரசினில்வாழ்வது மதியீனமாகுமண்ணனே.

மூன்றாமந்திரி-போதவியாபகன்சொல் விருத்தம்.

நல்லவர்நேசஞ்சற்றுமேயில்லை நாவுமேயாலகாலந்தான்
சொல்லுதீவினைக்குமுதலிவனெனத் தோன்றினான்பூவினிற்றுதன்
வல்லசெங்கோலுக்குரியவனல்லன் வருமதில்நமக்கினியீனம்
எல்லவர்நகைப்பாரிவ்விடத்தினில்நா மிருப்பதேயறிவின்மையண்ணேன்.

வசனம்.

கேளீரண்ணலே, இந்தமதுரோசனுடைய காவானதோ ஆலகாலம்தீவினைக் குமுதல்வனாக முழுமனங்கொண்டான், சற்சனராகிய ......ளாகள்நேசமி

ல்லாமல் விலகினான் நீதிசெங்கோல்யற்றதக்கவனல்ல, இவ்வரசனிடமிருந்தா ல் பூலோகத்தார்நம்மை நகைப்பாரண்ணலே.

நாலாமந்திரி-போதவிபூஷணன்சொல் விருத்தம்.

மெய்யிதேமதுரோசனரசாக்ஷிக்குள் வீற்றிருப்பதேமதிவேகவீனம்
கையினிற்கண்ணாடியைப்போல்வேதசாஸ்த்ரங் காவியபுராணதிரிகாலமெல்லாம்
பொய்யறவேமதுநீதியாவுங்கற்றேரும் பூதலத்தில்நமைக்குறைகள்புகல்வாரில்லை
ஐயையோவினிமதுராபுரியில்வாழ்வு தவமானம்பேரழியுமறிந்திடீரே.

வசனம்.

ஆம்! ஆம்! மெய்தான் இந்தத்துற்குணனுகிய மதுரோசராஜனிடம் நாமிருப் பதே அவமானம், முறை நீதிநூல் இதுதிமை இதுநன்மை யென்றறியுங் குற்ற மில்லாத நீதி நமக்குள்ளிருக்கக் கொடியோனிட மந்திரிகளாயிருப்பதே தாழ்ச் சி இனி இந்தப்பட்டணத்தைவிட்டுப்போவதே உத்தமம்அண்ணேன்.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

தன்மனன்னீதிவேத சாத்திரமுறைகடந்தே
கன்மவசத்தனாகிக் காவலன்மதுரோசன்றன்
வன்கணுற்றவனாயானன் வாகுறுந்தம்பிமாரே
சின்மயத்தவனைப்போற்றிச் செல்லலாமதுநகர்க்கே.

வசனம்.

கேளீரப்பாதம்பிமார்களே, தர்ம்மநீதிமுறையை ...... பெரிதென் றெண்ணி நாம்சொல்லுமொழிகளைக்கேளாமல் மதுரோசன் தூஷணித்துப் பேசு வதினால் நாமெல்லாருமிந்நகரத்தைக்கடந்து தீனதயாள கடவுளடியைப்போற் றி மறுதேசம்போகலாம் வருவீர்தம்பிமார்களே.

இளையோர்-மூவருஞ்சொல் விருத்தம்.

நிறைவுளவன்புமிவும் நேயமாவிம்மூடர்க்குக்
குறையறயுக்தியோதுங் கோதிலண்ணலேநின்றன்
திறனெனப்பணிந்தோமின்பாய்ச் செப்பியமொழிப்ப்ரகாரம்
மறுமொழியினியொன்றில்லை வருகுவீர்செல்லுவோமே.

வசனம்.

சரணம் சரணம் அண்ணலே, உமதுவார்த்தைக்கு மறுமொழியொன்றுமில் லை தங்களெண்ணப்படியே போகலாமண்ணேன்.

போதவாதித்தன்சொல்

தரு. இராகம் - பைரவி. தாளம் - ஆதி.

பல்லவி.

போவப்போவம்வாரீர் - இளையோரேநாம் - போவம்போவம்வாரீர்.

அநுபல்லவி.

காவலன்மதுரோசன்கருதரசாட்சி விட்டு
மேவிநால்வருமொன்றுவினைவாகப்புறப் பட்டு (போவம்)

சரணங்கள்.

மதுராபுரியைக்கடந்தே - எதிரில்தோற்றும் - வழியேநேராக நடந்தே
இதமாயென்னுடன்வருவீர் - சலியாமலே - இசைந்தேனென்மொழி தருவீர்
சதுர்மறைமிசையாடுஞ்சாம்பசிவனைப் போற்றி
துதித்துவருவீரவர்துணையடியகஞ் சாற்றி (போவம்)

செங்கமுகுமுகூச்சலும் - பெருமலைச் - சிதறிவரும் பாச்சலும்
எங்குங்கலைகண்மேய்ச்சலும்-வானரக்கூட்டம்-இலைப்பரநமைக்கண்டேச்சலும்
துங்ககஜங்களெல்லாந்துதிக்கைநீட்டுவ பாரீர்
அங்காடுக்கமின்றியஞ்சாமலென்பின் வாரீர் (போவம்)

இந்தவழியாவர்செல்வரோ - அடர்ந்திருப்ப - தெய்விதம்நடந்து வெல்வரோ
சிந்தைபயமுற்றுப்புல்வரோ - பார்த்தனெரியச்-செய்தவனமென்றுசொல்வரோ
சந்ததமநுரோசனால் தயங்கிமனஞ் சலித்தோம்
அந்தகேர்விட்டதினாலகமகிழ்வு படைத்தோம் (போவம்)

விருத்தம்.

சிந்தைசேர்தம்பிமாரே வெகுதூரம்வந்துவிட்டோம்
இந்தநல்லிடத்தின்மிக்க வெழில்கற்பகத்தருப்போல்
சுந்தரக்குளமுஞ்சோலை சொருசுளமலர்கள்வாசம்
செந்திருவாழ்வாளென்றே செப்புதற்கையமுண்டோ.

வசனம்.

ஆ! ஆ! தம்பிமார்களே, மதுராபுரியைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டோம் ஓ ஓ! இதுதானோகற்பகத்தரு, சித்திரக்குளமும் வாசனைமிகுந்து சூழ்ந்திருக்கும் நந்தவனமுமுயர்ச்சியையெண்ணினால் ஆதிலக்ஷுமி குடிகொண்டிருப்பாளென்றெண்ணக்கூடியதே.

மூவருஞ்சொல் விருத்தம்.

அண்ணலேயுமதுபாத மர்ச்சித்தோமிவ்வனத்துள்
வண்ணமதாகச்சென்று மகிழவேபுனலருந்தித்
தண்ணறுங்குளிர்வாடைக்குச் சற்றிளைப்பாறிப்பின்னர்
திண்ணமாய்நாமெல்லோருஞ் சிருடன்செல்லுவோமே.

வசனம்.

சரணம்சரணம் அண்ணலே, இந்தநந்தவனத்தலங்காரம் என்னசொல்லுவது இனி நமது இளைப்பாறக்குளிர்ந்த ஜலம்பொசித்துப் பின்வழிதொடர்ந்துபோகலாம்.

போதவாதித்தன் சொல்-கொச்சகம்.

சோலைமலர்வனத்தின் சொகுசழகால்தேவருடன்
மாலுமயனரனும் வந்திருப்பாரிவ்விடமே
ஓலமிடவேகுயில்க ளொண்மையளிகள்பாடத்
தாலமிசைநாவிலைப்போல் தானெங்குங்கண்டிலனே.

வசனம்.

ஆ! ஆ! தம்பிமார்களே, இந்தவனத்தழகைச்சொல்லுதற் கரிதாயிருக்கிறதே, இம்மலர்கள்வாசனையால் அந்ததிரிகர்த்தருமான தேவர்களும் குடியாக விங்கிருப்பார்போலும், ஓ ஓ! குயில்கள் இனிதாகச்சப்திப்பதும், வண்டுகள் சங்கீதமியல்பாகப்பாடுவதும், ஆ! ஆ! என்னவலங்காரம்.

தரு. இராகம் - தனியாசி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

இந்தவனம்பாரீர்-தம்பிமாரே-இந்தவனம்பாரீர்.

அநுபல்லவி.

செந்தாமரைப்பூவலர்ந்தசிங்காரமே மந்தாரைகொன்றைவிரிந்தலங்காரமே (இந்)

சரணங்கள்.

நறுகமழ்மல்லிகை - தமரகம் - நந்தித்திருவல்லிகை
சிறுசண்பகமுகமலர்ந்தே நீட
தேனையுண்டுதேனாதம்வண்டு பாட (இந்த)

பரிமளவாடை - சொரிவது - பஸ்குமிணற்பேடை
அரியமாரன்வாராநின்றானென்றே கூவுவ
ஆடக்கலாபியும்விளங்க மேவுவ (இந்த)

தெய்வமாதர்களே - இச்குளத்தில் - செய்வார்நீர்க்கிரீடைகளே
வைகுந்தமுஞ்சுவர்க்கமென்ன விதற்கிணை
வாக்காலென்சனமனமாரண வெருபனை (இந்த)

போதசந்திரன்சொல் விருத்தம்.

இத்தனைவழகும்சேர்ந்தி யெங்கினுங்கண்டதில்லை
சித்திரக்குளத்திற்கந்தச் சிவகுண்டமிணையதாமோ
தத்தைகளெழிலாய்ப்பேசச் சங்கீதமளிகள்பாட
உத்தமவிகங்களேரும் ஒயில்நடையென்சொல்வேனே.

வசனம்.

ஆ! ஆ! வாசனைமிகுந்துவீசும் இந்தநந்தவனம்போல் நானெங்குங்கண்டதில்லை, கிளிகளானவை யினியமொழிகளைப்பேசுவதும் வண்டுகள் சங்கீதமியல்பாயியற்றுவதும் அதிகுளிர்ச்சியாகிய தென்றல்வீசுவதும். ஓ ஓ! யென்னவலங்காரம், இந்தச்சித்திரகுளத்திற்கு அந்தச்சிவகுண்ட மிணையாகுமா.

தரு. இராகம் - கருட்டி. தாளம் - ஜம்பை.

பல்லவி.

இவ்வளவலங்காரமிகுந்தழகியசோலை எங்கினுங்கண்டதில்லை.

அநுபல்லவி.

செவ்வியதாமரைமலரிதழைவிரித்துத் தென்றலையழைக்கின்றதே. (இவ்வ)

சரணங்கள்.

வனசமுங்குந்தமசோகமுமுல்லைநீல
மலர்களிற்று சமழ்ந்தே

கனிவுறவலர்ந்தைத் துகளையெய்யவேநம்மைக்
    காண்பதெதிரின் மகிழ்ந்தே (இவ்வ)
குயிலுமதின்பேடையுங்கூவுதெக்காளமின்சைக்
    கோதிக்கிளிகள் கனியே
இயலுடனேசுதலைமொழிபேசுகின்றதிதோ
    இதைப்போலிலை யினியே (இவ்வ)
சுரும்புகண்மலர்த்தேனையுண்டுமேதோநாதஞ்
    சொல்லுதேமாரன் வரவே
திரும்பிடமனதிலைப்பாரிசாதமலர்வாசந்
    தென்றலூழுந்திங் குறவே (இவ்வ)
சிவையுந்திருமகளும்வாணியுமுவகையாய்த்
    திகழ்ந்திருக்குமால் விடமோ
எவையிதற்கிணையுண்டென்றியம்பிடலாம்நம
    திசன்வாழ்ந்திடு மிடமோ (இவ்வ)

போதவியாபகன்சொல் விருத்தம்.

ஆமிதுமெய்தானிந்த வழகியமலர்ச்சோலைப்போல்
பூமிசையெங்குமில்லைப் பொற்புடனிவ்வனத்துள்
நாமினிமுழுதும்பார்த்து நல்லிளைப்பாறிப்பின்னர்
சேமமாயெலாருமொன்றாய்ச் செல்லலாம்வழிதொடர்ந்தே.

வசனம்.

ஆ!ஆ! மெய்தான்மெய்தான் இந்தமலர்ச்சோலைபோல் நாமெங்குங்கண்டதில்லை. இதைப்பார்க்கமனம் பிரமிக்கின்றதே, ஓ ஓ? முழுதுமிவ்வனத்தைச்சுற்றிப்பார்த்து சற்றுநேரமிளைப்பாறியபின் போகுதற்கு எண்ணலாம்.

தரு. இராகம் - பிலஹரி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

இதுவேவெகுசிங்காரம் - வாகாய் - இலகிடுமலங்காரம்.

அநுபல்லவி.

குதலைமொழியைப்பேசியே தத்தைகள்
கொஞ்சிக்கனிகளைக்கோதிடும் வித்தைகள் (இதுவே)

சரணங்கள்.

மலரின்றேனைவண்டே - வந்து - மகிழ்வுடனதையுண்டே
குலவியசங்கீதமிசைபாடுவ-கோகிலந்தன்னரும்பேடையைத்தேடுவ (இதுவே)
அன்னங்களொலியாக - மெத்த - வழகதாநடந்தேக (இதுவே)
துன்னுமங்குலத்தைக்கண்டுபெண்மயிலும்- தங்கச்சிறகைவிரித்தாடுமொயிலும்.
பரிமளவாடைவீசுதே - இவை - பார்க்கவிழிகளுங்கூசுதே
பிரியமாகநாமிங்கிருக்கமனம்-பிரம்மைகொள்ளுதே ஓஓ இந்தவனம் (இதுவே)

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

மலர்மலர்ந்திடுசிங்கார வடிவினைக்காணவீசன்
குலவியிங்கிருப்பார்மெய்யே குறைவில்லையிதற்குச்சாட்சி
உலவியேமலரின்றேனை யுண்டுவண்டுகளுங்கீதம்
நிலைமையாயரன்பொற்றாளை நிகழ்த்திடுமோசைகேளீர்.

வசனம்.

ஆ! ஆ! இந்தவனத்திலமலர்கள் பூத்திருக்கு மலங்காரத்தினால் சந்திரசேகரனாகிய மகேஸ்வரனிவ்விடத்திற் குடிகொண்டிருப்பாரென்பதற்குப் பேதமில்லை. அதற்குச்சாக்ஷியாய்ச்சுரும்புகள் மலரின்தேனைக்குடித்து ஈசனைத்துதித்துக் கீதமாலாபிப்பதைக்கேளீர்.

தரு. இராகம் - நீலாம்புரி. தாளம் - மிசரம்.

பல்லவி.

ஈசனுறையிதற்கேயிணைவேறிலையே நேயம்-வெகு-தூயம்.

அநுபல்லவி.

ஆசையாமலேசுத்தைகணற்கினைமேல்
அஞ்சிடாமலேகொஞ்சிக்கனிதனின்-புஞ்சங்கோதியசெஞ்சொற்பேசுவ (ஈச)

சரணங்கள்.

திகழார்சலசமலர்கள்அலர்ந்தே-திருவாழிடமெனத்தாமேமகிழ்ந்தே
தேடித்தென்றலைக்கூடிடவகம்-நாடிநாடியேயோடியாடுவ (ஈச)
வடிவாகியகோகிலமாமரமேல்-வனமாமலர்களுதிரத்துணிவால்
வந்தநாமெனச்சிந்தைநொந்தே-சொந்தப்பேடைகளின்றழைக்குவ (ஈச)
மருவார்மலர்த்தேனளிகள்குடித்தே-மகிழ்வாயரனையினைத்துதித்தே
வந்தனஞ்செய்தர்தமாய்க்கீ-தத்தொனித்திசைத்துபாடுவ (ஈச)
பொழிலேமுழுதுமெழில்கொண்மலர்கள்-பொற்பாயலர்ந்தேயிருக்கும்விதங்கள்
போகமனதிலைதாகமாடிப்பின்-னேகிமுற்றிலும்வாகாய்நோக்கலாம் (ஈச)

போதவாரித்தன்சொல் விருத்தம்.

சுந்தரமுகவிலாச சுகுணநற்றம்பிமாரே
சிந்தைசேரிவ்வனத்துள் வெகுநேரமாச்சுவந்தே
கந்தமார்மலர்களெங்குங்கண்டகமிகமகிழ்ந்தோம்
முந்தியிப்புனலருந்தி முகமலர்ந்தேகுவோமே.

வசனம்.

கேளீர்தம்பிமார்களே, நாம்வந்துவெகுநேரமா யிந்தநந்தவனத்தினலங்காரமுழுமையும்பார்த்து மனமகிழ்ந்தோம் இனியிச்சித்திரக்குளத்திலிருக்கும் குளிர்ந்தஜலத்தைக்குடித்து ஆலசியமில்லாமல்சீக்கிரம்நடக்கலாம் இனியோரே.

மூவருஞ்சொல் வசனம்.

ஆ! ஆ! இந்தச்சலத்தின்குளிர்ச்சியை யென்னென்றுசொல்லுவது வெகுதேர்த்தியாயிருக்கின்றதே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

புனலையுண்டகமகிழ்ந்தோம் பொற்புறுமிளையோரோம்
அனைவருமொன்றுய்க்கூடி யன்பதாயிப்பூஞ்சோலை
தனைக்கடந்தாதிவேத சாத்திரமொழிநவின்றே
கனிவுடனேகவென்பின் கடுகவேவருகுவீரே.

வசனம்.

தாகபானஞ்செய்துமனமகிழ்ந்திளைப்பாறினேம் இனியிந்தநந்தவனத்தைக் கடந்து சீக்கிரமாய்வழிதொடர்ந்து போகலாம்தம்பிமார்களே.

தரு. இராகம் - புன்னுகவராளி. தாளம் - ஆதி.

போதவாதித்தன்சொல்வது.

எந்தமருமைக்குரியபெருமைத்தம்பி — மார்களே - இந்த
எழில்பெறுஞ்சோலைகடந்துசெல்வோமென்பின் — ஞேர்களே
அந்தக்கொடியமதுரோசமன்னனுல்வெளிப்பட் — டோமே - நம
தகமகிழமலர்ச்சோலைமுற்றிலும்பார்த்துவிட் — டோமே
குளிர்ந்தசலத்தைக்குடித்தோகம்முடைத்தாகந் — தீர்த்தோமே-பெருங்
குகைகண்மலைகளடர்ந்தவனங்கண்முழுதும் — பார்த்தோமே
துளவணிந்தமாயனடியைப்போற்றிக்கோ — குலர் - குழல்
தொனித்துப்பசுவின்கூட்டமழைக்கிறுர்களார் — வலர்

போதசந்திரன்சொல்வது.

பனித்துளியினுல்விருக்ஷமலர்களலர்ந்ததைப் — பாரீர்-அந்தப்
பக்கங்குறவர்வேடுவர்மானைத்தொடர்கிறு — வாரீர்
கனித்துக்கன்றுகடுள்ளித்துள்ளிக்காராவினைத் — தேடுதே - மிக்க
கண்களித்திடமலையின்சுனைநீரொதிரி — லோடுதே
எதிரில்வானரக்கூட்டங்கணம்மைமகிழ்ந்து — பேசுதே - நாம்
இந்தவழியைநோக்கிச்செல்லமனது — கூசுதே
அதிரவொலிக்குமேகத்தைக்கண்டுமயில்க — ளாடுவ-பேடை
யன்னங்களொடயில்நன்னடைநடந்தேதம்பின்தொடர் — தேடுவ

போதவியாபகன்சொல்வது.

கருடனிழலைக்கண்டநாகந்தழுத்துச் — சுருளுதே - சிரங்
காட்டிக்கொம்பைத்தீட்டிக்கடம்பைகள்குதித்து — மருளுதே
அரியபுதரிலிருந்தேயோரிகள்கூச்சல் — போடுதே- பெண்
ணுனைதுதிக்கைநீட்டியேதன்னுணைத் — தேடுதே
இனத்தவேங்கைமானைத்தொடர்ந்துசெல்வதைப் — பாரீர்-கொடுஞ்
சிவிங்கியுங்கோணுய்நிலம்வருடிமண்டுவேவ — வாரீர்
கனத்தமிருகவரசசிங்கங்கர்ச்சிக்கு — மோசை - நங்
காதகிர்ந்திடும்பயமதாகுதிதுவேபிளை — யாசை

போதவிபூஷணன்சொல்வது.

அடர்ந்தவனத்தைச்சொல்லவேமனம்பிர்ம்மை — கொள்ளுதே - நல்
லரும்பறவைகளினியவாக்கியம்பேசித் — தெள்ளுதே

நடந்துவருவீர்விளைவாயினியாதொன்றும்பய — மில்லையே- இதோ
நண்ணுமிமையமலைபோலெதிரில்தோற்றுதிவ் — வெல்லையே
ஆலமருதாயுண்டபாண்டரங்கனருட்பதம் — நாடுவீர் - நமக்
கல்லலென்றும்நேர்வதில்லைமனந்துதித்துப் — பாடுவீர்
மேலுமரியவனத்தினதிசயங்களைக்கண் — டோமே - எதிர்
மேவும்பாதைநோக்கிச்செல்லவதிதிடங்கொண் — டோமே

போதவாதித்தன்சொல் விருத்தம்.

ஆகமமுறைவழாத அணிபெறுந்தம்பிமாரே
வாருடனிந்தமார்க்கம் வல்லபெண்ணொட்டகந்தான்
ஏதினதினற்சாய லெண்ணிணென்முடமோர்பாதம்
நூகையாயதிந்திலைசத்தே றுறுதியிதேகாண்பீரே.

வசனம்.

ஆ! ஆ! தம்பிமார்களே, இதென்னவாச்சரியம், இந்தமார்க்கமா யோர்பெண் ணொட்டகம்போயிருக்கின்றது. அதுகடந்ததுப்பைை யெண்ணினுல் ஓர்கால்முட மாயிருப்பதற்குச் சந்தேகமில்லையே.

தரு. இராகம் - தலியாசி. தாளம் - ஏகம்.

போதவாதித்தன்சொல்வது.

இதுவதிசயமே-வருருவீர்-இதுவதிசயமே
எதிராகுக்கியோரொட்டகம் — போனதே
ஏதோவதற்கொருகான்முட — மானதே (இது)

போதசந்திரன்சொல்வது.

மெய்யிதுதானே - ஆகிலின்னம் - விளம்புவனுனே
பொய்யல்லவொட்டகம் வால்கூழை — யானதே
பொற்பாயதையவளர்ப்போர்க்கின — மானதே (இது)

போதவியாபகன்சொல்வது.

போதசந்திரனே - நீசொன்னது - பொய்யில்லைதிரனே
ஒருவேனயவொட்டகத்துக் — கோர்விழி
உண்மையாகவில்லையே — யிதுநல்வழி (இது)

போதவிபூஷணன்சொல்வது.

சொன்னதெலாமுண்மையே-இன்னமொன்று-சொல்வனதின்வண்மையே
என்னவெனில்வயிறுகுலுமதற் — குண்டு
இயாவர்வளர்த்தவர்தாரோராசை — கொண்டு (இது)

பொது வசனம்.

அகோஅதெப்படியென்றுல் ஒட்டகச்சாயலை யிந்தநான்குமந்திரிகளும் பேசிக்கொண்டு வரும்போது ஒட்டகம்போக்கடித்த வர்த்தகனுகிய மதுரைசெட்டி என்பவன் எதிர்நோக்கித் தேடிக்கொண்டு வருகின்றவிதங்காண்க.

மதுரைசெட்டியார்சொல் விருத்தம்.

எந்திறுந்தேடித்தேடி யெழில்பெறும்மொட்டகத்தின்
சுந்தியெவருஞ்சொல்லச் சற்றேனுங்குறிப்புமில்லை

துங்கவெண் விடைமீதேறுந் தூயசங்கராபோற்றி
இங்கிருந்தேவடக்கே யேகுவேனிக்கணந்தான்.

வசனம்.

சிவசிவா அடியானை யிவ்வாறு திரியவைப்பதுனக்குத்தர்மமா, கிழக்கு தெற்கு மேற்கு வனமலை குகைகளெங்குந்தேடியும் ஒட்டகக்குறிப் பகப்படவில்லையே, எதிர்நோக்கிவந்த பாதசாரிகளைக்கேட்டுந் தெரியாதென்றுசொல்லினரே ஆனாலின்னம் இந்தவடதிசையைநோக்கிப்போவேன்

தரு. இராகம் - நுசாவந்தி. தாளம் - ஆதி.

பல்லவி.

ஐயையோவென்னசெய்வேன்-சிவசங்கரா-ஐயையோவென்னசெய்வேன்.

அநுபல்லவி.

வையகமெங்குஞ்சுற்றி வாங்கும்பல சரக்கு
[illegible] மதற்கு (ஐயை)

சரணங்கள்.

தென்மேற்கிழ்திசைதேடி னேன்-மலைகளெங்குஞ்
சென்றுராய்ந்தினுதும்வாடி னேன்
நன்மைபெறுமெனது நாக்கீக வொட்டகம்
தன்மைக்குறிப்பைக்காணேன்தயங்குதே யென்றனகம் (ஐயை)
எவர்செய்தசதி தானோ-அல்லதொட்டகம்
எங்கிறந்தது தானோ
புவனரக்ஷகாதிரிபுரமுன் றெரித்தவனே
பவமென்னசெய்தேன்விழியார்த்தருளுஞ் சிவனே (ஐயை)
வடதிசைபபாதை யிதுதான்-விரைவாகவிவ்
வழிநோக்கிச்செல்வ லினிநான்
அடைவுடனேயெதிரிலணுகிறுர்நால்வர் ஆவார்
இடமாயவரைக்கேட்டால் தெரியும்பின்னவர் போவார் (ஐயை)

மதுரைசெட்டி சொல் விருத்தம்.

தரணியா ளரசர் தம்மருகிருந்து சாற்றிடு மந்திரிகள்போலும்
கருணைசேர் மொழியு மதுமுறை நவின்றே காட்சியாயிவ்வழிநோக்கி
வருகின்ற வல்ல வீரரே யுங்கள் மலரடி சரண மர்சுதந்தேன்
பிரியமாய் நீங்கள் போவதெவ் விடமோ பிரயாண மெங்கறைவீரே.

வசனம்.

பூலோகத்தையாளு மரசர்களருகிருந்து நீதிமுறைமைகளைச்சொல்லும் மந்திரிகளைப்போல் அன்பாகியவார்த்தைகள்பேசி யெதிர்நோக்கிவரும் வீரர்களேயுங்கட்கநந்தரெண்டம் நீங்களெங்கிருந்து பிரயாணப்பட்டீர் இனியெந்தத்தேசம் போவதுசொல்வீர்.

போதவாமித்தன்சொல் விருத்தம்.

உரைத்திடுமென்றெங்களெதிர்நோக்கியேகின்-றுகந்துசரணம்புரிந்தோயோ தக்கேளாய், திருத்தமதுராபுரியையாளும்வேந்தன்-சிந்தைமகிழ்நீதிசொல்லுமந்

திரியாங்கள், கருத்தழிந்தேயந்தக்கோனெம்மைச்சீறும் - காரணத்தாலந்நகரைக் கடந்துவந்தோம், வருத்தமுறநின்மனதுவிதனமுற்று-வந்தவரலாறதனைவசனிப்பாயே.

வசனம்.

எதிர்நோக்கிப்பணிந்தவரே நாங்களிருந்ததோ மதுராபுரிப்பட்டணம்;அந்தப்பட்டணத்தையாளு மதுரேசராஜன் கர்ம்மபாதகங்களை யெண்ணி யெங்களைத் தூஷணித்ததினுல் நாங்கள்மறுதேசம்போகின்றோம் ஓ ஓ! நீரோது வெகுவிதனத்தோடும் இவ்வழியாகவருவது என்னகாரணம் உமதுபேரையுந் தெரியச்சொல்லுமையா.

மதுரைசெட்டியார்சொல் விருத்தம்.

சயதிருமழகாபுரியில்வாழ்குவதென் றந்தையார்பேர்முத்துவணிகன்
சயதிருமதுரைசெட்டியென்றுமம் நான்வந்துசெய்தொழிலைக்கேளீர்
வயமிகும்பெண்ணொட்டகமதின்திரண்டு மாதமாகின்றதுகாணேன்
புயபலமுடையவமைச்சரேநீங்கள் போனதைக்கண்டிரோபுகல்வீர்.

வசனம்.

சரணம்சரணமையாமந்திரிகளே, அடியேனிருப்பிடமோ அளகாபுரிப்பட்டணம் என்தந்தைபெயர் முத்துசெட்டி என்பெயர் மதுரைசெட்டி நான் வெகுநாளாய் வர்த்தகத்தொழில் நடத்திவந்த பிரியவொட்டகங்காணுமல் போயிற்று, இன்றுடன் இரண்டுமாதமாகின்றது. இவ்வழிநோக்கிவர உங்களைத்தரிசனைகண்டனன், அரும்வழியிலொட்டகத்தைக்கண்டதுண்டோ சொல்லுங்களையா.

போதவாமித்தன்சொல் விருத்தம்.

அசாதாதம்பிமாரே அதிசயமிதுவெசாகலி
வாகாசமுன்னமேநாம் வழுத்தியபடியீதாக்கே
நுகோரேசெட்டியாரே ஒட்டகந்தனக்கோர்பாதம்
போகாசமுடமுமுன்பே புகலுவாயென்றுரைக்கே.

வசனம்.

ஆ! ஆ! இதென்னவாச்சரியம் கொஞ்சங்கோத்தெருமுன்னம் நாம்பேசிக்கொண்டுவந்ததிதுமே இந்தச்செட்டியாரும் ஒட்டகந்தேடுகின்றார், ஓ ஓ? செட்டியாரே. நீர்போக்கடித்த வொட்டகந்தனக்கு ஓர்காலுமுடமாயிருக்குமோ சொல்லுவீர்.

வெண்செந்துறை.

மதுரைசெட்டி. { அமைச்சனே சரணம் அளைந்ததுநிசமே
சமுச்சயமின்றியோர் தாளுமுடமாமே.

போதசந்திரன். { செட்டியேயாராய் திகழொட்டகத்திற்
குட்டையோவாலும் கூறிடுவீரே.

மதுரைசெட்டி. { இவரறைந்ததுபோ லியம்பினீர்நீரும்
நவநிலையொட்டகம் தன்வால்குறையே.

போதவியாபதன். { ஒட்டகந்தனக்கோர்விழியதுமிலையோ
இட்டமதாகச்செப்பிடுவாயே.

மதுரைசெட்டி. { சந்தேகமில்லைசாக்ஷியாயுரைத்தீர்
அந்தகமோர்விழியானதுமெய்யே.

போதவிபூஷணன். { சாட்சியாயிவர்கள்சாற்றியபடியே
சூழ்ச்சியாயொட்டகஞ்சூலதோசொல்வாய்.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

அழகியஒட்டகத்திற் கடிமுடம்வாலுங்கூழை
விழியிலைகுதுமென்றே விளம்பினீரதின்குறிப்பைத்
தொழுதெனுங்கள்பாதந் தோத்திரமாந்தங்கோடி
பழுதறவதனைநீங்கள் பார்த்ததெவ்விடந்தான்சொல்வீர்.

வசனம்.

சரணமையா மந்திரிகளே, அந்தவொட்டகத்திற்கு கண்பழுதென்றும் கால்முடமென்றும் வயிறுசூலென்றும் வால்கூழையென்றும் நீங்கள்சொன்னகுறிப்புசரியே. அதையெவ்விடத்திற்கண்டீர்கள் என்மனந் தேறும்படிச்சொல்லுங்கள்.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

வணிகனேயொட்டகத்தை வழியினிற்கண்டதில்லை
குணமுடனதுதான்சென்ற குறிப்பினைத்தானறிந்தே
இணையிலையாய்விரித்தே யியம்பினோமுன்றனுக்குத்
துணைவனேயொட்டகத்தைத் துகளின்றித்தேடுவாயே.

வசனம்.

கேளும்ஓய்வர்த்தகனே யுனதுஒட்டகத்தை யாங்கள்கண்டதேயில்லை. சற்றுமுன்னம் வரும்வழியில் ஒட்டகம்போயிருந்த சாயலைக்கண்டு அதற்குண்டாகிய குறிப்புகளைச் சொன்னதல்லாமல் வேறில்லை, இனிசீக்கிரம்போய் தேடிப்பாரும்பிள்ளாய்.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

ஒட்டகக்குறிப்பைநீங்க ளோதினீர்பேதமின்றித்
திட்டமாயதற்குச்சாக்ஷி செப்புவதினியொன்றில்லை
கட்டமுகர்களேயொன்றைக் காணுமற்சொல்வாருண்டோ
சட்டமாய்நீங்கள்சொலலுஞ் சங்கதிநம்பிலேனே.

வசனம்.

கேளீர்மந்திரிகளே, ஒட்டகக்குறிப்பை நீங்கள்சந்தேகமின்றிச் சொன்னபிறகு சாக்ஷிவேண்டுவதில்லை பூலோகத்தினில் காணாத பொருளின்குறிப்பைச் சொல்லப்பட்டவர்களுமுண்டா, ஒட்டகம்போன சாயலைக்கண்டு சொல்வதென்றீர் அதெப்படி நம்புதற்கிடமில்லையே.

போதசந்திரன்சொல் விருத்தம்.

ஏதுகாண்வணிகாநாங்க ளியம்பினமொழியெண்ணுமல்
பேதமையாயெதிர்த்துப் பெரும்பிடிமனதுட்கொண்டோ
வாதுசெய்திடநினைந்தா வஞ்சனைவார்த்தைசொன்னாய்
போதும்போதிதுவேபாதை போயினித்தேடுவாயே.

வசனம்.

ஓ!ஓ! ஏதுகாண்செட்டியே, நீகேட்டதற்கு யாங்கள்சொன்ன யுக்தியைக் கவனிக்காமல் சொன்னதேபோதுமென்று வஞ்சனையாகப்பேசுகின்றாய் அல்லாதெங்களிடம்வாது செய்திடநினைந்தோ, சரிசரி வந்தவழியாகத் தேடிப்பாராய் செட்டியே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

ஐயையோவெனதுபெண்ணருமையொட்டகத்தை யாதிருவருடமாய்வளர்த்தே
பொய்யலயானுஞ்சிறுபொழுதிருந்து பொசிப்பின்றிச்சேர்த்தவையெல்லாம் [ன்
கையுறவீந்துவாங்கினன்மனதுங் கலங்குவதுமக்குநேர்நலமோ
மெய்யதின்குறிப்பைவிளம்பியபிறகு விடுவனோயுங்களையினியே.

வசனம்.

ஐயையோ ஏதேதுமந்திரிகளே, இவ்விதமாகச்சொல்லிவிட்டால் நானென்னசெய்வது ஒருபொழுதிருந்துஉண்டும் பசியாகவும்சேர்த்துவைத்திருந்த பணங்களையெல்லாங் கொடுத்து அந்தவொட்டகத்தைவாங்கிப் பனிரண்டுவருடகாலமாய்வளர்த்துவந்தேனே, அதற்குண்டாகியகுறிப்புகளையெல்லாஞ்சொல்லி கண்டதில்லையென்று சொல்லுவதுங்களுக்கு நியாயமோ இனி உங்களை நான்விடுவேனென்றெண்ணவேண்டா மந்திரிகளே.

போதவியாபகன்சொல் விருத்தம்.

இனிவிட்டுப்போவதில்லென் றியம்பிடும்வணிகாகேளாய்
னனிபெறுன்னொட்டகத்தைநால்வரும்நகர்விட்டிந்நாள்
இனிமையாய்க்கண்டதில்லையேன்சும்மாபதறுகின்றாய்
தனியுமக்குறிப்பைக்கண்டேசாற்றினோமறிந்திடாயே.

வசனம்.

கேளாய்செட்டியே, எங்களைநீவிடுவதில்லையென்று வீணாய்ப்பதைக்கின்றாய் நாங்கள் மதுராபுரியைவிட்ட இந்நாள்வரையிலும் உனதொட்டகத்தைக்கண்டதேயில்லை, ஆனாலதுபோனகுறிப்பையறிந்து சொன்னதல்லால் ஒருதொன்றுமில்லைசெட்டியே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

கண்டவர்போலுரைத்தீர்குறிநம்யுக்தியென்றே
தண்டகமுடனேநீங்கள்சொல்லுவதபத்தமாமே
அண்டர்களதிசயிப்பாரறைந்திடுமுங்கள்வார்த்தை
தெண்டிரைசூழுமிந்தச்செகத்தினிற்கேட்டிலேனே.

வசனம்.

ஓ!ஓ! ஏதேதுமந்திரிகளே கண்டவர்களைப்போல் ஒட்டகத்திற்குண்டாகிய குறிப்புகளையெல்லாஞ் சொன்னீர் எடுத்துக்கேட்டால் யுத்தியாய்ச்சொல்லுகிறோமென்றீர். நீங்கள் துணிந்துசொல்லும்வார்த்தைக்கு தேவர்களும் அதிசயிப்பார், இதேது ஆச்சரியம் கடல்சூழ்ந்தவுலகத்தி லிவ்விதஞ்சொன்னவரை என்னும்நான்கண்டதில்லை மந்திரிகளே.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

உள்ளதைச்சொன்னநல்லரலொட்டகங்கண்டதில்லை
கள்ளர்கள்யாங்களென்றேகருதிநீபினத்துகின்றாய்
தெள்ளுநல்வேதசாஸ்திரந்தேர்ந்தவரொதையுஞ்சொல்ல
சள்ளையென்றெண்ணவேண்டாம் சக்சமீதறிகுவாயே.

வசனம்.

ஓ!ஓ! ஏதுகாண்செட்டியே, ஒட்டகத்துக்குண்டாகிய குறிப்புகளைச்சொன்னது யுக்தியல்லாமல் ஒட்டகத்தைக்கண்டதில்லை. ஏதோ சூதுசெய்தோமென்றெண்ணி எதிர்க்கின்றாய் வேதாகமசோதிடமாய்ந்தவர் எக்காரியங்களையுஞ் சொல்லுவது பெரிதென்றெண்ணவேண்டாம் இதேயுனக்கு உண்மையானவார்த்தையாகும் வர்த்தகனே.

மதுரைசெட்டிசொல் விருந்தம்.

தேடிநான்போவதென்ன திருட்டுங்கள்கையிற்கண்டேன்
நீடுமுத்திசையும்பார்த்தே நேரினில்வந்தோர்தம்மைச்
கூடிநான்கேட்கும்போது கூறலையேயிவ்வாறு
நாடியகுறிப்புரைத்தீர் நல்லொட்டகந்தானெங்கே.

வசனம்.

ஓ!ஓ! மந்திரிகளே, இன்னம்நான்தேடவேண்டியதென்ன மூன்றுதிசையும் பார்த்தும் எதிரில்வந்த பாதசாரிகளைக்கேட்டும் தெரியாதென்றுசொல்லிப்போனார்கள் நீங்களதின்குறிப்பைவிபரமாகச்சொன்னீர்கள் இதற்குத்திட்டாந்திரம் வேண்டியதென்ன ஐயையோ வொட்டகமிருக்கும் இடந்தானெனக்குசொல்வீர்களையா மந்திரிகளே.

போதவாநித்தன்சொல் விருத்தம்.

ஏதிவனுனக்கேயன்பா யியம்பினதுவேமோசம்
சூதுநாம்செய்ததாகச் சொல்கிறுனெதிரியாகி
வாதிடமினிநீஞ்சகின்றான் வழியிலேதேதுசள்ளை
பேதமில்தம்பிமாரே பிழைபொறுத்தேகுவோமே.

வசனம்.

கேளீர்தம்பிமார்களே யிதேதுவழியில்சள்ளையாயிருக்கின்றது நாமிவனுக்கு பேதமில்லாமல் சொன்னதேமோசமாச்சுது அந்தவொட்டகத்தைக் களவுசெய்ததாகவெண்ணிப்பேசுகின்றான் இவன்சொன்னபிழையைப் பொறுத்துக்கொண்டுபோகலாம் வருவீர்தம்பிமார்களே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

அல்லகாணீங்கள்சொல்வ தாச்சர்யம்பிற்றெறும்பு
வல்லதோர்வாரனத்தை வருத்தியேவிழுங்கிற்றென்று
எல்லவருங்கூடிக்கொண் டேய்க்கிறீர்ளையின்று
நல்லதுங்களைக்கொஞ்சத்தில் நான்விட்டுச்செல்லுவேனோ.

வசனம்.

ஓ!ஓ! மந்திரிகளே நீங்களென்னை ஏமாற்றிச்சொல்வதைப்பார்த்தால் சிற்றெறும்பானது ஆனையை விழுங்கிவிட்டதென்ற வாச்சரியவார்த்தைகளைப் பேசு

கின்றீர். ஆ! ஆ! இதுநல்லதந்திரந்தான் எனக்காகநீருக்கொடுக்க வருகிறீர் வேண்டாம் வேண்டாம், நானுமுங்களை விடுவதுமில்லை மந்திரிகளே.

போதவாநித்தன்சொல் விருத்தம்.

எதிர்த்திவியேயிதிலிலையெனவாதாடி இடக்குரைக்கும்வணிகனேநானியம்பக்கேளாய், விசித்தமதுமறைகலைகாவியபுராணம் விளங்குதிரிகாலமிருவினைகளெல்லாம், அதித்திசைப்போம்பார்த்திபர்களுளங்களிக்கத் தொல்லுலகிற்பொய்காஞ்சொல்வதில்லை, மதித்தாயுன்னொட்டகத்துக் கள்வரென்றே வசனிக்குமொழிமறந்திவ்வழிசெல்வாயே.

வசனம்.

கேளும் ஓய்செட்டியேகோபங்கொண்டு வீண்வார்த்தைகள்பேசுகின்றாய், நீ சாஸ்திரபுராண காவியங்களையுமாய்ந்து நல்வினைதீவினையென்றுதிரிகாலவுண்மைகளையும் இராஜர்கள்மகிழும்படி பேசப்பட்டமந்திரிகளாச்சுதே ஐயையோ, உனதொட்டகத்தைநாங்களவுசெய்ததாகப்பேசும் கொடியவார்த்தையைமறந்து உன்வழிபார்த்துப்போம்பிள்ளாய்.

மதுரைசெட்டி சொல்விருத்தம்.

செல்வதென்னமந்திரிகளாவ தக்கவின்றித் திருட்டிருக்கலேதுதிட்டாந்தரமுமில்லை, வல்லவுபாயமிஞ்சுஞ்சிதந்திரஜால வார்த்தைகள்கொனக்கிலையோமாகிலத்தில், சொல்லிடுமுன்னின்னதென்றேயாய்ந்துணர்ந்து குதறிவன்தெரிபீரோவணிகருக்கு, நல்லதென்றவொட்டகத்தைத்தரவுரைத்தால் நடக்கிடெனப்பேசுவது நாயந்தானே.

வசனம்.

கேளீர், ஓய்மந்திரிகளே, இன்னம் நான்போய்த்தேடவேண்டிய அவசரமென்ன நீங்களல்வருஞ்சொன்னமொழியே சாக்ஷியாகவிருக்கின்றதே உபாயதந்திரசுஸ்திரஞ்சாமார்த்தியங்கற்ற வர்த்தகர்களுமெனக்கிணையில்லையே, சொல்லாமுன்னம் இன்னகாரணமென்றறிந்து சொல்லப்பட்டவன் யானுச்சுதேவணிகருடையயுக்தி யுங்களுக்குத்தெரியாதா, வீணுக்குப்புரட்டுருட்டி யேமாற்றுகின்றீர். ஏதுகாண் எனது ஒட்டகத்தைத்தரச்சொன்னால் வழியேபார்த்துப் போம்படி சொல்லுகிறீர் மந்திரிகளே.

போதசந்திரன்சொல் விருத்தம்.

நியாயமெங்களிடமிருப்பதுண்மையேயந் நியாயமில்லையோய்வணிகாகலக்கேளாய், நேயமொழியலதிறத்தில்வாஞ்சையேயோடு நிகழ்த்திடினுங்கேளாமனிகாதலொன்றாய். தூயமறைவேந்தரும்பூசாருமியாரும் துதித்திடுவாரெங்கள்விவேகத்திற்கென்றும், சாயலதின்தொட்டகத்தின்சாதனத்தைச் சாற்றினேம்நீயுரைக்குஞ் சங்கைநன்றே.

வசனம்.

கேளும் ஓய்செட்டியே நீதிபரசர்களும் வேதத்திற்குரியபிராமணர்களும் அறிவிற்சிறந்த பெரியோர்களுமெங்கள் யுக்திசாதுரியத்தன்மைக்கு மெச்சுவாரென்றோதோஷப்படுவார்கள் உனக்கனேகவிதங்களில் நல்லவார்த்தை சொல்லியுங்கேளாமல் ஒட்டகத்தைக் களவுசெய்தவர்களென்று பினத்துகின்றாய் நீசொல்லுமுட்டுத்தனத்தைவிடுவாய் ஒட்டகம்போன சாயலறிந்து சொல்வதல்லால் களவில்லையே செட்டியே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

நன்றிநுவென்பொருளையபகரித்தன்றி நால்வருமாய்க்கூடியொருனாயஞ்சொல்வீர், குன்றைபுறமலையாகப்பகர்விரஷ்ட கோத்திரியைச்சிறியதெனக்குறித்துவைப்பீர், என்றுமுங்களிடத்திலிற்பொய்வாறஞ்குது மிருப்பதற்கும்த்தாட்சியிதற்குளாச்சே, தொன்றுளவென்றொட்டகத்தையெங்கேவிற்றீர் சொல்வதற்குப்பேதமிலைகுதிதாமே.

வசனம்.

நல்லதுகாண் மந்திரிகளே உங்கள்வாய்மொழியினால் கள்ளனென்பதற்கு வேறத்தாக்ஷியென்ன அதற்குத்திருட்டார்த்தமாக நீங்கள்மந்திரிகளாகையால் இருப்பதைப்பறக்கிறதென்பீர், பறப்பதையிருக்கிறதென்பீர், குன்றைப்பெருமலையாகச்சொல்ல உங்களால்கூடும் அட்டகுலபர்வதங்களைச்சிறியதென்று புரட்டிச்சொல்ல உங்களால்கூடும் ஓ!ஓ! இப்பேர்ப்பட்டவருக்கு நன்றுந்தீதுமெங்கிருப்பதுகாண் ஒட்டகத்தைக்கேட்டாலுங்கள் புரட்டுருட்டுமொஞ்சமையாகிய மனதிடத்தைக்காட்டுகிறீர் எங்கேவிற்றீர் மந்திரிகளே.

போதவியாபகன்சொல் விருத்தம்.

அருமந்தநாலுணராதவர்த்தகாகே ளானுமும்வணிகர்களிலபாயஞ்சொல்லப், பரிந்திடுவாரதனுக்குச்சரியாய்நீயும் பழியுரைத்துத்தடி தடித்துப்பதைத்தெதிர்த்தாய், உரியகனகத்தையெங்கேவிற்றீரென்று யேதிடுமுன்னுக்கறுப்பேனுன்மையாகத், தெரிந்தினிநீபதனமுடன்பிழைத்தேயிப்பால் சென்றிடுவாய்வழியன்றுசெப்பினேனே.

வசனம்.

அடாசெட்டியே நீவெகுகெட்டிக்காரன் சாஸ்திரமறியாதமூடன் வர்த்தகர்களிலபாயஞ்சொல்லுதற்கு அஞ்சாரகளென்பதற்குச் சரியாகநீயும்பழியுரைத்து எதிர்த்துவாதாடுகின்றாய் திருடர்களென்றம்பலமாருக்குத் துணிந்துப்பேசுகின்றாய் இனியெதிர்த்துப்பேசுவாயானால் உனதுநாக்கையறுப்பேன் பேசாமல்போவாயடா வணிகப்பயலே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

வழியையகன்றுங்களைநான்விடுவதில்லை வாய்க்கிசைய றுத்திடுவீர்சாஸ்தநந்தான், அழகுபெறமதுரேசபுரியாள்வேந்தன் அந்தப்பாதகனென்றகற்றிவிட்டான், பழியுடையோராசையாலப்படிசெய்தீர் பகருமாய்க்கனகத்தைப்பதுக்கிவிட்டீர், மொழிந்திடுவாருலகிலுளோர்கள்ளருக்கு மூன்றேதெய்வமில்லையென்றுமுறையிதாச்சே.

வசனம்.

கேளீர்மந்திரிகளே உங்களைநான் வழிவிட்டப்புறம்போவேனென்றெண்ணவேண்டாம் ஆ!ஆ! எனதுநாக்கையுமறுப்பதற்கு அஞ்சமாட்டீர்கள்தானே இதென்னவோ மதுரேசமகாராசன் அந்தப்பாதகனென்று துரத்திவிட்டான் அந்தப்பட்டணத்தையும்விட்டு ஓடிவந்தீர் திருடருக்குத்தெய்வமில்லை யென்பதுநிஜந்தான் இன்றுங்களிடங்கண்டேன் ஒட்டகத்தைக்களவுசெய்ததுமல்லாமல் ஏமாற்றுகின்றீர்களோ இதுவெகுநேர்த்தி இதுவெகுநேர்த்தி மந்திரிகளே.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

மூத்தவர்சொல்தடுத்தாய் மூதுரைமொழிபழித்தாய்
சாத்திரமிகுத்தெதிர்த்தாய் கள்ளனென்றேசுடித்தாய்
கோத்திநீசொல்வதெல்லாம் கீர்மூடவணிகனேயிம்
மாத்திரம்போறும்போது மப்புறமகலுவாயே.

வசனம்.

கேளடாசெட்டியே எங்கள்மூத்தவர் சொல்லையுந்தடுத்தாய் நீமுறைமையையும் பழித்தாய் கள்ளர்களென்றெதிர்த்தாய் கோபமிகுத்துத்தடித்தாய் ஓ!ஓ! நீமூடனானையால் உன்னிடம் பேசுவதறிவின்மை வழியைவிட்டகலுவாயடா.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

அகலுவதென்னமந்திரிகாளுங்க ளடவிவிக்கஞ்சிடேனுனால்
தகையுடன்முழுப்பூசணிப்பெருங்காயைச் சாதத்தினின்மறைத்திடுவீர்
சகமிசைக்கள்ளக்குருக்களென்றுரைக்கச் சாதனம்வேண்டுவதில்லை
வகையதாலென துபொருளபகரித்தே வாதுசெய்திடநினைத்தீரோ.

வசனம்.

ஓ!ஓ! மந்திரிகளே என்பொருளையபகரித்ததுமல்லாமல் நீங்கள் நால்வருங் கூடிப் புரட்டுஞ்சாமார்த்தியத்திற்கு நான்பயப்படுவேனென் றெண்ணுகின்றீர்களோ நீங்களோமுழுப்பூசணிக்காயைச் சாதத்திலமறைக்கப்பட்டவர் கள்ளர்க்குக் குருக்களென்று சொல்லச்சாட்சிவேண்டுவதில்லை ஒட்டகத்தைக் களவுசெய்ததுமல்லாமல் வாதிடுவதற்காவென்னை மந்திரிகளே.

போதவாதிதன்சொல் விருத்தம்.

பொருத்தமாத்தம்பிமாரே பொல்லாதமூடன்கண்டீர்
கருத்திலுநாமுரைத்த காரணமென்னவிடாமல்
உருத்திடுங்கள்வனென்ன வுணராமற்பேசுகின்றான்
ஒருத்தரும்வாதிடாம லுகந்தப்புறத்தில்வாரீர்.

வசனம்.

கேளீர் தம்பிமார்களே இவனோமூடனானும் நாம்யுத்தியாசச்சொன்னதையென்னாமல் வழிபதித்தடிக்கும் கள்ளனைப்போல்பேசுகின்றான் அவனிடம்நாம்பேசுவதுயோக்கியமல்ல அவனருகில்நில்லாமல் அப்புறம்வாரீர் இனியோரே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

நல்லதுதான்மந்திரிகளேநீங்கள்பேசும் நயநயப்புமகப்பகட்டுநயப்புவார்த்தை, சொல்லுமொழியானறிந்தேன் குரங்குகானுங் கிடுக்காமரப்பிளப்பின்முளைபிடுங்கிப், பல்லைமிளித்தேபதைத்து விழித்ததேபோல் பார்ப்பதென்னவெனதொட்டகந்தானெங்கே, வல்லமையாய்க்கிழுநாமழவோர் நீங்களானு லாங்கோலங்கிழுநாழ்வனறிந்திடீரோ.

வசனம்.

ஆ!ஆ! மந்திரிகளே, நீங்களென்னிடம்பேசுவதைவிட்டு ஒருவர்க்கொருவர்செய்யுங் கண்ஜாடையுங் கைச்செய்கையும் முகக்கோணலுமறிந்தேன், சபாசு சபாசு தெரியாமல் குரங்கானது மரப்பிளப்பின் முளைபிடுங்கி பீஜமதிலகப்பட்டு

கொள்ளப் பல்லியிளித்து விழிக்கும்பாவனையாக விழிப்பதையுமறிந்தேன், உங்க ளொத்துவித்தை சாமார்த்தியமென்னிடம் நடப்பதில்லை பாவிகளிற்றுறையப்ப ட்டவராகுல் கோலத்தின்கிற்குமறையப்பட்டவருமென நறிவீர்மந்திரிகளா.

போதசந்திரன்சொல் விருத்தம்.

முட்டினையுணர்க்குமதமுன்றவெருவாய் மொழிபெறுமவர்ப்பாவதியாய்
கேடுயக்குற்றசெய்விதமென்னிற கேசரித்தனையிவிறுறைத்
தேடியெயானைசென்றதையெழுப்பித் திடமிக்கன்றுயிராவிட்டதுபோல்
ஓடிவந்தெதிர்த்துச்சமர்செயத்துணிந்தாயன்றமேபோரிவிலெட்டியே.

வசனம்.

அடாமுடப்பயலாகியசெட்டியே, நீ எதிர்த்து வாதிடுவதெவ்வாறென்று ல் சிங்கமானது குகையில்படுத்திருக்க யானைமேல்விழுந்தெழுப்பி யினையான துபோல் எங்களெதிர்த்து வாதாடுகின்றாய் இன்னமும் பின்பற்றி எதிர்த்திடுவா யானுல் உனதுசிரம்போயுயிரிழந்து மடிவதுண்மையென் றெண்ணடா வணிக ப்பயலே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

அற்றிடச்செய்வதென்ன வடவிலாமுயலின்குட்டி
சற்றினில்வல்லசிங்கந் தன்னையெமாளச்செய்த
உற்றநற்கதையைநீங்க ளொருவருங்கேட்டிலீரோ
கற்றவீண்கல்வியெல்லாங் கழுதிருப்பயனென்றின்றே.

வசனம்.

கேளீர்மந்திரிகளே, நீங்களென்தலையை யறுப்பமெனன்பது ஆச்சரியந்தா ன். பலவீனமுள்ள முயற்குட்டியானது வல்லமைபொருந்திய சிங்கத்தைத்தன னுல் தான்மடியும்படிசெய்தகதையை நீங்களறியீர்களா. அல்லது சொல்லவுங் கேட்டதில்லையா, ஓ ஓ! வீணானகதைகளைப்பேசினுல் நடப்பதில்லை மந்திரிகளே.

போதவியாபகன்சொல் விருத்தம்.

மெத்தநீபேசினுலென் வேலாயுதத்தினுலே
குத்தியேயிழுக்கியுன்றன் குடலினைச்சரியச்செய்வேன்
பித்தமேசிரசுக்கேறிப் பினத்திடுமொழியைக்கண்டேன்
பத்தியில்லாதமூடா பொறுத்திட்டோம்பிழைப்போவாயே.

வசனம்.

அடாவணிகப்பயலே பித்தமானதுசிரசித்துக் கொவங்கொண்டுபேசுகின்று ய், இம்மட்டும் நீசொன்னதப்பிதங்களையெல்லாம் பொறுத்தோம், இனிமேலெ திர்த்துப் பேசுவாயானுல் இதோ என்கையிலிருக்கும் வேலாயுதத்தினுல்குத்தி சித்திரவதைசெய்வேன் பேசாமலோடிப்போடா.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

வெள்ளைக்குட்டிக்குப்பாய்ச்சல் மேதினிதனிலேயார்தாம்
ஆங்கதற்குக்கற்பித்தா ரறிந்திலீரோவிச்செய்தி
எங்கெனைமிரட்டவந்தீ ரிருக்கட்டுமுங்களிட்டை
ஒக்கிடவேண்டாமென்ற தொட்டகமெங்கேயெக்கே.

வசனம்.

ஓஹோ! மந்திரிகளே ஒட்டகத்தைக்கேட்டால் எதிர்த்துச்சண்டைசெய்ய வாவருகிறீர்கள். ஓ ஓ! வெள்ளைக்குட்டிக்குப்பாய்ச்சல் கற்பித்தவர்களுமுண்டா நீங்களா எனக்குக்கற்பித்துக்கொடுக்கப்பட்டவர்கள் நல்லதுங்கள் நீட்டைச்சற் றுகடைகட்டிவைப்பீர்கள் மந்திரிகளே.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

போங்காலமாகியேநீ பொய்சொல்லியின்றெதிர்த்தாய்
ஓங்கியேயுன்றனோடு முடன்படோஞ்சமர்செய்ய
ஏங்கிடுவணிகாவெங்கட் கிணையிலைநீதுரும்பு
நீங்கிடும்பனியெல்லின்முன் னிலைநிற்குமோசொல்வாயே.

வசனம்.

அடாமுடப்பயலாகிய செட்டியே, உனக்குக்காலங்குறுகி எங்கள்மீதபாயஞ் சொல்லி எதிர்த்துவாதாடுகின்றாய் நீ எங்களுக்குத்துரும்புப்பிரமாணமுள்ளவன் உன்னு டன் யாங்களெதிர்த்து வாதிடுவதுகுற்றம், பிரணங்களிலிகம் சூரியன்முன்பனி யெதிர்த்துநிற்குமோசொல்லடா வீணனே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

பொருளபகரித்ததன்றிப் போராடவந்ததேது
சுருதிநல்லாகமங்கள் துகளறவாய்ந்தோரென்றீர்
இருமிருமுங்கள்வார்த்தை யிதில்வெளிச்சந்தானுச்சே
சரியென்றவொட்டகத்தைத் தாவென்றுல்கோபமேனே.

வசனம்.

ஓஹோ! மந்திரிகளே, என்னொட்டகத்தைபபகரித்ததல்லாமல் தடுத்துக்கேட்டா ல் சண்டைசெய்யவா எத்தனிக்கிறீர்கள். சரி சரி. நீங்களா நீதிசாத்திரங்களாய் ந்தவர். இதில் வெட்டவெளிச்சம் பட்டப்பகலாச்சுது பரட்டுருட்டுத்திருட்டுக்க ள்ளர் நீங்களே, உங்களுக்குவரப்பட்டகோபமேதுகாண்.

போதசந்திரன்சொல் விருத்தம்.

போடாநீவணிகர்தம்மிற் புனையுளோனுங்கையாலே
கேடாகிவந்தேயிங்குக் கெர்வித்துப்பேசுகின்றாய்
தேடாமலொட்டகத்தைத் திருடினோம்யாங்களென்றே
சாடாண்மைபேசவேண்டாந் தலையினையுடைப்பேன்கண்டாய்.

வசனம்.

அடாவணிகப்பயலே, நீவார்த்தகளில் உபாயக்கள்ளன் நீயொட்டகத்தைப் போக்கடித்ததும் போக்கடிக்காதது மெங்கட்கென்னதெரியும் ஏதோ உனக்குக் காலங்குறுகி எங்களிடம்வாதாடுகின்றாய் இனிநீ சீவித்திருக்கவேண்டுமானுல் யாதொன்றும்பேசாமல் போவதேயோக்கியம் அல்லது தடுத்துவருவாயானு லெ ன்கையிலிருக்கும் கூர்மையாகிய சக்கரத்தாலுன் தலையை சின்னபின்னமாக்கு வேனடாசெட்டியே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

காலருப்பகூடியென்ற வன்னுயிர்குடித்திட்டாலும்
மேலண்டத்தாளிடிந்தென் மீதினில்வீழ்ந்திட்டாலும்
மாலயனரனுங்கூடி வந்திவிதித்திட்டாலும்
சாலவுங்களவாளின்று சத்யமாயிதிவிதில்லை.

வசனம்.

ஓ!ஓ! இதேனுமந்திரிகளே, என்னையுயிர்வதைசெய்யவா இருக்கிறீர்கள். ஆ! ஆ! நல்லது கேளுங்கள் காலவரும் என்னையடித்தபோதிலும், அல்லது அந்தச்சிவன் விஷ்ணு பிர்ம்மனென்னுமூர்த்திகள்த்தார்கள்வந்து தடுத்தபோதிலும் ஆகாயமிடிந்தென் மேல்விழுந்தபோதிலும் பூலோகங்கீழ்மேல் மேல்கீழானபோதிலும் உனதிகை நான்விட்டுப்போவேனென்று எண்ணவேண்டாம் மந்திரிகளே.

போதப்பிரபகன்சொல் விருத்தம்.

சந்திரகுலசாரங்கதரவள்ளன்மேல் சதியுனைத்தசித்திராங்கிசடலமன்று
வெந்ததனலாயெரிந்ததறிந்திலாயோ மேதினியிற்பொய்காதுமெய்யேயாரும்
சுந்தமலர்வாழுமயனார்விதித்த காலமுடிவாகிவந்தசடாகேளாய்
விந்தையுடனெங்களைமடிபிடித்து வீணுவாதாடுவதைவிட்டிடாயே.

வசனம்.

அடாகேளடாசெட்டியே, பூலோகத்தில் குருகுலவேந்தனுகிய நரேந்திரன் குமாரனுகிய சாரங்கதரன்மீது, சித்திராங்கிசொன்ன வபாண்டம்பலிக்காமல் பின்பவனைச் சுண்ணாம்புக்காளவாயில் வைத்ததையறியாயா, அவ்வாறே நீசொல்லும அபாண்டவார்த்தைக்கு ஆக்கினைக்குள்ளாவாய். ஓ ஓ! பிர்ம்மன்விதித்தவிதி யுனக்கு முடிவாகியே எங்களிடம் வாதுசெய்கின்றாய் இனிமடிபிடித்து வாதாடுவதை விடடா.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

விடுவதென்னகாமந்திரிகள்தம்மை மேதினிதம்பொருதென்னும்
கொடியவன்றட்டபுத்தியென்றமைச்சன் குந்தலவரசன்பாலிருந்தே
கெடியமால்பக்தன்சந்திரகாசனையே நெஞ்சதில்வஞ்சனையெண்ணி
முடிவினில்தலையைப்பொடிபடக்கல்லில் மோதிமாண்டதையறியீரோ.

வசனம்.

ஓ!ஓ! மந்திரிகளே, நானுங்கள்மீதபாயஞ் சொல்லுகிறேனென்றல்லவோ சொல்லுகிறீர். ஆ ஆ! நல்லது மந்திரிகளே நம்பக்கூடாதென்பதற்குச்சாக்ஷி குந்தலமகாராஜனிடமிருந்த துட்டபுத்தியென்னுமந்திரி, சந்திரகாசனை பலவிதத்திலுங் கொல்லவெண்ணங்கொண்டு கடையில்தானே குத்தங்கல்லில் தலையைமோதிக்கொண்டிறந்தானே யிதுவுண்மையல்லவா. ஓ ஓ! நீங்கள் யோக்கியர்கள்தாம் மந்திரிகளே.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

மந்திரிமார்நடத்தை மடையனேசொல்லக்கேளாய்
சுந்தரசத்யகீர்த்தி சுமந்திரனவர்கள்செய்கை
முந்திநீயறிந்திலாயோமுந்தெங்கடமைவசைத்தாய்
இந்தவார்த்தபேதத்தை யாவரும்பொறுத்துக்கொண்டோம்.

வசனம்.

கேளடாமூடச்செட்டியே மந்திரிகள்துர்நடத்தையுள்ளவர்களென்று நீசொல்லுவதுமூடத்தனம் அரிச்சந்திரன்மந்திரியாகிய சத்யகீர்த்தியும் சாரங்கதரன் மந்திரிசுமந்திரனும் இவர்கள்நற்குணநீதிநடத்தைபோல யாங்களும்பிசகாதவரென்றெண்ணுவாயடா செட்டியே.

மதுரைசெட்டிசொல் விருத்தம.

பஞ்சவர்தம்மைக்கொல்லப் பாவிப்ரோஜனனென்மந்த்ரி
வஞ்சனையெண்ணியேபின் மாண்டதையறிந்திலீரோ
மிஞ்சியென்பொருளைக்கேட்டால் மிக்கவாடிப்பயந்து
கெஞ்சியேபல்லிளித்துக் கிளர்மொழிகண்டிட்டேனே.

வசனம்.

ஓ!ஓ! மந்திரிகளே, துரியோதனனுடையவஞ்சனையினால் பாண்டவாளைக் கொல்லுதற்கு புரோசனமந்திரியென்பவன்போய் அவனேயிறந்துவிட்டகதையும் முங்களுக்குத் தெரிந்திருக்குந்தானே யிதல்லவோமந்திரிகள் நடத்தையெல்லாம் என் ஒட்டகத்தைக்கேட்டால் நிலைகுந்துமுகங்கள்வாடிபயந்து பல்லையிளித்துப்பேசுஞ்செய்கையை யறிந்தேன்மந்திரிகளே.

போதசந்திரன்சொல் விருத்தம்.

நாயினையலங்கரித்து நடுவீட்டில்வைத்திட்டாலும்
தாய்தன்வாலையாட்டிச் சுணங்கியேவெளியிற்செல்லும்
நேயநன்னெறிமனுக்க ளிகழ்ந்திநுமெதிர்ப்பதேது
பேயவுன்னுடனேயாங்கள் பேசுவதவமானந்தான்.

வசனம்.

அடாவணிகப்பயலே நாயையலங்கரித்து மஞ்சம்பூசி நடுவீட்டில்வைத்தாலும் அவ்விடத்திலிராதே அவ்வாறே வாலையாட்டிக்கொண்டுவெளியிற்போகுமல்லாம லெதிர்த்தெதிர்த்துக்குதித் யுனக்கனேகநீதிமுறைமைகளைச்சொல்லியுங் கேளாமல் எதிர்த்தெதிர்த்துக்குதித் துவாதாடுகின்றாய் இனிஉன்னுடன்யாங்கள் பேசுவதே அவமானமடாவணிகப்பயலே.

மதுராசெட்டி சொல் விருத்தம்.

உலக்கைவருமென்றுமன தெண்ணிடாம லுரலதனில்தலையினையே யிட்டுக் கொண்டீர், பெலத்தவர்களனைவெதிர்த்துச் சமர்செய்தாலும் பின்னிடுவேனே ன்றகத்திற் பேணவேண்டாம், கலக்கமுள்ளவுங்களெத்து வித்தையெல்லாங்கண் டிட்டே னொட்டகத்தைக் கபடஞ்செய்தீர், சலத்தினில்வாழ் மீன்குஞ்சு தனக்கு நீச்சு தாங்களோகற்பித்தோர் சாற்றுவீரே.

வசனம்.

ஓ!ஓ! மந்திரிகளே, உரலில்தலையிட்டுக்கொண்டால் உலக்கையானதிடிக்குமென் றுங்கட்குத்தெரியாதா, என்னொட்டகத்தைக்களவுசெய்ததுமல்லாமல் புத்திசாலிகள் சாமார்த்தியர்களென்று சன்றட்டுருட்டியேமாற்றுகின்றதே நல்லது நீங்கள் சாமார்த்தியர்களென்று சண் டைசெய்ய எத்தனித்தால் நான்பயப்பட்டுப் பின்னிடுவது இல்லை. சபாசு, சபாசு, உங்கள் தந்திரசாலவித்தைகளையுமறிந்தேன். நீங்கள்தானு மீன்குஞ்சுக்கு நீச்சுக ற்பித்தவர்கள் மந்திரிகளே.

போதவாதித்தன் சொல் விருத்தம்.

விடுவதேயில்லையென்று வீணானவார்த்தைபேசி
மடிபிடித்திழுத்துநின்ற வணிகனேசொல்லக்கேளாய்
படியினுன்றனொட்டகத்தைப் பார்த்ததுண்டாகில்யாங்கள்
கொடியதோர்நரகில்வீழ்வோங் குணமுடனென்றிடாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய்செட்டியே, அனேகதிறத்தி லுனக்குச்சொல்லியுங்கேளாமல்வாதாடுகின்றாய். இதனக்குயோக்கியமல்ல. ஒட்டகத்தை யெங்களிருவிழியிலுல்கண்டிருந்தால்கொடியரௌரவாதிநரகத்தில்வீழ்வோம்பிள்ளாய்செட்டியே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

போவதுமென்னவென்றன் பொற்புறுமொட்டகத்தைப்
பாவிகாள்மோசஞ்செய்தீர் பார்க்கிறேனுந்திறாணி
மேவியோராயபேரென் மீதினிற்சமர்புரிந்தால்
ஆவியேபோகுமல்லால் அப்பாலென்போஞ்சொல்வீரே.

வசனம்.

ஓ!ஓ! மந்திரிகளே, நான்விடுவதற்கோ நீங்கள்ஞாயம்பேசவந்தீர் ஒட்டகத்தைச் சூதுசெய்ததல்லாமல் சண்டைசெய்யவா எத்தனிக்கிறீர்கள். சண்டையிட்டு உயிர்போனால் வீரசுவர்க்கமல்லவோ, இன்னம் போவதென்ன மந்திரிகளே.

மந்திரிகளுக்கும்-மதுரைசெட்டிக்குந் தர்க்கம்.

தரு. இராகம் - சுருட்டி. தாளம் - ரூபகம்.

போதவாதித்தன் சொல்லுதல்.

மதமுறைநூற்படி யினிமையதாகவே
வழுத்திடுங்கேளாதமூடா - எங்களைப் - பழித்துநீபேசாதேபோடா - நின்
வர்த்தகவொட்டகஞ்சத்தியமாய்க்கண்டதில்லை
வாதுசெய்யாதடாவணிகனே.

மதுரைசெட்டி சொல்லுதல்.

தனியாயென்னொட்டகஞ் சென்றசாயலைக்கண்டே
சாற்றுகிறீரொன்றீர்மந்திரிகாள்-நான்-வற்றிடேனிம்மொழிதந்திரிகாள்- இன்னஞ்
சாதித்திலலையென்றாலுமேதங்களைவிட்டுநான்
தான்போவதவமாமேமந்திரிகாள்.

போதசந்திரன் சொல்லுதல்.

கருத்திலுணர்த்திடுங் காரணமறியாமற்
கள்ளமென்றெங்களையேசினாய் - மிக்கத் - துள்ளிப்பவிசிழக்கப்பேசினாய் - உன்
கனத்தவொட்டகந்தனைத்தேடாமலெங்
களையேன்வசைப்படாவணிகனே.

மதுரைசெட்டி சொல்லுதல்.

உரைத்தவார்த்தைகளி லுகந்ததிற்பிழைகண்டே
யோதினேனதுவல்லால்சாகுநி - நீங்கள் - வாதிடுவதுவெகுகூசுநி - இனி
அங்கனுல்வர்களிலொட்டகம்போய்விட்ட
அண்மையிதாகுமேமந்திரிகாள்.

போதவியாபகன் சொல்லுதல்.

நல்லவர்க்கொருதரஞ் சொன்னால்தடுத்துப்பேசார்
ஞாயமல்லடாயினியேகுவாய் - எங்கள் - ஆயுதத்திற்கிலாயாகுவாய். - இந்த
நானிலத்தனிலுன்னைப்போலபாயஞ்சொல்வோர்
நாங்கள்கண்டதில்லையேவணிகனே.

மதுரைசெட்டி சொல்லுதல்.

சொல்லுவதேனினி மல்லுக்குவாரீரோ
தொல்லுலகிலீதன்யாயம் - நீங்கள் - வல்லமையுரைப்பதோநியாயம் - உங்கள்
சூழம்புரட்டுருட்டுமெத்தாதெங்கேயோயிற்றீர்
சூக்ஷமறிந்தேனுகுமந்திரிகாள்.

போதவிபூஷணன் சொல்லுதல்.

வீணாகவுன்னருமொட்டகத்தையாங்கள்
விற்றோமென்றுசொல்லும்வாயே - இனிப் - பற்றிக்கிழிப்பமடாபேயே - அடா
வெங்கீரினில்வீழுவேகுமோசொல்லடா
மேட்டிமையீதாமோவணிகனே.

மதுரைசெட்டி சொல்லுதல்.

தோன்றுதபொய்சொல்லி னுலுமுங்களைநான்
யாசித்துக்குரங்கைப்போலாட்டுவேன்-விசு- வாசமறிந்தேன்பொய்சாட்டுவேன்
சொன்னபயனறிந்தேயென்னைக்கொண்டெதிர்க்கின்றேன் [நீங்கள்
தோதாஞ்செய்தீரோமந்திரிகாள்.

போதவாதித்தன் சொல்லுதல்.

எதிர்த்தெதிர்த்துமடக்கிக் குறிந்தக்கூத்தாடினும்
எங்களிற்குதனுவில்லடா - இனி - பங்கம்வருமுனக்குச்செல்லடா - நாங்க
ளேகும்வழியைக்கட்டிப்போகாமன்மறைக்கிறு
யீதுனக்கறிவினம்வணிகனே.

மதுரைசெட்டி சொல்லுதல்.

சதைத்தெனைவதைத்தாலு மெதிர்த்திடுவதன்றிநான்
சகசங்கண்டேனிதைச்சொல்லீர் - நீங்கள் - பகட்டியுருட்டுவதேனில்லீர் - மறு
சாத்திரமுறையறிந்தசூத்திரமந்திரிகளாகுஞ்
சமர்செய்யவேஙினைப்பீர்மந்திரிகாள்.

போதசந்திரன்சொல்லுதல்.

சினத்தபுலியெதிரிற் கனத்தமானானலுஞ்
செல்லுமாஅதின்வீரசட்டகம்-அடடா-பல்லினித்தாலு மில்லையொட்டகம் - ஓ ஓ
திருடிரேமென்றுநீசெப்பும்நாவையறுத்துச்
சிந்தைகலங்கச்செய்வோம்வணிகனே.

மதுரைசெட்டி சொல்லுதல்.

பினத்திறுலுங்களைத் தனித்துவிட்டுப்போவனே
பிலுக்கினுலடல்நடவாதே - உங்கள் - பலத்தாயுதமெனைக்கொல்லாதே - அந்தப்
பிஞ்சகனுனுமஞ்சமாட்டேனீங்கள்
பிந்திவிழிப்பதென்னமந்திரிகாள்.

போதவியாபகன் சொல்லுதல்.

நல்லதன்னுடனே மல்லுத்தஞ்செய்திடின்
நகைப்பார்புவியிலுள்ளோர்காணுய்-அடடா-பகைத்திடவேண்டாம்நீவீணுய்-தட்
நாய்குரைத்திடில்நந்தம்பாழாகுமோபோடா [டி
நலமதாயகலுவாய்வணிகனே.

மதுரைசெட்டி சொல்லுதல்.

கொல்லத்தெருவிலூசி விற்றால்விலையாமோவக்
கொள்கையையறியாமற்பேசுகிறீர்-வீண்-கள்ளமொழியுருட்டிவீசுகிறீர்-ஒட்டகக்
குறிப்பினைப்பகர்ந்துபின்மறுப்பதோக்கியமல்ல
கூறுவதொன்றிலைமந்திரிகாள்.

போதவிபூஷணன் சொல்லுதல்.

காற்றிலிலவம்பஞ்சாய்த்தூற்றிடுவோமுன்னைக்
கசடாநீயினைந்துவதேனோ - எம்மை - நகைத்திடநீவல்லதானோ - தென்
காலனூர்சேர்ந்திடவேலையிட்டலைகிறாய்
கண்டுகொள்வாயடாவணிகனே.

மதுரைசெட்டி சொல்லுதல்.

எத்தினால்வருங்கூடி யெதிர்த்தோலமிட்டாலும்
இனியுங்களைவிடுவதில்லை - ஓ ஓ - சரிபிடித்தான்மெய்யென்சொல்லை - நன்றாய்
என்னுயிரொட்டகம் வைத்திருப்பதுமெங்கே
இயம்பிடுவீரோமந்திரிகாள்.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

என்மொழிதடுத்திடாமலினையவரந்திகின்றார்
உன்றலையற்றிடச்செய் தயிர்கவர்ந்திடுவார்கண்டாய்
நன்மதியுள்ளோனுகில் நற்படியெதிர்த்திடாமல்
தொன்மையாமொட்டகத்தைச் சுருக்குடன்தேடுவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய்செட்டியே உனக்கனேகதிறத்தில் சொல்லியுங்கேளாமல் மடிபிடித்துவாதாடுகின்றாய் எனக்கினோர்கள் என்வார்த்தையை மீறமலஞ்சி நிற்கின்றார் இல்லாவிட்டால் உன்னைச்சின்னபின்னமாகச் சிதைத்துசித்திரவதைபி டுவார்கள் இனியென்வார்த்தையை மீறமல் உனதொட்டகத்தைத் தேடிப்பாரும்பிள்ளாய்செட்டியே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

கிட்டார்தங்கண்டிருக்கச் செல்லவேண்டியதேயென்ன
ஒட்டாரம்பேசுகின்றீ ருத்தமவளகேசேந்திரன்

பட்டணம்வருவீராகில் பார்த்திபனிஜமும்பொய்யுக்
கிட்டமதாயுரைப்பார் தெரிந்திடுமுங்கள்சூதே.

வசனம்.

ஓ!ஓ! மந்திரிகளே நீங்கள் சொன்னவார்த்தையே திருட்டாந்தமாயிருக்கஎன்றால் கூடியமட்டும்வாதிட்டும் இல்லையென்றே சாதிக்கின்றீர்கள் நல்லது எனதரசனுகிய அளகேந்திரபூபதிவாழும் பட்டணத்திற்குவந்தாலவரால் உங்கள்நிசமும்பொய்யும் தெரிந்திடும் வாரீர் ஓமந்திரிகளே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

செட்டியேயுரைத்த சிறுமொழிப்படியேயாங்கள்
சட்டமாய்வருவதற்குத் தடையிலையளகேசேந்திரன்
பட்டணம்நோக்கிச்செல்லப் பரிவுளமனதோராகனும்
திட்டிடாதெங்களோடு சீக்கிரம்வருகுவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய்செட்டியே நீசொன்னதுசரி உனதரசனுகிய அளகேந்திர மகாராஜனிடம்போனு லுன்மனநிலையந்தீரும் நடக்கலாம் வாரும்பிள்ளாய் செட்டியே.

மந்திரிகளுக்கும் - மதுரைசெட்டிக்குந் தர்க்கம்.

தரு: இராகம் - சங்கராபரணம். தாளம் - ஆதி.

மதுரைசெட்டி சொல்லுதல்.

நடந்தினிவாருங்கள் - மந்திரிகளே - நடந்தினிவாருங்கள்
அடல்பெறுமளகேந்திரவரசனிடம் நவின்றே
திடம்பெறுமுங்களெண்ணந்தெரிவிப்பனுட னின்றே (நட)

போதவாதித்தன் சொல்லுதல்.

நடப்பதற்கையமில்லை - அடாமூடா - நடப்பதற்கையமில்லை
துடுக்காயுனதொட்டகஞ்சூதுசெய்தோ மென்றாய்
வடிப்பவார்த்தைகள்பேசும்வல்லமைதெரியுங் கண்டாய் (நட)

மதுரைசெட்டி சொல்லுதல்.

வாய்ஜாலங்கற்றவர்க்கே - திரிகர்த்தரும் - மருண்டிடுவாரதற்கே
பேய்காயென்றெனையேசிப்பிறழ்த்துவதேதிப் போது
தூயமன்னனிடத்தில்சொன்னால்தெரியுஞ் சூது (நட)

போதசந்திரன் சொல்லுதல்.

சொன்னதேபோதுமென்றே - யெங்களை நீ - சூதொன்றுயிதானன்றே
பன்னுமுனதொட்டகம்பார்த்தோமென் றியம்பினுல்
சின்னம்வருமுனக்குச்செய்தி யறிவையானுல் (நட)

மதுரைசெட்டி சொல்லுதல்.

வந்ததுங்களுக்கினம் - ஒட்டகத்தால் - வாங்குவீர்வெகுமானம்
மந்திரிகளெனும்பேரைமாற்றிப் பழிசுமப்பீர்
பந்தக்கதைப்புரட்டும்பகர்ந்தினனும் மெதிர்ப்பீர் (நட)

போதவியாபகன் சொல்லுதல்.

உயர்ப்பறந்தாலும் - பருந்தாமோ - ஊர்க்குருவியெத்காலும்
வயமாயெங்களுடனீவாதாடிற் கனயில்லை
பயமுறவமென்றேபகருவா யுன்வல்லை (கட)

மதுரைசெட்டி சொல்லுதல்

பொருளையபகரித்த - தல்லாமலும் - போராடவந்தீர்மெத்த
திருடர்க்குத்தெய்வமில்லையென்பாரிது நிஜமே
கரடகவித்தையெல்லாங்கண்டேனுங்கள் வஞ்சமே (கட)

போதவிபூஷணன்சொல்லுதல்.

போடாநீவெகுமூடன் - வணிகரில் - பொய்ச்சூதன்குடிகேடன்
ஈடாவெங்களுடனீயெதிர்க்கப்பல மில்லடா
சாடாண்மைப்பேசிவீணுய்த்தவிப்பதென்ன சொல்லடா (கட)

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

மதுரைசெட்டி சொல்லுதல்.

பிணுக்கிஞ்லாவதிலை - ஓஒ நீங்கள் - பேசவந்தீங்கலை
குலக்காம்பிருக்கமேலுங்கோடரியென்ன செய்யும்
கலக்கமாயுங்கள்வார்த்தைகள்ளமொன்றுதே மெய்யும் (கட)

போதவாதித்தன் சொல்லுதல்.

நகளின்றியுன்றனுக்கே - யாங்கள்சொல்ல - அஜந்தொடுத்தாயதற்கே
மகிபதியிடஞ்சென்றுல்மகிழ்வாரெங்களுக் திக்கே
மிகமனவெட்கமாகிவிளங்குமடா வுனக்கே (கட)

மதுரைசெட்டி சொல்லுதல்.

தரிதமுடனேநடவீர் - யெனையிரட்டுஞ் - சூட்சம்வேண்டாந்தொடர்வீர்
அரியயனரன்தேவரவனியோரு முங்களின்
திருட்டிதுக்கஞ்சுவர்தெரிந்தனே முகங்களின் (கட)

போதசந்திரன் சொல்லுதல்.

பெருமலைக்கஜநகேரா - அடாநீயென் - பேசவாயெங்கட்கெதிரோ
தெரியாமலேயபாயஞ்செப்பியேன் வசைக்கிறாய்
சரியல்லவீதனக்குச்சண்டியே வருகுவாய் (கட)

மதுரைசெட்டி சொல்லுதல்.

பக்குவமாகசப்பட்டீர் - என்வலைதனிற் - பலிசிறந்தினியேகெட்டீர்
சிக்கிக்கொண்டீர்வசமாய்ச்செப்புவதினி யுண்டோ
மிக்கப்புரட்டுதிருட்டும்வேண்டாங்கள்தங்கள் பண்டோ (கட)

போதவியாபகன் சொல்லுதல்.

பெருபாம்புநீடா - செருட்டுக்குத் - செப்புவாயேமூடா
கெருவங்கொண்டலையுங்கேடா வாதாடாதே
பெருமைமனத்தெண்ணிவெறுமைமர்கூத் தாடாதே (கட)

மதுரைசெட்டி சொல்லுதல்

பக்கப்பநீவீரங்கே - வீண்வார்த்தை - பகர்ந்தாலொன்றிலையிங்கே

சிங்கத்தையோர்முயல்செய்ததை யறியீரோ
சங்கதியறியாமல்தலையிட்டலை மதிரோ (கட)

போதவிபூஷணன் சொல்லுதல்.

கதிரோன்முன்வீரங்கொண்டு - பனிவீசுமோ - கதையறியாமற்கண்டு
மதிகெட்டுவாதாடுமடையாசித் திரமாக
நிதிபோலதைககர்போர்ந்ததடா முன்பாக (கட)

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

சாற்றளகாபுரிக்குச் சமீபமேவந்துவிட்டீர்
தோற்றுதேயரசன்வாழுந் தூயமாளிகையைப்பாரீர்
கூற்றுவன்போலெதிர்த்துக் குதிகுதித்தென்னையும்மே
மாற்றினவள்ளலெல்லா மன்னன்முன்தெரியுமின்றே.

வசனம்.

ஆ! ஆ! ஓ! ஓ!. மந்திரிகளே யிதோநான்வாழப்பட்ட அளகாபுரிப்பட்டணம் வந்துவிட்டீர் அந்த அநந்தரமானகாட்டில் கொடியகாலனைப்போ லடிக்கவர் ததும் ஒட்டகத்தைக்களவுசெய்ததும் ஏமாற்றியதும்புரட்டும் இப்பொழுத ல்லவோதெரியும் அதோபாரீர் மகாராஜன்வாழும் திருப்பதி தெரிகின்றதே மந்திரிகளே.

மதுரைசெட்டி போற்றிவிருத்தம்.

வீராதிவீரரென்று மேதினியாள்வேந்தர்க்குத்
தீராதிதீரனுகித் தினகரன்மரபுதித்த
சூராதியளகேசேந்திரா அலையடிசரணம்போற்றி
வேராகியலையுமென்றன் விண்ணப்பங்கேட்டிடுமே.

மந்திரிகள் போற்றிவிருத்தம்.

நவமணிக்கிரீடம்பூண்டு நற்செங்கோல்கையிலேந்திக்
குவலயவேந்தர்போற்றக் கோதறத்திறம்நன்றும்
இவையவையென்றுனாக்கு மிராஜாதிராஜனுவ
சவிவளாமுளகேசேந்திர சக்ரபூபாலாபோற்றி.

இராஜன்சொல் விருத்தம்.

மன்னர்தம்பாலினியமருநீதிசொல்லும் மந்திரிகளைப்போல்நான்கும் வல்லவிரர், பின்னுமுனைத்தொடர்ந்துவரவநனம்வாடிப் பேதமுற்றுத்திகிலடைந்தபேதையாகிப், பன்னரியகொலுச்சமுகம்வந்துநின்ற பண்புயரும்வர்த்தகனேபகரக்கேளாய், உன்னகத்துனிவைத்துவந்ததுயரமேதோ உண்மையுடனின்னதெனவோதுவாயே.

வசனம்.

ஆ! ஆ! கேளீர் மதுரைசெட்டியாரே, அரசர்களருகிருந்து நீதிமுறைமைகளைச்சொல்லு மந்திரிகளைப்போல நான்குவீரர்களோடும் உன்[illegible] கவலையைச்சொல்லிட்டு திகிலடைந்து வந்தகாரணமேதோ என்மனதிலிருக்கும் அம்பிளப்பட்டி வர்த்தகனே.

மதுரைசெட்டிசொல் கொச்சகம்.

காவலனேயென்றன் கனகத்தையிந்நான்கு
பாவிகள்வஞ்சித்ததன்றிப் பற்றியெனைத்தாடிணித்தார்
பூவுலகிலேயிவர்கள் போலுமிலேயேகள்வர்
காவலனேயிக்குறையை வழுத்துகிறேன்கேளீரே.

வசனம்.

இராஜாதிராஜனே யான் தங்களரசாக்ஷிக்குளிருப்பவனுச்சுதே, எனக்குத் தானோ இத்துன்பம்வரவேண்டும் இவர்களென் ஒட்டகத்தைக் களவுசெய்ததுமல்லாமல் நான்கேட்டதற்கு இவர்கள் அடிணித்தடிக்கவந்த வைராக்கியமென்ன சொல்லுவன்மன்னவா.

மதுரைசெட்டிசொல் கண்ணிகள்

தரு. இராகம் - சாமகல்யாணி. தாளம் - ஏகம்.

ஐயையோவென்றுயர் மெய்யாகச்சொல்லுவன்
அன்புடனினிக்கேளீர் மன்னவா.
வையகத்தரசர்வணமரைடிபோற்றிடு
மதிபனேயளகேந்திர மன்னவா.
சிறுபொழுதிருந்தேநான் சேர்த்தகிழிகளெல்லாஞ்
செங்கையினுற்கொடுத்தே மன்னவா.
உரியவர்ந்தகத்திற்கா வலகெக்குமென்னுட
ஞகந்தசரக்குகொள்ள மன்னவா.
பெண்ணொட்டகமொன்றுதான் பிரியமாய்வாங்கினன்
பேகவனதின்சாயல் மன்னவா.
கண்ணில்லைவயிறுகுல் கால்முடம்வால்கூழை
காண்பீரதின்குறிப்பை மன்னவா.
பனிரண்டுவருடமாய்ப் பண்பாயதைவளர்த்தன்
பாரினில்வெகுதிடம் மன்னவா.
தனியும்வாயுவினடைத் தடவாசளனுவாய்த்
தாங்கிச்சுமைசுமக்கும் மன்னவா.
மலரடிதரிசினைமாதமிரண்டின்முன்
வந்தவந்நாளினில் மன்னவா.
கலக்கமின்றிப்பதியிற் கட்டியகனகதன்
காணமற்போனதே மன்னவா.
கிழக்குமேற்றென்றிசை கிரிகளெங்குந்தேடியுங்
கிட்டிலையதின்சாயல் மன்னவா.
அழுதென்மனதலாடி யலேந்தேவடதிசையை
அடியாரேனுக்கிப்போவகையில் மன்னவா.
எதிரிலிந்நால்வர்க ளிசைந்தெதிரிலாய்க்கூடி
ஏசோபித்தவந்தனர் மன்னவா.
பதமைதப்பணிந்தேயிப் பாதையிலொட்டகம்
பார்த்திரோவென்றேனுன் மன்னவா.

நால்வர்களுமொட்டகசாதனமுரைத்தாரென்
னகமகிழ்ந்தேன்கென்றன் மன்னவா.
மேலதைக்காணுமல் மேவினசாயலை
விளம்பினேமென்றார்கள் மன்னவா.
காணுப்பொருட்குறிப்பைக் கழறுவரோவுலகில்
கள்ளரிவரோயாகும் மன்னவா
பேணியொட்டகச்சாயல் பேசினுலெவ்விதமென்றன்
பேதங்கொண்டெதிர்த்திட்டார் மன்னவ
நாயென்றும்பேயென்றும் நாக்கறுப்பேனென்றும்
நால்வருமாய்க்கூடி மன்னவா.
ஆயுதங்களையோங்கி யடித்தென்னுயிரைவாங்க
அஞ்சாமல்துணிந்திட்டார் மன்னவா.
தாவியெனைப்பிடித்துத் தள்ளியடிக்கவே
தான்மனதாகினர் மன்னவா.
மேவியேயடுக்காட்டில் மிரட்டயானும்நடுங்க
மெத்தத்தாடிணித்திட்டார் மன்னவா.
இவர்களுடனெதிர்க்கவெனக்குப்பயமுற்றது
ஏங்கியலறுகின்றேன் மன்னவா.
புவியிலிவருரைத்த பொய்புமெய்புமெனக்குப்
புனையறச்சாற்றுவீர் மன்னவா.
அடியானைப்பம்பரம்போ லாட்டியலறச்செய்தா
ராஜுவிதுஞாயமோ மன்னவா.
படிமீதிலிந்நால்வர் பலிதொழக்கச்செய்வதன்
பாரமென்றுவைத்தீர்ப்பீர் மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

வணிகனேதெரிந்துகொண்டேன் மனதினிற்கிலேசம்வேண்டாம்
அணிவுளகள்வரென்றுய் ஆதும்பொய்கிசங்கள்யாவும்
குணமுடனிவருரைக்குங் கொள்கையப்பயனறிந்தே
உணர்வுடனேயுனக்கும் ஓதுவேனுதவேனே.

வசனம்.

கேளும்ஐய்வர்த்தகமதுரைசெட்டியாரே, நீயெனக்குச்சொல்லிய விர்த்தாந்தங்களெல்லாந் தெரிந்தனன் இவர்களுன்னொட்டகத்தைக் களவுசெய்தார்களென்றும் பிடித்தடிக்கவந்தாரென்றும் சொல்லுகிற உன்மனோசஞ்சலமிதுவோ. நல்லது இவர்கள் வாய்ப்பிறப்பையாராய்ந்துசொல்லுவேன்செட்டியே.

இராஜன்சொல் விருத்தம்.

பூதலமாளரசர்தங்களருகிருந்தே புனையறவோலக்திதுபொருந்தச்சொல்லும் [ம்
போதமிகுமந்திரிகள்போல்நான்குபேர புயபலரோயிவ்வணிகனேடிக்கன்
வாதிட்டகாரணமேனவாழ்பேருரும் மனந்தேறவெள்ளுக்காய்வருத்தாற்போலு
ஓதிடுவீரேதுங்கள்சமரொழிந்தே யுற்றவிதமின்னதவென்றுரைசெய்வேனே.

வசனம்.

இராஜர்களருகிருந்து நீதிதவறாத்தமந்திரிகள்போ லியல்புபொருந்திய நால்வர்களே, நீங்களிருந்ததெந்தத்தேசம் உங்கள்பெயரென்ன இந்த ஏழைவணிகனுடனீங்கள் வாதிட்டகாரணமென்ன இனியாதொரு ஐயமில்லாமல் என்னுக்காய் பிள்ளைதைப்போல் சொல்வீர்கள்.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

தாரணிவாழ்ம நவரசர்செங்கைகூப்பிச் சரணமெனக்கொலுவிருக்குந்தகைமையோனே, ஏரணியுமமதுபதஞ்சிரமமைத்தேன் இயம்பிடுமிவ்வேழைமொழியினிதாக்கேளீர், சேணியுங்கங்கைகுலத்தவதரித்தோம் செப்புமறைநான்காறுஞ் சிந்தைதேர்ந்தோம், நீரணிந்தவைம்முகனையெந்நாளும் நினைவினிலுங்கனவினிலும் நிகழ்த்துவோமே.

வசனம்.

பூமண்டலத்தரசர்க ளிருபுறம்புடைசூழக் கொலுவிருக்கும் மகாராஜனே, உமதிருபாதங்களைத் தலைமீதமைத்து அடியேன்சொல்லும்வார்த்தையைக் கேட்பீராக எங்கள்வாசஸ்தலமோ மதுராபுரிப்பட்டணம், வேளாளர்குலம் வேதசாத்திரமுட்பங்களையாய்ந்ததற்குக்குற்றமில்லை சுயம்பிரகாசமயேசுரனைத்துதிக்கும் பக்தர்இதன்றி.

இதுவுமது விருத்தம்.

எந்நாளுநல்வினையைக்கைக்கொண்டேன்யா னிதயத்திற்றினையளவுமேதமில்லேன், சொன்னமொழிதவறுதசத்யகீர்த்தி சுமந்திரனென்றமைச்சனாப்போற்றுமுன்னையானேன், மன்னுதிமன்னவனேமநரோசன்றன் மந்திரிகளாய்வாழ்ந்திருந்தோம்வாய்மையாக, இன்னமுமிம்மூவர்களில்மூத்தோன்யானே யென்பெயரோபோதவாதித்தனாமே.

வசனம்.

நல்வினைதீவினையென்பதி லடியேன் நல்வினையேமனதில்வைத்து தினையளவும் தீவினையைநினைக்காதவன் சத்தியகீர்த்தி, சுமந்திரனென்றுசொல்லும் நிபுணமந்திரிகள் நன்னடத்தையிற்சேர்ந்தவன், எங்கள்யுக்திவிவேகசாதுரியம் மகாவல்லமையுற்றது, அடியோம் மநுரோசமகாராஜன் மந்திரிகளாயிருந்தோம், இம்மூவர்களுக்கும் யான்மூத்தவன், என்பெயர்போதவாதித்தனென்றறிவீர் மன்னவனே.

போதசந்திரன்சொல் விருத்தம்.

தெண்டிரைசூழ்பூவுலகையோர்குடைக்கீழ் ஜெயவிஜயசாம்ராஜ்யனென்று செங்கோல், எண்டிசையுமோச்சுகின்றமாகேசேந்த்ர இறைவாவிவ்வேழையன் விள்ளியல்பறிந்தேற், கண்டர்களுநடுங்கிடுவார்பகைவர்தாமெம் மரசனுக்கேதிறைகொணர்ந்திந் தடியிற்றாழ்வார், பண்டுமெங்களுக்கிவிவேகத்திற்கொப்பாப் பார்மைச்சரீடிலையேபகர்வேன்மன்னு.

வசனம்.

கடல்சூழ்ந்தஉலகின்கண்வாழ் அரசர்களுக்குச் சுத்தவீரதத்துவபராக்கிரமசிங்கமாயுராசாக்ஷிகடாத்த மகேசம்மன்னவனேசரணம், அடியேன்வில்லேவனைத்

தாரணியைப்பூட்டிக் குணத்தொனிசெய்வேனானல் தேவர்களெல்லாம்நடுநடுங்கிடுவர் பகைவராகியவரசர் மறுமொழிபேசாமல் எம்மரசனுக்குத்திறைகொடுப்பர் எங்கள்யுக்திபுத்திமிகுந்த வல்லமையில் மற்றமந்திரிகளினையில்லை இதன்றி.

இதுவுமது விருத்தம்.

அரியுமயனுஞ்சிவனுமுன்னுருப வானடியையகலாமலகத்திற்கொள்வோம், ஒருபோதும்பொய்சொல்லோ மெய்சேர்நாவு முண்மைபெருந்தன்மைகுணமூலதிலென்றும், திரிகாலவன்மையெல்லாந் தெரிந்துளைப்போந் தேர்வேந்தே யிவர்க்கிளையசிறியவன்யான், இருவர்களின்மூத்தவனென்றுமதேயம் எழில்போதசந்திரனென்றியம்புவாரே.

வசனம்.

ஹரியும் அயனுஞ் சிவனுமென்ன மூன்றுருவங்களுந் தனக்கொருவடிவாகப்பெற்ற பரம்பொருளைமனம்விடாம லிரவும்பகலுந்துதிப்போம் அண்டகோளமிடிந்தபோதிலும் பொய்யென்பதைச்சொல்லோம். மூன்றுகாலவன்மையையும் இளைஇளையானிரித்துச் சொல்வம் இவ்விருவர்க்கு மூத்தோனு மிவர்க்கிளையோனுமடியேன் என்பெயர் போதசந்திரன் மகாராஜனே.

போதவியாபகன்சொல் விருத்தம்.

சுடர்பெருரும்பரிதிகுலமணியாய்வந்த துரைராஜசிங்கமேயான்சொல்லக்கேளீர், கடகரிதுரங்கசிங்கக்கராசனங்கள் காட்டினில்வாழ்வல்விலங்குக்கூட்டமென்றன், அடல்சொலுபாயத்திலவைசமாய்ச்செய்வன் ஆரணமிதிவ்வேற்றமெல்லாமாய்ந்தேன், திடமுறுமிவ்விருவர்களுக்கிளையனென்பேர் திகழ்போதவியாபகனேதெரிவீர்வேந்தே.

வசனம்.

சூரியவம்சோதயமகாராஜனேகேளீர் சாமார்த்தியம்பொருந்தியயானைகுதிரைசிங்கம்புலி இன்னம்பலத்தமிருகங்களை எனதுபாயதந்திரத்தினாலேவசனைவசப்படுத்திசேனையிட்டுவாகனமாக்குவன் அடியானிவ்விருவர்கட்கிளையவன் என்பெயர்போதவியாபகனையனே.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

விரியனந்தங்கொண்டாலும்ரோக்குதற்கு வெப்பமுறும்பாறுகுலவேந்தர்வேந்தே, தொழுதழைமயிருகரத்தாற்றுவிப்போற்றுந் தொண்டனுரையைக்கேளீர்சுருதிநான்கும், பழுதில்கலைமநுஞானமாறுசாத்ரம் பகரதியசோதிடநூல்பாரிலின்னம், எழுதரியநான்முறைகளெல்லாந்தேர்ந்தேன் இயம்புகலைச்சிக்கமெனவெண்ணுவீரே.

வசனம்.

கேளீரஜகேந்திரபூபதியே நான்குவேதம் ஆறுசாத்திரம்நீதிவாக்கியம் கலைக்கியானஞ் சோதிடஞ்சரநூல் பஞ்சபட்சி இன்னம்வழங்குங்காவியங்களெல்லாமாராய்ந்தவடியேன் இதன்றி.

இதுவுமது விருத்தம்.

சொல்லிடுமுன்வினைத்தவெண்ணமின்னதென்பேன் சுரர்குருவுமஞ்சிடவேசோர்விலாமல், அல்லல்செயுந்தீவினைநல்வினைமுக்காலம் அறியும்பின்னேற்றமுங்காரணங்களெல்லாம், தொல்லுலகிலென்றனைப்போல்நவில்வாரில்லை தோன்

ருவிம்மூவர்களில்நாலாமந்திரி, வல்லமைசேர்போதவிபூஷணனென்பேரோ வ
சையின்றியெங்களைவசனித்தோமே.

வசனம்.

சொல்வதற்குமுன்னம் மனதினில்நினைத்தவெண்ணங்களையும் வருங்காலம், சென்றகாலம், நிகழ்காலம், நல்வினைதீவினையும் சுரர்குருவாகிய பிரகஸ்பதி வெட்கும்படிசொல்லுவன், அடியேன்செய்கைக்கெதிரானவ ரெவருமில்லை இம்மூவர்கட்கு மிளையவன்யான் என்பெயர் போதவிபூஷணனென்றறிவீர் மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

வஞ்சமென்னளவுமின்றி வண்மையதாவெங்காளும்
அஞ்சலில்லாதிசொல்லுக் கங்கமந்திரியேரோவாய
மஞ்சுலாவிமுகங்கள் வல்லமையுத்திமாட்டு
பஞ்சபாண்டவர்களென்றே பகரலாமிவர்களைத்தாம்.

வசனம்.

கேளாய் கருத்துக்கிசைந்தமந்திரி மதுநீதியே இவர்கள் முகவலங்காரஜோதிதவிலாசமும், சுத்தவீரதத்துவவிவேகசாதுரியமும், எண்ணிப்பார்த்தால் குருகுலவேந்தர்களாகிய பஞ்சபாண்டவர்களுக் கொப்பிடலாமந்திரியே.

மதுநீதிசொல் விருத்தம்.

மெய்யிதுமன்னர்மன்னா மேதினிமிசையினால்வர்
செய்கையைத்தான்கண்டந்தத் திரிகர்த்தாமகிழுவாரே
ஐயமாமதுரேசன்றன் னரசினையவர்கள்விட்டுப்
பையவேவந்தவாறு பார்த்திபாஇன்றுக்கேளீர்.

வசனம்.

கேளீர்மகாராஜனே, இவர்கள்மாட்சிமை வீரதத்துவத்திற்கு திரிகர்த்தர்களுமகிழ்வார், ஆனாலிவர்கள் மதுரேசராஜனைவிட்டுவந்த காரணமேதென்றும் விசாரிப்பீர் மகிபதியே.

இராஜன்சொல் விருத்தம்.

நால்வரிவிருக்குஞ்செய்கை நானறிந்தகமகிழ்ந்தேன்
வேல்விளாயுதங்கைக்கொண்ட வீரமேமதுரேசன்றன்
கோலினைக்கடந்திங்கள் குப்பெனவந்ததேது
மேதுமில்வணிகனோடு விசயமுற்றவிதஞ்சொல்வீரே.

வசனம்.

ஆ! ஆ! வாருங்கள்மந்திரிகளே உங்களுடையசுத்தவீர பராக்கிரம் கல்விமாதிரியையுங்கண்டேன் என்னிலடங்காத மகிழ்ச்சிகொண்டேன் ஆனால்நீங்கள் மதுரேசமகாராசனைவிட்டதேது இந்தவேலையுவணிகனுடன் வாதிட்டகாரணமேது தெரியச்சொல்லும் மந்திரிகாள்.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

மன்னவனேமதுரேசவன்றாலின்பால் வாழ்ந்திருந்தோங்குறையாயென்வந்ததென்னில், தன்னுளிருந்தம்முபம்பகற்குறுதி சயமறாதுநீவினையச்சகசமென்

றான்; பன்னமைச்சரொன்றகத்திலெண்ணிடாமல் பாவியவன்றூஷணித்தபான்மையாலே, இன்னமந்தவரசனிடமிருந்தாலீன மென்றேயகன்கர்கடந்தோமிறைவனெந்தாய்.

வசனம்.

கேளீர்இராஜகிராஜனே மதுரேசவாசனிடம் யாங்கள் வெகுகாலமாய் நீதிதவறுமலு மவர்செங்கோலுக்கு தாழ்ச்சிநேரிடாமலு மிருந்தோம் அவர்நீதிசாத்திர முறைமைகளைத்தப்பி தீவினையைக்கைக்கொண்டதுமல்லாமல் யாங்கள்சொல்லும்நீதிகளைத் தன்செவியிற் கேறவொட்டாமல் தான்கொண்ட எண்ணப்பிரகாரந்துரைத்தனத்திற் கழிவுதேடிக்கொண்டதுமன்றி வீணாகவெங்களைத் தூஷணித்தமித்தம் அந்நாட்டைக்கடந்து வந்துவிட்டோம் மன்னவா.

இரவுமது விருத்தம்.

வரும்வழியிலொட்டகத்தையளகேசேந்திர மகிபதியேகண்டதில்லைவாய்மையாரும், பெருமையுடனின்சாதனத்தைப்பார்த்துப் பேணிநகைநகைத்தங்குப்பேசிவந்தோம், கருணையுடனிவ்வணிகனெதிரேறெக்கிக் கனகத்தைக்கண்டதுண்டோ கழறுமென்றான், ஒருமையுடன்காலதற்குமுடந்தானோவென் றேதினேனீதென்றறுமைமையயா.

வசனம்.

கேளீர்மகாராஜனே மதுராபுரியைவிட்டு நாங்கள்வெகுதூரம் வந்துவிட்டோம் வந்தவழியில் குறுக்காவொட்டகம்போனசாயலைக்கண்டோம் அதற்குண்டாகிய வடையாளங்களைபெங்களுக்குள் பேசிக்கொண்டுவந்தோம் இவ்வர்த்தகனெதிர்ப்பட்டு ஒட்டகத்தைப் பார்த்தீர்களோவென்றான் ஒருகாலதற்கு முடமாயிருக்குமோவென்று யான்சொன்னதே மற்றொன்றுமில்லை மன்னவா.

போதசந்திரன்சொல் விருத்தம்.

மன்னவர்மன்னனான வண்மைசேரளகேசேந்திரா
என்னநான்சொன்னதென்று வியம்புவேனொட்டகத்தைத்
துன்னுமெங்கண்ணினாலே சுத்தமாய்க்கண்டதில்லை
பின்னும்வால்குழையென்று பேசினேனரசிந்திமடோ.

வசனம்.

கேளீர் ளகேந்திரபூபதி இவ்வர்த்தகன் தேடிவந்த ஒட்டகத்தையெங்கள் கண்ணினால் கண்டதேயில்லை போனவடையாளத்தினாலதின்வால் குழையாயிருக்குமோ வென்றுசொன்னேன் மன்னவா.

போதவியாபகன்சொல் விருத்தம்.

இருவர்களுரைத்தவாறே யிவர்தேடுமொட்டகத்திற்
கொருவிழியில்லையென்றே யு[illegible]
சரியிதுயுக்தியென்றும் சாதுர்யகளவேயென்றும்
நிலையறிந்தெங்களுக்கு நிகழ்த்திடுமன்னர்கோவே.

வசனம்.

கேளீரரசே, அவ்வொட்டகத்திற்கு ஓர்விழி அந்தகமாயிருக்குமோவென்றடியேன் சொன்னதுயாங்கள் சொன்னதுயுக்தியென்றும் அல்லது [illegible]தென்று மறிந்துசொல்லவேண்டுமகிபதியே.

போதவிபூஷணன்சொல்விருத்தம்.

சோதிடஞ்சாரநூல்யாவுந் தகைமறக்கற்றேருக்கே
யாதொருகாரணங்க ளியம்புவதரிதோமன்ன
சூதின்றிவொட்டகந்தான் சூலதோவயிறுமென்றேன்
ஈதுதான்யாருரைத்த திறக்களவுண்டோவேந்தே.

வசனம்.

கேளீரண்ணலே சோதிடஞ்சாரநூல் பஞ்சபக்ஷிஇயல்பாக ஆராய்ந்தவர் முன்பின் வருவதைச்சொல்லுதல் பெரிதல்லவே ஆனாலிவ்வர்த்தகன் தேடியவொட்டகத்திற்கு வயிறுசூலாயிருக்குமோ வென்றுசொன்னேன் மகிபதியே.

இராஜன்சொல் விருத்தம்.

மதுரைமாபுரியைவிட்டுநீங்கள் வரும்வழியெதிரிலேவணிகன், விதமுடனொட்டகங்கண்டதுண்டோவென வினவவோரால்வருமாக, அதின்குறிப்பெல்லாம் வேறுபாடின்றி யறைந்தபின்வர்த்தகனின்னம், எதிர்மொழிசொன்னதென்னவாதவனோடிட்டதையிவமெனக்குரைப்பீர்.

வசனம்.

ஆ! ஆ! மந்திரிகளே நீங்கள் மதுராபுரிப் பட்டணம்விட்டு வருகிறபோது வர்த்தகனெதிர்ப்பட்டு உங்களைவொட்டகங்கேட்க அதின்குறிப்பை நீங்கள்சொன்னதும் எதிர்மொழிவர்த்தகன் சொன்னதென்ன அவனுடனீங்கள் வாதிட்ட காரணமென்ன தெரியச்சொல்லுவீர்கள் மந்திரிகளே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

ஒட்டகக்குறிப்பைநால்வருமிதவா யோதினயுக்தியெண்ணாமல், திட்டமாய்க்களவுசெய்தவரென்றே சினந்துடனெங்களையேசிச், கெட்டியாயவன்வாதிட்டதினாலே கனத்தினேனல்மொழிவெகுவாய், விட்டினிப்போவதில்லையென்றெதிர்த்து வினிவில்வசைசொத்தனன்வேந்தே.

வசனம்.

நாங்கள்சொன்ன யுக்தியை யெண்ணிப்பாராமல் ஒட்டகத்தைக் களவுசெய்தவர்களென்று எதிர்த்துவாதாடி கொரேகோபத்துடன் மேல்விழுந்து மடிபிடித்திழுத்தான் மன்னவா.

இதுவுமது விருத்தம்.

வசைத்திடவிளைஞரகச்சினமானார் மந்திரிகட்கினமீதென்றே
இசைத்துடனிவர்கண்மூவரைத்தணித்தேன் எதிர்த்திடாவாஞ்சையோடிருந்தார்
புசபலாதங்களுமமேயுரைத்துப் போதலாமென்றனன்வணிகன்
திசையுளோர்புகழும்வேந்தவிதறிந்தித் திங்கிலையகற்றுவாயரசே.

வசனம்.

மடிபிடித்துவாதாட எனக்கிளையவராகிய மூவருக்குந் தணிக்காத கோபம் பிறந்தது இவர்கள் கொண்டகோபத்தையுந் தணித்தேன் பின்னிவ்வணிகன் தங்கள் பெயரைச்சொல்லிவரும்படி யழைத்தான் இதுவேநலமென்று தங்கள்பாதசேவைதந்தோம் இனியிம்முட்டவணிகனுக்கு நற்புத்திசொல்லி அடியேங்களைக் [illegible]ரரசே.

இராஜன்சொல் விருத்தம்.

என்மனக்குறிப்பறிந்தே யெந்நாளும்நீதிசொல்லும்
நன்மதியுள்ளமந்திரி நால்வர்சொற்கேட்டிட்டாயா
தன்மையாயொட்டகத்தைத் தங்கள்கண்ணாற்காணாமல்
முன்மையாஞ்சாதனங்கள் மொழிந்ததுதீரந்தானே.

வசனம்.

கேளாய் மறுநீதிமந்திரியே இந்நால்வர்களின் வல்லமையும் ஒட்டகத்தைக் கண்ணாற்காணாமல் அதின்குறிப்பைச் சொன்னதையுமெண்ணிறு விவர்க்கிணையானவரொவராகிலுமுண்டோ மந்திரியே.

மறுநீதிமந்திரிசொல் விருத்தம்.

அண்ணலேயிவருக்கொப்பா யறையும்நல்யுக்தியுள்ளோர்
மண்ணினிற்கண்டதில்லை மலரயனிவர்களுக்கே
பண்ணினின்றவசேயென்று பகர்வதற்கையமில்லை
திண்ணமாயமைச்சருக்குள் செப்பலாந்தீரரென்றே.

வசனம்.

கேளீர்மன்னவனே இந்நாலுபேருடைய யுக்திசாமர்த்திய விவேகசாதுரிய தன்மைக் கொப்பாவொருவருமில்லை இவர்களைச்சிருட்டிப்பதற்குப் பிரமதேவன் தவஞ்செய்திருப்பா னென்பதற்குச் சந்தேகமில்லையரசே.

இராஜன்சொல் விருத்தம்.

தருந்தருமிதுவேசாட்சி சாமார்த்தியமுக்திமாட்சி
வகையுஞ்சாதுரியத்தன்மை மஞ்சுலாவியெயிந்நால்வர்
பகைசதிக்கள்வரென்றால் பாவமேசம்பவிக்கும்
அகமகிழ்ந்தினியெனக்கு மமைச்சனேகூறுவாயே.

வசனம்.

ஆ! ஆ! தரும், தரும், இவர்களுடைய மாட்சிமைபுத்தி விவேகசுந்தர முகவிலாசமுந் தோற்றமாகின்றதே ஓ! ஓ! நீசொன்னதுசரி ஆனாலிவர்களைக் கள்வரென்றுசொன்னால் மகாபாதகஞ் சம்பவிக்கும் ஆனாலிவ்வணிகனுக் கென்னஉபாயஞ் சொல்லுவது சொல்லுவாய் மறுநீதிமந்திரியே

மறுநீதிமந்திரிசொல் விருத்தம்.

வணிகனுக்கிவருரைத்த வல்லமையெண்ணிடாமல்
அணிவுளகள்வரென்றே ஆற்றுவானிவரோடுடன்
உணர்வுடனுமறைந்து முகந்திடானதற்குக்கொஞ்சம்
பணமவன்வசமேதந்தால் பார்த்திபாசெல்லுவானே.

வசனம்.

கேளீ ரனவேந்திரபூபதியே இவர்கள்சொன்னயுக்தியை யிவ்வணிகனெண்ணாமல் அவதனித்துவாதாடிக்கொண்டிருந்தான் நாம்சொல்லியுங் கேட்கமாட்டானேல் இனியுபாயவார்த்தைகளைப் பேசிக்கொஞ்சம்பணங்கொடுத்தால் போய்விடுவானரசே.

இராஜன்சொல் விருத்தம்.

வர்த்தகனேயென்னுரைக்குநீயாதொன்றும்மறுவார்த்தைசொல்லாமன்மன ங்களிப்பாய், சர்ப்பனேயாய்க்கனகத்தத்தையிந்நால்வர் சதிசெய்தோரொன்றிய லாச்சாற்றவேண்டாம், விற்பனவிவேகிகணற்செய்கைநீர் மேதிமேலிவர்களைப் போல்வீருண்டோ, அற்பரென்றுல்நாவழியும்நானுனக்கே அளிக்கும்நிதிகளைக் கொண்டுன்னகஞ்செல்வாயே.

வசனம்.

ஆ! ஆ! கேளும்வர்த்தகமதுரைசெட்டியாரே நெடுநாளாயுன்னற்குணமெனக்குதெரியவரும் நானுனக்குச்சொல்லும்வார்த்தைக்கு மறுமொழிசொல்லாமலிருக்கவும் அதேன்னெனில் இவ்வீரர்களுன் ஒட்டகத்தை களவுசெய்தவர்களென்றெண்ணவேண்டாம் இவர்கள்மீது குற்றஞ்சொன்னால்சொன்னநாவழிந்துடனே பாவஞ்சம்பவிக்கும் நீயென்னிடமுறையிட்டுக் கொண்டதினால் இதோ கொடுக்கும்வேண்டிய வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டுபோவாய் மதுரைசெட்டியே.

மதுரைசெட்டிசொல் விருத்தம்.

நேர்நிறைநிஜமும்பொய்யும் நீதியநீதங்கண்டு
பார்மிசைசெங்கோலோச்சும் பார்த்திபாதங்கள்சித்தம்
சீர்பெறச்செய்வதன்றிச் செப்புவதென்றன்பாக்கியம்
ஆர்வங்கொண்டகத்தோனுனே னரசருக்கரசேபோற்றி.

வசனம்.

சரணம் சரணம் இராஜப்ரபுவே நேர்நிறையாய் மனத்தராசினால் இதுநிஜம் இதுநீதி இதுபொய் இது அநீதியென்றாராய்ந்து நாடினோர் குறைதீர்க்கப்பட்டவர் நீரோ தேவரீர்வார்த்தைக் கடியேன் தடுத்துப்பேசுவ துண்டோ இல்லை தங்கள்சித்தம் அடியேன்பாக்கியம்மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

அகத்தினெண்ணங்களெல்லா மறிந்துரைசெய்யுமந்த்ரி
திகைக்குமிவ்வணிகனுக்குத் திகழ்பெறுமுத்துமாலை
மிகுத்தவோர்சாளிகைப்பொன் வேண்டியசரிகைப்பட்டும்
பகுத்தினிதாராயின்றேன் பற்றியதுயரம்போமே.

வசனம்.

ஆ!ஆ! கேளாய் மதுநீதிமந்திரியே இவ்வணிகன் மனமகிழும்படியாய் ஆயிரம்பொன்பெற்ற முத்துமாலையும் ஓர்சாளிகைப்பொன்னு மின்னமிவனுக்கு வேண்டியவெகுமதிகளைக் கொடுத்தனுப்புவாயமைச்சே.

மநுநீதிமந்திரிசொல் விருத்தம்.

ஒட்டகம்போக்கடித்த ஓய்செட்டியாரேவேந்தன்
இட்டமாயுனக்களிக்கு மெழில்பெறுமுத்துமாலை
கட்டியசாளிகைப்பொன் கருதரிச்சரிகைப்பட்டும்
இட்டமாயீய்ந்தேன்கொண்டு செல்லுவாயின்பதிக்கே.

வசனம்.

ஆ! ஆ! கேளீர்செட்டியாரே, மகாராஜனுத்தரவின்படி வேண்டியவெகுமதிகளும் சாளிகைப்பொன்னு மிதோகொடுத்தேன் இனி யுன்னிருப்பிடஞ்சேரும்பிள்ளாய்.

மதுரைசெட்டிசொல் வெண்செந்துறை.

மந்திரியேநீர், எக்கமக்களித்த
இந்தநற்பொருள்களை, விந்தையாய்க்கொண்டோம்.

மதுரைசெட்டிசொல் கொச்சகம்.

என்னதஷ்டமென்னசொல்வே னித்தரைமேல்யார்க்குண்டு
பன்னுமொட்டகங்காணேன் பாதைமிற்றேடிச்செல்ல
முன்னேக்கிகாலமைச்சர் மொழிந்தமவரைப்பற்றி
மன்னனிடம்வந்ததினால் வரிசைமிகப்பெற்றேனே.

வசனம்.

ஆ! ஆ! ஒ! ஒ! எனக்குண்டான அதஷ்டத்தைப்போலிந்த உலகத்தில்யாருக்குமில்லையே ஒட்டகங்காணாமற்போனதும், அதைத்தேடுந்தருணத்தில் எதிர்ப்பட்டமந்திரிகளைப் பெரும்பிடியாய்ப்பிடித்து எனதரசனிடம்வர இதினாலெனக்கு வேண்டியதிரவியங்கள் கிடைத்ததே.

தரு. இராகம் – பந்துவராளி. தாளம் – ரூபகம்.

பல்லவி.

என்னைப்போற்சிலாக்கியம் – புவியில் – எவர்க்குண்டுபாக்கியம்.

அநுபல்லவி.

பன்னும்பெண்ணொட்டகம் போனாலும்போகட்டும்
பார்க்கேன் – அதை – யேற்கேன் (என்)

சரணங்கள்.

எங்கெங்குந்தேடி யலைந்துநங்கிட்ட   வில்லை
ஏங்கிவடதிசை போகையில்நற்   சொல்லை
சங்கையில்லாமலந்நான்குமந்திரிமாருஞ் – சாற்ற – மனந் – தேற்ற (என்)
சொன்னதைப்போறுமென்றுறுதியா   யங்கு.
தொடர்ந்துவாதாடிக்கொண்டுவந்தே   னிங்கு
மன்னனுமென்றனைக்கேட்டிரபூபதி – வாழ்த்தினார் – மகிழ்ந் – தேத்தினார் (என்)
ஆயிரம்பொன்பெற்ற முத்துமாலை   யொன்றும்
அத்துடன்சாளிகைப் பொற்சரிகை   நன்றும்
நேயமுடனெனக்களித்தாரிதுவே – நேர்த்தி – வெகு – கீர்த்தி (என்)

விருத்தம்.

ஒட்டகம்போனால்போகட் டொன்றுக்கும்விதனமில்லை
பட்டணமாளுவேந்தன் பலநிதிசாளிகைப்பொன்
பட்டுடன்முத்துமாலை பரிவுடனெனக்களித்தார்
சட்டமாயென்னதஷ்டந் தலையிசையிருக்குதன்றே.

வசனம்.

ஓ! ஓ! கன்குருடும் கால்முடமும் வால்குறையுமுள்ள வொட்டகத்தானே, ஆ! ஆ! அதுபோனால்போகட்டும் எனதரசனாகிய அளகேந்திரபூபதி வேண்டியதி ரவியமும் சரிகைப்பட்டும், முத்துமாலைகளுங்கொடுத்தார். ஓ ஓ! இனி நெடுநாளை க்குயான் சீர்கொண்டிருப்பேன். அதவ்விடமானது மடிபிடித்திழுத்து தலைமீதேறி க்கொண்டதே.

பொது விருத்தம்.

செட்டியுமிவ்வாறுகச் சிலதிதிபெற்றபின்னர்
ஒட்டகவிதனமற்றே யுளமகிழ்ந்தேகிவிட்டான்
கட்டழகர்களுக்கென்ன காரணஞ்செய்வதென்றே
திட்டமாயளகேசேந்திர தின்னியனுலாசெய்வானே.

வசனம்.

அதோஅதெப்படியென்றால் வர்த்தகமதனைசெட்டியானவன் வேண்டிய வெகுமதிகளைப்பெற்றுப் போனபோது வந்தநாலுமந்திரிகட்கும் என்னகாரணஞ் செய்வதென்றெண்ணி யளகேந்திரபூபதி சொல்லுகின்றவிதங்காண்க.

இராஜன்சொல் விருத்தம்.

வாரும்நல்லமந்திரிகளே யுங்கண்மாட்சி வல்லவிவேகமும்யுக்தி வன்மை க்கொப்பாய், யாருலகிலில்லையமைச்சர் வெற்றிச்செய்கை பார்த்தென்றனகங்களி த்தப் பரிவுளாழ்ந்தேன், நீருமென்றன்செங்கோலுந் தேசம்வாழ்வுஞ் சேனையெ லாஞ்சொந்தமெனச் சிந்தைஎண்ணி, பெருமுறவிந்தகனைப் பாதுகாத்துப் பிள் ளையைப்போலெந்நாளும் பேசுவீரே.

வசனம்.

ஆ! ஆ! கேளீர்மந்திரிகளே, உங்களுடையயுக்திவிவேக வீரத்திற்கொப்பா னவரொவருமில்லை, யான்கண்டதுமில்லை நீங்களென்னிடம்வந்தது மென்னதிஷ் டந்தான் யானும் பிள்ளையில்லாத பெரும்பாவியாயிருக்கின்றனன் என்தேசம் நாடு ஆனைசேனைபரிவாரங்களுக்கெல்லாஞ் சுதந்தரமுடையவர்களாக என்னரு கிருந்து செங்கோலுக்குத்தாழ்ச்சியில்லாமல் நீதிநடாத்திப் பிள்ளைகளைப்போலி ருப்பீர்கள் மந்திரிகளே.

போதவாநித்தன்சொல் விருத்தம்.

தந்தைதாயாகியெம்மைத் தற்காக்கும்வள்ளலேநீர்
புந்தியில்நினைந்துரைத்த புலனதைத்தவத்தியாங்கள்
சிந்திப்பதொன்றுமில்லை தேவரீர்சித்தம்பாக்கியம்
உந்தநல்லரசுக்கீனம் ஒருக்காலும்வாராதையா.

வசனம்.

சரணம்சரணமரசனே, தங்களன்புடன்சொன்னவார்த்தைக்கு மறுமொழி யடியேங்கள் சொல்லுவதில்லை. இனிமேல் தங்கள்செங்கோலுக்குக் குற்றம்வா ராமல் பாதுகாத்துவருவோ மன்னவனே.

இராஜன்சொல் விருத்தம்.

அடன்மிகுங்கட்டியாகி யதிசிக்ரமாகவோடிக்
கொடியிடைப்பெண்ணுள்ளான கோமளவமிர்தவல்லி

நடைநடந்திச்சபைக்கு நான்கமைச்சர்களைக்காண
கொடியினில்லழைத்ததாக நுவன்றுடன்வருகுவாயே.

வசனம்.

ஆரடா அடா வீரகட்டியனே, திடுதிடென்றோடி எனதுபத்தினியாளாகிய அமிர்தவல்லியை நானழைத்தேனென் றழைத்தோடிவாரும் பிள்ளாய் கட்டி யனே.

அமிர்தவல்லி தோற்றம்.

பொது விருத்தம்.

மன்னவனளகேசேந்த்ரன் மந்திரிகளுல்வர்தம்மைத்
தன்னருகிருக்கச்செய்து தனதுபத்தினியாளான
மின்னிடையாள்தனக்கு மேவியதுதன்சொல்ல
அன்னமென்னடைநடந்தே அமிர்தவல்லியும்வந்தாளே.

தரு. இராகம் - பந்துவராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

பூரணச்சந்திரசோதிகிரணவதனிய பூவையமிர்தவல்லிவந்தாள்.

அநுபல்லவி.

பாரளந்ததிருமால்பாரியிவளோ வென்ன
பாவையரிருபுறஞ் சூழ்ந்துமஞ்சலி பன்ன
பரிமளங்கமழ்மலர்மிசைதனிலுறையயன் அருவுருவதுபுரிந்தளித்ததந்நிலைகுறை படியுளாவுஞ்சசியிருகரங்குவிக்க இடரிலாதவானவர்களுமதிக்க (பூரண)

சரணம்.

கருங்கடலுஞ்சிதறும் நாறுங்குழற்சொருகுங்
கடிமலர்புனைந்த சிங்காரம் - ஒளிர்
கதிர்பிறைபொடிசர்த்ர பிறைகுப்பிநவமணி
கற்களிழைத்த லலங்காரம்
திருமகன்மைந்தன்ரதி காதலன்விற்புருவஞ்
சேற்கெண்டையென்னவிழி நீரம் - வாகாய்த்
திகழுங்குமிழ்மூக்கும் பவளநிறத்தவாயுந்
தேமற்படர்ந்தகொங்கை பாரம்
புருவமிருத்ததளிர்ஆலிலைவயிற்றயர் புகலுமதுராவாக்குக்கிள்ளையதென்ன உயர் பொற்புறும்மற்புதவிற்பனசர்ச்சனி செப்பினையொப்பிடைமெப்பகர்விர்ப்பனி பூதலமீதலபாதலத்தோர்களும் ஒதிடமனதயர்வாகுமென்பார்களே பூஷணமிகநிறைதேசுலவுமெழில் வாசமணங்கமழ்வீசுமைங்காதமே புகழுலாவும்பாதசரமொலிக்க மகிமைமேவுந்தன்னடைக்கொலுசொலிக்க (பூரண)

அமிர்தவல்லிசொல் விருத்தம்.

சந்தைநேர்மொழியாரடைச் சாமனையமைச்சர்வீச
எத்திசையரசரெல்லா மினையடிபணிந்துதிழ்க
இத்தனாசெங்கோலோச்ச மின்புறுமகிழ்ராவுன்னை
உத்தமபாதம்போற்றி யுளங்களித்தேத்துவாயே.

அ

இராஜன்சொல் விருத்தம்.

அன்னமென்னடையேவாழி யரிவையேயமிர்தவல்லி
உன்னையானழைத்தசெய்தி யோதவேனினிநகேட்பாய்
மன்னுமிந்நால்வரான மந்திரிகளுடவிவேகம்
இன்னதென்றிவர்கள்யுக்தி யியம்பிடவறிநகண்டாய்.

வசனம்.

ஆ! ஆ! கேளாய்பெண்ணே யமிர்தவல்லி நானுனையழைத்த செய்தியென்னவெனில் இதோ நின்றிருக்கும் நால்வர்களு மந்திரிகள், இவர்கள் விவேகயுக்தி வல்லமையை யென்னென்று சொல்லுவது பெண்ணரசே.

அமிர்தவல்லிசொல் விருத்தம்.

சவுந்தரயவுந்தன்மை யெழில்பெறுமகிழ்நாகேளாய்
மேவுளவிந்தநால்வர் வெளிப்பட்டதெங்கிருந்தே
ஆவலாய்வந்ததிங்கே னன்புடன்றெரியநன்றாய்க்
காவலாவென்றனுக்குக் களிப்புடனுரைசெய்வாயே.

வசனம்.

சரணம், சரணம், மன்னவா இந்நால்வரைப்பார்க்கும்போதே நற்குணசீலரைப்போல் தோற்றமாகின்றது இவர்களெங்கிருந்தவர் இவிடம்வந்த காரணமேது அடியாள் மனந்தேறும்படிச் சொல்வீரரசே.

இராசன்சொல்தரு-இராகம்-தியாசி-தாளம் ரூபகம்.

பல்லவி:

அன்னமேவாராய் - இவர்வந்த - தறைகுவன்சேராய்.

அநுபல்லவி.

மன்னன்மதரோசன்மந்திரிகளாமிவர்
வாழ்ந்தபதிவிட்டதாழ்வினையைக்கேளாய் (அன்)

சரணங்கள்.

தன்மத்தைமறந்தே - மதரோசன் - சாற்றநீதியறிந்தே
கன்மவானென்றிவரகத்திலெண்ணியே
கடந்தப்பதிவிட்டுநடந்துவந்தாராம். (அன்)

கூடி வரும்வழியில் - ஒட்டகம்போன - குறிப்பினையறிந்தே
வேடிக்கையாயிவர்கள்பேசிவந்தபின்
விளம்புவேனின்னங்களங்கமற்றிட (அன்)

வர்த்தகனும்ரமது - பட்டணம்வாழ் - மதுரைசெட்டியென்போன்
நற்கனகத்தைக்கண்டதுண்டோவென்று
நாடிக்கேட்கையினிற்பிள்ளைநால்வரும் (அன்)

ஒட்டகசாதனத்தைக் - குறைவின்றி - யோதினராம்வணிகன்
துட்டக்கள்வரென்றெண்ணிப்பற்றித்தனுந்
தொடுத்துவாதாடியடித்தாரென்னிடம் (அன்)

சுந்தரர்மொழியை - பறிந்திவர் - சூரரென்றேதேர்ந்தேன்
வந்தவணிகன்றனக்குவெகுமதி
வாருடனேயளித்தேகவழிச்செய்தேன் (அன்)

கங்கைகுலத்துதித்தோர் - இவர்நாமங் - கழறுவன்கேளாய்
மங்கையேயிம்மூவர்க்குமூத்தவன்போத
வாநிதிதலிவரோசாதிப்போர்மறுவே (அன்)

வித்தைபெறும்விஜயன் - எதிரொன்ன - விற்சமர்த்தன்போத
சந்திரனிவ்விருவர்க்குமுதல்வனாந்
தையலேநாம்செய்தமெய்த்தவமிதுவே (அன்)

வல்லமிருகங்கண்யிசை - எற்றஞ்செய்யும் - வண்மைப்போதவியாபகன்
மெல்லியேமூன்றுவதமைச்சனிவனே
மேதினிமீதிவரோதமில்லாதவர் (அன்)

சேர்திடஞ்சாஸ்திரால் - வேதங்களும் - சொல்லுமிருவினையும்
ஓதும்போதவிபூஷணனிவனுகும்
உளங்களிப்பாமினியோனெல்லவர்க்கும் (அன்)

அமிர்தவல்லிசொல் விருத்தம்.

கண்ணுக்குள்ளிமையைப்போலக் காக்கின்றமன்னுகேளீர்
மண்ணுக்குளிந்தநால்வர் வந்ததுநம்மதிஷ்டம்
எண்ணியேபிள்ளையில்லா திருந்ததாலிவர்கள்வாய்த்தார்
பண்ணினபுண்ணியந்தான் பலித்ததிந்நாளில்மெய்யே

வசனம்.

கேளீரரசே இவ்வளவு ரூபலாவண்ய வல்லமையுள்ள இந்நால்வர்களும்வந்தது நம்முடையஅதிஷ்டந்தான் நாம்பிள்ளையில்லாத பெருமபாவிகளாய் விதனமுற்றிருந்தற்குப்பகவான் கடாக்ஷத்தால் நமது கவலையத்தீர்க்கவந்தாரரசே.

விருத்தம்.

பிள்ளையில்லாமல்யாங்கள் பேருலகாண்டுமென்ன
கள்ளமற்றிடவேநீங்கள் காட்சியாய்வந்தீராகும்
வள்ளலேபிதாநான்மாதா மக்களேநீங்களல்லால்
விள்ளுவதினிவேறென்ன விதனமற்றுவந்திருப்பீர்.

வசனம்.

கேளீர்கள் மந்திரிகளே. பிள்ளையில்லாத பெரும்பாவிகளாயிந்த உலகத்தையாண்டும்பிரயோசனமென்ன சந்திரசேகரனருளினால் எங்கள் மனக்குறைதிரும்படி இவிடம்வந்தீர்கள் இனியொன்றுங்குறைவில்லை அரசனுந்தந்தையென்றும் யான் தாயென்றும் நீங்கள்பிள்ளைகளென்றும் எப்பொழுது மெண்ணிக்காத்திருப்பீர்கள் மந்திரிகளே.

கண்ணிகள்.—இராகம் - சஹானா. தாளம் - ரூபகம்.

இன்னமும்நான்சொல்வதென்ன எழில்சே னமைச்சர்களே - என்ற
விறைவன்செங்கோலுங்கள்சொந்த மெண்ணி. ரமைச்சர்களே

அன்னைதந்தையாங்களென்றே யருந்சேயரும் நீங்கள் - எங்க
ளரசேயுங்கள்வசமேயல்லா லறையக் குறைவில்லை
தேசமெங்கள்வாழ்வுமற்றச் செல்வமானே சேனை - உங்கள்
சேரியுமந்திரிகளே சிந்தை மகிழ்லீரோ
தேசர்க்கருள்புரியீசன் றன் னேக்கியுங்களை விடுத்தார் - எங்கள்
நினைவுயினிஜெயமானதே நேயம் வெகுஞாயம்
மநவென்றவக்கவிதீர்த்திட்டீர் வர்ம்ம மனுவிட்ட - இந்த
மாபாவியினைமகிழ வந்திரினி யென்ன
ஜெகமாண்டிடுமென்னறுக்கோர் நீங்கே யறுகாமல் - பெருஞ்
செங்கோல்செலுத்துவதுமுங்கள் செயலன்றி வேறில்லை
எங்கட்கினிமேலாகிடும் எதமுங் கட்கென்றே - நீங்க
ளெப்போதுமருகிருந்தே இடேற்று வீர்களே
உங்கட்கென்றுங்குறைவில்லையே உறுதி யிதுநிஜமே - நல்ல
வுணர்வுள்ளவர்க்கின்னஞ்சொல்வ தொன்றில்லை மந்திரிகளே

மந்திரிகள்நால்வருஞ்சொல் விருத்தம்.

தாயேநீயஞ்சவேண்டாந் தாரணியரசர்மற்றத்
தீயவர்கொடியவஞ்சத் தெவ்வுளபகைவர்வந்தால்
வாயுசேர்பஞ்சைப்போல வல்லுயிர்குடித்துக்கொல்வோம்
ஆயரனருளேயுண்டு சொல்வதொன்றில்லையம்மா

வசனம்.

கேளாயம்மணி யெங்களரசன்மீது வேறுதேசத்துப் பகைவராகிய வரசர்களும் அன்மார்க்கவஞ்சர்களும் வந்திடுவாராகில் பெருங்காற்றிலகப்பட்டபஞ்சைப்போல் நிர்த்துளிப்படல மாக்குவோம் நீயொன்றுக்கு மஞ்சவேண்டாம்தாயே.

இராஜன்சொல் விருத்தம்.

தெரிசனாயருகிருந்து நீதிதேர்ந்துரைக்குமந்திரி
படியினில்நம்துவார்த்தை பாக்யமென்றெண்ணித்தள்ளா
அடியவன்வீரபாகை யறையுங்கோல்தருக்கெடுத்து
கொடியினில்வரவேயிங்கு அவலுவாய்காவலர்க்கே.

வசனம்.

கேளாய்மந்திரி மநுநீதிமந்திரியே நமதுபட்டணத்தில் வாழும்வீரபாகுவை யதிக சீக்கிரமாய்வரும்படி ஆக்ஞாபிப்பாயமைச்சே.

மநுநீதிசொல் விருத்தம்.

வெம்புலியைப்போற்சீறும் வீரகட்டியனேகேளாய்
நம்புவியினிலேவாழும் நல்முளவீரபாகு
கொம்புங்கைத்தமுக்கெடுத்துக் கொற்றவன்சபைமுன்பாகச்
சம்பிரமுடனேசெல்லச் சடுதியில்வரச்சொல்வாயே.

வசனம்.

ஆரடா ஆடா வீரகட்டியனே நமதுபட்டணத்தில் வாழும்வீரபாகுவை மகாராஜனழைத்தாரென்றதிக சாக்ரதையாக வரும்படி ஆக்ஞாபித்து வாடாகட்டியனே.

கட்டியன்சொல் வஞ்சித்துறை.

இறைவனுரமைச்சே, பறையனுக்கோதிக்
குறுகவேயிவிடம் உறுகவேசெய்வேன்.

வீரபாகுதோற்றம்.

விருத்தம்.

மெய்யில்வெண்ணீறணிந்து விளங்குமுப்புரிநூலிட்டுக்
கையினில்கோல்தமுக்கைக் களமதாயெடுத்துக்காட்டிப்
பையவேபறையறைந்து பரசிவனயன்மாலுக்கும்
ஐயனும்வீரபாகு அதிசீக்ரமாய்வந்தானே.

தரு. இராகம் - தோடி. தாளம் - ஏகம்.

பல்லவி.

ஐயனும்நானுண்டே - பறையடிக்கும் - ஐயனும்நானுண்டே.

அநுபல்லவி.

பொய்யல்லசிவனையுமாலொடுபிர்ம்மனும்
பூதலமனுக்களையாவையுமளித்திட்ட (ஐய)

வேதபுராணகலை - யாகமம் - விதித்தனன்பொய்யேயில்லை
ஆதவரோதிடுஞ்சாதகம்யாவையும்
அளித்தனனெவர்களுந்துதித்திடயுதித்திட்ட (ஐய)

அரிச்சந்த்ரபூபதியே - என்றன் - அடிமையாக்கினன்கெதியே
தெரிந்திலீரோவிச்செய்திகரியமாலுமென்றன்
சிந்தைமகிழ்மைத்துனன்விந்தையையென்னசொல்வேன் (ஐய)

மன்னவர்க்குமகுடம் - சூட்டிடும் - வண்மையில்யானுந்திடம்
பன்னியேபறையதிந்தோங்கியேதெரிவிப்பன்
பார்த்திபனளகேசனுரைதனையறிவிப்பன் (ஐய)

கட்டியன்சொல் விருத்தம்.

அளகேசபுரியில்வாழு மடாவீரபாகுகேளாய்
வளம்பெறுநமதுமன்னன் வாகுடன்தமுக்குக்கோலும்
களங்கமில்லாமற்கொண்டு கனசபைவரவேசொன்னார்
உளங்களித்தெனதுபின்னே யோடியேவருகுவாயே.

வசனம்.

ஆரடா வீரபாகுவே நமதளகேந்திர பூபதி யதிகத்துரிதமாய்க் கொலுச்சமுகம் வரச்சொன்னார் வாரும்பிள்ளாய்.

வீரபாகுசொல் விருத்தம்.

பொங்கும்வாரிதிசூழ்ந்தப் பூதலமோர்குடைக்கீழ்
சங்கையில்லாமல்நாளுந் [illegible]
மங்களாகரனே தங்கண் மலர்ப்பதந்தெண்டந்தெண்டம்
இங்கெனையழைத்தசெய்தி யியம்பிடிரடியேனுக்கே.

வசனம்.

சரணம் சரணம் சுவாமி யேழையை யநுக்கிரகஞ்செய்து தெரிவிக்கவேண்டுங் கர்த்தனே.

இராஜன்சொல் விருத்தம்.

அடிபணிந்தேயேவலினைக்கேட்டுநிற்கும் அடாவீரபாகுவனேயறையக்கேளாய், வடிவுளாலமைச்சர்மதுரோசதேச மன்னரசாட்சியைவிட்டுவாய்மையாகத், திடம்பெறுமென்செங்கோலைச்சேர்ந்ததாலே தெருக்களெங்குந்தோரணங்கள் சோடிக்கட்டிக், குடிகளுமற்றெல்லோருமனதானந்தங் கூர்ந்திருக்கப்பறையறைந்து கூறுவாயே.

வசனம்.

அடாகேளடாவீரபாகுவே, வந்திருக்குமிந்நான்கு மந்திரிமார்களும் மதுராபுரியரசனைவிட்டுத் தெனதுசெங்கோலைச்சேர்ந்து என்னரசுக்குரிய மந்திரிகளானார்களென்று தேசக்குடிகளும் படைவீரர்களும் மன்னர்களும் மந்திரிகளு மற்றவரெவருமறியும்படியாயும் தெருக்களெங்கெங்குந் தோரணங்கள்கட்டி மனச்சந்தோஷத்துடன் கொண்டாடும்படி பறையறைந்து பின்னுன்னேவலைப்பார்ப்பாயடா வீரபாகுவே.

வீரபாகுசொல் வஞ்சித்துறை.

தடையொன்றுமில்லை, கொடிமுடிமன்னா
திடதிடமென்றேபறை, யடித்திடுவேனே.

வீரபாகுபறையறைந்துசொல் ஆசிரியவிருத்தம்.

அட்டதிசைபுகழ்பெருகுமளகேசபுரியில்வா ழரசனுமமைச்சர்குடிகள்
அருமறையர்பெரியரொடுவீரர்மற்றோர்கட்கு மறிவித்தசெய்திசொல்வேன்
கட்டழகரான்மந்திரிமார்களுல்வருங் கருதுமதுரோசபுரியைக்
கடந்துங்மதரசனுக்குரியவர்களானவிக் காரணத்தால்யாவரும்
பட்டணத்தெருவும்வீடுகடோறுமங்கங்கு பண்தோரணங்கள்கட்டிப்
பார்த்திபன்செங்கோற்குவடுவில்லையென்றுமிப் படியாய்ப்புகழ்ந்துசொல்லத்
திட்டமுடனளகேந்திரபூபதியுமிவ்வாறு செப்பினாராதலாலே
சிந்தைமகிழ்வாகவிக்காரியம்நடப்பதஞ் செய்வதுவுமுங்கடமையே.

பொதுவிருத்தம்.

பட்டணம்வாழமைச்சர் பார்த்திபர்குடிகட்கெல்லாம்
கட்டளையிதென்றேதான் கூறியேபறையறைந்து
வெட்டியான்போனபின்னர் வேந்தனுங்மகிழ்ந்தே
இட்டமாரான்கமைச்சர்க் கியம்புவாரியம்புவாரே.

வசனம்.

அகோஅதெப்படியென்றால் வீரபாகுவன்பறையறைந்துபோனபின்பு மகாராஜன்மனமகிழ்ந்து மந்திரிகளுக்குச்சொல்லுகின்றவிதங்காண்க.

இராஜன்சொல் விருத்தம்.

என்னுயிராகுயிருமாயவர் இட்டநான் கமைச்சமாரே
என்னுயிர்போலுமென்னைத் தான்காப்பதிங்கன்யாரம்

இன்னம்நான்சொல்வதொன்று மில்லைகல்லறிவுள்ளோரே
மன்னும்போஜனத்திற்கேக மகிழ்வுடன்செல்வதாரீர்.

வசனம்.

கேளீர் மதியூகிகளாகியமந்திரிகளே, உங்களுயிரைப்போ லென்னுயிரைக் காப்பாற்றுவதும் எனதுசெங்கோலுக்குத் தாழ்ச்சிவராமல் நடத்துவதுமுங்கள் பாரமே நீங்களறிவுள்ளவர்கள் யான்சொல்லவேண்டிய தொன்றுமில்லை பொழுதுபோனதாகையால் போஜனத்திற்குப்போகச் செல்வுகொடுப்பீ ரமைச்சர்களே,

போதவாதித்தன்சொல் விருத்தம்.

ஒலிகடல்சூழுமிந்த உலகினையோர்குடைக்கீழ்
தலைமையாயாளுகின்ற தயாளனேசொல்லக்கேளாய்
குலவியபகையும்வாதுங் கொடியவஞ்சனையுமிங்கும்
நிலையறுதங்களுக்கே நேர்வதொன்றில்லைமன்னா.

வசனம்.

கேளீரளகேந்திரபூபதியே, தாங்களே தாய்தந்தைகளாய் யாங்களே பிள்ளைகளாய் சகலகாரியங்களையு மெங்கள்வசமொப்பித்தபிறகு இனியெந்தநாளிலுந்தங்களுக்காகுந்துன்பமும் அரசர்வஞ்சனையுங் கவலையும் வருவதில்லையென்று நம்பிக்கையாய் மகிழ்ந்திருப்பீரையனே.

போதசந்திரன்சொல் விருத்தம்.

எதிர்த்தெவர்வாதிட்டாலு மெமபுரிசேரச்செய்து
சதைத்தவருதிரமள்ளித் தாகபானந்தான்செய்வேன்
விதித்திடும்போதசந்திரன் வில்லினிற்றேர்ந்தோனென்றே
மதித்திடுமரசேநீது வருவதொன்றில்லைமெய்யே.

வசனம்.

கேளீர்மன்னவனே, இந்தப்பூலோகத்திலுமக்குப் பகைவராகிய அரசரெதிர்த்துவந்தாலும் அவருடையவுயிரெமபுரிசேரும்படியாய்வதைத்து எனதுகோபமடங்க இரத்தத்தைத் தாகபானஞ்செய்வேன் அடியேன் வில்வித்தையில் வல்லமையுள்ளவனென்றெண்ணி மகிழ்ந்திருப்பீர் மகிபனே.

போதவியாபகன்சொல் விருத்தம்.

பெற்றவர்தமக்குநல்ல பிள்ளையாற்புகழ்க்கிசேரும்
உற்றமந்திரிகளால்வேந்தர்க் கோதருங்கீர்த்திபூவில்
நற்றமையர்களும்யாரும் நாடியும்மடியைச்சேரக்
குற்றமொன்றணுகிடாது கொலுவினிற்றருளுவீரே.

வசனம்.

கேளீர்மகிபதியே சற்குணவிவேகப்பிள்ளைகளால் பெற்றவர்களுக்குப்புகழ்ச்சிசேரும் நீதிவழுவாமந்திரிகளால் அரசருக்கு மிகுந்தபுகழ்ச்சியுண்டு இவ்வடியேங்கள் தங்கள்சமுகமிருக்க எந்தநாளிலுந் துன்பஞ்சேர்வதில்லை இப்பொழுதுபோஜனஞ் சமையமானதா லெழுந்தருள்வீரரசே.

போதவிழுதைனன் சொல் விருத்தம்.

மன்னவர்மன்னனுகி வாழளகேந்த்ரதீரா
அஞ்சியர்யாங்களென்றுன் னகத்தினிலெண்ணவேண்டாம்
சென்னிமேற்கங்கையோடுஞ் சிதசந்த்ரனைப்புனைந்த
முன்னவனருளேயுண்டு மொழிவதொன்றில்லையெந்தாய்

வசனம்.

கேளீரளகேந்திரபூபதியே, யாங்கள் அஞ்சியர்களென்று மனதிலெண்ணவேண்டாம் யாதொருகுற்றங்களில்லாமல் தங்களுழியத்தை நடாத்திவருவோம் சந்திரனையுங் கங்கையையுஞ் சடாபாரத்தில்தரித்த மகேசனருளுண்டு நீரொன்றுக்கும் விதனப்படவேண்டியதில்லை யெந்தையே.

பொதுவசனம்.

அகோஅதெப்படியென்றால் அளகேந்திரமகாராஜன் கொலுவினின்று எழுந்து தன்வளவிற்குப்போனபிறகு இரவுகாலங்களி லரசனுக்கு யாதொருதுன்பம் வரவொட்டாமலும் சாக்கிரதையுடன் நான்குசாமத்திலும் நான்குமந்திரிகளும் பட்டணமெங்குஞ்சுற்றிப்பார்த்து அரசன்பள்ளியறையையும்பார்த்து பொழுது விடிந்தபோது கொலுச்சமுகம்வந்து நீதிசொல்லிக்கொண் டிவ்விதமிருக்குநாளில் ஒருநாளிரவில் முதலாஞ்சாமத்தில் முதலாமந்திரியாகிய போதவாதித்தன் ஆயுதமுஸ்திப்புடனே பட்டணமெங்குஞ்சுற்றிப்பார்க்க வருகின்றவிதங்காண்க.

முதற்சாமத்தில்-போதவாதித்தன் நகர்வலம்வருதல்.

விருத்தம்.

எழில்பெறுமளகேசேந்த்ர விறைவனுக்கெந்நாளும்
பழிசதிபனுகிடாமல் பார்த்துவந்திட்டவாறே
வழிபடுமுதலாஞ்சாம மானதால்பட்டணத்தை
முழுதிலும்வலமாய்ச்சுற்றி முதமையாய்வருகுவேனே.

வசனம்.

தந்தையைப்போ லெங்களையாதரிக்கு மளகேந்திரபூபதிக்கு இரவுகாலங்களில் பகைவர்களுடைய சூதுந்துன்பமு மணுகிடாமல் அந்தந்தச்சாமத்தில் யாங்கள் நால்வரும்பார்த்து வருவோமே அவ்விதமே யின்றிரவுமுதலாஞ்சாமமானதால் பட்டணமெங்குஞ்சுற்றிப்பார்ப்பேனுக.

தரு. இராகம் - சுருட்டி. தாளம் - ஆதி.

பல்லவி.

பட்டணமெங்கெங்குஞ்சுற்றிப்பார்த்துவருவேன் - எனதரசனுக்கொரு
பழுதுவராமல்காத்து வெற்றிபெறுவேன்,

அநுபல்லவி.

திட்டக்களவர்கொடியதுஷ்டமார்க்கர்கள் - சூதிவ்விரவினிற்செய்திட்டாலவர்கள்
கஷ்டப்பட்டுட்டேல்கடுங்கவென்
கைவாளதினுல்வெட்டிமெய்சோரவகைக்கிட்டி (பட்ட)

சரணங்கள்.

செங்கோலானசேனையைவைக்குமியாங்க ளொன்றே - எனதரசன்றேவியுஞ்
சிந்தைமகிழ்ந்தெந்தமைப்பேணுவாரிது நன்றே
சங்கையில்லாமலவர்க்கனுவல்ல லின்றே - இரவும்பகலும்
தற்காத்துவந்தோம்பகைவரேதாகி லின்றே
தங்கிரகரினிலெங்கிருந்தாலும் சதைத்துயிரொம்புரிசேரமேலும்
அங்கம்நாய்நரிகழுகுகள்கொத்திட
அழைச்செய்தேவாட்டுவன் கலகமற்றிடவோட்டுவன் (பட்ட)

தேசதேசமன்னர்யாவரொன்றாய்க் கூடி - வெற்றிவீரரும்
தீரரும்படையெண்ணிலாத் கோடி
வீசும்வில்வாளாயுதத்தொடும் நாடி - அளகேசேந்திரனை
வெல்லுவோமென்றெதிர்த்திவ்விடம் தேடி
கூசிடாமல்வருவார்களேனேரில் கூற்றுவனுயிர்சேர்ந்திடவிப்பாரில்
பேசருமீசன்கண்டோடவேரத்தப்
ப்ரளயக்கடலாய்ச்செல்ல பரிஇவராமுன்வெல்ல (பட்ட)

கடைத்தெருவீதிமாளிகைகடந் தேன் - இந்தமட்டிலுங்
கள்வர்சப்தமில்லாததினுல்மகிழ்ந் தேன்
குடிகளிட்டபயிர்கடமைச் சினந்தே - பலமிருகங்கள்
குறித்தழித்தாலிக்ஷணத்தில்யான் துணிந்தே
தொடர்ந்துடனீட்டிவல்லயத்தால்குத்தி ரூறைசெய்வன்பூதபைசாசுக்குமெத்தி
படிமிசைவேந்தனெனைப்புகழ்ந்திட
பகைவர்கண்டேயஞ்சிட இகவண்டர்களுக்கெஞ்சிட (பட்ட)

பொது விருத்தம்

மந்திரிமுதலோன்போத வாதித்தனகரமெங்கும்
பந்தமாய்ச்சுற்றும்வேளை பார்த்திபன்தனக்குநாளை
வந்திடுந்துயருக்காக வடதிசையாலயத்துள்
சுந்தரிவிமலிநீலி துர்க்கையாளழுகின்றுளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக முதலாமந்திரி போதவாதித்தன் முதலாஞ்சாமத்தில் பட்டணமெங்குஞ் சுற்றிக்கொண்டு பார்த்துவருகிற சமையத்தில் நாளையதின மன்னவனுக்கு வரப்போகுந்துன்பத்திற்காக வடதிசையிலிருக்கும் ஆலயத்துள் துர்க்கையம்மன் அடங்காத்துயரங்கொண்டு பெருங்குரலிட்டழுகின்ற விதங்காண்க.

துர்க்கையம்மன்சொல் விருத்தம்.

இந்தநாழிதில்நாளு மின்புடனேயர்ச்சித்து
நித்தியமாலயத்துள் நெய்விளக்கேற்றுவித்தே
பத்திசெயளகேசேந்திர பார்த்திபன்றனக்குநாளை
சத்துருவினையந்தோ சதிவாய்க்குமென்செய்வேனே.

வசனம்.

ஐயையோ இனியென்னசெய்வன் அநுதினமுமெனது மனமகிழப்பூசைபு டித்த ஆலயத்தினில் நெய்விளக்கேற்றி மாதம்மூன்றுதரம் உற்சவம் நடாத்திவரு ம் எனதுபக்கலுள்ள அளகேந்திரபூபதிக்கு நாளையதினம் வரப்போகுஞ் சர்ப்ப ஜெயதி யபாயத்திற்கு என்னசெய்வேன் என்னசெய்வேன்.

கண்ணி.—தரு. இராகம் - நிலாம்புரி. தாளம் - ரூபகம்.

ஐயையோவென்னசெய்வேனன்பனெனக்குநாளை
அல்லல்வரப்போகுதென் மாயம்
வையகமாளுமன்னன்மாண்டாலெனக்கர்ச்சனை
வந்துசெய்வாரிலையிதநி யாயம் (ஐயை)

தரணிமன்னரில்மன்னன்சத்யவிரதசீலன்
சாத்திரமுறைமிசகா நல்லோன்
கருதிபொய்த்தாலுமோர்பொய்சொல்லான்தர்மமறவான்
கருணாகரன்னனிலும் வல்லோன் (ஐயை)

நானையுதையகாலைநகர்வாழ்குடித்தலைவன்
நவமாயில்வருடம் விளைந்த
வேளைநெற்கதிர்க்கோட்டைவேந்தக்குக்கொணர்ந்தீவான்
விடமுண்டோர்கதிரும் நனைந்து (ஐயை)

விஜயபுரியையாள்வோன்வேந்தனைக்கொல்லவென்னி
விளம்புமதிரசக் குடத்தில்
இசையவம்புப்பொதிகளிகலாயிற்பரப்பி
வுவாளுனிமர்யா னத்தில் (ஐயை)

கொற்றவனைத்திறந்தால்கூற்றுவனுகப்பொதி
கொல்லுமீதநியாய பாபம்
பற்றுதெனதுமனம்பக்தன்மேலீசனுக்குப்
பரிவின்றிப்போனதென்ன கோபம் (ஐயை)

இரவில்மன்னனுந்தேவியினியமஞ்சத்தின்மீது
இதமாத்துயிலுமுதற் சாமம்
விரைவாய்ச்சந்திவழியாகச்சர்ப்பமிறங்கி
வேந்தைக்கொல்லுமிதுபரி தாபம் (ஐயை)

இம்மூன்றபாயத்தினிற்கிறைவன்தப்பித்துக்கொண்டால்
எக்காலுந்துயரில்லை சத்தியம்
விம்முதெனதுமனம்மேவலன்செய்யிடர்தனை
விளக்குவரில்லையீ தநித்தியம் (ஐயை)

பாரினில்விவடயாளன்பக்தற்குத்தீதுவஞ்சம்
பற்றுர்விரோதமில்லை யென்றோ
கூறுவரதுபொய்த்துக்கொடுவினைமன்னனுக்குக்
குறைவாய்க்குமதியாயம் ..ன்றோ (ஐயை)

நூலமுதாகவுண்டசூலபாணியனே ஓ
அரசன்மேதுனக்கென்ன வர்மம்
ஞாலமீதன்னன்பனைநடிசீகாக்காவிட்டால்
ஞாயமல்லவேகொடுங் கர்மம் (ஐயை)

போதவாதித்தன்சொல் விருத்தம்.

நள்ளிரவாமிப்போது நகர்வலமெங்கும்பார்த்தேன்
கள்ளர்கள்குறும்பாதுங் காதகப்பலகைவர்சப்தம்
என்னளவாகிலில்லை யேங்கியேவடக்குப்பக்கம்
தெள்ளியேகூச்சலாகுஞ் செய்கையையறியப்போவேன்.

வசனம்.

ஓ!ஓ! இதன்ன காரணம் இந்தநடுச்சாமவேளையில் பட்டணமெக்குஞ் சுற்றி வந்தேன் கள்வர்பகைவர் துன்மார்க்கர்கள் கூச்சலென்செவியிற் கேட்கவில்லை ஓ ஓ இதென்ன வடக்குப் பக்கத்தில் பெருங்கூரலிட்டழும் பெண்சப்தங்கேட்கின் றதே இதைப்பார்த்து வரவேண்டு மல்லவோ.

தரு. இராகம் - பைரவி. தாளம் - ஆதி.

பல்லவி.

ஓலமிட்டழுபவராரோ - அதறியேன் - ஓலமிட்டழுபவராரோ

அநுபல்லவி.

பாலனிறந்துவிட்டபாவையரோ குறியேன்
பலிங்கள்வர்கொள்ளையிட்டாரோ அறியேன் (ஓல)

சரணங்கள்.

மன்னவன்கொலுமுகம்வருமோனாளைவிச் செய்தி
சொன்னாலென்றனுக்கினஞ்சொல்வாரோயீ தநீதி (ஓல)
புருஷனிறந்தழுவும்பூவையரோ தனித்துப்
பெருஞ்சுற்றத்தாரைமனம்பேணுவரோ பிரிந்து (ஓல)
மந்திரியாய்நானிருந்தும்வசையாளுலகி யாபம்
இந்தவடதிசையிலெய்துங்கூச்சலின் மாயம் (ஓல)
ஆலயத்துள்ளிருந்துஅழுதிடுஞ்சப்த மாச்சே
மேலும்பூதமுனியோவேதாளமோஎன் பேச்சே (ஓல)

விருத்தம்.

ஆரடிநடுகோத்தி லஞ்சாதநெஞ்சங்கொண்டு
போரிட்டேயழுகுநீதான் பூதமோமுனியோபேயோ
கோரிடுமென்றனுக்குக் குறையுனக்குற்றவந்தக்
காரியந்தெரியவென்றுக் காய்ப்பிளந்தாற்போல்சொல்வாய்.

வசனம்.

ஆ! ஆ! ஆரடி நீ இந்த ஆலயத்துள் புகுந்துகொண்டு பெருங்கூக்குரலிட் டழுகின்றவள் மானிடஜென்மமோ பூதமா அல்லதுபேயோ உனக்குண்டான சனமெ ன்ன என்னுக்காய்ப்பிளந்ததுபோல் தெரியச்சொல்வாயடி.

துர்க்கையம்மன் சொல் விருத்தம்.

நடுநோசாமமாச்சென் ஞலையத்தருகில்வந்து
அடிகூச்சலென்னவென்றே யதட்டுவதாரடா நீ
படிபுகழளகேசேந்திர பார்த்திபனகரைநாளும்
இடரின்றிக்காக்குந்துர்க்கை யென்றெனையறிகுவாயே.

வசனம்.

ஆரடா அடா இந்த நடுஜாமஇரவில் என்னாலயத்தருகில்வந்து அடிகூச்சலென்னவென்று கேட்பவன்நீயார் உன்பெயரென்ன நானே இந்தப்பட்டணத்தைக் காக்குந் துர்க்கையென்றறியும் பிள்ளாய்.

போதவாதித்தன்சொல் தோத்திரத்தேவாரம்.

செங்கையிற்சூலமேந்தி செகந்தனைக்காக்கும்நீலி
மங்கையர்க்கரசியாளே மலர்ப்பதஞ்சிலம்புகொஞ்ச
சங்கரனோடுதில்லைத் தாண்டவமாடிநின்ற
சிங்கவாகினியேயாவுஞ் சேயனென்றுள்வாய்போற்றி.

இதுவுமது.

தாயேசடாக்ஷரியேமறைகளுன்குஞ் சாற்றரியவட்டசித்தியாட்டுகின்ற, நீயேவின்னைவிளக்கேபுனலேகாற்றே சிதம்பரத்தில்நடனமிடுந்திரிபுரத்தி, நீயேசூாபிர்தியேமாலினிலி கிராதரியேயெங்குமிறையாதிசித்தே, பேயேயென்றனையுரைத்தவடியானுக்குன் பெரும்பதங்கடுணையென்றுபேணினேனே.

இதுவுமது.

அஞ்செழுத்தாய்வேதாந்தசூழ்ச்சிமாட்சி, ஐம்பத்தோரக்ஷரத்திலாடுங்காட்சி, மஞ்சுவளர்நித்தியகல்யாணிநேமி வானுகிலோகவதிகாரியாய்,எஞ்சொலருள்புரிந்தாளுங்குமரிப்பெண்ணே எக்ஷணியேபைரவியேபவ்வேசவ்வே,கெஞ்சமிந்தவடியவன்றன்பிழைபொறுத்துன் கிருபைவிழிநோக்கிடும்நின்கெதியேயம்மா.

இதுவுமது.

பங்கமறமாமகிடன்றன்னைவென்ற பத்மினியேயன்பருளமலரும்பூவே, என்னிலுங்கோலரசர்களுமியற்றிநீதி இயம்புவதுன்கருணையல்லால் வேறொன்றில்லை, தங்குமறைகலையுங்காவ்யபுராணி சங்கரியேவேள்வியேயுயிரேமெய்யே, நங்கையேபத்துவயிதுள்ளவாலை நாரணியேயடியேனையந்தாள்வாயே.

இதுவுமது.

இந்தமாநகரமாளு மெழில்பெருமளகேசேந்திரன்
மந்திரியான்போதவாதித்தனென்பேரம்மா
சிந்தையுண்மிசமெலிந்து தியக்கமுற்றழுவதேது
விந்தையாயிவைபெனக்கு வெளியிடவேண்டுமாயே.

வசனம்.

அகிலபுவனரக்ஷகி-சூலி-கபாலி-திரிநேத்திரி-ஆதிகௌரி-சோதிப்பிரகாசி-ஓ உலகமாதாவே நான் இந்தப்பட்டணமாளு மளகேந்திரமகாராஜன் முதலாமந்திரி, அடியேன்பெயர் போதவாதித்தன். அன்னையே, நீயிந்த நடுநோத்தில் கூச்சலிட்டழுகின்றதுயரமென்ன, இத்தொண்டனுக்கருள்புரிவாய் வேதாந்தி.

துர்க்கையம்மன்சொல் விருத்தம்.

மதிபதியளகேசேந்த்ரன் மந்திரியேநீவாழி
அகமெலிந்தழுமென்ற னல்லலையுரைத்தாலந்த
அகளத்திடுவையோநான் சொல்லியும்பயனொன்றில்லை
மிருதணன்மீதுபட்ட மெழுகைப்போலுருகுகின்றேன்.

வசனம்.

கேளாயப்பாமந்திரியே, அக்கினிமேல்பட்ட மெழுகைப்போலுருகுகின்ற வெனதழுகைத்துயரைச்சொன்னால் நீயதைத்தடுக்கவல்லவனே, உனக்கென்னசொல்லுவது சொல்லியும்பயனில்லை மந்திரியே.

துர்க்கையம்மனுக்கும் - போதவாதித்தனுக்கும்நடக்கும்-சம்பாஷணை.

தரு. இராகம் - தோடி. தாளம் - ஜம்பை.

போத. அழுதிடக்காரணமென்ன　தாயே - உன்றன்
　அடியானுக்கருள்புரி　வாயே
எழுசரியமாதரி இதயங்களித்　தாதரி
பழுதில்லாகிராதரி பதுமராயன　சோதரி　(அழுதி)

துர்க். சொன்னாலகற்றவுன்னா　லாமோ - என்றன்
　துயரைச்சொல்லிமுடிக்கப்　போமோ
அந்நாளின்மலரயனளித்தநிந்த　விதியோ
இந்நாளிற்சங்கரனாரெண்ணக்கெடு　மதியோ　(சொன்)

போத. கெம்மதியோவிதியோ　ஏன்றி - அம்பாள்
　ஏளத்துவதென்மனங்　குன்றி
திடமறியாததிறாற்றியங்கிறேன்றனை -　யின்றி
இடரயின்னவிதமென்றியம்பிடுவதே　நன்றி　(அழுதி)

துர்க். இயம்பிடுவாயென்றெதிர்　பணிந்தே - நிற்கு
　மெழில்பெறும்மைந்தாநீ　அணிந்தே
ஜெயம்படச்செய்வையோநான்செப்பியும்பயனில்லை
அயர்வுற்றதென்றன்மனதையோயிதேன்னதொல்லை　(சொன்)

போத. மனதயர்ந்திருப்பதென்　வாதோ - நின்
　மைந்தனுக்குரைக்கத்தகா　தோ
ஐவ்யாயிரங்கள்வேதம்நான் மறையுங்கல்யாணி
அனையேதிருவாய்மலர்ந்தருள்வாய்திரிசூலபாணி　(அழுதி)

துர்க். திரிகாலந்தொறுமெனைப்　போற்றி - வெகு
　சீராநெய்வேத்தியங்க　ளேற்றி
பரிவாயர்ச்சனைசெய்யும்பார்த்திபனுக்கு　நாளை
வருமிடுக்கண்களைமைந்தாமதத்தியானை　வேளை　(சொன்)

போத. அமைதலன்புடன்பற்றுவர　லாமோ - நீயே
　யழுதாலவ்விடர்தீரப்　போமோ

நமியேன்மனங்கலக்கித்தயங்கிறேனன்னை னுக்கு
உமையேதுன்பமறுகிதுயிர்விடுவேன தற்கு (அருதி)
தூர்க் துன்பஞ்சேராமலோ தேசன் - புவில்
சுகமியாயிருக்க ஈசன்
இன்புற்றருள்செய்வாரென்றெண்ணுகிறேன்சத்தியம்
அன்பனேநீதுவந்தாலரானுலிதுவு நித்தியம் (சொன்;

வண்ணம்.

கருணுகரியமலிமனோன்மணி
கார்பூத்திடும்வண்ணவின்சோதரி
கட்டலெசுரர்காணவொன்றுகிடும் கலைஞானி
சுருதிக்கலையாகமகாவியந்தோற்றிப்புகல்பிரணவிரூபியே
தொண்டர்க்கருள்புவனமயேஸ்வரி சுகமாலி
அருகிச்சிறியேன்பிசையுன்செய
லன்பும்வரவேவருதுயர்கனே
யகலச்செய்திடச்செயவரிதல ஜனையேகி
குறுநிற்றமனத்தினிலுற்றிடும்
கோதுந்துயர்வருகுவதென்னதைக்
குணமாகவேயென்முனம்வந்திவீ கூறுயோ

தூர்க்கையம்மன்தோற்றம்.

தரு: இராகம் - சங்கராபரணம். தாளம் - ஆதி.

பல்லவி.

ஆதிரைட்சகிவந்தாள் - மன்னர்
கவதிநாளையதினம்வருவதென்பதைச்சொல்ல (ஆதி)

அநுபல்லவி.

மதிமமச்சுந்தரமர்கழிவாரெனர்காருதகாகுழி
மந்திரிபோதவாநித்தன்சிந்தைமகிழ்ந்திடவாகுழி (ஆதி)

சரணங்கள்.

அன்பர்க்குவரும்இடர்கற்றும்பிரணவ சித்தி
இன்புற்றுமலநான்றுமியம்பும்வின்மல சக்தி (ஆதி)
தர்க்கமிட்டுமயிடன்றன்னைவதைத்த தீவி
சொர்க்கமத்தியபாதாளந்துதிக்குங்காபாலி சூலி (ஆதி)
பல்லுயிர்களைத்தையும்பாதுகாத்திடும் பெண்ணுள்
வல்லசித்திவெட்டாடும்வாலைசோதிமுக் கண்ணுள் (ஆதி)
சதங்கைவொலிசிலம்புதண்டைகொஞ்சிடவே துன்ன
உதயகோடிசூரியரொப்பெனப்பணிகன மின்ன (ஆதி)

போதவாநித்தன்சொல் வண்ணம்.

இந்நாளினுளையொன்னடித்திசனே
யெளியேன்கண்டிட்டதுபாக்கியம்

இமையோரும்.
இசைமும்பரமானபுராதனி
துன்னித்துறவோர்முனிசித்தர்கள்
தொண்டிற்றவமுற்றிடச்செய்வதுன்
துணையல்லவோவானிநிராதரி ஞயராகி.
என்றேருறைவாய்த்ததுசொல்லிடா
இன்னம்மனவர்ம்மமதாகிறு
லெவ்வாறினியென்னகந்தேர்வது இதமாக.
மன்னித்தருடிருவிழிநோக்கியே
வருமச்சதிசற்பனைநலிவுவை
வயல்சூழளகேந்திரபுரியமர் மதாவே.

தூர்க்கையம்மன்சொல் கொச்சகம்.

தொழுதெனதடியிறைஞ்சுஞ் சுந்தரமார்மந்திரியே
அழுவதையென்னென்னுரைப்பே னளகேந்திரமன்னனுக்குப்
பொழுதநவிடியுங்காலைப் பொல்லாங்குதூர்ச்சதியும்
பழுதுவரப்போவதினுல் பதறுகிறேன்மெய்யிதுவே.

வசனம்.

கேளும்பிள்ளாய் போதவாநித்தனே நானழுகின்ற விதனத்தைச் சொல்லவே ண்டுமென்று நீவேண்டினுல் எனதுபக்தனுகிய அளகேந்திரபூபதிக்கு நாளையதினந் துன்பம்வரப்போகின்றதினுல் அடங்காதவிதனங் கொண்டழுகின்றனன் அப்பா மந்திரியே.

போதவாநித்தன்சொல் விருத்தம்.

வரும்வினைதீர்ப்பதற்கு மாதாவேநீயிருக்கத்
திருகவென்னரசனுக்குத் தீதுவந்தாலென்னுவி
தரணியில்வைப்பதில்லை தாயேநீசொன்னவர்மம்
தெரிந்திடயின்னம்நன்ருய்ச் செப்பிடுமடியானுக்கே.

வசனம்.

கௌரிவராகி மாதங்கி செகதம்பா உனதுஅடியானுக்கு வரப்பட்டதுன்பத்தை யகற்றுதற்கு நீயிருக்க நாளையதினம் அரசனுக்குத் துன்பம் வரப்போகிறதென்று சொல்லுவது நியாயமோ அப்படியல்லவென்று உனதுகோபத்தினுல் துன்பம்வருமேயானுல் எனதுயிரை நானே மாய்த்துக்கொள்ளச் சந்தேகமில்லை ஆனுல் நாளையதினம் வரப்பட்டதுன்பம் இன்னதென்று விஸ்தரித்துச் சொல்லவேண்டும் ஓ உலகமாதாவே.

தூர்க்கையம்மன்சொல் அகவல்.

சேயனேவாராய் செகத்திலையனகோ, மாயனுலயங்களில் மதனைத்தெரித்த
சிவனுலயங்களில் தேவதாபூசை, நயதின்றிட்டதாகு சத்தியசீதன்
வஞ்சனைகுறு வர்மமேயனுவாம், கொஞ்சமுமனதிற் கொள்ளாதவனே
தஞ்சமென்றோனைத் தற்காத்திடுவோன், அஞ்சலித்தெனையே யநுதினம்பேணும்
அளகேசேந்திர வரசன்றனதுகல், உளமகிழ்வாகு முன்மைசேர்மந்திரி
போதவாநித்தா புரவலன்றனக்குச், சூதுசர்ப்பமையொடுதுன்பமேவந்தால்[வாய்
அவையுனக்கலவோ வாகிலும்நான்சொல், பலக்கொடும்வினையைப்பரிக்ககற்றிடு

திருவளரிந்தத் தேசஞ்சூழ்வயலில், அருமையதாயிவ் வாவடிவில்நவமாய்
நெறியுடன்வளர்ந்த நெற்கதிர்க்குலைகள், யாமிசைப்பரவிச் சாய்ந்திடும்அதையும்
மேவிச்சர்ப்பங்கள் மேன்மேலன்பாய்ந், நாகியேகூடித் தாம்விளையாடும்
போதில்கார்க்கோடன் பொற்குள்களுக்கும், வாறுகளாகி மனச்சினத்தோடும்
ஒருவர்க்கொருவ ரோயாச்சண்டை, குருதிகொப்பளிக்கக் கொடும்விடமந்த
நெற்கதிர்மீது நேரிடநனைந்து, தர்க்குணந்தன்னைத் தோன்றுதுகுடிகள்
தலைவனுயெவன் தானியக்கோட்டை, வலவனுக்கன்பாய் மாசிலாதென்றே
உதையகாலையிது கந்துமேதருவான், இதயமகிழ்வா யிறைவனங்கெல்லை
சூத்தியேசமைக்கக் கூறுவாரதனைச், சத்தியமாய்ப்பொசிக்குஞ் சமையத்திற்சா [தம்
முதற்பிடியாகு முன்விஷநெல்லும், இதைமன்னனுண்டா லிறந்திடுவானே.
சொல்லுமிவ்விடர் தோன்றலைவிட்டுச், செல்லுமாறுல் செப்புவேனின்னும்
பாவியாம்விஜைய பட்டணமாளுங், காவலனுளை கருதிமத்தியானம்
அதிரசஞ்செய்தே யளவியேபாண்டத், ததினுளேவைத்துச் சர்ப்பனையாகப்
பொதியம்படக்கிப் போர்வீரர்வசமாய்க், குறுகுமேமன்னவ(ர்) குலாவுடனவிழ்த்
அச்சணம்பொதிபரந் தருகிருப்போரும், உச்சிதமன்னறு முயிர்விடுவாரே [தால்
இவ்விரண்டிடையூ றேந்தல்தப்பினுல், செவ்வையாயிரவிற் றேவியுமன்னனும்
மஞ்சத்தின்மேல் மருவிடும்வேளை, சஞ்சலமாக்கச் சாமமேமுதலில்
சங்கிலிவழியாய் சர்ப்பமொன்றிறங்கி, மங்கையுமாசை வல்விடப்பரிகைகூ
செய்யுமேயதனுல் வேனையிழப்பார், ஐயையோவிந்த வலதிகள்மூன்றைத்
தப்பினுல்மன்னவ னரணியின்மீது, ஒப்பும்நூற்றிருப் தயிர்வயதாகி
உலகினையாள்வா னென்றிலைநீங்கிக், கலகத்தினுக்கே கதறினமுதேன்
இந்தமூன்றிடுக்கணுக்கேதினிச்செய்வன், மைந்தனேயுனக்குவமூத்தினேனின்றே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

திடுக்கிடமனதுசோரச் சிந்திடவிழிகணீரும்
நடுக்கமுற்றிடவம்பாணி நவின்றதுன்பச்சமர்த்தைத்
தடுத்திடவென்னலாமோ தாண்மலரடியேனுக்குக்
கொடுத்திடாய்குறுகுமல்லல் கோதறச்செய்வேனம்மா.

வசனம்.

சூலிகபாலி திரிநேத்திரி, ஓ! அபிராமி ஆதிசௌரி – திரிபுவனபரமேஸ்வரியே, எனதரசனுகிய வளகேந்திரபூபதிக்குத் துன்பம்வரப்போகுதென்று நீசொன்னவுடனே மனந்திடுக்கிட்டு தேசம்நடுக்கம்கொண்டு இருவிழிகளிலும் கண்ணீராறுய்ச்சொரிகின்றதே இத்துன்பங்களையகற்ற அடியேனுக்குனதுபாதமலரைத்தருவாயானுல் தப்பிப்பதற் கடியேன் வல்லவனுயிருக்கின்றேன அன்னையே.

தரு. இராகம் – பூபாளம். தாளம் – ஆதி.

பல்லவி.

அன்னையேஉனதருள்செய்வாயே.

அநுபல்லவி.

மன்னன்றனக்குநாளை வரும்இடரகலவே (அன்)

சரணங்கள்.

வேதம்நான்குமறையும் விமலிசூலிகபாலி
ஏதுகோபமிருந்தாலும் இன்னஞ்சுதுவேண்டாமம்மா. (அன்)
மலையரசன்சுபுத்திரி மாலினீலிநன்னூலி
கிலையும். அ. இ. உ. எ. ஒ. நேமிகடைக்கண்ணேக்கி. (அன்)
எல்லாப்பலவுயிர்க்கும் இறையேஞானக்கனாயே
நல்லதுன்னன்பனுக்கு நடுக்கஞ்சேர்வதுன்மாயம். (அன்)
நாளைவருகுந்துன்பம் நான்கேட்டகமெலிந்தேன்
தாழ்வதில்லையேஅம்பாள் ஜாலமீதென்னகோலம். (அன்)

துர்க்கையம்மன்சொல் விருத்தம்.

திடமுளமனத்தோனென்று சிந்தையில்மிகமகிழ்ந்தேன்
விடமிசையேறுங்கங்கை வேணியனருளால்நாளைப்
பொடிபட்டான்தரும்வி பூதியைக்கொள்வாயப்பா
இடரொன்றும்வருவதில்லை இறைவனைக்காத்திடாயே.

வசனம்.

வாரும்பிள்ளாய் போதவாதித்தனே, நீயஞ்சாதசுத்தவீரனென்று நான்மிகவுஞ்சந்தோஷமானேன், நாளைவருந்துன்பம் விடையாளனருளால் பொடிபடும்படியாய் இதோ உனக்குக்கொடுக்கும் விபூதியைக்கைகொண்டு போவாயப்பா

போதவாதித்தன்சொல் விருத்தம்.

உன்செயலெல்லாமாவ துலகத்திற்சிரும்வாழ்வும்
உன்செயல்குறுகுந்துன்ப முகந்திடும்வினையிரண்டும்
உன்செயலதினுல்நாளை யொன்னலர்சதியபாயம்
உன்செயலதினுற்றீதை யோடிடச்செய்வேனம்மா.

வசனம்.

அகிலாண்டநாயகியே, வருவதும்போவதும் நல்வினைதீவினையும் இறப்பதும்பிறப்பதும் எல்லாமுனதுசெயலே நாளையதினம்வரப்பட்டதுன்பமும் உனது திருக்கருணையேயல்லால் வேறென்றில்லை யன்னையே.

பொது வசனம்.

அகோஅதெப்படியென்றால், மந்திரிபோதவாதித்தனுக்குத் துர்க்கையம்மன்வரங்கொடுத்து மறைந்தபின்பு போதவாதித்தன் மகாராஜனுக்கு வருந்துன்பங்களை நினைத்துப்புலம்பிக்கொண்டு தன் அரண்மனைக்கு வருகின்றவிதங்காண்க.

போதவாதித்தன்சொல் கொச்சகம்.

தருமநெறிமறவாச் சத்யவிரதன்மெய்யன்
ஒருபோதும்பொய்யுரைக்கா வுண்மையளகேந்திரற்கு
வருமிடுக்கணனையென்றே வாலைதுர்க்கையாணவில
உருகுதேயென்றனது முபாயமொன்றுந்தோனே.

வசனம்.

அரகரா - சிவசிவா - நிர்க்குணவிலாசா, எனதரசனாகிய அளகேந்திரபூபதி சத்தியவந்தன். தருமநெறியையுமறவாதவன். பொய்சொல்லாதநிபுணன். இந்தக் குணசீலனுக்கு வரப்பட்டபொல்லாங்கைத் தடுப்பதற்கு யாதொருவழியுமறியே னே சந்திரசேகரா.

தரு. இராகம் - எமுனாகல்யாணி. தாளம் - ஆதி.

பல்லவி.

வருமிடர்க்கென்னசெய்வேன்-ஈதனியாயம்-வருமிடர்க்கென்னசெய்வேன்.

அநுபல்லவி.

தரியலன்விஜயமார்த்தாண்டனெத்தனித்தம்புப
பொறியனுப்பிடவேறுருறையாகிடவேநாளை. (வருமி)

சரணங்கள்.

நகர்வலஞ்சுற்றிவந்ததும்-அம்பிகைதுர்க்கை-நலிந்தோலமிட்டழுததும்
மகிழ்வாயவ்விடஞ்சென்றதும்-மன்னன்றனக்கு-வருமிடரன்னைசொன்னதும்
வகையீதேதென்றறியேன் மயேசாவென்ன கோபம்
மகிபனானையதினம் மாண்டாலீதென்ன பாபம் (வருமி)

பொய்சொல்லாவநுகூலன்-சத்யப்பிரதாபன்-புகழ்பெருகுஞ்சுசீலன்
மெய்தவருநன்மாலன்-விரதநீதி-விளங்குஞ்சம்பன்ன லோலன்
தெய்வம்பின்னானது மதர்மமுமே லானதோ
ஐயோநான்மந்திரியிருந் தவம்நேரத் தனதோ (வருமி)

அம்பிகைதயையிருக்க-காளையேவரும்-அல்லலும்வாராமற்றடுக்க
நம்பிநல்வரங்கொடுக்க-மகிபதிக்கு-நாளைவருவதை நினைக்க
வெம்புதேனதுமனம் விண்ணவர்போற்று மீசா
அம்புவிபல்லுயிர்க்கு மன்னையாகுஞ்சர் வேசா (வருமி)

பொது விருத்தம்.

இருவிழிகளில்நீர்சிந்த வெழில்பெறுமுதலாமந்திரி
ஒருவருக்கிந்தச்செய்தி யுரைக்காமலுறங்கிடாமல்
கருதியிவ்வாறிருக்கக் கதிர்வெளியாகவேந்தன்
திருவுறுகொலுமுன்வந்த நிலைமையின்வகைசொல்வோமே.

வசனம்.

அகோஅதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாகப் போதவாதித்தன்மனங்க லங்கிப்புலம்பிக்கொண்டு தன்மனையிலிருக்க இருளகன்றுசூரியனுதயமாகவும் அளகேந்திரமகாராஜன் கொலுவிற்குவந்ததும் துர்க்கையம்மன் சொல்லியபடி பெருன்புலிவந்த விதங்களையுஞ் சொல்லுவோமே.

முதல்வகுப்புமுற்றிற்று.

இரண்டாம் வகுப்பு.

☞ இவ்விடத்தில் முதலிலுள்ள அளகேசன்தோன்றுகிற விருத்தத்தையும் தருவையும் சிம்மாசனத்திருந்துசொல் விருத்தத்தையும் சொல்லிக்கொள்க.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

தேசதேசத்துமன்னர் திறைகொணர்ந்தஞ்சலென்ன
ஆசிபிராமணர்கள்கூற அரிவையர்நடனமாட
மாசின்முத்தமிழிசைத்து வாணர்கள்சும்படிக்கத்
தேசுறவெம்மையாளுந் திண்புயத்தவனேபோற்றி.

போதசந்திரன்சொல் விருத்தம்.

வாரிதிமேரசர்தங்கள் வல்லுயிர்குடித்துவெற்றி
ஓதிமாமுரசறைந்தே உலகினையோர்குடைக்கீழ்
நீதிலாச்செயின்கோலோச்சிச் சீருடனெம்மைநாளும்
பாதுகாத்தாளுகின்ற பார்த்திபாசரணம்போற்றி.

போதவியாபகன்சொல் விருத்தம்.

தஞ்சமென்றவரைக்காக்குந் தயாளமுமன்புமீவும்
இஞ்சொலுஞ்சாதமுற்ற இறைவருக்கிறைவனாகிச்
செஞ்சடைநதிபுனைந்த சிவனடிபோற்றியெம்மைச்
சஞ்சலமின்றியாளுஞ் சக்ரபூபாலாபோற்றி.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

தந்தையுந்தாயுமாகத் தரணிமேலென்றுமெங்கள்
சிந்தையிற்றுயர்வாராமல் சேர்த்தினியாதரித்தே
இந்தநல்லுலகையாளு மெழில்பெறுமளகேசேந்திரா
உந்தமெல்லடிபணிந்தே யுளங்களித்திறைஞ்சினேனே.

☞. இவ்விடத்தில் முதலிலுள்ளசேருவைசொல் விருத்தத்தையும் கட்டிய ன்சொல் விருத்தத்தையும் தேசவிசாரணையை இந்நாலுமந்திரிகளை விசாரிக்கி றதாகவும் சொல்லிக்கொள்க.

பொதுவசனம்.

இந்தப்பிரகாரமாக அளகேந்திர மகாராஜன் தேசவிசாரணையு மற்றக்காரண காரியங்களை விசாரித்துக்கொண்டு கொலுமண்டபத்திலிருக்க இரவில் போதவா தித்தனுக்குத் துர்க்கையம்மன் சொன்ன துன்பங்களைத் தடுக்கவேண்டி யென் னமிட்டுக் கொலுவைவிட்டு வெளிவாசற்படியில் வந்து சேருவைக்குப் போத வாதித்தன் சொல்லுகின்ற விதங்காண்க.

போதவாதித்தன்சொல் ஆசிரியவிருத்தம்.

பூராவிக்கெவெம்புலிபோற்றி நடல்பெறும்வீரசெருவையே
ஆதிமுனைக்குச்செப்புமன்மொழிகே ளரசர்களமைச்சர்கள்பெரியோர்
போரிடுஞ்சூரர்துதவர்கிழவர் புகழுபண்டிதர்களுஞ்சிறுவர்
பூசாரிகுருக்கள்தெரிவையர்மதலை புரியில்வாழ்குடிகளுமற்ற

வீரதேசத்திரேலகப்பணங்கள் வேந்தனுக்கெதுவும்வந்தக்கால்
விடவொணுதென்றுபோதவாதித்தன் விதியெனவவர்களைமறுத்துக்
காரிபோற்பறந்தென்சமுகம்நீவந்து கழறுவாய்ரகசியமாகக்
கனமதாயீதுன்மனதினில்வைத்தே காத்திவணிருப்பதுன்கடனே.

வசனம்.

ஆரடா ஆடா வீர சேருவையே நமதளகேந்திர பூபதியைக் காணவேணுமெ ன்று இராஜர்கள் மந்திரிகள் பிராமணர்கள் பெரியோர்கள் குருக்கள் முனிவர்க ள் பண்டிதர்கள் சிறுவர் பெண்டுகள் தரித்திரர் கூன்குருடர் செவிடர் இன்னம்ந மது பட்டணக்குடிகள் வெளிதேசத்தரசர்கள் கப்பங்காணிக்கை ஓலை முதலான வை யென்னவந்தபோதிலும் எவர்கள்வந்தபோதிலும் முதலாம்மந்திரி போதவா தித்தனுத்தரவில்லாமல் மகாராஜனைக் காணக்கூடாதென் றவர்களைத்தடுத்து நிற் கவைத்துக் காக்கைகளைப்போல் பறந்தோடிவந்தென்னிடம் நீசொல்லவேண்டிய து இதைஉன்மனதில்வைத்து மாகாசாக்கிரதையாயிரு சாக்கிரதையாயிரு அடா சேருவையே.

பொதுவிருத்தம்.

வருமிடர்க்காகமந்த்ரி வாசற்சேருவையிடத்தில்
தெரிவித்துத்தானிருக்கத் தேசம்வாழ்மணியக்காரன்
புரவலனளகேசற்குப் புதியதானியமோர்கோட்டை
அரியவான்மீதுவைத்துத் துரிதமாய்வருகின்றனே.

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சேருவையிடம் போதவாதித்தன் ஆக்ஞாபித்தபிறகுப ட்டணத்தில் வாழும்வைகுந்த முதலியென்னு மணியக்காரன் புதியதானியக்கோ ட்டை மகாராஜனுக்கு வெகுமதியாக சுமையாளின்மேல்வைத்துக் கொண்டுவ ருகின்ற விதங்காண்க.

வைகுந்தமுதலிதோற்றம்.

தரு. இராகம் - கல்யாணி. தாளம் - ஆதி.

பல்லவி.

வைகுந்தமுதலிவந்தார் - மணியக்கார - வைகுந்தமுதலிவந்தார்.

அநுபல்லவி.

செய்யும்வேளாண்மைத் தொழிற்குடிகட்கெல்லாந்தலைவன்
செழித்ததானியங்கள்போதாதென்றேசொல்லவலவன்

சரணங்கள்.

தலையினிற்பாகையணிந்து - அநுதினமும் - தாமோதரனைப்பணிந்து
திலகச்செந்தூரமிட்டுத்திருநாமந்நுதல் பூசி
உலகமாளுமன்னனுளமகிழக்கை வீசி (வைகுந்)
அரையிற்சோமனுந்துலங்க - முப்புரிநூலு - மசையவல்லவாட்டிலங்க
காதிலேயெழுத்தாணி கருதிப்பிடித்துக் கொண்டு
சிறந்ததானியங்களின்பெயரையெழுதிக் கண்டு (வைகுந்)

படியாள்தானியப்பொதியே - கொண்டுபின்வரப் - பார்த்திபற்குவெகுமதியே
விடஞ்சேர்ந்ததிலிருக்குங்கொடும்வினையறி யாமல்
முடிவேந்தனுக்குமோசம்வருமென்றுதெரி யாமல் (வைகுந்)

வஞ்சி விருத்தம்

வெப்புயசேர்வைக்காரா, ஒப்புடனரசன்சேவை
இப்பொழுதாகவேணும், செப்பிடும்விடையெனக்கே.

சேருவைசொல் விருத்தம்.

குடிமுதலவனேகில்லுங் கொற்றவனுரைக்காணப்
படியிலேயெவர்வந்தாலும் பார்த்திபன்முதலாமந்த்ரி
விடையிலேயேகுதற்கு மேவிநானவற்குரைத்தோ
ரடியினில்வருகுவேனிங் கதவனைகாத்திடாயே.

வசனம்.

ஓ!ஓ! கேளுமையா மணியக்காரரே நமது அளகேந்திரபூபதியைக் காணுத ற்கு எவர்கள்வந்தபோதிலும் முதலாமந்திரி போதவாதித்தனுத்தர வில்லாமல் போகக் கூடாது ஆதலால் அவர்க்கு நான்சொல்லி வருமளவும் நீகாத்திருக்கவே ண்டுமையா.

வஞ்சி விருத்தம்.

அரசனூர்முதலாமமைச்சனோநமது, புரியிதில்வாழும் புகழ்குடித்தலைவன்
வரிசையாமூட்டை வண்மையாய்க்கொண்டு, நிருபனைக்காணநேருடன்வந்தான்.

வசனம்.

சரணமையா முதலாமந்திரியே நமது மகாராஜன் தெரிசனைகாண வேண்டி மணியக்காரன் ஏதோவரிசையோடும் வந்திருக்கிறானையனே.

போதவாதித்தன்சொல் வஞ்சித்துறை.

இட்டசேருவையே, திட்டமாயரசைச்
சட்டமாய்க்காண விட்டிடுவாயே.

சேருவைசொல் வசனம்.

கேளீர் மணியக்காரரே மந்திரி யும்மைக்கொலுச்சமுகம் வரும்படி ஆக்ஞா பித்தார்போவீரையா.

மணியக்காரன் சொல்விருத்தம்.

கதிர்மரபினிலுதித்த காவலாசரணம்போற்றி
எதிரிகள்தம்மைவெல்லு மேந்தலேசரணம்போற்றி
அதிசெய்வோரல்லல்போக்குந் தோன்றலேசரணம்போற்றி
அதிபதியளகேசேந்திர வண்ணலேசரணம்போற்றி.

இராஜன் விருத்தம்.

பயிரிடுங்குடிகட்குத்தலைவனுன பண்புபெறும்வைகுந்தமுதலியாரே, துய ரமெனநமதுநகர்வாழ்வோருக்குத் துட்டர்சதிகள்வர்களின்கூச்சலின்னம், அய ல்வீட்டார்வாதுசண்டை கொலையேதுண்டோ அன்றிவிளைவானதையேசினந்து ...டின், வயமிருகக்கூட்டங்களழித்ததுண்டோ வந்தஉனதகக்குறையைவசனி ப்பாயே.

வசனம்.

கேளீர் வைகுந்தமுதலியாரே உனக்குவந்த மனச்சஞ்சலமென்ன அல்லது நமது குடிகளுக்கு வந்திடின்ன தொல்லைகளவு கூச்சல் ஏதாகிலுமுண்டா நீர் வந்தகாரியந் தெரியச்சொல்லுவீர் மணியக்காரரே.

மணியக்காரன் விருத்தம்.

குடிகளுக்கின்றுநாளை குறையொன்றும்வருவதில்லை
படியினில்நமதுதேசம் பயிர்வளமானசெல்வம்
வடிவினையென்னசொல்வன் மன்னவாவுமதுசெங்கோற்
குடைநெறிநீதிகீர்த்திருவலயம்புகழ்வதையா.

வசனம்.

கேளீர் ராஜேந்திர பூபதியே தங்கள்குடைக்கீழ் வாழப்பட்ட எவருக்கும் இன்றைக்காவது நாளைக்காவது ஒருதுன்பமும் வருவதில்லை ஆனால் நமது தேசம் இவ்வாண்டிற்செழித்த வேளாண்மையைப்போலென்றுமில்லை தெரிந்தமட்டுஞ் சொல்லிவருகின்றனன் கேளீர் மன்னவா.

தரு. இராகம் - ஆனந்தபைரவி. தாளம் - மிசரம்.

இராஜாதிராஜனேநமதுதேசவளமை
யானென்னசொல்வேனையா - தேசவளமை - நானென்னசொல்வேனையா
பேசுவன்வயல்களிற்செழித்துவிளைந்தநெற்கள்
பேர்சொல்லவரிதாமே - விளைந்தநெற்கள் - பேர்சொல்லவரிதாமே (இரா)
சிறுசம்பாபெருசம்பாசீரகச்சம்பாவுடன்
பெருமணிச்சம்பாவும் - பாலூற்றசம்பா - சிறுமணிச்சம்பாவும் (இரா)
கொடிச்சம்பாமணக்கத்தைகுங்குமச்சம்பாவும்
நெடியசிறுராசிச் - சம்பாநெல்லும் - நெய்மணங்கோத்தசம்பா (இரா)
முத்துச்சம்பாகுண்டுமல்லிகைச்சம்பா எழில்
மெத்தசேர்மல்லிகைச்சம்பா-மணக்குஞ்சம்பா-விளைந்ததேகபெருச்சம்பா (இரா)
வால்நீண்டசம்பாவுமிளகுசம்பாதிரு
மால்பொசித்திடுஞ்சம்பா - கற்பூரச்சம்பா - வளர்ந்ததுபதுமச்சம்பா (இரா)
அல்லிவெள்ளைச்சம்பாதம்பைப்பூச்சம்பாவும்
வில்வப்பூச்சம்பாவும் - ரத்தினச்சம்பா - முல்லைப்பூச்சம்பாவும் (இரா)
நீலச்சம்பாமஞ்சளானசம்பா மேக
நிறச்சம்பாசாமளச்சம்பா - கோமளச்சம்பா - திலச்சம்பாகதம்பச்சம்பா (இரா)
இன்னமுஞ்சொல்லமுடியாதிவ்வளவென்றே
எழிலாய்விளைந்ததையா - உமதுகீர்த்தி - எங்கினும்பரவுதையா (இரா)

மணியக்காரன்சொல் விருத்தம்.

அதிபதியேமாலயனுஞ்சிவனுந்தேவர் அரசர்களுமற்றவருமதிசயிக்கப், புதியதெனநந்தேசவயலிலொன்றில் புகழ்பெறவேவிளைபாரிசாதச்சம்பா, இதனை யாய்த்தங்களுக்கோர்கோட்டைகொண்டே, அந்தவெகுமதிபெறவேதாசனடியேன்

மதிமுகத்தைக்காணவந்தேன்றுயரொன்றில்லை மலரடியைச்சிரமமைத்துமகிழ்வுற்றேனே.

வசனம்.

சரணம் சரண மஹேந்திரபூபதியே சிவன் விஷ்ணு பிர்மனுந் தேவர்களும் பூலோகத்தரசர்களும் இதுவேயதிசயமென்று புகழும்படியாக இத்தோமது தேசவயலில் நூதனமாக வாசனைமிகுந்த பாரிசாதச்சம்பா வென்னும் சம்பாநெல் விளைந்ததினால் அந்தநெற்கதிர்களை தங்களுக்கு வெகுமதியாகக்கொண்டுவந்தேன் மகாராஜனே.

இராசன்சொல்விருத்தம்.

சந்தோஷமிதையல்லால்வேறொன்றில்லை சத்வமிகுமுதலமைச்சேசாற்றக்கேளாய், வந்திருக்கும்வைகுந்தமுதலியார்தம் மனமகிழுமிதிதந்துவண்மையாக, இந்தநெல்லைப்போசனஞ்செய் யரிவைமார்பா லீந்துவெகுருசிகரமாயிதைச்சமைத்தால், பந்திநின்றியின்றிரவிலுண்ணவேண்டும் பரிவுடனேயேவிடுவாய்பண்புளோனே.

வசனம்.

கேளாய்மந்திரி போதவாதித்தனே வந்திருக்கும் வைகுந்தமுதலியார்க்கு வேண்டியவெகுமதிகள் கொடுத்தனுப்பி இந்தப்பாரிசாதநெல்லைப் போசனசாலைப்பெண்கள்வசங் கொடுத்து இன்றிரவே சமைத்துவைக்கும்படி ஆக்ஞாபிப்பாயமைச்சே.

போதவாதித்தன்சொல் வசனம்.

நல்லது அப்படியேமகாபாக்கியமன்னவனே

விருத்தம்.

குடித்தலைவோனேவேந்தன் கூறினமொழிப்பிரகாரம்
வடிவுளசரிகைச்சோமன் வல்லவாட்டும்பொன்பாகை
முடியினிலிழைக்கும்ரத்ன மோகனமாலையொன்று
திடமுடனீந்தேன்கொண்டு செல்லுவாய்மனமகிழ்ந்தே.

வசனம்.

வாருமையா வைகுந்தமுதலியாரே மகாராஜன் உத்தரவின்படி பொற்சரிகையிழைத்த சோமனும் வல்லவாட்டும் பொன்பாகையும் ரத்தினமாலையும் இதோ உனக்குவெகுமதியாகக்கொடுத்தேன் வாங்கிக்கொண்டுபோவீரையா.

விருத்தம்.

வல்லமைமிகுத்தகொலுவாசலுறுசேர்வைகேள் வைகுந்தமுதலியாரும்
வாசனைபெறும்பாரிசாதசம்பாக்கோட்டை மதிபதிக்கீந்ததாலிந்
நெல்லதைப்போசனச்சாலைவாழ்பெண்கள்வசம் நீதந்தவர்க்குவெகுவாய்
நிகழ்த்துவதுமென்னெனிற்பயபக்தியோடும்வெகு நேர்த்தியாக்குத்தியதனைக்
கல்லுகளிலாமலே துல்லியமதாகவே கமழுமணமேகாமலே
கனத்தவெள்ளிப்பாண்டமதிலேசமைக்கவுங் காவலவனாளகேசனின்
றல்லினிலருந்தமனதாகினாரென்றுநீ யதிகசாக்கிரதையோடும்
அறைந்திதைத்தந்துவிட்டோடியில்வந்தசபை அலுவலைப்பார்த்திடாயே.

சேருவைசொல் வசனம்.

அப்படியேதங்களுத்தரவின்படி செய்வேனையா.

விருத்தம்.

அறுசுவையோடன்னபலபதார்த்தஞ்செய்யும் அரிவையரேயிங்கெற்பேர்பாரிசாதம், பெறுதலுடனிவ்வருடம்நவமிதாகும் பிரியமுடன்காணிக்கைமணியக்காரன், பறைதலுறத்தந்தானின்றிரவில்வேந்தன் பசிக்குண்ணமனதானுர்புக்தியோடும்,குறையணுவுங்குறுகாமற்றல்யமாகக் குத்தியட்டேயிதனைவைப்பீர்கொற்றனுக்கே.

வசனம்.

கேளீர்போஜனசாலைப் பெண்களே, இந்தநெல் இவ்வருடம் நூதனமாகவிளைந்ததாகவும், இதின்பெயர் பாரிசாதச்சம்பாவாம், இதைநமதுபட்டணம்வாழுமணியக்காரன் இராஜனுக்குக்காணிக்கையாகக்கொடுத்தான் நீங்களிதைமகாசாக்கிரதையாக வாசனைபோகாமல் நல்யமாகக்குத்தி இன்றிரவில் மன்னவன்பொசிக்கும்படி சமைத்துவைப்பீர்பெண்களே.

போஜனசாலைப்பெண்கள்சொல் விருத்தம்.

வல்லசேருவையேகேளாய் மாநிலத்தெங்கும்யாங்கள்
சொல்லவுங்கேட்டதில்லை சுயமிதுமெய்தான்மெய்தான்
நல்லியமதாமாகத் துணாதிகைத்தகங்களிக்க
நல்லதுவிளைவாய்ச்செய்வோம் நலமுடனேகுவீரோ.

வசனம்.

கேளுமையாசேருவையே இந்தநெல்விளைந்தது அதிசயந்தான் வெகுசாக்கிரதையாகக்குத்திச் சமைத்து மகாராஜன்பொசித் தானந்தமாகும்படி செய்வமையா சேருவையே.

மூத்தபோஜனசாலைப்பெண்சொல் விருத்தம்.

தங்கையேவாராயிந்தத் தானியமணக்கும்வாசம்
எங்கிலும்வீசுகின்ற திதனைப்போலிலையிலாக்கியம்
செய்யுஞ்சாக்கிரதையோடுஞ் செய்திட்டால்நலமிதாகும்
வெய்யவன்மறையுமுன்னே விரைந்தினித்தொழில்செய்வோமே.

வசனம்.

கேளுந்தங்கையே இந்தநெல்லை எவ்விதஞ்சமைக்கவேணுமென்றால் குத்தினவுடனே தாமதமில்லாமல் உடனேபுடைத்து சலத்தில் மெதுவாகவேய்ட்டிபிரமாணமாய் பாண்டத்தில் சலங்கொதித்தவுடனே யரிசியையதிலிட்டு மிகுந்த அனல்போடாமலும் வடித்தெடுக்கவேண்டும் இப்போது மத்தியானவேளையானதால் சூரியன்மறையுமுன்னமே இந்தவேலையை நடத்துவோம்தங்கையே.

பொதுவசனம்.

அகோஅதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக போஜனசாலைப்பெண்கள் பொழுதுபோனபோது அன்னஞ்சமைக்க எத்தனித்தபிறகு விஜயபுரியையாளும் விஜயமார்த்தாண்டனென்பவன் கொலுவையும் அதிரசக்கூடத்தில் அம்புப்போரியூட்டக்கி யனுப்பினதையுஞ்சொல்லுவாம்.

விஜயமார்த்தாண்டன்கொலுவிருக்கை

கட்டியன் தோற்றம்.

வலிபெறும்வாள்கையேந்தி மருண்டிடும்விழியுருட்டித்
திசைதிசைவீரரெல்லாந் திடுக்கிடப்புயங்கள்கொட்டி
உசிதசிங்கம்போல்கெற்சித் தருமிமீசையைமுறுக்கி
விஜயமார்த்தாண்டன்வாசல் வீரகட்டியன்வந்தானே.

தரு. இராகம் - எமுனகல்யாணி. தாளம் - ஆதி.

பல்லவி.

வீரகட்டியனானே - விஜயஜெய - வீரகட்டியனானே,

அநுபல்லவி.

திரன்விஜயபுரிசெம்மலெனைமெச்சிட
இகமொருகூடக்கொலுவலங்கிர்தஞ் செய்யும்
மதிபரகமகிழநயமொழி பெய்யும் (வீர)

சரணங்கள்.

மருவலர்களைத்தாக்குவேன்-என்னோடெதிர்க்கும்-வண்டர்களுயிர்போக்குவேன்
நிருபரகமன்பாக்குவேன்-கொடியதுட்டர்-நேசமில்லாமல் நீக்குவேன்
பெருமலைகளைப்பர்தெனப்பீடாயெடுத்தெறிவேன்
பிழையிலாதமநுவோர்களைத் துதிப்பேன்
பழியுரைக்கும்பெருமூடரை வதைப்பேன் (வீர)
தேவர்களுங்கண்டோடுவார் என்வல்லமைக்குத - துரிகர்த்தரும் வாடுவார்
தாவிவீரர்கொண்டாடுவார் - உலகிலுள்ளோர் - சங்கையற்றெனைத் தேடுவார்
மேவும்பெருங்காற்றையும் விண்ணோடிநும் பிடிப்பேன்
வெண்டிரைக்கடலையும் சுணைத்தினி விரைப்பேன்
சண்டனெனவேகிமேழுலகமுந் அளப்பேன் (வீர)
செகராஜர்போற்றுந்திரன் - விஜயபுரி - செங்கோலோச்சுங் கெம்பீரன்
தகைவளரும்நல்மாரன் - மன்னவருடன் - சமர்செய்திடவே சூரன்
வலகயாய்மந்திரிகள்சூழ மகுடமண்டலர்தாழ
மகிபதிசபைதனில்வருகிறு ரறிவீர்
இகலுளவர்சிரமேகொய்யுவார் தெரிவீர் (வீர)

கட்டியன்சொல் ஆசிரியவிருத்தம்.

வடிவுடைய்முடியரசர்கொடிபடைநெருங்கிவர வனிதையர்கணடனமாடமறைமுனிவர்பூசுரர்களாசிகூறச்சிலர்கள் மங்களசபங்கள்பாடத், தடவரைகளிடிதிடெனநெடியதிடவிரரும் தவளமுதுகுடைபிடிக்கச்-சங்கதியுமிங்கோசுமதிரிகள்சுற்றுறத் துரியலர்களெதிர் துதிக்கத், திடுதிடெனமணிமுரசகெடிபடவுயிருநான்கு திசையெங்குமெரலியொலிக்கச் - செந்தமிழ்மகிழ்ந்துகவிவாணர்புகழ் சொல்லவே தெண்டனெனவெவரும்வருகச், சுடிகைபொடிபடவுமொருநொடியிலுயிர்போக்குவேன் சூரனுமரசருக்கும் - சுத்தவீரத்ததவிஜயமார்த்தாண்டமகாராஜன்வருசமயமே.

வசனம்.

இராஜாதிராஜன் சூரியவம்சோதய விஜயமார்த்தாண்ட மகாராஜன்கொலுவிற்குவருகிறுர் எச்சரிக்கை ஜனங்களே.

துன்மதிமந்திரிசொல் விருத்தம்.

பனிக்குலைவபடலையெண்ணிப் பரிதிமுன்னெதிர்க்குமோதான்
உனக்கிணையொருவரிந்த வுலகத்திலுண்டோவில்லை
தனக்குத்தான்மாளவென்தன் றந்திரயுக்திசெய்யும்
நினைத்துநீர்சொன்னவார்த்தை யின்புயாபொறுத்திடீரே.

வசனம்.

கேளீர் விஜயமார்த்தாண்டபூபதியே கிரணங்களீசம் சூரியன்முன் பனி வீரங்கொண்டெதிர்க்குமா இப்பூமண்டலத்தரசர் எதிர்த்தும்முடன்சண்டை செய்யவல்லவர்களா இல்லையே வீணை அளகேசனுடன் வாதுசெய்யஎண்ணினதை நிறுத்துவீர்நாமிங்கிருக்கவும் அவர்களங்குமரிக்கவும் உபாயவல்லமைகள் நமக் குண்டே மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

ஆமிதுமெய்தான்மெய்தா னலைகடல்சூழுமிந்தப்
பூமியினரசரென்ன போர்புரிவாரென்னோடு
தாமதமின்றிநீயுஞ் சாற்றியதந்த்ரயுக்தி
சேமமாயின்னதென்று நிகழ்த்திடுவாயமைச்சே.

வசனம்.

ஆ! ஆ! மெய்தான்மெய்தான் இதற்குச்சந்தேகமென்ன இந்தக்கடல்சூழ்ந்த பூலோகத்தரசர்கள் என்னுடனெதிர்த்துச்சண்டைசெய்யவல்லவர்களா இல்லை ஆ னால்நாமிங்கிருக்கவும் அவர்களங்கிறக்கவுந் தந்திரஞ்செய்யலாமென்றதெப்படி யோ அதைத்தெரியச்சொல்லுந் துன்மதிமந்திரியே.

துன்மதிமந்திரிசொல் விருத்தம்.

மதிபதியேயதிரசமுஞ்செய்துபின்னும் மாநகர்வாழ்தபதியனையழைத்துக்காட்டி
வகையுடனோர்பாண்டமதிலுள்ளடக்கி வாசிபொறியம்புகளையமைத்துமாட்டி
ரகசியமாய்த்தெரியாமல்வாய்மூடிட்டு நவமணியுஞ்சிலபணிகாணிக்கையாகத்[ரே.
கையுடனேமடலெழுதிநமதுபோர்த்தூதர்கள்வசமீய்ந்திடவவரங்குச்செல்வா

வசனம்:

கேளீர் விஜயமார்த்தாண்டபூபதியே நானென்னைக்கொண்ட தந்திர மியா தெனில் இனியபதார்த்தங்களைச்செய்யும் பண்டசாலைவீரனை யழைப்பித்து அதிர சஞ்செய்துவர வுத்தரவுகொடுத்து அந்த அதிரசங்களை யோர்பாண்டத்துள் வை த்து அதன்பின் அதிகவல்லமை பொருந்திய தபதியொருவனை வரவழைத்துபொ றியம்புகள் செய்து அதிலடக்கித் தந்திரமாய் வாய்மூடிட்டு திறக்கும்போ திறக் கும்படிசெய்து வெகுமாட்சியாக வோலையொன்றெழுதி வேண்டியதிரவியங்கள் காணிக்கையாகவைத்து நமதுதூதர்வசங்கொடுத்தால்.

இதுவுமதுவிருத்தம்.

சென்றளகேசன்கொலுவின்சபைமுன்வீவார் சிந்தைமகிழ்வாகவிதைத்திற ந்திட்டானேல், கொன்றுவிடும்பொறிகளம்பேயெங்கும்பாய்ந்து கூற்றுவனூர் சேர்க்கிடுமோர்குற்றமில்லை, அன்றவன்பால்வந்தவமைச்சரின்றிடத்தா லகத்தி லேகொள்ளமிழ்ந்தவனிறப்பான், என்றுமளகாபுரிநம்வசமேயாகும் இதையவனே தவிடவேதில்லைமெய்யே.

வசனம்.

நாமனுப்பிமெதிரசக்குடத்தை அளகேசன்சந்தோஷத்துடனே திறப்பான் உடனே படபடவென்று பொறியம்புகள் தேகமெங்கும் பாய்ந்து தன்னைச்சூழ் ந்தமந்திரிகளோடிறந்து விடுவான் பின்பு அளகாபுரிப்பட்டணம் நமதுவசமாவத ற்குச் சந்தேகமென்ன மன்னவனே.

இராஜன்சொல் விருத்தம்.

மந்திரியேநீயுரைத்த வல்லமையுக்திக்கொப்பாய்
இந்நாலுலகத்தின்க ணிலையெங்குமுனைப்போல்வீரர்
உந்தமெண்ணப்ரகார முனுருசிகரபதார்த்தம்
விந்தையதாகச்செய்யும் வீரனையழைப்பிப்பாயே.

வசனம்.

ஆ! ஆ! மந்திரியே உன்னைப்போல் யுக்திசாமார்த்திய வமைச்சர்களிந்த உ லகத்திலுண்டா இல்லை சபாசு சபாசு நல்லயோசனை யெடுத்துச்சொன்னாய் நீநி னைத்தபடியே பண்டசாலை வீரனையழைப்பாயமைச்சே.

துன்மதிமந்திரிசொல் வசனம்.

இதோஅப்படியேவரவழைக்கிறேன்மன்னவா.

துன்மதிமந்திரிசொல்விருத்தம்.

பகருமுன்காக்கையைப்போல் பறக்குங்கட்டியனேவாடா
அகமகிழ்வாகவேந்துக் கறுசுவைபலபதார்த்தம்
வகையுடன்செய்யும்பண்ட வர்க்கஞ்செய்திறமையோனை
மதிபதியழைத்தாரென்று வந்திடச்செப்பிடாயே.

வசனம்.

ஆரடா அடா கட்டியனே யிக்ஷணமேயோடி பண்டசாலையிலிருக்கும் கண் டாரகண்டனென்பவனை நமதுமகாராஜன் அழைத்தாரென் றழைத்துவாரும்பி ள்ளாய்.

கட்டியன்சொல் விருத்தம்.

மகாபாக்கியம் இதோ அழைத்துவருவேனையா.

கண்டாரகண்டன்தோற்றம்.

விருத்தம்.

திரண்டபொற்குன்றைப்போலுந் திண்மைசேர்புயமசைத்தே
அரண்டிடவீரசொல்லா மதட்டிமீசையைமுறுக்கி
இரண்டுகைகளையுங்கொட்டி யிடியிடித்ததுபோல்கெர்ச்சித்
தரண்டிடும்விழியுருட்டி யடல்வீரகண்டன்வந்தான்.

தரு. வண்ணத்தோடி. தாளம் - ஆதி.

பல்லவி.

கண்டாரகண்டனெனும்பேர் கொண்டிடும்பண்டகவீரனும்நானே.

அநுபல்லவி.

மண்டலவரசர்களென்றனைமகிழ்ந்திடுவார்மிக்கப்புகழ்ந்திடுவார்
மணமுறும்பலவகையறுசுவை பதார்த்தம்
இனிதுடன்செய்திடுவன்குறையில்லை யதார்த்தம் (கண்டா)

சரணங்கள்.

சரதேறுமேமலயனமாரும் - இதயக்களிப்பாரெனையேமதிப்பார்
பேசவுனருசுவைசெய்பவர் - பின்னிடுவார்வல்லனென்றெண்ணிடுவார்
பேருடனேயக்குரோணிகோடிசேனை கருக்கும்
நேருடனேகொடிக்குட்போசன முடிக்கும் (கண்டா)
வேந்தர்களெந்நாளிலும் - வெகுமதியே - பண - மிகநிதியே
சார்தமாயீவாரெனக்கெதிர் - தரியலர்வந்தால்வாயுளாயுமுருவல்
சமுதியின்முடிபொடிபடவுட னுதைப்பேன்
உடல்கடுங்கிடவுயிருடனேக வதைப்பேன் (கண்டா)
பாரிலெவ்வீரர்களாகிலும் - பயப்படேனவர்வசப்படேன்
போராடவேயெனக்கினியார்சென்று - போய்விடுவேனெதிராய்விடுவேன்
புரவலன்கதிர்குலம்வரும்விஜ யேந்திரன்
விரைவுடன்வரவுரையனுப்பினதே தரியேன்

விருத்தம்.

வீரர்கள்துதிக்கும்வீராபோற்றி, மாரனும்நாணும்வடிவாய்பொற்றி
சூரியமரபின்றுரையேபோற்றி, பாரினையாளும்பார்த்திபிபோற்றி.

இராஜன்சொல் விருத்தம்.

கையும்வாய்நெய்மணக்கக் களிப்புறப்பலபதார்த்தஞ்
செய்யும்மடப்பண்டசாலைத் தீரனேசொல்லக்கேளாய்
பையவேசுவையிருக்கப் பார்த்திபரகங்களிக்க
ஐயமொன்றணுவிடாம லதிரசஞ்செய்துவாராய்.

வசனம்.

ஆ! ஆ! கேளாய் அறுசுவைபதார்த்தஞ் செய்யும்வீரனே பொசிப்பவர்களிது வேசிலாக்கியமிதுவே யோக்கியமெனவும் வேந்தராயிருப்பவர்கள் பொசித்தானந்தங்கொள்ளும்படி வெகுசாக்கிரதையாக அதிரசங்கள் செய்துவருவாய் வீரனே.

கண்டாரகண்டன்சொல் வசனம்.

சரணம் சரணம் சுவாமி தாங்களாக்ஞா பித்தபடியே வெகுசுருக்காகச்செய்து வருவனேயா.

கண்டாரகண்டன்சொல் விருத்தம்.

மன்னவனேசிவனயன்மாலுமையிலட்சுமிவாணிமகேசுவரிசுரர்மற்றுள்ளோரும், இன்னமிந்தப்பூவினையாளரசர்னலோர் இருடிகளுமகங்களித்தேயிவிதெனக், கன்னல்மதுரம்மொழுசமணக்கநெய்யைக் காதயிருப்பவர்கள்மனங்கவர்தலாகச், சொன்னவிதமதிரசங்கள்செய்துவந்தேன் தொண்டனுலாகுந்தொழிலைச்சொல்லுவீரே.

வசனம்.

சரணம் சரணம் விஜயேந்திரபூபதியே சிவன் விஷ்ணு பிரமனும் முனிஸ்வரர்களும் அசுரர்களும் வேதபாரகரும் ஆதிலக்ஷிமியும் பார்வதியுங் கலைமகளும் இந்த அதிரசங்களைப் பொசித்து இதுவேயோக்கியமிது வேசிலாக்கியமென்றும் கனவிலுமறவாமல் நினைத்திருக்கும்படி வெகு ருசிகரமாகச் செய்துவந்தேன் மன்னவனே.

இராஜன்சொல் விருத்தம்.

மனம்பொசித்திடவுமாசை வைத்திடவதிரசத்தை
இனிதுடன்செய்துவந்த இயலுளவீரனுக்குத்
தனமிகத்தந்தனுப்பித் தபதியில்வலனொருத்தன்
நினைவுநீகொண்டவாறே நேர்மையதாயழைப்பாய்.

ஆ! ஆ! கேளாய்துன்மதிமந்திரியே வெகுவினோதமுடன் அதிரசஞ்செய்து வந்த வீரனாகிய கண்டாரகண்டனுக்கு வேண்டியவெகுமதிதந்தனுப்பி நீநினைத்தபிரகாரம் அதிகசாமார்த்தியம்பொருந்திய தபதியையழைப்பாய்மந்திரி.

துன்மதிமந்திரிசொல் வசனம்.

அப்படியேஇட்சணமே வரவழைக்கிறேன் மன்னவா.

துன்மதிமந்திரிசொல் விருத்தம்.

திரமிகுந்தவீரகட்டியனேவாடா இடுஇடுவென்றோடிநந்தேசம்தாழும், மரவினைசெய்யாளருக்குள்வல்லவனும் வானுலகத்தபதிகளிற்புகழோனும், வருவினைவின்சொற்படியேமுடிப்போனும் மற்றந்ததொழில்புரியுமயனொருத்தன், நிருபன்விரைவுடன்வரவேயுரைத்தாரென்றுநேர்மையுடனேயழைத்திந்நிமிஷம்வாராய்.

வசனம்.

ஆரடா அடா வீரகட்டியனே திடுதிடென்று இந்தட்சணமேநீயோடிநமதுபட்டணத்தில்வாழும் தபதிகளில்வல்லவனாகியும் தெய்வதச்சனைப்போல்புகழ்பெற்றவனாகியும் நினைத்தவண்ணப்பிரகார முடிப்பவனாகியும்மகாசாமார்த்தியத்தபதியொருவனைமகாராஜ னழைத்தாரென் றழைத்தோடிவாடா கட்டியனே.

கட்டியன்சொல் வசனம்.

இந்தட்சணமே யழைத்தோடிவருவேனையா மந்திரியே.

தபதி தோற்றம்.

விருத்தம்.

சொ; பெருஞ்சிற்பநூலைத் தகளறவாய்ந்தவீரன்
விற்பனவிவேகபூமி விளங்கிடுங்கல்வியாளன்
நற்படியாகப்பிர்ம்மன் னுடிவந்தேனுதிக்கும்
தற்புனையணுவில்லாத தபதியும்வருகின்றானே.

தரு. இராகம் - மோகனம். தாளம் - ரூபகம்.

வல்லதபதிநானே - பிரதாப - வல்லதபதிநானே.

அநுபல்லவி.

எல்லவரும்புகழு மெழில்விஜயேந்திரதிரன்
என்னைவரவழைத்த பின்னமேதென்றறியேன்
இசைகொளற்புதசிற்பசாத்திரன் விசையுறச்செயுங்கர்ப்பகுத்திரன் -
உயர்தெய்வத்தச்சனென்னைக்கொண் டாடுவான்மனமகிழுவே - பண் (வல்ல)

சரணம்.

மட்டப்பலகையேந்தித் திட்டமாய்மரங்களை
வாய்ச்சியினுற்செதுக்கி நாட்டுவேன் - மன்னர்

வாழும்பள்ளிமேடைகள் சூழுமணிமதில்கள்
வடிவாய்ச்சித்திரங்களைத் தீட்டுவேன்
எட்டுத்திசைகளிலுள்ள பட்டவர்த்தனரெல்லா
மிதயங்களிக்கத்தொழில் பூட்டுவேன் - புவி
கல்லாமளித்தபிர்மன் சொல்லாதொன்றுமிருக்க
என்சிற்பசாத்திரத்தைக் காட்டுவேன்
கெட்டமதியிருத்த துட்டப்பசாசர்களைக்
கீழ்மைப்படச்சுத்திரத்தி லாட்டுவேன் - கீர்
த்தியில்லாப்பெருந் தூர்த்தர்க்குமதுமுறை
கேண்மையமிர்தமன்னி யூட்டுவேன்
சட்டமுடனேகலி சற்றேனும் பழித்திடுஞ்
சண்டிகட்குமுறை சாற்றுவேன் - மந்திர
தந்திரவிந்திரமயேந்திரசாலங்கற்றோருஞ்
சரணெனப்பணிந்திட வோட்டுவேன்
சிருஷ்டித்தளித்தழிக்குஞ் சிவனடியைத்துதிப்பேன்
இரத்தபதிகளைச்சிறியோரென மதிப்பேன்
நேசநேசர்கள் நிறைதந்ததிபோஜன்விஜயமார்த்தாண்டமகிபதி
தீர்க்கமாய் வரவிட்டதொழிலினைச்சகப்புரிந்தன்பாகவேமுனை (வல்ல)

தபதிசொல் வஞ்சித்துறை.

கதிர்குலமணியே சதிர்பெறுமுலகில்
எதிரிணையில்லா அதிபனேசரணம்

துன்மதிமந்திரிசொல் விருத்தம்.

தாரணிமேலித்தபதிநாமதேயம் சாற்றிடவும்வெகுநாளாய்க்கேட்டிருந்தேன், பேரணியுமிவன்வலிமைசேஷனாலும் பேசுதற்குமிகவரிதாம்பிர்மன்கண்டே கோரியிருகைகளையுஞ்சிரமேற்கூப்பிக் கோடிதெண்டமென்றுரைப்பான்குற்றமில்லை, சீரணிந்தமுகவழகுங்கல்விமாட்சி சீரியனேயிவன்மெத்தத்தெரிவீர்வேந்தே

வசனம்.

கேளீர்விஜமார்த்தாண்டபூபனே ஆ! ஆ! ஓ! ஓ! வெகுநலம்நாம்நினைத்தகாரியமேபலம்இந்தத்தபதியாவெகுநாளா இவன்கீர்த்திப்பிரதாபங்களைக் கேட்டிருக்கிறேன்மகாவல்லமைசாலி தந்திரஇந்திரசால மாட்சியுங்கல்வியுங்காக்ஷியுங்காம்பீரமும்இப்பொழுதேமுகத்தில் களகளவென்றுஜொலிக்கின்றதே ஆ! உலகெலாம்படைத்த பிர்மதேவனுங்கண்டு கோடிசரணமென்றுகைகளைக் குவிப்பானந்த ஆதிசேடனுமிவன்கீர்த்திப்ர தாபங்களைச்சொல்லாமல் ஊமைகண்டசனவைப்போலிருப்பானரசே.

இராஜன்சொல் விருத்தம்.

செப்பவேகுறைவொன்றில்லை திறமுளமந்திரிகேளாய்
ஒப்புஞ்சாதுரியத்தன்மை யொழுக்கமுங்கல்விமாக்ஷி
கைப்பிரமனமும்நல்ல காம்பீரச்சீர்த்தியெல்லாம்
இப்பொழுதேமுகத்திலெகுதுகண்டிட்டேனே.

வசனம்.

கேளாய்துன்மதி மந்திரியே நீ சொல்லும்உவமானத்திற்குச் சந்தேகமென்ன அழகுஞ்சாதுரியதன்மையும் ஒழுக்கமுங்காம்பீரமும் வல்லமையுத்தியும் உடையபேதமில்லாதமனத்தோனென்றிந்தத் தபதியின் முகவலங்காரத்தி லறிந்தேன்மந்திரியே.

இராஜன்சொல் விருத்தம்.

சிற்பசாத்திரத்திற்றேர்ந்த திறனேசொல்லக்கேளாய்
விற்பனயூகிநீயே விளங்குமென்மந்த்ரிகூறும்
சொற்படிச்செய்வாயானால் தொல்லுலகோர்மதிக்க
நற்பொருணிதிகள்வேண்டும் நலமெலாமீகுவேனே.

வசனம்.

ஆ! ஆ! கேளாய்தபதியே நீ நல்லயுத்திசாலியென்று என்மனதிலெண்ணினேன் என்மந்திரியுன்னிடத்திற் சொல்லும்படியே முடித்துவருவாயானால் பூலோகத்தில்நிலைநிற்கும் படிவேண்டிய வெகுமதிகள் கொடுப்பேன் தபதியே.

தபதிசொல் விருத்தம்.

சொற்படிச்செய்வதற்குத் தொண்டனுங்காத்திருக்க
எப்படியாகாதென்றே இயம்பிடவகைதானுண்டோ
இப்புவனத்திலென்போலெவர்களுண்டில்லையானால்
தப்பிதம்வருமேயானால் தபதிநானல்லவேந்தே.

வசனம்.

கேளீர்விஜயமார்த்தாண்டபூபதியே தாங்கள் சொற்படிசெய்வதற்கு அடியேன்காத்திருக்க ஆகாதென்று சொல்லுதற்கு வகையுண்டா என்னினபிரகாரஞ்செய்துவராமற்போனால் தபதியல்லவென்றுசொல்லவேண்டுமன்னவா.

துன்மதிமந்திரிசொல் ஆசிரியவிருத்தம்.

துன்மதிமந்திரிசொல் வல்லவாவென துமொழிகேள்
வானுலகுதெய்வமரவினையாளர்போற்றிடும் வல்லவாவென துமொழிகேள்
மணமுல்லுமில்லஇரசங்களோர்பாண்டத்துள் வகையாயிருக்கவேண்டும்
சனருயிர்தாக்குபொறியம்புவாசிகளுமிதி லிகலாயிருக்கவேண்டும்
எத்துடனுபாயமாய்வாய்மூடல்கட்டியே எழிலாயிருக்கவேண்டும்
பானுகுலநமதாசவிஜயேந்த்ரபூபதிப் பகைவர்களிதைத்திறந்தால்
படபடப்பொறியம்பதாகியெங்கும்பராய்ப் பரிவொடவரைச்சூழ்ந்திடும்
சேனைபடைவீரருமமைச்சருந்திடிலெனச் சிவனையிழக்கவேண்டும்
சீரியவுபாயநீநான்சொல்வதொன்றிலைச் செய்துவாவுனதுகடனே.

தபதிசொல் விருத்தம்.

பெரிதெனவெண்ணிச்சொன்னீர் பெட்புடனீதைங்காதம்
பரவியேயங்கங்குள்ள பகைவர்களுயிர்விடுக்கப்
பொருமம்பதாகிமுன்னிற் பொல்லாதவிடத்தைப்பூட்டி
ஒருதினத்திநிற்செய் தோடியேவருவேனையா.

வசனம்.

கேளுமையா மந்திரியே பெரியகாரியமென்றெண்ணிச் சொன்னீர்தாங்கள் சொன்னபடியே நான் செய்யப்பட்ட தெய்விதமென்றால் பத்துக்காதத்திற் க

ப்பாலுள்ளபகைவர் நடுநடுங்கத்திலெலடைக் குயிர்விடும்படியாய்ப் பொதியம்பு களின்முனையில் கொடுவிஷத்தையூட்டி என்றெழி லின்சாமார்த்தியத்தைக் காட்டுவேனையா மந்திரியே.

நபதிசொல் விருத்தம்.

மந்திரிசொற்ப்ரகார மணமுளவதிரசத்தைத்
தந்திரமாய்ப்பாண்டத்துட் சதிருடன்டக்கிமேலும்
சைந்திடவுடல்நடுங்கி எமபுரியுயிர்சேர
அந்தரங்கமதாய்வாசி யம்பொடுபொறிவைத்தேனே.

வசனம்.

ஆ! ஆ! மந்திரிசொன்னதொரு விதமாயிருந்தால் நான்வெகுயுத்தியோடும் பொதியம்புவாசி முனைகளில் விஷத்தையூட்டி அதிரசங்களைப் பானைக்குளடக்கிருத்திரமாக வாய்மூடிட்டனன் இதனைத்திறப்பவர்க ளுடனேஎமபுரிசேருவ துற்கையமில்லை.

தரு. இராகம் - சங்கராபரணம். தாளம் - ரூபகம்.

பல்லவி.

சொன்னவிதமேமுடித்துவந்தேனீ தென்னபெரியவேலை.

அநுபல்லவி.

மன்னன்விஜயமார்த்தாண்ட பூபனென்னைப்புகழ்ந்து	சொல்ல	
ஒன்னலருடல்மெலிந்தேயுயிர் தென்னெமபுரி	செல்ல	(சொன்)
அதிரசத்தையிப்பாண்டத்துள்ளடக்கிச் சதிசெய்யம்புகண் மாட்டி		
எதிர்பாய்ந்திடவும்பொறிவாசிக ளதில்விஷத்தினை	யூட்டி	(சொன்)
பக்கத்திருக்குமவரைச்சித்திர வதை	செய்யும்	
இத்தரையிற்செருவல்கொண்டோர்தலைமெத்தவே தாலிக்	கொய்யும்	(சொன்)
வேணும்பணிகணிதிகளரசன்பேணிமிகப் பரி	சீவார்	
காணும்படியிதைத்திறப்பவர்மனம் நாணியுடனே	மாள்வார்	(சொன்)

விருத்தம்.

தரணிபுகழ்விஜயேந்த்ரபூபாதெண்டம்சத்வமிகுமந்திரியேதாங்கள்சொன்ன, மருவலர்களுயிர்கவரும்பொறிகளம்பு வாசிமுனைகொடியவிடமூட்டிமாட்டி, மருவுமல்லறெரியாமல்திறப்பவர்க்குவாய்மூடிட்டந்தரங்கசூத்ரம்வைத்தேன்,ஒருபோதுமதையவிழ்ப்போர்பிழைப்பதில்லை உத்தமனேயெதுதொழில்சத்யமென்றே.

வசனம்.

சரணம்சரணமையா விஜயமார்த்தாண்டபூபதியே ஐயாமந்திரியே தாங்கள்சொன்னயுக்தியின் பிரகாரம் பாண்டத்துள் அதிரசங்களைவைத்து கொடுங்காலனென்னும் பொறியம்புவாசிக ளதிலடக்கி வாசிமுனையில் விஷங்களைத்தடவி வெகுதந்திரமாய் காணியேற்றி வாய்மூடிட்டிருக்கின்றனன் ஐயையோ இதைத்திறப்பவர்கள் பூலோகத்தில் வாழ்வாரொன் றுசையில்லைமன்னவனே.

இராஜன்சொல் விருத்தம்.

மந்திரிகேளாய்நாமு மனதினில்நினைத்தவாறே
தந்த்ரமாய்ச்செய்துவந்த நபதியினைகக்களிக்க

விந்தையாய்மணியின்குப்பை வெகுமதிதந்தனுப்பி
முந்தியிக்குடமனுப்ப முன்புதூதரையழைப்பாய்.

வசனம்.

ஆ! ஆ! சந்தோஷம் கேளாய்மந்திரி துன்மதியே நாம்நினைத்தது ஒருவிதமாகால் இந்தத்தபதிசெய்துவந்தது மகாசாமார்த்தியமாய்க் காணுகின்றது பொக்கிஷந்திறந்து மாணிக்கக்குப்பைகளை வாரிவாரிக்கொடுப்பாய் மந்திரியே.

துன்மதிமந்திரிசொல் விருத்தம்.

நினைத்தசொற்படியேயந்த நிமிஷத்திலேநிர்ம்மிக்குங்
கனத்தயுக்தியும்விவேகக் கல்விசேர்தபதிகேளாய்
தனத்தின்பொக்கிஷந்திறந்தேன் சவிமணியாடைபொன்னும்
இனிப்புடன்வாரிக்கொண்டுன் னில்தனக்கேகுவாயே.

வசனம்.

வாரும்பிள்ளாய் வலலதபதியே இதோ பூாத்தினப் பொக்கிசந் திறந்தேன் உனக்குவேண்டிய நவமணிகளும் தனங்களும் வாரிக்கொண்டு நின்வளவிற் கேகுவாய்தபதியே.

தபதிசொல் வசனம்.

தங்கள் சொற்படியே வேண்டியதெடுத்துக் கொண்டனன் போய்வருகின்றேன் காணமையா மந்திரியே.

மந்திரிசொல் விருத்தம்.

டல்பெறும்விஜயமார்த்தாண் டரசனார்கொலுவைக்காக்கும்
டமுறுங்கட்டியானே சீக்கிரமாகவோடி
நடியவேற்றூதர்தம்மை நிருபனாரழைத்தாரென்றே
டியினில்வந்துசேர வழைத்துடன்வருகுவாயே.

வசனம்.

அடா அடா கட்டியனே சீக்கிரமாகவோடி போர்த்தூதரிருவரை மகாராஜனழைத்தாரென்று சொல்லிவாரும்பிள்ளாய் கட்டியனே.

கட்டியன்சொல் வசனம்.

அப்படியே இதோ அழைத்தோடி வருவேனையா மந்திரியே.

தூதர் தோற்றம்.

விருத்தம்.

சிந்சினிற்குச்சுக்கொண்டை திகழ்ந்திடப்பாசபந்து
சரமதிற்சூலம்பிண்டி கருவிகளெடுத்துக்காட்டி
அரையிற்சல்லடமேயிட்டு அசையாமற்கச்சைக்கட்டித்
தூரைகளுமதிக்கும்வல்ல தூதரும்வருகின்றாரே.

தரு. இராகம் - தோடி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

தூதர்நாங்களே - வெற்றிபெறும் - தூதர்நாங்களே.

அநுபல்லவி.

	பூபன்
பூதலம்புகழ்விஜயேந்திர	தாபம்
புந்திமகிழ்வாகஅழைத்தப்ர	

116605

சேதியதிற்றவாதிடுவோர் களைத்
திட்டிக்கொட்டித்தலையை - வெட்டிக்கட்டுங் கெட்டி (தூதர்)
சனாரங்கள்.

அரசன்றந்திடுமோலைகைவாங்கியேஅண்டத்திற்கப்புறஞ்செல்லு வோம்-அதை
அறிவித்தேமறுவிடையுடன்கொண்டோரடியினிற்செய்திசொல்லுவோம்
சரசவார்த்தைகள்பேசிமைத்திடுஞ்சண்டிகளைவாட்டிக்கொல்லுவோம்-பொய்ச
சாட்சியுரைத்தவின்சத்தியஞ்செய்வோர்தங்களைவேருடன்கெல்லுவோம்
தரணிமீதவாயாற்பந்தலிடும்தரியலரையும்வஞ்சகஞ்செய்திடும்
கெருவமுள்ளோரையுங்கொடும்வாளினூற்கிறியோரிகட்குவாரிச்சூறைசெய்யும்
(தூதர்காங்களே.)

கைப்பொருளைவாங்கியில்லையென்றேழிடுங்கயவரையெட்டிப்பிடிப்போம்,சற்றும்
கருணையில்லாமற்பேசுமுலுத்தரைக்கண்டவுடன்பற்றியடிப்போம்
வைப்பிடுங்குழற்கற்புள்ளபெண்களின்மேல்மனம்வைத்தோருட்டிகடிப்போம்-தஞ்ச
மாகவந்தோர்களையாதரிக்காதவர்வாய்ப்பல்லுதிரவேயிடிப்போம் [ளையும்
மெய்ப்பட்டபிச்சைபீந்துண்ணுப்பேய்களையும் விளங்குஞ்சற்சனர்க்காகாயக
செய்ப்படும்வேலினூற்குத்திச்சதைகளைசிந்துசிந்தாய்க்காற்றிப்பர்தைப்போலெ
(தூதர்காங்களே.) [றியும்

கீர்த்திபெறுங்கவிவாணர்க்குதவாதகெடுமதியோனாவதைப்போம்-நாளும்போம்
கிழ்மைபுறம்பரத்தையர்க்கேயளித்துக் கேண்மைசெய்வோர்கண்டே
கீர்த்தியிலென்றுவேதாகமத்தைக்குற்றஞ்செப்புவோர்பற்போகவுதைப்பே
சிந்தனையாகியெந்நாளும்புகழ்பெறுஞ்சீரியரடியைத்துதிப்போம் [யவ
மூர்த்திசொல்லுங்கவிக்கோடரிகைகொண்டுமுனைத்தோடிராகம்பாடியெதிர்கண்டு
பார்த்திபனுரைமீறிடுந்தூர்த்தரைப்பற்றிக் குத்திக்குடலையெற்றிநிர்த்தஞ்செய
(தூதர்காங்களே.) [யும்

வஞ்சித்துறை.

தொல்லுலகதனிற், சொல்லரும்புகழ்சேர்,
வல்லமையர்சே, மெல்லடிசரணம்.

இராஜன்சொல் விருத்தம்.

தூதர்கள்வந்துவிட்டார் துன்மதிமந்திரிகேளாய்
ஏதமில்லாமல்நோக்க யாதொருபிழையுமின்றி
ஓதிடுமொழிப்பிரகாரம் மூவகையுமாகவேயோடும்
சேதியையோலைகொண்டு சீக்கிரமெழுதுவாயே.

வசனம்.

ஆ! ஆ! கேளாய் துன்மதிமந்திரி போர்த்தூதர்களும் வந்தனர் இனியாதொ
ன்றுந் தாமதமில்லாமல் சந்தோஷகரமாய் நான் சொல்லும்படியே அட்சரப்பி
ழைகளில்லாமல் எழுதிவருவா யமைச்சே.

ஆசிரிய விருத்தம்.

செங்கமலநற்றடங்கற்பகவனங்களுஞ் சேல்பாயும்வயல்கள்சூழும்
சீர்கொளளகாபுரியெனும்பட்டணத்தையாள் ஜெயவிஜயசாம்ப்ராட்சியன்
செப்புமறையாகமபுராணமதனீதியிற் றேர்ந்திடும்புருஷசிங்கன்

தேசுதிகழ்கதிர்குலமுதித்திடுமிரத்தினன் றிறல்கொண்டிடும்பிரதாபன்
பொங்குநதியுடன்மதிபுனைந்தசெவ்வேணியன் பொன்னடிவணங்குமன்பன்
புரையனுவுமனதினிற்கனவில்கினையாதவன் பூதலம்புகழ்சற்சனன்
பொற்பமருமளகேசமன்னுநிமன்னவன் புந்திமகிழ்வாய்க்கேட்கவே
புகழ்பெருகுகீழ்த்திசையையாள்விஜயமார்த்தாண்ட பூபாலனெழுதுகிருபம்
கங்கையொடுதெய்வாலயங்கண்மிகுதோத்திரக் காசிமாநகரிருந்து
கண்டாரகண்டகனெனும்பேர்தரித்தவன் கலைமகளும்வாணிசிலையும்
கர்த்தர்மூவருமமரர்அறவர்களுமற்றுளர் களிக்கும்பதார்த்தஞ்செயுங்
கைதேர்ந்தவல்லமையனென அவசமானவக் காரணத்தாலுமக்கே
எங்குமனம்விசமனதாசைபெறவதிரசமும் இயல்புறச்செய்துவித்தே
எக்காலுமவனியிலையுமதன்பனென்றுநா னென்வழியேசிறியபரிசம்
எவினனிப்பாண்டம்நிறைவுறவிருக்கின்ற இன்பமுளவதிரசத்தை
இதயங்களித்துப்பொசித்தருளியின்னதென் றெழுதுவீர்விடையெனக்கே.

வசனம்.

சிவந்த தாமரை மலர்த்தடாகங்களும் வாசனைமிகுந்து வீசுங்கற்பக வனங்க
ளுஞ்சூழவும் எந்நாளிலுங் கழனிகளில் சேல்கெண்டை பாய்ந்துலாவவும் செல்வமி
குந்திருக்கும் அளகாபுரிபட்டணத்தையாளும் இராஜாதிராசன் இராஜப்ரபுடிகன்
சந்திர சூரியவம்சோத்தையவிற்பனனுமாகியும் சந்திர
சரதவிதரண சாம்ப்ராஜ்யனுமாகியும் உள்ள அதிகீர்த்திப்பிரதாப அ
ளைசடாபாரத்தில் தரித்தபரமேசுரனன்பனுமாகியும் உள்ள அதிகீர்த்திப்பிரதாப அ
ளகேந்திரமகாராஜனுக்கு கீழ்திசை யரசனாகிய விஜயமார்த்தாண்ட மகாராஜன்
எழுதியறிவிப்பதியாதெனில் திரிகர்த்தர்களுந் தவமுனிவர்களும் மயேஸ்வரி இல
ட்சுமி கலைமகளும் பொசித்து மனம்பூரிக்கத்தக்க பதார்த்தஞ்செய்யுங் கண்டார
கண்டனென்பவன் காசிமாநகரத்திருந் தென்னிடம் வந்திருப்பதால் அவனிடத்தி
லதிகருசிரம்பொருந்திய வதிரசங்கள்செய்து இப்பாண்டத்துள் வைத்திரு
க்கின்றேன் தாங்கள் மனக்களிப்போடு மிதனைத்திறந்து அதிரசங்களைப் பொசிப்
பதுமன்றி யானனுப்பியசிறிய காணிக்கைகளையுங் கைக்கொண்டு மறுவிடையெ
ழுதுவீராக, இங்ஙனம் விஜயமார்த்தாண்டன் சுபமஸ்தலிகிதம்.

இராஜன்சொல் விருத்தம்.

எழுதினவோலைக்கிப்போ திசையச்சந்திரிகையிட்டுச்
செழுமணிரத்தினங்கள் திரவியக்குப்பைகட்டி
அழகியசிவமுத்து மத்துடனின்னம்வேண்டும்
பழுதிலாப்பணிகள்பொன்னும் பரிவுடன்கொண்டுவாராய்.

வசனம்.

ஆ! ஆ! கேளாய்மந்திரியே யதிசீக்கிரமாகவோலைக்குச் சந்திரிகையிட்டுத்
திரவியப்பொக்கிஷத்திறந்து இரத்தினக்குப்பைகளும் மாணிக்கக்குப்பைகளும்
சிவமுத்துகளும் வேண்டியபொன்களையு மூட்டைகட்டுவா யமைச்சே.

துன்மதிமந்திரிசொல் விருத்தம்.

மன்னவாஅளகேசேந்திர மனமகிழ்ந்தேதுதிக்கப்
பொன்னுமாணிக்கரத்தினம் பொற்புறுமுத்துமாலை

மின்னிம்பணிகள்கோடி விலையிலாவலயம்தாங்கள்
சொன்னசொற்படியேமெத்த திரவியமெடுத்தேனையா.

வசனம்

கேளீர்விஜயமார்த் தாண்டபூபதியே தாங்களாக்ஞாபித்தபடியே வேண்டியதிரவியங்களெடுத்து வந்தேனையா.

இராஜன்சொல் விருத்தம்.

சொற்பகராமுன்னமேயம்பதுபோற்பாயுந் தூதர்களேயிப்பரிசோடோலைகொள்வீர், அற்புதமாச்செய்திருக்குமிக்குடத்தில் அதிரசந்தானிதைநீங்களாட்டிடாமல், பொற்பெருகுஞ்சிறியபண்டிமீதுவைத்துப் பொதிர்ப்புடனேசாக்ரதையோடசைந்திடாமல், நற்படியாப்பயபக்தியோடுமின்னே நடந்திடுவீரளகேசநகர்தனக்கே.

வசனம்.

கேளீர்தூதவரே இதோநான் கொடுக்கப்பட்ட வோலையையும் வெகுமதிகளையும் வாங்கிக்கொண்டு இந்தக்குடத்திலிருப்பது அதிரசம்இதையோர்சிறியபண்டியின்மீதுவைத்துக் கொண்டுமுன்னும் பின்னுமாகசாக்கிரதையுடன்பாண்டமசையாமலும் பயபக்தியாக அளகேசபுரிக்கு கொண்டுபோகவேண்டும்.

இதுவுமது.

அளகேசநகர்சென்றபிறகுநீங்க ளமைச்சருமற்றெவர்கள்கையிலீந்திடாமல், வளம்பெறுமக்கொற்றவன்செங்கரமேதந்து மறுவிடையும்வாங்கியேபின்னடக்குஞ்செய்தி, உளவுகளெலாமறிந்துவிரைவதாக ஓடியேவந்தென்னதெனவுரைப்பீரானல், களங்கமின்றிப்பொன்னுமணிகோடியாடைகனத்ததந்திடுவேனதெல்லாங்கதித்திடவே,

வசனம்.

அளகேசபுரிக்குச் சேர்ந்தபிறகு மந்திரிகளென்றாலு மற்றவரசர்களென்றாலும்இவ்வெகுமகளையு மதிரசக்குடத்தையும் கொடுக்காமல் அளகேசன்வசமே கொடுத்து நடக்கும்வரலாறுகளை யறிந்துமறுவுத்தரவு பெற்றுக்கொண்டு வெகுசாக்கிரதையாக வந்துசேர்வீரானல் வேண்டியவெகுமதிகளைப் பெறுவீர்கள்தூதர்களே.

௧. தூதன் அதிவுக்கிரசிங்கன்சொல் விருத்தம்.

தாயகாவிவகள்கொண்டுசண்டமாருதம்போற்பாய்ந்து
நேயமாவளகேசேந்திர நிருபனூர்கரமேதந்து
தூயநல்விடையும்பெற்றுச் சொல்லுவாகளுமறிந்திச்
சாயரைக்குள்வந்து தம்பதம்சேர்வோமன்றே.

வசனம்.

சரணம் சரணம் இராஜாதிராஜனே இவைகளைக்கொண்டு காற்றினிலு மதிசவேகமாய்ப்பறந்து அளகேசபட்டணஞ்சேர்த்து அம்மகாராஜன்வசமிவைகளைக்கொடுத்து நடக்குங் காரணங்களையறிந்து சாயங்காலத்திற்குள் மறுசெய்திவந்து சொல்லுவோமையனே.

௨. தூதன் பிரசண்டமாருதன்சொல் விருத்தம்.

அதியுக்ரசிங்கனோம் மரசனூர்தந்தவோலை
நிதியொடுமதிரசங்கள் நிரப்பியகுடமுங்கொண்டே

பதியுறும்பண்டியின்மேற் பக்குவமாகவைத்தேன்
றதியளகாபுரிக்குச் சடுதியாய்ச்செல்லுவோமே.

வசனம்.

கேளடா அதியுக்கிரசிங்கனே நமதுவேந்தன் கொடுத்தவெகுமதியையும் அதிரசக்குடத்தையும் இதோ இந்தச் சிறியபண்டியின் மீதுவைத்தேன் இனிதாமதமில்லாமல் அளகாபுரிநோக்கிப் போகலாம் வருவாயடா அதியுக்ரசிங்கா.

தரு. இராகம் - தோடி. தாளம் - ரூபகம்.

அதி. அதிரசக்குடங்கொண்டே யளகேசபுரிக்குச்செல்லலாம்
எதிர்விடைவாங்கிமற்றசங் கதியும்
விதயறிந்துவேந்தன்றந்த நிதியும் (அதி)

பிர. அரிதமுடனேபண்டியின்சக்கரந் துஞ்சலின்றித் தள்ளடா
புரவலனிதைவெருபயத் துடன்
அறிக்கையிட்டார்தெரியாயோவென் னுடன் (அரி)

அதி. ரத்தினமிழைத்தமார்பதக்கத்தோடுமுத்து மாலையும் - நல்ல
நாகரீகமுள்ளதங்கக்கடகத்தின்மணிகள் ஓலையும்
மெத்தெனமாணிக்கமூட்டைகளும் வேண
வெகுமதியளகேசனன்பு பூண (அதி)

பிர. பட்டணத்தெருக்களாலயவீதிகண்முற்றிலுங்கடந் தோம் - இந்த
பருத்தவனத்துள்நெருங்கிடுங்கொடிப்பாதையைத்தொடர்ந்தோம்
வட்டநெடும்பாறைமீதிற்செந்நாய் களும்
வாய்விட்டெதிர்கூவுதேபுலி களும் (அரி)

அதி. இத்தனையாசைதருமதிரசத்தைச்செய்ததே வீரம் - இதை
எந்தலாமளகேசன்பெற்சித்திட்டாலாருமே சூரம்
சித்தம்பிர்மிக்குதேயிம்மணம் வீசிட
சேஷனாலாகாதிதின்சுவை பேசிட (அதி)

பிர. சிவிங்கிநிலத்தைவருடியேமண்ணைத்தூவுது வாராய் - ஆச்ச.
சிங்கம்பெண்ணைத்தேடிச்சினத்துச்சீறியேகெற்சிக்குதுபாராய்
சவியுள்கலைமான்களின் கூட்டமும்
தானேவானம்பாடியிசைக்கும் பாட்டமும் (அரி)

அதி. அளகேசபுரிப்பட்டணச்சமீபமாச்சுது பாராய் - அதி
லழகாய்த்தோற்றுமரமனையுமன்னன்வாழ்வதே சீராய்
களங்கமில்லாதிவையாவுங்கொடுப் போம்
கடுகவேவிடைவாங்கிப்பின்னடப் போம் (அதி)

தூதர்சொல் விருத்தம்.

வெற்றிகொள்சேர்வைக்காரா விஜயமாநகரமாளுங்
கொற்றவன்றூதர்யாங்கள் குடமெனிலதிரசந்தான்
உற்றவிப்பரிசிலோடும் ஒலையும்மெழுதித்தந்தார்
குற்றமில்லாமல்வந்தோம் கொலுமுன்னமேகவேண்டும்.

வசனம்.

ஐயா சேருவையே நாங்களிருப்பது விஜயமாநகரம் எங்கள்மன்னவனாகிய விஜயமார்த்தாண்டன் உங்களரசனுக்கு வெகுமதிகளும் இந்தப்பானை யதிரசமுங்கொடுத்து ஓலையும்மெழுதிக்கொடுத்தார் ஆதலால் கொலுவுச்சமுகம்போகவுத்தரவுகொடுப்பாய் சேருவையே.

சேருவைசொல் விருத்தம்.

தூதரேயெங்கள்வேந்தன் றுணையடிசேவைகாணப்
பூதலத்தெவர்வந்தாலும் புரவலன்முதலாமந்திரி
போதவாதித்தனன்றிப்போகவொண்ணாதவர்க்கே
ஓதிநான்குறுகுமட்டு முவகையாய்க்காத்திடீரே.

வசனம்.

ஐயா தூதர்களே யெங்களரசனார் சேவைகாணவேண்டி யெவர்கள்வந்தபோதிலும் முதலாமந்திரி போதவாதித்த னுத்தர வில்லாமல் போகலாகாது ஆதலால் நானவர்க் கறிக்கையிட்டு வரும்பரியந்தங் காத்திருப்பீர் தூதரே.

சேருவைசொல் விருத்தம்.

காவலன்முதலமைச்சே கழல்பணிந்தேதுதித்தேன்
ஆவலாய்விஜயதேச மாளுமன்னவனார்தூதர்
மாவலாபரிசமோலை வண்ணதிரசமென்பாண்டம்
தாவியேகொண்டுவந்தார் சங்கதியறிகுவீரே.

வசனம்.

சூரனமையா முதலாமந்திரியே விஜயமாநகரத்திலிருந்து வோலையும் வெகுமதியும் அதிரசப்பாண்டமுந் தூதர்கொண்டுவந்திருக்கின்றனையா.

போதவாதித்தன்சொல் வசனம்.

நல்லது பார்ப்போம் வரச்சொல்வாய் சேருவையே.

விருத்தம்.

வந்ததூதவரேகேளீர் வளம்பெறுமெங்களண்ணல்
விந்தையாய்ச்சிலகாரியங்கள் விசாரணைசெய்வதாலே
அந்தமாயுங்கள்வேந்த னனுப்பியவோலைதாரீர்
பந்தமதாகத்தந்து பதிலுரைசொல்லுவேனே.

வசனம்.

கேளீர்விஜயராஜன் தூதர்களே எங்கள்மகாராஜன்கொலுவில் ஏதோசிலகாரியங்கள் விசாரித்திருக்கின்றார் நீங்கள்கொண்டுவந்த வோலையைமாத்திரங் கொடுப்பீர் அதைமகாராஜனிடந்தந்து பதில்மொழியுடனே வந்துசொல்லுவேன் தூதர்களே.

பிரசண்டமாருதன்சொல் வஞ்சித்துறை.

எங்கள்மன்னவனு, ரிங்கனுப்பிட்ட
துங்கமாம்வோலை, செங்கையிற்கொள்வீர்.

பொது விருத்தம்.

அன்னையாந்தூர்க்கைசொன்ன வம்பொடுபொறிகளொன்று
தன்னுளமெண்ணித்தூதர் தங்களைவெளியிருத்தி

பின்னுமவ்வோலைவாங்கிப் பிரித்ததுமுத்திரையுடைத்துப்
பன்னுவதறிந்தேயுத்தி பண்ணுவானென்னுவானே.

வசனம்.

அகோ அதெப்படியென்றால் விஜயமார்த்தாண்ட னனுப்பினவெகுமதி அதிரசக்குடத்தையும் போதவாதித்தன்கண்டு தூர்க்கையம்மன் சொற்படியேவாய்த்ததென்று தன்மனதிலெண்ணிவந்த வோலையைமாத்திரம் வாங்கிக்கொண்டு தூதரைவெளியிலிருத்தி யோலையைப்பிரித்து தான்வாசித்து அதிரசக்குடத்தைத்திறக்கும் உபாயங்களைச் சொல்லுவோமே.

☞ இவ்விடத்தில் விஜயராஜனனுப்பினவோலையை
போதவாதித்தன்வாசிக்க வேண்டியது.

விருத்தம்.

மாட்சியுமேன்மையோடு மனமகிழ்ந்திடவறைந்தே
சூட்சமேவைத்துப்பாண்டத் தொட்டவருடனேமாளா
தாழ்ச்சிசெய்தேவிவிட்ட தரியலன்விஜயராஜன்
ஆட்சியேநடப்பதில்லை அம்பிகைபாதம்போற்றி.

வசனம்.

சிவசிவா மானமழு சனார்ப்புஜனே கொடும்பாதகனாகிய விஜயராஜன் ஓலைவெகுஅன்புடனெழுதி அதிரசக்குடத்தி லம்புப்பொறியடக்கி சூக்ஷமாய்வாயைமூடிவிட்டுத்திறந்தவுடனே இறப்பதற்கு உபாயஞ்செய்து வேண்டியவெகுமதிகளையுமனுப்பினன் அன்னையாகிய தூர்க்கையருளிருக்க அவன் எண்ணப்பிரகாரம் நடக்குமா என்றும் நடப்பதில்லையே.

விருத்தம்.

சொற்றவருப்புயபலசேருவையேவாராய் சூதுவேரசனியம்நான்சொல்லக்கேளாய், குற்றம்வரத்தூதர்களுங்கொண்டுவந்த குடந்தானிலுயிர்கவரும்பொறிகளம்பே, கொற்றவனாரிதைத்திறந்தாலவ்வுள்ளோரும் கூற்றுவனார்சேர்வதற்குக்குறையொன்றில்லை, உற்றிடுமிச்சதி வேயோருபாயம்ஒதிடுவேன்வினாவுடனீயோடுவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் புஜபலசேருவையே இதோநான்சொல்லும் இரகசியத்தையுன்மனதில்வைத்திருப்பாய் அதென்னெனில் தூதர்கள் கொண்டுவந்த அதிரசக்குடத்தினுள் பொறியம்புகளடக்கித் திறப்பவர்களிறக்க உபாயஞ்செய்திருக்கின்றது ஆதலாலிதற்கோருபாயஞ்சொல்லுகின்றேன் கேளாய் சேருவையே.

இதுவுமது விருத்தம்.

ஓடிவாய்வெகுதூரிதமுன்புசீர்மை யுத்யோகஞ்செய்துகொலைப்பாவனை, கேடுடையோனிச்சிறையிலிருக்கின்றானக் கீழ்மையுளோன்றனையழைப்பாயவனிந்தச், சாடியேகொல்பொறிப்பாண்டத்தின்வாய்தனைத்தான் திறக்கச்செய்திடலாம்பொறிகளெங்கும், நாடிடுமேயானகயிறுல்நாமும்நீயும் நற்பதிக்குட்பார்த்திருப்போம்நடக்குந்தீதே.

வசனம்.

நீயதிகசீக்கிரமாகவோடிக் கொலைப்பாதகனுஞ் சிறைக்குள்ளிருப்பவனை ந

னழைத்தேனென் றழைத்துவருவாய் அவனுலிப்பாண்டத்தின் வாய்மூடிற்றக்க ஆக்ஞாபித்து நீயும்நானுமிந்த அரமனைக்குளிருந்துகொண்டு பார்க்கலாஞ் சேருவையே.

சேருவைசொல் விருத்தம்.

மந்த்ரிகள்தலைவாதாங்கள் வழுத்தியவந்தரங்கம்
சிந்தையுள்வைத்துக்கொண்டே செப்பியபடிநடப்பேன்
பந்தமாஞ்சிறையில்வாழும் பாவியைவெகுசுருக்காய்ச்
சந்தமதாயழைத்தே சந்நிதியில்வருவேனையா.

வசனம்.

சரணமையாமந்திரியே புத்தி புத்தி தாங்கள்சொன்ன இரகசியங்களை மனதில்வைத்துக் கொண்டேன் இக்ஷணமேயோடி சிறையிலிருக்கும் சிறைச்சாலையனையழைத்தோடிவருவேனையனே.

இதுவுமது விருத்தம்

திரசிறைச்சாலைமேவும் சீர்மையுத்யோகஸ்தோனே
புரவலன்முதலாமந்திரி போதவாதித்தனுன்னை
வரவுரைத்திட்டார்மெய்நீ வாழ்ந்திடும்பதியைவிட்டு
சரசனென்றென்றன்பின்னே சாக்ரதையாகவாராய்.

வசனம்.

ஆமையா சிறைச்சாலைக்குள்ளிருப்பவரே நமதுமகாராஜன் முதலாமந்திரி போதவாதித்தன் உன்னைவெகுசுருக்கா யழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார் தாமதஞ்செய்யாமலெழுந்தோடி வாரும்பிள்ளாய்.

சிறைச்சாலையன்சொல் கொச்சகம்.

இத்தனைநாளென்னையிங்கு சிறையடைத்துவைக்க
பித்தனைப்போலேவிழித்துப் பேயெனைப்போலுந்திகைத்தேன்
சித்தம்வைத்துமன்னிக்கமந்திரி செப்பியிதமாயழைக்க
மெத்தமனஞ்சந்தோஷம் சேருவைய்யசரணம்.

வசனம்.

சரணம் சரணமையா சேருவையே அடியேன்செய்த தப்பிதத்திற்கு நெடுநாளாயிந்தச் சிறைக்குளடைபட்டுப்பித்தனைப்போல் பிணத்திப்பேயனைப்போல் நடுநடுங்கித் திகைலடைந்திருந்த சமையம் முதலாமந்திரிக்கு சித்தம்பிறந்தழைத்தகாரியமேதோ வோடிவருகின்றேன் சேருவையே.

தரு இராகம் - கருட்டி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஏனழைத்தாரோ - மந்திரியெனை - ஏனழைத்தாரோ.

அநுபல்லவி.

நானம்வரவேயின்னாள்மட்டுஞ்சிறையில்நானிருந்தகமெலிந்தேனிவ்வனையில் (ஏன)

சரணங்கள்.

இஷ்டம்வைத்தாரோ - அடியானை - யேவினைத்தாரோ
கஷ்டப்படத்தொழுவினின் மாட்டிடவோ
கஷ்டப்படக்கைவிலங்கு பூட்டிடவோ (ஏன)

உயிர்வதைத்திடவோ - அல்லதென் - றுடலைச்சதைத்திடவோ
நியமதாநகர்விட்டுவெளிப் போக
இயலுமாப்பாரோவென்னமோவன் பாக (ஏன)
சூலபாணியனே - கங்கைமதிச் - சூடும்வேணியனே
ஞாலமீதிலெனைமந்திரியா தொன்றும்
கோலஞ்செய்யாமலருள்புரிவா யென்றும் (ஏன)

விருத்தம்.

அடியவன்செய்தகுற்ற வக்ரமத்திந்நாண்மட்டும்
இடருறுஞ்சிறைச்சாலைக்குள் ளிருந்தெனதகமெலிந்தே
உடல்நடுநடுங்கிருக்க வுயிர்விடாதொன்றுநேரம்
வடிவுடையமைச்சேதங்கள் மலரடிசரணமையா.

வசனம்.

சரணமையா முதலாமந்திரியே இவ்வேழைசெய்த குற்றத்திற் கிந்நாள்மட்டுஞ் சிறையடைத்திருந்தீர் இன்று சித்தமிரங்கி யழைத்த காரணமேதோ விடைதந்தருளும் ஐயா.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

பாவவினைக்குள்ளாகிச்சிறையிருந்தோய்பரமனருளுனக்குப்பலித்ததப்பா,
ஆவலுடன்மன்னவனுருனக்குவேண்டு மாடையணிபுயக்கிரீடமன்புற்றீய்ந்தார்,
மாவலமாயிவைகளைநீயலங்கரித்து வாசலெதிர்சென்றவிடம்வந்திருக்கும்,மேவு
மம்பரிசுகளைப்பெறவுப்பாண்ட மேல்திறந்துபார்த்திதெனவிளம்புவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் சீர்மையுத்தியோகஸ்தனே உனக்குபகவான் கடாக்ஷம் நேரிட்டது நீசெய்த கொலைக்குற்றத்திற்கு யாதொரு தண்டனையில்லை நமதன கேந்திர மகாராஜனுன்மீதன்புவைத்து இராஜா லங்கரிக்கும் வஸ்திராபரணமுனக்குத்தந்தார் இதோஇவைகளை நீயலங்கரித்துக் கொள்வதுமல்லாமல் வாசலெதிரில் வந்திருக்கும் வெகுமதிகளை நீயேபெற்றுக் கொண்டு பானைக்குள்ளிருப்பது என்னமோ அதையுமறிந்து போவாய் சீர்மையுத்தியோகஸ்தனே.

சிறைச்சாலையன்சொல் வஞ்சித்துறை.

பொற்பதஞ்சரணம் சற்சனவமைச்சே
சொற்படிநடந்தே விற்பனுசெய்வேன்.

பிரசண்டமாருதன்சொல் வஞ்சித்துறை.

பொன்முடித்தலைவா மின்கதிர்க்கொழுந்தே,
நன்மைசேரரசே உன்பதஞ்சரணம்.

சிறைச்சாலையன்சொல் விருத்தம்.

விஜயமாநகரவேந்தன் விட்டனுப்பவோவாழி
வசையிலாதிப்பாண்டத்துள் மனைநிடும்வாசங்கண்டே
இசையுதென்மனதும்வாயு மிசைதிறந்தின்னதென்றே
நிசமறிந்துங்களுக்கு நிகழ்த்துவேன்காத்திடீரே.

பொது விருத்தம்.

பரிவுடன்திறந்தபோதே படபடென்றம்புகோடி
பொரிகளுமிகக்கிளம்பிப் புறமுமுன்பாயிருந்த

தரியலன் றூதரோடு தாவியசிறையோனுக்கும்
உருவிடத்தேகமெங்கும் உயிரிறந்தேமறந்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரமாக விஜயராஜனனுப்பிவைத்த அதிரசக்குடத்தை சிறைச்சாலையன்றிறந்தவுடனே படபடென்று பொரியம்புகள்ளெம்பி சுற்றிநின்ற தூதர்களும் சிறைச்சாலையனுமிறந்து விட்டதையும்பார்த்திருந்த சேருவைக்குப் போதவாதித்தன் சொல்வதும் போசனசாலைப்பெண்கள் புதியநெற்சாதம் சமைக்கின்ற விதமுங்காண்க.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

கட்டளைதவருச்சேர்வைக் காரனேவிஜயராஜன்
விட்டபாண்டந்திறக்க விளங்கியதூதரோடும்
பொட்டெனச்சிறையோன்மாண்ட புள்ளுவங்கண்டிட்டாயா
திட்டமாயிவர்தமக்குச் செய்தொழினடத்திடாயே.

வசனம்.

ஆ! ஆ! வீரசேருவையே பகைவனாகிய விஜயராஜ னனுப்பிவைத்த அதிரசக்குடத்தை சிறைச்சாலையன் திறந்ததும் வந்ததூதருடன் மூடி நீடிக்கக்கிளம்பிய பொறிகளாலவர்களிறந்ததும் பார்த்தையல்லவோ இனி இவர்களுக்குச் செய்யவேண்டிய கர்மங்களை முடிக்க எத்தனிப்பாய் சேருவையே.

மூந்தபோசனசாலைப்பெண்சொல் விருத்தம்.

எழில்பெறும்வதனமுற்ற வெண்தருந்தங்கையேகேள்
பொழுதுபோவதினுலிந்தப் புதுமையார்தானியத்தைப்
பழுதின்றிக்குத்திவெள்ளிப் பாண்டத்துட்சமைக்கமுன்பித்
தொழிலிருவோருங்கூடிச் சுருக்குடன்செய்தனன்றே.

வசனம்.

அடி தங்கையே நமதுமகாராஜ னனுப்பிவைத்த இந்தப் பாரிசாத நெல்லைச் சமைத்துவைப்பதற்கு நீயும் நானுமாய் உரலிலிட்டு குத்தலாம் வருவாயடி தங்கையே.

இளையபோசனசாலைப்பெண்சொல் விருத்தம்.

தமக்கையேயிதுதானல்ல சமையமுமானதாலே
நமக்குமன்னவன்மகிழ்ந்து நகைநிதிபணிகளீவார்
அமைக்குமிவ்வுரலிற்குத்த அசாக்கிரதையாகிடாமல்
சமைக்கவும்வெகுசுருக்காய்த் தானியமெடுத்திட்டேனே.

வசனம்.

ஆ! ஆ! கேளாய் சகோதரியே நாமுன்பாக இந்நெல்லைக் குத்தி சமைத்து வைப்போமானால் வேண்டியவெகுமதிகள் மகாராஜன் கொடுப்பாரல்லவோ சகோதரியே.

கண்ணிகள். இராகம் - ஆரபி. தாளம் - ஆதி.

மூ. அரசனனுப்பிவைத்தஅரியநெற்பாரிசாதம்
உரலிற்குத்துவம்வாராய் தங்கையே

இ. நரபதிமகிழ்ந்திடாறுபோகாமன்மெதுவாய்
விளாவாயுலக்கைகொண்டேன் சீராய்
மூ. தங்கையேநீசுருக்காய்த்தானியஞ்சிதருமல்
இங்கென்னுடன்குத்துவாய் நீயே
இ. சங்கைநம்மீதரசன்சாற்றுமலேபொசிக்கச்
செங்கையுலக்கைவிட்டுப் போடாய்
மூ. இந்தநெற்கண்மணம்போலெங்குநான்கண்டதில்லை
சிந்தைபிர்மைகொள்ளுதே பாராய்
இ. துல்லியமாய்விட்டதுநெல்லுமிகளெல்லாம்போய்
வல்லவியேபுடைப்போம் வாராய்

மூத்தபோசனசாலைப்பெண்சொல் விருத்தம்.

செங்கையின்முறம்நீகொண்டு சீக்கிரமாய்ப்புடைத்தே
இங்கென்றன்வசமேதந்தா லியாதொருகல்லில்லாமல்
சங்கையில்லாதசுத்த சலத்தினில்மிகவுமாட்டித்
தங்கையேயிதைச்சமைப்போந் தாயகன்மகிழவின்றே.

வசனம்.

கேளாயடி தங்கையே நாமிப்போது குத்தினநெல்லை முறத்தினிலிட்டுகல்லில்லாமல் புடைத்து சுத்தசலத்தினிலாட்டி உடனே சமைத்திடலாமடி தங்கையே.

தரு. இராகம் - பைரவி. ஜம்பை - தாளம்.

இ. புடைத்தனன்பாராய் புடைத்தனன்பாராய்
கொடுத்தனனிதைக்கொள்ளுந்திடத்துடன்சீராய்
மூ வீசிடும்வாசம்மிகமனநேசம்
காசினிமேலிதைக்காணப்பிரயாசம்
இ திருமகள்வாணிசிவையிதைப்பேணிப்
பெருமையுடன்பொசித்தேபேரின்பங்கொள்ளுவார்
மூ நரபதிபோஜன்நமதளகேசன்
புரவலனிதையுண்டாலொருகுறைவில்லை
இ மன்னவனமக்குமனமகிழ்ந்திதற்கே
மின்னிடும்வெகுபணிவேண்டியதீவார்
மூ ததியிதுகாலஞ்சமைத்திடச்சீலன்
கதிரவன்மறைந்தனன்கன்னியேவாராய்.

மூத்தபெண்சொல் விருத்தம்.

சந்திரவதனம்பூண்ட தங்கையேசொல்லக்கேளாய்
மூர்த்தியேசமைக்கும்வேலை முடிக்கலாம்அளகராஜன்
வந்திடாததற்குமுன்னம் வாருடனேசமைப்பாய்
விந்தையாய்த்தானிதங்கள் விளாவுடனுன்செய்வேனே.

வசனம்.

அடி தங்கையே பாரிசாத நெல்லரிசியை சமைக்கும்வேலையை நீ நடப்பிப்பாய் அதுவருகிற் தானிதவேலைகளை நான்செய்து வருகின்றேனடி தங்கையே.

இளையவள்சொல் விருத்தம்

சற்றிடும்பாரிசாதஞ் சமைத்தனனதற்குநன்றாய்
ஏற்றதாளிதமும்வேண்டு மின்புறும்பலகாரங்கள்
ஆற்றலாய்முடிந்ததேநம் மரசனருளங்களித்துச்
சீற்றமில்லாமல்வேண்டுந் திரவியந்தமக்கீவாரே.

வசனம்.

கேளாய் தமக்கையே பாரிசாதநெல்லைச் சமைத்து அதற்குகந்த தாளிதங்களு முடித்திருக்கின்றதே இனிமகாராஜன் பொசித்துவேண்டிய வெகுமதிகளளிப்பா ரல்லவோ.

பொது விருத்தம்.

அரசனுமந்த்ரிமாரு மந்தணர்பெரியோர்யாரும்
வரிசையாய்த்தங்கள்தங்கள் வாழ்பதிசென்றபின்னர்
கரியமால்தங்கையாமுக் கண்ணியாள்நேற்றுரைத்த
வரும்வினைக்காகப்போத வாதித்தனெண்ணுவானே.

வசனம்.

அகோ அதெப்படியென்றால் பொழுதுபோனதால் மகாராஜன் கொலுக்கலைந்து தன்வளவிற்கு வந்துவிட்டபிறகு பொதவாதித்தனுக்குத் துர்க்கையம்மனேற்றிரவினில் சொன்னதுன்பங்களில் இராஜன் போசனம் பொசிக்கா முன்னம்போனதும் முதலாம் சாமத்தில் கடிக்கவந்த பாம்பைத்தடுத்து வெட்டினவகையுஞ் சொல்லுவோமே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

இன்றையநாளிரவினிலும்பகலும்வேந்துக் கெடுக்கவருமென்றன்னை இசைத்தவாறே, கொன்றிடவேயதிரசந்தாழியினிரப்பிக் குத்திரமாய்விஜயபுரிக்கொற்றனேவ, நன்றாட்னென்னரசனுக்கேயறிவிக்காமல் நானதையுபாயமுடனசித்துவிட்டேன், இன்றிடன்னந்தனில்விடம்போக்கிடமுற்சாமம் தீண்டவரும்பாம்பை வெட்டச்செல்லுவேனே.

வசனம்.

சந்திர சேகரனாகிய பரமேஸ்வரா இன்றுபகலிலும் இரவிலும் எனதரசனாகிய அளகேந்திர பூபதிக்கு வரப்பட்ட துன்பங்களனைத்தையும் முக்கண்ணியாகிய துர்க்கையம்ம னெனக்குச் சொல்லவும் அதேபிரகாரம் துட்டனாகிய விஜயராஜன் பாண்டத்து ளதிரசங்கள் நிரப்பிப் பொறியம்பு மடக்கி அனுப்பினான் அதைமகாராஜனுக் கறிக்கையிடாமல் இரகசியமாய்த் தடுத்துவிட்டேன் இனி புதியநெற்சாதம் பொசிப்பதையும் இராஜன் நித்திரைசெய்யும் வேளையில் சற்பமிறங்கிக் கடிப்பதையுந் தடுக்கப்பேவேணுக.

தரு. இராகம் – மோகனம். தாளம் – ஆதி.

பல்லவி.

அரசன்வாழுமனைக்குச்செல்வேனே – அவர்க் – காருமிடுக்கண்களைவெல்வேனே

அநுபல்லவி.

தருமநெறிமறவாச்சத்தியவிரத சீலன்
தஞ்சமென்றோராகாக்குந்தயையுள்ளவனு கூலன்

தாரணிமீதினில்பேர்வளர் போஜன்
நீரணிசங்கரனோர்கழல் நேசன்
தரியலர்கெடுகிடென்றதிர்ந்திடு சிங்கன்
பிரியமிறையரசர்செலுத்திடுந் துங்கன்
தழைக்குமுப்பத்திரண்டறங் கையும்
செழிக்குமளகாபுரியினையாட் செயும் (அரச)

சரணங்கள்.

அந்நாளில்மனோசபுரியான் – வேந்த – னரசாட்சியைக்கடந்தேங்குறை யால்
மூன்றேரொட்டகஞ்சென்றஉருவால் – இளையர் – மூவருடனேயானும்பரிவால்
சின்னங்களின்னதென்றேதேர்ந்தங்குரைத்துவந்தோம்
தேடும்வணிகன்கேட்கச்சிந்தைமகிழ்வாய்நவின்றோம்
செப்பியவொட்டகக்குறிப்பினை யோதலால்
சற்பனைக்கள்வனென்றெப்பிடப் பேதமால்
நீதறவளகேசராஜன் சமுகம்வர
நீதியமைச்சர்களென்றேதமுற்றன் புறச்
சேவிட்டனெங்களைப்பாலனென்று தரிக்கும்
ஞாலத்துளோர்தர்மமாவெனசொற் றரிக்கும் (அரச)
எள்ளளவேனுங்குறையில்லாமல் – எங்க – ளெந்தைபோலாதரித்த தல்லாமல்
தெள்ளுநீதிக்குப்பிழைசொல்லாமல் – வேறு – தேசத்தோர்களரசைவெல்லாமல்
நள்ளிரவிற்பகலும்நான்காக்கும் வேளையில்
நகர்வலஞ்சுற்றியேபின்னுடைவட திசையில்
நாரணிதுர்க்கையுதாரணி யழுதிட
காரணமேதெனச்சீறடிதொழு திட
நரபதிதனக்குவருஞ்சதிருட் சியை
அறிவித்தெனக்குப்புனாயறத்தாட் சியை
நாயகியுரைத்துநேயருடன் இட
ஞாயவரசனுரபாயமேபரந் திட (அரச)
குடத்திலதிரசம்நிரப்பி – அதிற் – கொல்லவம்புப்பொறியரப்பி
இட்ராகவிஜயனனுப்பி – வைத்த – ஏதமணுகிடாமல்தப்பி
படிமேல்வேந்தனிருக்கப்பக்குவமாய்த்தடுத் தேன்
பகவதிதுர்க்கையாள்சொற்படிசுர்வாட்கையெடுத்தே
பண்புடன்கோனனமுண்ணிட விடமே
முன்பிடியாகிடும்பின்னையும் நிஜமே
பத்தினியுடனமனுத்தமன்றூங்கை யில்
சத்துருவரவமேசுற்றிமுன்சாமத் தில்
படம்விடம்நிரப்பியேகடித்திடுஞ்சதைப் பேன்
நடமிடும்பிசையடியினைதுதிப் பேன் (அரச)

விருத்தம்.

இன்றிரவிற்குவேந்த னிடரினிலிறப்பானென்றே
நன்றுடன்துர்க்கையம்மன் நவின்றவப்படியேசாதம்

தின்றிடாமுன்னஞ்சென்று செங்கைகொள்முதலாமன்னம்
நின்றுநான்வாங்கிக்கொள்வே னிருபனூர்பிழைப்பதற்கே.

வசனம்.

ஆதிகௌரி அர்க்கையே இதோ அரசனூர்வாழும் சித்திர அரண்மனை யருகில்வந்தேன் இனி வேந்தன் அன்னம் பொசிக்கா முன்னம்போவேனுக.

பொதுவசனம்.

அகோ அதெப்படி யென்றால் போதவாதித்த மந்திரி இராஜன் அரண்மனைக்குச் சமீபம் போகின்றசமயம் மகாராஜனும் போஜனம்பொசிக்க ஆரம்பிக்கின்ற விதங்காண்க.

இராஜன்சொல் வஞ்சித்துறை.

வாசனையெங்கும், வீசிடுமன்னம், ஆசையதாக, நேசமாயுண்பேன்

போதவாதித்தன்சொல் விருத்தம்.

சிந்துசூழுலகோர்போற்றும் திகழ்பெருமணியேபோற்றி
எந்தைபோற்பாலகர்க்கு மெழின்முடித்தலைவாபோற்றி
இந்தமுன்சாமக்காவ லிருக்கின்றதென்னதாகும்
வந்தென்மாளிகையைப்பார்க்க மற்றொன்றுமில்லைவேந்தே.

வசனம்.

கடல்சூழ்ந்த பூமண்டலத்தினில் கீர்த்திபெற்றுவரு மன்னவா சரணம் முதலாஞ்சாமக்காவ லடியேனுடையதாகையால் மாளிகையைப் பார்க்கவந்தேன் மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

சந்தோஷமுதலாமந்த்ரி சாதம்நானருந்தும்வேளை
வந்ததாலின்றுகாலை வைகுந்தமுதலியாரும்
தந்தநெற்பாரிசாதஞ் சமையலும்பலகாரங்கள்
விந்தையாயென்றனோடு மென்மையாயுண்ணுவாயே.

வசனம்.

ஆ! ஆ! மகாசந்தோஷம் அருமையாகிய மந்திரி போதவாதித்தா இன்று காலை வைகுந்தமுதலியார் கொண்டுவந்த பாரிசாதநெற்சாதமும் அதற்குகந்ததாளிதங்களு மிருப்பதால் நீயுமென்னுடன் பொசித்துப் போவாய்மந்திரி.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

உன்னைவேகுறைவொன்றில்லை உத்தமவரசர்கோவே
எண்ணுமிவ்வேளைமீது இதையமேகளித்திருந்தால்
வண்ணமேபோதும்போதும் மன்னவாவுமதுசித்தம்
திண்ணமாய்நகரைசுற்றச் சென்றிடவிடைகொடுமே.

வசனம்.

சரணம் சரணம் மன்னனே அடியேன்தங்களுடன் பொசிக்கவேண்டுமா இவ்வேளைமீது மாறாத அன்பிருப்பதேபோதும் பட்டணஞ்சுற்றிப் பார்க்கவிடைதந்தருளுமையா.

இராசன்சொல் விருத்தம்.

ஆகத்திற்குயிராயெந்த னரசியல்நீதிசொல்லும்
வாகுளமுதலமைச்சே மறுமொழிபேசவேண்டாம்

பாகுடனெய்மணக்கும் பலபொரிகறிவகைகள்பாராய்
தாகமாயென்றனோடு சந்தோஷமாயுண்பாயே.

வசனம்.

உடலுக் குயிரைப்போலும் அரசநீதிசொல்லு மந்திரியே இதோநெய்மணங்கமழமிகுந்து கமகமவென்று பலவகைபதார்த்தத்துடனிருக்கும்சாதம்பொசிப்பதற்கு மறுவார்த்தை சொல்லாமல் உட்காருவாய் போதவாதித்தா.

இராஜன்சொல் விருத்தம்.

மன்னவாதவித்துரைத்தால் மனதினிற்கிலேசங்கொள்வீர்
அன்னமுற்பிடிசாதத்தை யடியனுக்கீந்திராகில்
பன்னருங்கோடிகோடி பாக்கியமதுவேபோதும்
பின்னமொன்றில்லையையா யேதைக்குத்தந்திடுமே.

வசனம்.

கேளீரண்ணலே அடியேன்தங்களுடன் பொசிக்கவேண்டுமென்றுசொல்லவும் எனதுபாக்கியந்தான் இனிதடுத்துப்பேசினாலுங் கோபங்கொள்வீர் தேவரீர் சித்தத்தின்படியே கைக்கொண்டிருக்கும் முதற்பிடிசாதம் கொடுப்பீராகில் அநந்தங்கோடி பாக்கியம் மன்னவா.

இராஜன்சொல் வஞ்சித்துறை.

சொற்படியன்னம், முற்பிடியீந்தேன்
விற்பனமந்திரி, பொற்புடன்கொள்வாய்.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

விரைபெறுமலர்கடுவீ விந்தைசேரிருதாளென்தன்
சிரமிசையமைத்தேனன்பாய்த் தேவரீர்தந்தவன்னம்
ஒருபிடியானதென்த னுளமகிழ்வுற்றதையா
பிரியமாய்க்காவலேகப் பெட்புடன்விடைதந்தாள்வீர்.

வசனம்.

இருசரணாரவிந்தங்களையு மடியேன்தலைமீ தமைத்துப்பணிந்தேன் முதற்பிடிசாதங் கைக்கொள்ளவு மெனதுமன தளவில்லாச் சந்தோஷங்கொண்டது இனி நகர்வலம்போக விடைகொடுப்பீர் மன்னவா.

இராஜன்சொல் வசனம்.

நல்லது நகர்வலஞ்சுற்றப் போவாய் போதவாதித்தா.

பொது விருத்தம்.

புரவலன்பொசிக்காமுன்னம் போதவாதித்தன்வந்தே
இருகரமேந்தியன்ன மீய்ந்ததைமுடிந்துகொண்டே
தருவிடைபெற்றுப்பின்பு தன்பதியெய்க்கடந்தே
வரும்வினைக்கென்னவென்று மனதினிலெண்ணுவானே.

வசனம்.

அகோ அதெப்படியென்றால் இராஜன் போஜனம் பொசிக்காமுன்னம் போதவாதித்தமந்திரி முதற்பிடி சாதத்தை வாங்கிக்கொண்டுதனது வல்லவாட்டில் முடிப்பிட்டு அரண்மனை கடந்து இராஜன் அங்கும்வேளையில் முதலாஞ் சாமத்தில்

பாம்பின் அபாயமிருக்கின்றதே இதற்கென்னசெய்வதென்றெண்ணுகின்ற விதங் காண்க.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

இப்பெரும்புவனமெல்லா மின்புறச்செங்கோலோச்சி
முப்பத்திரண்டறங்கண் முதுமையாய்நடத்துமெய்யன்
அப்பனைப்போதுமென்னை யாதரித்தாளுகின்ற
செப்பருமளகேசர்க்குத் தீங்காவதென்செய்வேனே.

வசனம்.

சருவசிவராசிகட்குந் தாதையாகிய பரமசிவனே இப்பூமண்டலத்தினில் மநுமுறைபிசகாமல் நீதிநடாத்தியும் அநதினை முப்பத்திரண்டு தர்மங்களைச் செலுத்தியும் தந்தையைப்போ லென்னையாதரிக்கு மளகேந்திரபூபதிக்கு வந்த இரண்டு துன்பங்களையுந் தடுத்தேன் இன்னமொரு பாம்பின்அபாய மிருக்கின்றதே இதற்கென்னசெய்வேன் அர்க்கையம்மனே.

புலம்பல் தரு. இராகம் - நுசாவந்தி. தாளம் - ஆதி.

பல்லவி.

என்னவுந்துயராகுதே - மன்னனிடனா - என்னவுந்துயராகுதே.

அநுபல்லவி.

மண்ணெல்லாம்புகழ்பெற்றமன்னனளகே சர்க்கே
அன்னை துர்க்கையுனாத்தவருந்துயராமி தற்கே (என்)

சரணங்கள்.

அன்பரின்துயர்தீர்த்தோய் - எமனையுதைத் - தன்றுபாலனைக்காத்தோய்
ஞன்பத்திலரசனைச்சேர்தற்செய்வதுன் வர்மம்
இன்பம்வைத்தென்னெண்ணமீடேறச்செய்வதுன்றர்மம் (என்)
செகமெங்கும்புகழ்மாலி - ஆதிகௌரி - திரிநேத்திரிகபாலி
அகமகிழ்ந்துன்னருளாலல்லலிரண்டைத்தடுத் தேன்
மகிபதியைக்காவாயுன்மலரடியைத்துதித் தேன் (என்)
அங்கமஞ்சத்தின்மீதாய் - வேந்தனுந்தேவி - அயின்றிடும்வேளைகுதாய்ச்
சங்கிலிவழியாய்ச்சர்ப்பந்தீண்டு மென்றே
சிங்கவாகினிசொன்னசொற்படியாகு மென்றே (என்)

சிங்கார பத்தியம்.

செந்நெல்சேலார்வயல்திகழுமளகாபுரிச் செங்கோலியற்றிடுந்திரகுமுனைன், மன்றுதிமன்னவன்மாற்றலர்கூற்றுவன் வஞ்சமெள்ளளவேனுமனதிலில்லான், கன்னனிகரில்லான்கரங்களிலறஞ்செயக் கருணைமுகில்ராவணிடுங்காசினியின்மேல், பன்னரும்புகழ்பெற்றபார்த்திபனளகேந்திரன் பாவமென்செய்தனன்பாவியாரோ, அன்னமுன்பதில்விடமருந்திடாமல், ஒன்னலன்றுனைகுப்பினைதவிழ்த்திடாமல், முன்னமேயிருந்ததைமுடித்தெனுறுல், இன்னமொன்றுண்டதையம்பவசமோ.

கொச்சகம்.

பட்டணத்தைநயெங்குஞ்சுற்றிப் பார்த்துவருவோமென்றுல்
கட்டிலின்மேற்றேவியுடன் கண்ணுறங்கும்பூபதியை

திட்டமுடனேயரவந் தீண்டிடுமவரிறப்பார்
அட்டிசெய்தாலாவதில்லை யரமனைக்குட்போகனன்றே.

வசனம்.

ஐயையோ இனிநான் பட்டணஞ்சுற்றப் போவேனுனால் பத்தினியுடன் கட்டிலின்மேல் தூங்கு மகாராஜனை சர்ப்பம்வந்து கடித்திடுமே நகர்வலம்போவதை நிறுத்திப் பள்ளியறைக்குள் சென்று காத்திருந்து வரப்பட்ட பாம்பைத் துண்டாடிப் போவேனுக.

கண்ணி தரு. இராகம் - ஆனந்தபைரவி. தாளம் - ஆதி.

ஐயையோவிதனியாயம்ஆ!ஆ!இதுவபாயம்
அரசனுக்காகுந்துன்பம் உமைபாகா.
வையகமாளுமன்னன்மாண்டாலரசுக்கீனம்
மந்திரிகள்செய்தாரென்பார் உமைபாகா.
அந்நாண்மதுராபுரியாளும்வேந்தனைவிட்டே
அளகேசவேந்தைச்சேர்ந்தோம் உமைபாகா.
என்னுடன்மூவரையுமின்புறவாதரித்தா
ரிதற்கோவிவ்வெண்ணங்கொண்டீர் உமைபாகா.
பாவியவர்செய்ததென்பாரினுனதன்பர்க்குப்
பற்றுதுயரென்பாரோ உமைபாகா.
மூவுலகந்துதிக்கும்முச்சுடரோதிரி
மூர்த்தியேயென்னகோபம் உமைபாகா.
சேயர்கள்போலெங்களைச்சீரில்வைத்தாதரித்தார்
தேவியுமரசனும் உமைபாகா.
தூயசெங்கோல்நீதிசதாங்கமெல்லாமெங்கள்
சுதந்தரமெனத்தந்தார் உமைபாகா.
தேசதேசத்தரசர்திறைசெலுத்திடவெகு
திரங்கொண்டிருந்தோமே உமைபாகா.
நேசம்வைத்தரசனைநீபாதுகாவாவிட்டால்
நிலத்தெவருண்டு உமைபாகா.
மந்திரியாய்நானிருந்தும்மன்னனிறந்துவிட்டால்
வையகத்தோர்நகைப்பார் உமைபாகா.
தந்திரமெனக்கொன்றுசாற்றுவீர்வரும்பாம்பைச்
சதைத்துயிர்வாங்கிச்செல்வேன் உமைபாகா.
செங்கண்மாலின்தங்கையேதிகழுஞ்சூலச்செங்கையே
சிறியேனற்றிரவினில் அம்பிகையே.
எங்காகிலுங்கள்வரிருப்பரென்றடியேனும்
எழில்நகரைச்சுற்றும்போ தம்பிகையே.
உகமெலிந்தோலமிட்டேயருவும்நின்குரல்கேட்டே
ஆலயத்தருகாகி அம்பிகையே.
மகிழ்வாய்நின்னடிபோற்றமன்னவன்தனக்கின்று
வருமின்றதன்மை யம்பிகையே.

பதுமலனெக்கியந்தபஞ்சாக்ஷரஞ்செபித்தே
 பரிவாய்நல்வரந்தந்தா யம்பிகையே.
அதிபனைக்கொல்லவெண்ணியரசன்விஜயன்விட்ட
 அம்புப்பொறியுந்தடுத்தேன் அம்பிகையே.
விஷஞ்சேர்சொற்சதிர்க்கோட்டைவேந்தனுக்கின்றுகாலை
 வெகுமதியாய்வந்ததே அம்பிகையே.
வசமாயதைச்சமைத்துமன்னன்பொசிக்காமுன்னம்
 வந்துமுற்பிடிகொண்டேன் அம்பிகையே.
இசைத்தமூன்றல்லலிலிரண்டேதடுத்தேனுல்
 இன்னமொன்றிருக்கின்ற தம்பிகையே.
விசித்ரமஞ்சத்தின்மீதுவேந்தனுந்தேவியும்
 வெருவாகத்துயில்கையில் அம்பிகையே.
சாமமுதலிற்சர்ப்பஞ்சங்கிலிவழியாகத்
 தாவியேதீண்டுமல்லோ அம்பிகையே.
சேமமாகவேவேந்தைத்தீண்டாமலரவத்தைச்
 சிதைத்திடமனதானேன் அம்பிகையே.
இதுவேநல்லசமையமேயின்றேன்பள்ளியறைக்
 கிடராகிடாமற்காப்பா யம்பிகையே.
மதிமோசமாகிடாமல்வந்திடும்பாம்பைக்கொல்ல
 வாளையுருவிக்கொண்டேன் அம்பிகையே.
பள்ளியறையின்வாயிற்படிவந்தேனரசனும்
 பாவையுந்தூங்குகின்றார் அம்பிகையே.
விள்ளும்நின்சொற்படிக்கு விஷஞ்சேரரவம்வர
 வேளையுமானதே அம்பிகையே.

விருத்தம்.

அந்தரிதுர்க்கைசொன்ன வருந்துயர்மூன்றில்ரண்டு
வந்தனவதைத்தடுத்தேன் மாலியினருளினாலே
இந்தமஞ்சத்தின்மீதி லிறங்கிடும்பாம்பைக்கொல்ல
முந்தியிவ்விடத்தில்நின்று முக்யமாய்க்காத்திருப்பேன்.

வசனம்.

அகிலாண்டநாயகி அன்பர்க்கருள் தாயகியாகிய துர்க்கையம்மன் சொன்ன மூன்றபாயங்களில் இரண்டபாயங்களைத் தடுத்துவிட்டேன் இதோ மஞ்சத்தின் மீது பத்தினியுடன் வெருவாக நித்திரைசெய் மகாராஜனை இனிசர்ப்பந் தீண்டுதற்கு வருகிறவரையில் காத்திருந்து அதைத் துண்டமாடிப் போவேனாக.

பொது விருத்தம்.

அங்குமன்னவனுந்தேவி தூங்கிடுமஞ்சமேலே
மங்களமந்த்ரிபோத வாதித்தன்பாம்பைக்கொல்லச்
செங்கைவாளுருவிக்கண்கள் மூடிட்டாமற்காத்திருக்கச்
சங்கிலிவழியாய்நாக சர்ப்பமேவருவதாச்சே

வசனம்.

இந்தப்பிரகாரமர்க பாம்பபாயந்தடுக்கவேண்டிப் போதவாதித்தமந்திரி கைவாளுருவிக்கொண்டு கண்ணைச் சிமிட்டாமல் வெகு சாக்கிரதையுடனே காத்திருக்கவும் கட்டிலின் சங்கிலிவழியாக நாகசர்ப்பமிறங்குகிற விதங்காண்க.

தரு. இராகம் - புன்னாகவராளி. தாளம் - மட்டியம்.

பல்லவி.

பாம்புவருகின்றதே - வேந்தனைக்கொல்ல - பாம்புவருகின்றதே,

அநுபல்லவி.

சாம்பசிவனைவிட்டுச்சங்கிலிவழி	யாகச்	
சதுர்முகன்விதிப்படிதன்னுயிர்மாண்டு	போக	(பா)

சரணங்கள்.

அன்னமுண்டிறக்காமல் - விஜயன்விட்ட - அம்பையுந்திறக்காமல்

மன்னனுயிரோடின்னம்வாழ்ந்திருப்பதே	தென்று	
தன்றுணிவினைந்துவெகுசாமார்த்தியம்	நவின்று	(பா)

உடலைவளைத்துச்சுற்றியே - கட்டில்சாலர்க - ளொன்றேயென்றசைவெற்றியே

படம்விரித்தாடிக்கொண்டுபடும்விடம்வாய்	நிரப்பி	
நடுதியாய்க்கடித்திடச்சரசமொன்றே	உருப்பி	(பா)

தானிறப்பதென்னாமல் - வெருவுருவாய் - சந்தடியும்பண்ணாமல்

கோவினைக்காக்குமந்திரிகோள்வாளுக்	கிரையாக	
ஊனுமுடலுமுறிந்தோர்வெட்டினிற்	றுண்டாக	(பா)

போதவாதித்தன்சொல் விருத்தம்.

அந்தரியாம்விமலிகபாலினின், சுந்தரமார்துணையடிபோற்றியே
வந்ததேபாம்புமன்னனைக்கொன்றிட, எந்தன்கைவாளாலிட்சணம்வாட்டுவேன்.

விருத்தம்.

முதல்சாமமெனதுகாவல் முக்யமென்றெண்ணிடாமல்
அதிபனைக்கொல்லவந்த அரவமேயுனக்கேன்கேடு
சதைகொளிவ்வாளினாலுன் சடலமுந்துண்டுதுண்டாய்
விதவிதமாகவுன்னை வெட்டினேன்பட்டிடாயே.

வசனம்.

ஓ! ஓ! ஓ! புத்தியீனமாகிச் சங்கிலிவழியா யிறங்கும் நாகசர்ப்பமே இந்தமுதலாஞ் சாமத்தில் எனது காவலென்று நீயறியாயா நல்லது வேந்தனைக்கடிக்க வந்தமையால் இதோ இக்கூர்மையாகிய வாளால்வெட்டினேன் வெட்டினேனிறந்து விடுவாய் சர்ப்பமே.

விருத்தம்.

கட்டிலின்சங்கிலிவழியாய்வேந்தைக்கொல்லக் கருதிவந்தகொடியவிடசர்ப்பந்தன்னைத், திட்டமுடனரசனவர்தேவியாருஞ் சிறிதறியாக்கலையாமற்செங்கைவாளால், வெட்டினனேயாகில் ராஜபத்னிமார்மேல் வீழ்ந்திருக்குந்துளியிரத்தம்வினாவிற்சொல்லும், தொட்டெனதுதாய்முலைப்பாலுண்பதைப்போல் சுண்டுவிரல்நகமதனாற்கொண்டிட்டேனே.

வசனம்.

ஐயையோ என்னசெய்வேன் சங்கிலிவழியா யிறங்கிவந்த நாகசற்பத்தை வாளினால்வெட்டவும் இராஜபத்தினி மார்மேல் ஓர்துளியிரத்தம் விழுந்திருக்கின்றதே ஓஓஓ இதற்கென்னசெய்வேன் இரத்தத்துளி பத்தினியைக்கொல்லுமே ஐயையோ இனியெப்படி பிள்ளையானது தாய்முலையைப்பிடித்துப் பாலுண்ணவில்லையா அவ்வாறே யெனதன்னை மார்புமீதிருக்கு மிரத்தத்துளியைச் சுண்டுவிரல் நகத்தினாலெடுத்திட்டேனே.

சிங்கார பத்தியம்.

தருமநெறிமறவாமல்தாரணியையாண்டிடுஞ் சரதவிதரணநிபுணசாம்பிராஜ்யன், திருமாதுமலரயனுமோருருவுசேர்சிவன் செம்பொனடியநதினஞ்சிந்தைபூண்போன், குரிசிலளகேந்திரனைக்கொல்லமனதெண்ணிக் குறித்திவண்வந்திட்டகொடியபாம்பை, விரைவில்கரவாளினால்வெட்டியேதுண்டிட விகற்புறப் பத்னிமார்மேல்விழுந்த, குருதித்துளிபத்னியைக்கொல்லுமென்றே, கருதியேசுண்டுவிரல்கடைநகத்தால், பரிவுடனெடுத்தவண்பட்டதாலே,வெருளின்றியிதனையும்வெட்டினேனே.

விருத்தம்.

பஞ்சணைமேற்றேவியுடன் றுயிலும்வேந்தைப் பாம்புதுண்டம்பார்க்கவவன் றனையெழுப்பில், கொஞ்சமெனும்புத்தியிலானென்றேபேதக் குற்றமனதெண்ணியென்மேற்கோபங்கொள்வான், மிஞ்சியென்கைவாட்டுண்டாயாய்ப்போனசுண்டுவிரலுடனேபாம்புதுண்டம்வெகுவாய்ச்சேர்த்தேன், கொஞ்சமஞ்சத்தின்மேல் வைத்தேகாலை கொலுச்சமுகம்வேந்தனுக்குக்கூறுவேனே.

வசனம்

தர்க்கையம்மனருளால் சடிக்கவந்த பாம்பைத்துண்டங்களாடினேன் இராஜபத்தினி மார்மேல் சுண்டுவிரல் பட்டதென்று எனது சுண்டுவிரலையும் வெட்டினேன் இவைகளைப்பார்ப்பதற்கு மகாராஜனையெழுப்பினால் கோபித்துக் கொள்வார் ஆனாலிவைகளை வாரிச்சேர்த்துக் கட்டிலின் அசுமானகிரிமீதுவைத்து காலையதிலம் கொலுச்சமுகத்தில் விஸ்தரிப்பேன் இனிநகர்சுற்றுவேன்.

பொது விருத்தம்.

துண்டுகளானபாம்புஞ் சுண்டுவிரலையுஞ்சேர்த்துக்
கொண்டஸ்மானகிரியின்மேல் குவித்துடன்மந்த்ரிபோக
மண்டலமாளுவேந்தன் மனைவிநித்திரைகலைந்து
கண்டுபோகும்மமைச்சைக் கடிகியேகேட்கலுற்றாள்.

வசனம்.

இந்தப்பிரகாரமாகப் போதவாதித்தன் பாம்புத்துண்டங்களையுந் தனது சுண்டுவிரலையும்வாரிக்கட்டிலின் அசுமானகிரிமீதுவைத்துப் பள்ளியறை கடந்து போகுஞ் சமயம் இராஜபத்தினியாகிய அமிர்தவல்லி திடுக்கிட்டெழுந்து கேட்டவாறும் இனிநடக்கின்ற விதமுங்காண்க.

அமிர்தவல்லிசொல் வஞ்சிவிருத்தம்.

சேருட்பள்ளிக்குள்ளே, நேருடன்வந்துபோவ
தாரடாஉந்தன்பேரைத், தேரவேசொல்லெனக்கே.

போதவாதித்தன்சொல் வஞ்சிவிருத்தம்.

ஏதமொன்றில்லையம்மா, நீதிசொன்மந்திரிமாரில்
போதவாதித்தனென்பேர், ஓதினேனுனேனே.

தரு. இராகம் - தோடி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

செல்லுவேனநகரைச்சுற்ற-பள்ளியைவிட்டு. செல்லுவேனநகரைச்சுற்ற.

அநுபல்லவி.

வல்லவனளகேந்திரன்மாங்கலத்தி லிருக்க
கொல்லவந்தமூன்றுகோதறத்தேன் புரக்க (செல்)

சரணங்கள்.

வாயிற்படியயக்கடந்தேன் - சித்ரமாளிகை - வழியைநேராசத்தொடர்ந்தேன்.
தாய்தர்க்கையருளால்சகடமென்று மில்லை
ஆயன்விதியிருக்கதுகாதென்றுந் தொல்லை (செல்)

திரப்பவர்களுமிறக்க - சுற்றமுள்ளோருந் - சிவனிழந்துமரிக்க
தம்பலன்விஜயனுஞ்சதியாகவனுப்பி னான்
வ… வருமாளவசஞ்செய்தேனேயிப் போது (செல்)

மன்னவனுக்… மம் - முதற்படியில் - வாய்த்தவிடத்தைமுன்னம்
சென்… ங்கிநின்றுசெங்கையால்வாங்கிக்கொண்டேன்
அன்… கயெனக்குச்சொன்னபாம்பையுங்கண்டேன் (செல்)

சங்கிலிவழியாயவந்த - பாம்பையென்வாளால் - சதைக்கமஞ்சமேற்றுயின்ற
மங்கையரசிமார்மேல்வாய்த்தகுருதித் துளி
செங்கைச்சுண்டுவிரலாற்சங்கையின்றெடுத்தேன்களி (செல்)

எனைவேந்தன்புகழ்ந்துசொல்லமன்னனுக்கான - இடுக்கண்களெல்லாம்வெல்ல
மறுசேரரசனுக்கேவந்துகூறுவன் காலை
இனிஇரண்டாஞ்சாமமிரவாகுமுன் னுலே (செல்)

அமிர்தவல்லிசொல் கொச்சகம்.

எந்தம்விதிவசமோ வென்னசெய்வேன்சங்கரனே
மைந்தனெனவேபோத வாதித்தனையெண்ணிருக்க
இந்தநடுச்சாமத்தி லிங்கெனைவந்திச்சித்த
நிந்தைதனைச்சொல்வேன் ஓ நிருபாளெழுந்திருப்பாய்.

வசனம்

ஐயையோ என்னசெய்வேன் முதலாமந்திரி போதவாதித்தனைப் பிள்ளையென்றெண்ணியிருக்க பாதகன்மனதில் பயமில்லாமல் நடுச்சாமவேளையில் பள்ளியறைக்குள்வந்து என்மீதிருந்த ஆடையைக்களைந்து ஏதோமோசஞ்செய்து போகின்றான் ஓ மன்னவா மன்னவா எழுந்திரும் எழுந்திரும்.

புலம்பல் தரு. இராகம் - முகாரி. தாளம் - ஆதி.

பல்லவி.

ஓமன்னவா - சற்றெழுந்திரும் - ஓமன்னவா.

அநுபல்லவி.

பூமியில்யார்க்கென்னபொல்லாங்குசெய் தேனோ
பூர்வபெரியோரையென்னமல்லவு தேனோ (ஓமன்)

சரணங்கள்.

என்னசென்மமோ - பெண்ணாய்ப்பிறந்த - தேதுகன்மமோ
அந்நாளென்றலையிலிலயன்விதித் தலவோ
பன்னாளுந்தீவினையைப்பாவிசெய்திட் டதுவோ (ஓமன்)
எந்தம்பாபமோ - அல்லதுதூர்க்கை - என்மேற்கோபமோ
இந்தப்பூவுலகத்திலிருப்பதேவெகு ஈனம்
வந்துமந்திரிசெய்தவஞ்சனையவ மானம் (ஓமன்)
குற்றம்வல்லையோ - நானழுவது - குற்றமில்லையோ
உற்றமன்னவனேநானுனக்குப்பாரியா னதும்
இற்றிரவினிற்கற்புக்கெடராகிப் போனதும் (ஓமன்)

இராஜன்சொல் விருத்தம்.

கொஞ்சிடுங்கிளியேயென்தன் கோதையேயமிர்தவல்லி
மஞ்சமேலுன்தனோடு மருவிநானிருக்கும்போது
சஞ்சலமாகிக்கூவுஞ் சப்தமேதிவ்விராவில்
வஞ்சனையானதென்ன மங்கையேயுரைசெய்வாயே.

வசனம்.

இனியவார்த்தைகளைப் பேசுங்கிள்ளையே ஓ பிராணநாயகி உன்னுடன்யான் சயனித்திருக்க நீதிடுக்கிட்டெழுந்து கூச்சலிட்டழுதற்கு உனக்குண்டான விசனமென்ன இன்னதென்று சொல்லுவாயமிர்தவல்லியாயாய்.

அமிர்தவல்லிசொல் விருத்தம்.

மன்னனேயிந்நாண்மட்டுன் மனைவியென்றெண்ணிருந்தேன்
அந்நாளில்பிர்மதேவ னமைத்திட்டவிதியிதாமோ
பன்னுமென்கற்பழிக்கப் பாவிமந்திரியும்வந்தே
என்னையுந்தூங்கும்வேளை யிச்சித்தேயேகினனே.

வசனம்.

ஐயையோ மன்னவா இனியென்ன செய்வேன் பிரமதேவனென்றலையிலெழுதின விதியோ அல்லதிவ்வடியாள் செய்தபாபமோ இவ்வுலகத்திலிருப்பதே யீனம் பாதகனாகிய மந்திரிவந்து உனது நித்திரையைச் சோதித்து எனைக்கற்பழிக்க மனதாகிப் போனான் மன்னவா மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

பஞ்சணைமேல்நாமிருவர்தூங்கும்போதுபாராமன்மனதுசற்றும்பயமில்லாமல்
வஞ்சகமாயுனையுங்கற்பழித்தானென்றாய்மாமயிலேமந்திரிமார்நால்வருக்குள்
மிஞ்சிவனவந்தவனைக்குற்றமென்றேவிளம்பிடுவாயின்றேனென்றன்றேனை
கெஞ்சிடினும்விட்டுவிடேனென்கைவாளுக்கிரையாகவிருபிளவாய்க்கிழிப்பேன்

வசனம். [பெண்ணே.

கேளாய் பெண்ணே யமிர்தவல்லி நாம் தூங்குவதறிந்து பயமில்லாமல் விடம்வந்து உனைக்கற்பழித்தானென்றாய் இருக்கு மந்திரிகள் நால்வரில் இவிடம் வந்தவனார் அவன்பெயரென்ன இன்னவனென்று சொல்லுவாயானால் நானொகாலக்குள் இதோ எனது கையிலிருக்கு மிவ்வாளுக்கிரையாக்கக் கொடுங்கோபம் பூண்டன னாகியே.

கண்ணி திப்தை. இராகம் - நீலாம்புரி. தாளம் - ரூபகம்.

தாரையேயென்றுதப்பர்சொல்லுவன்கேள், தொல்லுலகினிற்பிறந்துங்குறையே.
மனைமேல்யனும்வுத்தவிதியோ, மகிழ்ந்திதனைவமுத்தவசமோ
பெரியோரொவர்க்கும்பிழைசெய்திலனே, பெற்றோர்செய்தவவமோஅறியேன்
ஆரேயுனதுமனையாளடியாள், அந்நாள்முதலிந்நாள்வரைக்கே
அகமேகினைந்துவெருவாயிருக்க, அவியாயமிதுஇனியென்செய்வேன்
தருமேமிதுதானசதியேசதியே, தரைமேலினிநான்வாழ்வதவமே
நினமேயுமதுசமுகமதுவே, செப்புமமைச்சரதிலேமுதலான்
மனதிற்துணியேயிதையாதவனாய், வந்தான்போதவாத்தனுமே
மருமாமலர்ப்பஞ்சணைமேலினிதாய், மகிழ்வாயிருவோர்துயிலுஞ்சமையம்
உரமாகவுமதுறக்கமதிந்தே, உருமின்றியென்மேற்கலையயகற்றி
அனையாளெனையென்றென்றதவனாய், அரும்பாவியும்தன்கரத்தாலெனது
வினைவாய்முலைமேனகமும்பதித்தே, விரைவாய்நடந்தேசென்றானன்கண்
விழித்தேசெய்வொனதொனவினவ, வெருவாய்த்தனதுபெயரையுரைத்தான்
அழுதேதுடித்து ... லறியெழுந்தேன், அரசேயரசேயிதுவேயுண்மை
பொய்யானவன்மற்சொல்லேனெனது, பொற்பாமுலைமேல்வைத்தகுறிபார்
மெய்யாயிதற்குச்செய்திர்வதைதான், வேற்றேயவனைமதுபிரிய
மகவாயகங்கைந்திருற்கே, மாபாவியின்றுசெய்தானசதியே
பகைநானவன்மேலுரைக்கேவகமே, பார்த்திராசேயிதுநான்முறையோ.

இராஜன்சொல் விருத்தம்.

தீவினையான்செய்ததுண்டோ மாதவத்தோர் செய்தவவேள்விகளையழித்து துண்டோ, பாவமென்னிச்சிறக்கடமைவதைத்ததுண்டோ பாருலகிலந்தணரைப்பழித்ததுண்டோ, தேவதுதியான்மறந்தேயிருந்தனென்றோ தேடிவந்த யாசகரைச்சினந்திட்டேனோ, ஆவலுடனென்பூசாபலமேயிவ்வாறுகினதேனார் க்கையம்மணடியேசாட்சி.

தரு. இராகம் - வராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

ஆசைக்குகந்தவென்னரிவையே - அழவேண்டாம் - ஆசைக்குகந்த.

அநுபல்லவி.

... (ஆசை)

சரணங்கள்.

அவனுடன்சேர்ந்துறன்றமைச்சரெல்லவர்க் கிதை
இவையென்றுரைத்தேவாளுக்கிரைசெய்வேன்வன்பாவி சதை (ஆசை)
பின்னையென்றேமனதிற்பேணியேநா யிருக்க
என்னாளும்வென்றுதோணையிடுவேன்வதை யிறக்க (ஆசை)
கழுகுமநரியுமொய்த்துக்கயிபாடிடவே நானே
தொழுவின்மாட்டிவதைத்துக்கிதைப்பேன்வா ருனே (ஆசை)

விருத்தம்.

பெண்ணரசேமாயபாவிகடைமைனை பொய்யாய்ம்மருந்திப்பெட்பாயாடவின்னுலகஞ்சேரவிரைக்கவாளால் வெட்டிடுவேனென்றுசம்மவிதனமேபோக,

வண்ணமுடனின்னமூன்றமைச்சர்மார்கள்வந்திடுவாரவர்பாலிவ்வசைநவின்றே, கொண்ணசிக்கநீதியொன்றுயில்லைமெய்யேகோதாய்நீமனம்பொறுத்துக்கொண்டிருப்பாய்.

வசனம்.

கேளாய் பெண்ணே யமிர்தவல்லி அந்தமகா பாதகனுடைய உடலைப் பேய் நாய் நரிகளுண்டு ஆனந்தங் கொள்ளவும் உயிர் எமனுலகஞ் சேரவுஞ் சித்திரவதை யிடுவதற்குப் பேதமில்லை ஆனுலின்னமூன்று மந்திரிமார்கள் வருவார்கள் அவர்களிடத்திலு மிவன்செய்த துர்நடத்தையைச் சொல்லி ஆக்கினையிடலாம் பொறுத்திருப்பாய் நாயகியே.

அமிர்தவல்லிசொல் விருத்தம்.

நீதிசொல்லமைச்சர்தம்மில் நீர்மூடனுனபாவி
போதவாதித்தன்செய்த பொல்லாங்கிற்கேபொறுத்தால்
சூதுசெய்திடுவானின்னஞ் சொல்லுவதொன்றுமில்லை
பாதகனுயிரிழந்தால் பார்த்தகமகிழுவேனே.

வசனம்.

கேளீர்மன்னவனே மந்திரிகளில் கொடியபாதகனுகிய போதவாதித்தன் செய்தகாரியத்தில் மனம்பொறுத்திருந்தால் இன்னம்வேண்டிய வஞ்சனைகள்செய்ய மனந்துணிவான் அந்தத்துஷ்டன் இறந்தால் என்மனம் பூரிக்குமரசே.

புலம்பல் கண்ணி திபதை. இராகம் – சுருட்டி. தாளம் – ரூபகம்.

துரையேதுரையேதுரையேதுரையே துரையேதுரையே – என்
துரையே ...ரையேதுரையேதுரையே துரையேதுரையே.

திரைபுனையிந்தத்தரணிமிசைநாம் செய ரில்லாமல் – அற
தினமுந்தேவனேநினைந்தேதருமஞ் செய்தோ மல்லாமல்
குறையெவர்க்கும்நாம்செய்ததில்லையே கூறுவே ஞனல் – அந்தக்
கொற்றவன்மதுராபுரிகடந்தவர் கூடிவரும் வழியில்
நமதுநகர்வாழ்வணிகனொட்டகம் நாடித் தேடும்போ – திந்த
நால்வருங்குதிப்புரைத்தேவாதிட்டு ஞாயமா வரும்போ
தமதரசுக்கேயுகந்தவனென்றே உண்மை யாகிட – நாம்
உளமகிழ்ந்துபிள்ளையென்றவாசையால் எவரும்நம் முடைச்
சகலபொருளுக்குரியவனென்றே தற்காத்தே யிருக்க – அந்தத்
தயவையுமனதெண்ணிடாமலே சதிசெய்தா னிறக்க
அகிலத்தின்மிசையெவர்க்குமிஞ்ஞாயம் அடுக்காதே மெய்யா – நால்
அமைச்சரிலிவன்மிகுத்தவஞ்சக அசடன்று னையா
உதையகாலைக்குள்ளவன்றனுடலை ஓரிநாய் களும் –இரத்தம்
உண்டுகுடலைமாலைபூண்டே உகந்துபேய் களும்
சதைதனைத்துண்டாய்ப்பருகாடச் சதைப்பதே மேன்மை-இரு
சரணத்திற்கினந்தங்கோடிதெண்டம் சமர்ப்பித்தேன் மகிஞ.

பொது விருத்தம்.

நிருபனுந்தேவியோடு நிந்தனையாகவெண்ணி
இருவருங்காத்திருக்க விரண்டாஞ்சாமத்திற்காவல்

வருகுவோன்போதசந்த்ர மந்திரிநகலாச்சுற்றக்
கருவிகளெடுத்துச்செங்கை காட்டியேவருகின்றனே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக முதலாமந்திரி போதவாதித்தன்மீது இராஜனும்பத்தினியும் நிந்தனை யெண்ணியிருக்க இரண்டாஞ்சாமக் காவல்செய்யு மிரண்டாமந்திரிபோதசந்திரன் ஆயுதமுஸ்திப்புடனே வருகின்றவிதங்காண்க.

௨-ம் சாமத்தில் போதசந்திரன்நகர்வலம் வருதல்.

தரு. இராகம் – சௌராட்டிரம். தாளம் – ஆதி.

பல்லவி.

போதசந்திரமந்திரிநானே-பட்டணமெங்கும்-போய்ச்சுற்றிப்பார்த்துவருவேனே

அநுபல்லவி.

தீதுசெய்திடுங்கள்வர் தியவொன்னெதிர்ப்பட்டால்
ஒடுக்கிடத்தலைகளையுடைத்து வதைத்திடுவேன்
பொடுக்கென்றுயிர்விடமடக்கிச் சதைத்திடுவேன் (போத)

சரணங்கள்.

வல்லயத்தால்வந்தோரைத் தாக்கி – யுடல்நடுங்க
வதைத்திடுவேனுயிரைப் போக்கி – அண்டங்களாடி
சொல்லும்நாய்நரிக்கிரை யாக்கி – இந்நகர்காக்குந்
தொழிலைக்குப்பெலிசெய்வேனேக்கி – எங்களையாளும்
வல்லவனையெதிர்த்துவாதாடுமடயரா
வாளிலுலவர்கள்சிரமீனையிடவே யறுப்பேன்
கூளிசமூகங்களுங்கொர்த்தத்தோளுங்காலையு மிறைப்பேன் (போத)
வீரைசூழ்புவிவேந்தர் கூடி – யெல்லவரொன்றாய்
மென்மேலுஞ்சமர்செயத் தேடி – வந்தாலுமேக
மாரிபோலம்புகளாற் சாடித் – தேகங்களெங்கும்
வடுவிட்டுக்கண்கலங்கி யோடித் – தரியலரைத்
தாறுமாறுகவென்சக்கரத்தால்வாட்டுவேன்
சடலந்துடிதுடிக்கக்கொடும்பேய்களுந் துதிக்க
குடன்மாலைபூண்டுகவிபடித்தேபெலே நினைக்க (போத)
இரத்தப்ரளயமெங்கு மாக – சூரர்கள்கலங்கி
இவனெமனென்றுமனம் நோக – மூவரும்யாவர்
திரத்தசூரனென்றேபின் போக – எங்களையாளும்
செம்மலளகேசனன் பாக – கயவர்களின்
சிரத்தைக்கைக்கேடையத்தாலிறுத்துமீர்த்திடுவேன்
திறைகொண்டரசர்கள்சரணென வந்திட
வருதைப்பகுதிகளொருமையாய்த் தந்திட (போத)

விருத்தம்.

நகர்வலமெங்குஞ்சுற்றி நான்பார்த்துவருமிவ்வேலை
பலகவர்கள்சூதுவஞ்சம் பரித்திடுங்களவர்செய்தம்

வகையொன்றுமில்லையானல் மன்னவன்வாழுகின்ற
அகமதைநோக்கிப்பின்பென் னரமனைசெல்லுவோனே.

வசனம்.

நானிந்தநகரமெங்குஞ் சுற்றிப்பார்த்தும் பகைவர்கள்ளர் துன்மார்க்கர்களு மெங்குங்காணேன் இனிமன்னரரசனுறங்கும் பள்ளியறையைச் சுற்றிப்பார்த்துப் பின்னைநா இருப்பிடஞ் சேருவேனே.

தரு. இராகம் - சுருட்டி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

மகிபன்வாழ்மனைக்கே - செல்லுவனுன் - மகிபன்வாழ்மனைக்கே.

அநுபல்லவி.

செகம்புகழளகேந்திரபூபதி-சேராய்த்தூங்கும்பதி-நேராய்ப்போகத்தகு (மகிபன்)

சரணங்கள்.

தீயலர்களொன்றும் - சப்தமில்லை - சந்தோஷமானன்பின்னும்
செருவமுடையகள்வர்கள்செய்யும்
சிழ்மையெங்குங்காணேன் தாழ்மைப்பயர்தோனேன் (மகிபன்)

சாமமிரண்டினிலே - குற்றம்வந்தால் - நாயகன்காலையிலே
சேபம்நீசெய்யாமற்போனதென்னவென்று
சினந்துப்பேசுவர் நினைத்துமேசுவர் (மகிபன்)

சித்திரங்கள்மிகுந்த - மணிமதில் - சேர்ந்திடவேவகுத்த
நித்திரைசெய்யும்பள்ளியறையீதாகும்
நேயமுடன்கண்டேன் தூயவரன்றேன்டன் (மகிபன்)

இராஜன்சொல் வந்நிந்துறை.

ஆரடாவிங்கு, சேருடன்வந்து, சேருடன்போகும், பேருரைப்பாயே.

போதசந்திரன்சொல் விருத்தம்.

தாத்திரியோர்கள்போற்றுஞ் சுவிமணிக்குன்றேபோற்றி
சாத்திரமுறையுணர்ந்த நாயகாசரணமிவ்வி
ராத்திரியிரண்டாஞ்சாமம் நகர்வலமென்னதுகாவல்
தோத்திரமுமதடிக்குத் தொண்டனுன்போதசந்திரன்.

வசனம்.

சரணம் சரணம் பூபதியே அடியேனிரண்டா மந்திரிபோதசந்திரன் இரண்டாஞ்சாமக் காவலடியே னுடையதாகையால் பள்ளியறையைச் சுற்றிப்பார்க்க வந்தே னண்ணலே.

இராஜன்சொல் விருத்தம்.

வந்துநின்றமந்திரியேபோதசந்திரா மாலைநத்திதுங்களைநான்மக்களென்றே சிந்தையிலேயெண்ணியென் னரசுநாடுஞ் சேருடனேயானைபரி சேனையெல்லாஞ் சொந்தமுங்கட்கென்றிருந்தேன்முதலாங்காவற் சூழ்ந்துசென்றபோதவாதித்மந்திரி, எந்தபருந்தேவியுடன்துயிலும்போதே இங்கவன்செய்திட்டசங்கையென் சொல்லேனே.

வசனம்.

ஆ! ஆ! கேளாய் மந்திரி போதசந்திரனே பிள்ளையில்லாத ஆசையினுல் நீங்களேபிள்ளைகளென்றும் எனதரசுநாடும் எல்லாவற்றிற்கும் ஆதினமுடையவர்களென்றெண்ணி யிருந்ததற்கா இவ்வுபகார மானது ஓ! ஓ! நானும் பத்தினியும் வெகுவாக நித்திரை செய்யுஞ்சமயம் போதவாதித்தன் செய்துபோன அவமானத்தைச் சொல்லுதற்கு மனம்பின்னுகுதே.

போதசந்திரன்சொல் விருத்தம்.

தந்தைதாய்நீங்களென்றுந் தமியருங்காத்திருக்க
மந்திரியானபோத வாதித்தனிவிடம்வந்தே
எந்தையேசெய்தகுற்ற மின்னதென்றறியவேண்டும்
சந்தேகமின்றியந்தச் சங்கதியுரைசெய்வீரே.

வசனம்.

சரணஞ்சரண மன்னவா தாய்தந்தை நீங்களே யென்றடியோம் காத்திருக்க போதவாதித்த னிவிடம்வந்து செய்தகுற்றம் ஏதோ அடியேன் மனந்திடுக்கிட்டுச் சஞ்சலமாகின்றது நடந்த குற்றத்தை யடியே னறியும்படி சொல்வீர் மகிபனே.

இராஜன்சொல் விருத்தம்.

செப்புவதிற்பயமொன்றுமில்லையானுந் தேவியுடன்மஞ்சத்தேநித்திரைசெய்வேளை, ஒப்புடனேபள்ளியறைக்குள்வந்தேகண்ணுறக்கமதிந்தேயாரிகலையகற்றிக், கறபழிக்கமனதாகித்தனதுகண்டு கைநகத்தைமுலைமீதுநாட்டிப்போக, அப்பொழுதேமாதுமெழுந்தகட்டிக்கேட்க அரும்போதவாதித்தனெனச்சென்றனே.

இதுவுமது.

எனைபோதரசிபெருங்கூச்சலிட்டே எனையெழுப்பியானெழுந்தேதென்று கேட்க, அகமெலிந்தப்பாவிகுறையைச்சொன்னுள் அசமுவந்திப்பழிசொல்லவமானந்தான், வாருடனேநீதிசொல்லுமந்திரிநீதான் மாமலத்திலிருசரியோமறுவிதாமோ, ஆசையினுல்நானவனைநாளைக்காலை ஆக்கினைசெய்துயிர்வதைக்கவென்புற்றேனே.

வசனம்.

ஓ! ஓ! ஈதென்னவநியாயம் யானுந்தேவியுமாய்ச் சப்பிரமஞ்சத்தின் மீதுவெகுவாய் நித்திரை செய்யும்போது எனதுநித்திரையைச் சோதித்து பத்தினிமேலிருந்த வஸ்திரத்தைக் களைந்து இச்சிக்கமனதாகி அவனது சுண்டுவிரலால்ஸ்தன்னியத்தின்மீது குறிப்பிட அரசியாள் திடுக்கிட்டெழுந்து போவதாரடா வென றதட்ட நான்தான் போதவாதித்த னென்று பயமில்லாமற் சொல்லிப் போய்விட்டாளும் கதறிக்கதியழுதெனையெழுப்பி அந்தப்பாதகன்செய்த வகைத்தைக் காண்பித்தாள் ஓ! ஓ! இதுநீதியோ அந்தக்கொடும்பாதகனை நாளைக்காலையில் உயிர்வதைசெய்ய மனதாயிருக்கின்றேன் போதசந்திரா.

அமிர்தவல்லிசொல் கொச்சகம்.

ஆதவமைத்பிள்ளையில் லாதாவலினுதுங்களையான்
காதலுஞ்சேயனென்றே கருதிமகிழ்வாயிருக்கப்

பாதகனிவ்விடம்வந்து பார்த்திபனித்திரையறிந்தே
ஏதமவன்செய்துசென்ற தென்றன்விதிவசமமைச்சே.

வசனம்.

உலகத்தில் புத்திரனில்லாத பேராசையால் நீங்களே பிள்ளைகளென்றெண்ணியிருக்க அந்தஅன்பையும் எண்ணிப்பாராமல் நடுச்சாமத்தில் பாதகனாகிய போதவாதித்தன் செய்தவஞ்சனையைக்கேட்டாயல்லவோ போதசந்திரமந்திரியே

புலம்பல் கண்ணி - திபதை. இராகம் - மோகனம். தாளம் - ரூபகம்.

எந்தம்விதிவசமே - மந்திரி - அப்பா - என்னையிச்சித்தவன் மந்திரி
மைந்தனென்றுங்களைமந்திரி - மிக்க - மகிழ்வாயெண்ணியிருந்தேன் மந்திரி
தெய்வத்திற்கேற்குமோமந்திரி - அவன் - செய்திட்டவநியாய மந்திரி
வையகத்திற்கடுக்குமோமந்திரி - என்னை - மாதாவென்றெண்ணுமன் மந்திரி
தந்தையரசனென்றேமந்திரி - அந்தச் - சண்டாளனினையாமன் மந்திரி
இந்தமஞ்சத்தின்மீதாய்மந்திரி - யானும் - இறைவனுந்தூங்கையில் மந்திரி
நித்திரையைச்சோதித்தேமந்திரி - என்மேல் - நேர்ந்தகலையகற்றி மந்திரி
மித்திரபேதகஞ்செய்தான்மந்திரி - இதை - விளம்பமனங்கூசுதே மந்திரி
அரசனுரையறிந்தாய்மந்திரி - இந்த - அநியாயந்தானுண்டோ மந்திரி
சரியிதுநீதியோமந்திரி - என் - சடலமுமநடுங்குதே மந்திரி
எனதுளைர்தேறிடமந்திரி - அவனை - இடுவதேகொலைகன்று மந்திரி
மறுநிறைபோதசந்திராமந்திரி - துயர் - வழுத்தினேனறிந்திடாய் மந்திரி.

போதசந்திரன்சொல் விருத்தம்.

அன்னையரோயென்தனையாளரசர்கோவே அடிபணிந்தர்ச்சித்திடடேயகமயர்ந்தேன், பன்னுமொழியெனதுசெவியுற்றபோதே பயமிகுந்தென்னுடல்நடுங்கிட்பதைக்குதையோ, என்னவகையோவறியேன்முதலமைச்சன் இவனெய்திச்செய்தகுற்றமெண்ணுதற்கே, இன்னதெனவாயாமல்வதைநீர்செய்வ தியல்பல்லநீதிமுறைஇயம்புவேனே.

இதுவுமது.

இயம்பிடும்நான்மறைமுறையுமாறுசாத்திர மெண்ணரியகலைமுதற் புராணமெல்லாம், நயமுடனேமுழுதுணர்ந்தவல்விவேகன் நரபதியேதிவினையும்நன்றெண்ணாமல், உயிர்வதைதான்செய்ததற்கோர்கதையொன்றுண்டு உத்தமனேநிரவிசாரிப்போம்நாளை, தயையுடனீரும்மனையுஞ்செவிகொடுத்தே தமியன்மொழிகேட்டிருப்பீர்சாற்றுவேனே.

வசனம்.

அன்னை தந்தையைப்போ லாதரிக்கும் மன்னவனே கருணைநிறைந்த தேவியே தாங்கள் சொன்னவார்த்தையைக் கேட்டபோதே யென் மனந்திடுக்கிட்டு தேகம் நடுக்கங்கொண்டது வேதாகம சாத்திரம்நீதிநூல் இவற்றை யாய்ந்தறிபுணனாகிய போதவாதித்தன் இவ்விடம்வந்து குற்றஞ்செய்து போனானென்பது என்மனதிற் கொன்றுந் தோற்றவில்லை ஆதலால் நாளையதினங் கொலுச்சமுகம் அவனை வரவழைத்து செய்தகுற்றத்தைத் தீர விசாரித்து தண்டனை யிடவேண்

டியதே ஆனால் முன்பின்னாராயாமல் உயிர்வதை செய்ததற்குக் கதையொன்றுண்டு அதனைச்சொல்லிவருவேன கோபமின்றிக் கேட்பீராக.

போதசந்திரன்சொல் கதை.

வெண்செந்துறைகள்.

மன்னவனேயானுரைக்கும்வண்கதையைக்கேட்டிருப்பீர், என்னவெனிலுக்ரவீரனெனும்வேடுவன்றன்னை, அந்நகர்வாழ்ந்திடுமரச னவனைப்பெரும்பிடியாய், சொன்னங்கொடுக்கவென்றுதுகள்சாலையிலடைக்க, அவ்வேடன்மனதுகந்தேயாயிரத்தைஞ்ஞூறுபொன்னும், செவ்வையதாயளிக்கச்சிறைநீர்த்துப்பதிவந்தே, ஆதிபொருள்யாவும்விற்கஆயிரம்பொன்னானதினால், நீதின்மியைஞ்ஞூறுபொன்றேவையுற்றதினால், சேயனைப்போல்தான்வளர்க்குஞ் சிங்கமாஞ்சோணங்கி, நாயினைப்பிடித்துமறுநகரஞ்சென்றோர்வணிகன், குபேரனென்றவனிடத்திற் குதுவையாய்முறியெழுதிச், சபலமுடனைஞ்ஞூறுபொன்றான்கொண்டானிதற்கே, கேளிவிரண்டுதிங்கள்சொல்லிக்கேண்மைசெயும்நாயைத், திடமுடனழைத்துமதிசெப்பிச்சென்றான்வேடன், செட்டியந்நாயைச்செல்வமுடனேவளர்த்தே, இட்டமுடன்பாலித்தானின்னமுங்கேள்வேந்தே.

அகவல்.

மறுநகர்வணிகன்வர்த்தகஞ்செய்யக், கருதியேநாயைக்கனமுடனழைத்தே சொற்படிநடக்குஞ்சூரசிங்கமேநீ, நற்படியாகநான்வரும்வரையில், இரவும்பகலும்பதியெதிரில், உரமதாகக்காத்தொணடிபேய்மிருகம், பரித்திடுங்கள்வர்பட்டணமிகுதி, திருத்தமாயிவைகள் சேரவொட்டாமல், காத்துநீயிருக்கக்கடனென்றே, சேர்த்ததைத்தழுவிச்செப்பியபின்னர், தன்மனையாளைத்தானழைத்தவட்கு, நன்மையாய்நாய்க்குநான்வரும்வரையில், பாலுமன்னம்பரிவுடனளித்தே, மேலுமென்றும்விதனமில்லாமல், பாலனைப்போலும்பாதுகாவென்றே, சீலனும்வணிகன்செப்பிப்போகினனே.

வெண்செந்துறைகள்.

செப்பிச்சென்றசெட்டியவன்றேவிநெடுநாளாக, ஒப்புடனேவைத்திருக்குமோர்சோரநாயகனும், அநுதினமும்வந்துசெல்வ தறிந்தெதிரிற்காத்திடும்நாய், மறுநீதியோவிதென்று மனதிலெண்ணியிருக்க, இவ்விதமதாயொருநாளிரவிரண்டாஞ்சாமம், அவ்விடங்கள்ளக்கணவனவளிடமேவந்தானே, வணிகன்மனையாளவனைவாஞ்சையுடனேயழைக்கத், துணிவுடனேநாயெழுந்துதொடர்ந்துமவன்றன்பீசம், கடித்துதறவவனுயிரும்காலனூராச்சேர, எடுத்துவணிகன்மனைவியென்னசெய்வதென்றேங்கிப், பதைத்துவெகுரகசியமாய்ப்படுகுழியொன்றங்குவெட்டிப், புதைத்தாள்புழைக்கடையுள்புந்திமிகமெலிந்தழுதே, அன்றுமுதலப்பாவியறிவுபெறுநாய்தனக்கே, ஒன்றும்பொசிப்பீயாதண்டிடவோடாளுக, நாயானதுபசிக்கு நகர்ப்புறத்தேதாகிலுண்டு, நேயசெட்டிவாயின்முனம் நின்றிருக்குமென்றுமே.

அகவல்.

காவலில்வெகுவாய்க்காத்துநாயிருக்க, மேவினவணிகன் வெகுநிதிசேர்த்தே, தன்னகர்வந்தேதயவுபதிநுழைய, முன்னிருந்திடும்நாய்முறையுடனவன்றன்

காவினில்வீழ்வதுங்கதறியழுவதும், மேலில்வீழ்ந்தவனைவிட்டிடாதேயின், புகழு க்கடைசென்றேபுதைத்தவளிருக்கும், ஒழுக்கமாமண்ணையோடியேபறிக்கச், செட்டியுங்கண்டுசித்தம்பிரமித்தே, திட்டமாங்காயுஞ்செல்வழிப்போகச், சோறுய கனைச்சுறண்டியேயெடுத்துப், பாரொனநாயும்பற்றியேயுதற, வணிகன்பார்த்திதனைமனதிலன்புற்றே, துணைவிசையழைத்துத்அடித்தடித்தே, இந்தநாய்க்குநீயி றுவளாயன்னம், தந்திடாதேதௌச்சாடினனன்றே.

வெண்செந்துறைகள்.

கண்முன்னில்லாதேயென்னகாய்ந்தவனையேயோட்டித், தன்வளவினுட்புகுந்தேதனக்கிருந்தசாதத்தை, எடுத்தமிர்தம்செய்கலந்தே யெழிலுளநாய்தனையழைத்தே, கொடுத்ததின்பசியாற்றிக்குற்றமற்றவைந்நூறு, பொன்கொடுத்தமுறியோலைபொற்புடனேதானெடுத்து, நன்மைசெய்தசிங்கமென்னவின்றிடுவானதற்கு, நீசெய்தநன்றியைநான்நீடுழிகாலம்வரை, ஆசையுடனெண்ணிருப்பேனன்பாகவுன்விசமான், தந்தமுறியோலை தானதற்குக்காண்பித்தே, விந்தையுடனோலையொன்றுவிரைவுடனேயெழுதி, வல்லநாயின்கழுத்தில் வாருடன்பேபூட்டி; சொல்லியுன்மூப்பனிடஞ்சுருக்காகச்செல்லென்றான், அறிவுபெறமிருகசிங்கம் நகரந்தனைக்கடந்தே, பிரியமுளவெஜமானைப் பேணிவரவேயெதிரில், வணவேட்டுக்கிரனுமாதமிரண்டான்றிருல், தனமெடுத்துவரவெதிரில் தன்னுயைக்கண்டனனே.

அகவல்.

வந்திடும்நாயைமகிழ்ந்துபாராமல், சந்தேகமாகிவர்த்தகனையேமோசம்,செய்துமுன்முறியைத்திருடினதென்றே,கைத்தடுறுயைமடையனும்வேடன், ஊனுங்கொடியறுத்தோடியேமரத்தில், பூணியேகழுத்திற்புனைந்தெண்ணுமல்,தூக்கிடநாயுந்துடிதுடித்திறக்கத், தாக்கியேமண்ணிற்றுனைதைப்புகதத்தே, செட்டிவாழ்மனைக்குச்சென்றனன்வேடன், திட்டமாய்வணிகன்றிடுக்கிட்டெழுந்தே, நாயதுசெய்தநன்மையையுரைத்தே,நேயமாம்முறியும்திருபமொன்றெழுதிக்,கட்டிநாய்க்கழுத்திற்கனமதாய்விட்டனன், இட்டமாம்வழியிலெதிர்க்கலையோவென், புந்தியுமெலிந்துபொல்லாமூடன், இந்தநன்றியையானறியாமலே.

வெண்செந்துறைகள்.

நன்றிதேதறியாமல்நாய்மோசஞ்செய்ததெனக், கொன்றுவிட்டேன்செட்டியென்றேகூவியழுதெழுந்தே, தன்கைகொண்டவாயுதந்தால் [illegible] யேபிடுக்க, என்குற்றமென்றுசெட்டியென்னியுயிர்விடுத்தான்,செட்டியிறந்ததவன்றேவியறிந்தேதனாமேல், பொட்டெனவேவீழ்ந்திறந்தாள்புகன்றிடுவேனிந்தச், சங்கதியெலாமறிந்தேசாற்றும்வேடன்மனைவி, அங்கவளும்விடங்குடித்தேயாருயிரைவிடுத்தாள், மூடபுத்தியால்வேடன் முன்பினெண்ணுமற்செய்த, கேடிதனுலிந்நால்வர்கிழமையுற்றேமாண்டார்கள், நிரவிசாரிக்காமற்செய்திடுமோர்காரியத்தால் பாரினிற்பேரழிவாரும்பார்த்திபாவிதறிவீர், அரசியற்றச்செய்திபெரிதல்லதுவேசொன்றின்னே, [illegible] யுடனைந்தமையாள்மன்னவனேமூன்றும், சாமியினியாவதிருல் தயவருளுவீர்விடையும், சேமமுறுமன்னையரோசெஞ்சரணஞ்சரணே.

இராஜன்சொல் விருத்தம்

நீங்களுல்வர்களுமொன்றே நிகழ்த்திடுமென்மொழிக்குத்
தீங்கெனவுரைப்பீர்மெய்யே திருக்கொலுச்சமூகம்நானே

சங்கவனுற்றதெல்லா மிணையிணையாய்விரித்தே
வாங்குவேனுயிரையானு மந்திரிநீசெல்வாயே.

வசனம்.

சரி சரி நீங்கள் நால்வரும் ஒருவர்க்கொருவர் ஒத்துப்பேசுவீர் நானியதினல் கொலுவில் அந்த மகாபாதகன் செய்ததைச் சொல்லி அவன் உயிரை வாங்குவதே உத்தமம் இனி யுன்னிருப்பிடஞ் சேர்வாய் போதசந்திரா.

பொதுவிருத்தம்.

சினத்துமன்னவனுரைத்த தீச்சொற்களெல்லாங்கேட்டு
மனத்தினிலல்லலாகி மந்திரிபோதசந்திரன்
இனித்தென்னசெய்வதென்று நின்மலனைப்பணிந்தே
தனித்தழுதேபுலம்பித் தம்பதிசெல்லுவானே.

வசனம்.

இந்தப் பிரகாரமாக மகாராஜன் கொடுங்கோபத்துடன் சொன்னவைகளைக் கேட்டு யோசித்துப்பாராமல் போதவாதித்தனைக் கொலைசெய்தா லென்னசெய்வதென்று புலம்பி யழுதுகொண்டு தன்வாசவிற்குப் போகின்ற விதங்காண்க.

போதசந்திரன்சொல் விருத்தம்.

கொற்றவன்றேவியோடு கூறினபங்கமெண்ணப்
பற்றுதென்னகமேயையோ பாரினிலெங்களுக்கே
உற்றநான்முறைகளெல்லா மோதிடுமுதலமைச்சன்
குற்றஞ்செய்ததுதானென்ன சொல்லையோசூலபாணி.

வசனம்.

ஐயையோ இராஜனும் பத்தினியுஞ் சொன்ன குற்றத்தை இன்னதென் றென்னுதற்கு வகையொன்றுமில்லையே வேதாகமநுட்பங்களை வகுத்தெங்களுக்குச் சொல்லிவரும் அண்ணலை யரசன் ஆக்கினையிட்டா லிதற்கென்னசெய்வேன் சூலபாணியே.

புலம்பல் தரு. இராகம் - தோடி. ஜம்பை - தாளம்.

பல்லவி.

என்னென்றறியேனுமைபாகா - உன்தன் - ஏழைமேற்கோபமுற்றுல்வாகா.

அநுபல்லவி.

மன்னவனரசியுமஞ்சமேற்றூங்கும் போது
மந்திரிபோதவாதித்தன்வந்தேசெய்திட்ட சூது (என்)

சரணங்கள்.

தேவிமார்பிசைகரந்தூங்கி - அவர் - செங்கைவிரல்நகத்தைத் தாக்கி
தீவிரமாகவெளிநோக்கி - போக - சேயிழையுந்தூங்கலைப் போக்கி
கூவியாரென்றுகேட்கக்கூசாமலேதன் னுமம்
கூவலுடனுரைத்தவன்னன்முதலாஞ் சாமம் (என்)
சூதுசெய்திடவிவன்வந்தே - நாமஞ் - சொல்லுவரோமனம் துணிந்தே
விதனையோநானினைந்தே - பார்க்க - இன்னதென்றுணரே னறிந்தே
பாதகனென்றுவனைப்பார்த்திபனும்நிந்தித் தார்
வாதனைசெய்வேனென்றுமனந்துடித்தேயெதிர்த் தார் (என்)

சொல்லமன்னனிந்தார்நாளை - தேவி - கொற்றவனிருவர்க டாளைச்
ப்பளிக்கிட்டேனவ்வேளை-கொடுங் - கனென்றகோனேந்தினர்வாளை
பல்லுயிரெல்லாங்காக்கும்பரமாவிது ஞாடமோ
வல்லபோதவாதித்தன்மாள்வதன் சாயமோ (என்)
திலென்றுமில்லான் - நீதி - மறுவுரைத்திடவெகு வல்லான்
னாப்போனெதிர்நில்லான்-பாரி-லெந்தநாளினுமோர்பொய் சொல்லான்
அஞ்சமென்றவர்கட்குத்தனமழைபெய்யுஞ் சீலன்
செஞ்சொலாகமமறைதேர்ந்தவிவேக ஞாலன் (என்)
வாதித்தனுயிர்போனால் - யானும் - புவிமேலிருந்திடேன்மெய் யதனால்
ன்றமறியச்சொன்னால் - வேந்தன் - சினந்துபேசுகின்றன ரென்னால்
ஏறம்படைப்பதில்லையெவ்வுயிர்க்குமி ரோனே
பாதுகாத்தாளுமுன்தன்பதமலர்நம்பி னேனே (என்)

பொது விருத்தம்.

போதவாதித்தன்றன்னைப் புரவலன்கொல்வேனென்றே
ஓதியதறிந்துமெத்த வுளமெலிந்திரண்டாமந்திரி
ஏதமில்வளவிற்சேர இசைத்திடுமூன்றுங்காவல்
தமாய்ச்செய்யும்போத வியாபகன்வருகின்றானே.

வசனம்.

இப் பிரகாரமாக இரண்டாமந்திரி போதசந்திரன் போதவாதித்தனை கொண்டு புலம்பித் தன்வளவிற் சேரவும் மூன்றாஞ்சாம மானதால் மூ யாகிய போதவியாபகன் ஆயுதமுஸ்தீப்புடனே நகர்வலஞ் சுற்ற வ தங்காண்க.

ம் சாமத்தில் போதவியாபகன்நகர்வலம்வருதல்.

தரு. இராகம் - புன்னாகவராளி. தாளம் - ஆதி.

தவியாபகனானே - மூன்றாமந்திரி - போதவியாபகனானே.

அநுபல்லவி.

மீறுபுகழோதருமுப காரன்
வெளியோரைப்பாதுகாக்கும் வஜீரன்
மூல்தினமுந்நதி - பரிதக்குலமுவந்தேபதி
கலிற்பனசற்குண போசன்
புயர்வெப்புயனமள கேசன் (போத)

சரணங்கள்.

குடிப்பேன் - விஜயம்பெற்ற - வல்லவீரனை யடிப்பேன்
பிடிப்பேன் - களவுசெய்யுங் - கொடியதுட்டனைப்பிடிப்பேன்
னதேசதேசத்தோர்கள்வந் தாலும்
வம்புஞ்சாய்த்தாற்றிடுவன்மென் மேலும்
ருவிப்பட - குருதிக்கடல்பெருகிக் கெட
யனஞ்சிட - தரையுற்றிடமருவலர் செஞ்சிட (போத)
கூடி - அவருடனே - அரசொன்னைருக் கோடி
டித்தேடி - எனதரசை - வாதுசெய்திட ராடி

பகையுற்றெதிர்ந்தவர்தால்பார்ப்பேனவர்கள் வெற்றி
இகலற்றிடவேயென்கையேந்தும்வேலினாற் குத்தி
பத்திக்கொடுங்கத்திக்கிரை - மெத்தச்செய்வனெற்றித் தலை
பாதலமீதலத்தோர்கணடுங்கிட - காதகபாதகநீத ரொடுங்கிட (போத)
பயிர்களையிருகமறிக்கில் - கைக்கொள்ளுயீட்டி - பல்லயத்தாலட் சணத்தில்
உயிர்விடச்செய்வன்கணத்தில் - வேறுதேசத்தின் - உளவர்வந்தாலிட் சணத்தில்
செயிர்படும்வாளினால் தீவிரமாகச் சாடி
யுயிர்கெடுத்தெங்களையாள் தார்க்கைபதங்கொண் டாடி.
செந்நாய்நரியுண்ணக்குடல் - தின்னப்பேய்முன்னாலுடல்
தென்றிசைவாழும னென்றெனைச்சாற் றிட
நன்றாகுமெனவென்றெனைப்போற் றிட (போதவி)

போதவியாபகன்சொல் விருத்தம்.

இந்தமூன்றாஞ்சாமத்தி லெழில்பெறுநகரமெங்கும்
சந்ததெருக்கள்வீதி தழைத்திடும்பல்லிடங்கள்
அந்தமாய்ச்சுற்றிப்பார்த்து மகப்படவில்லைதுட்டர்
எந்தைவாழரமனைக்கே யெகுவேனிட்சணத்தான்.

வசனம்.

இந்தப்பட்டணமெங்குந் தெருக்கள்சந்துகள் அணிஅணியாகச் சுற்றிப்பார்த்தேன் யாதொன்றுங் கூச்சலில்லை இனிமகாராஜன்வாழும் பள்ளியறை சுற்றிப்பார்த்துப் பின்னென் னரண்மனைக்கு போவேனாக.

தரு. இராகம் - தேசிகம் தாளம் - ஆதி.

பல்லவி.

சித்திரப்பதிக்குப்போவேன் - மன்னவன்வாழும் - சித்திரப்பதிக்குப்போவேன்.

அநுபல்லவி.

நித்திரைசெய்யும்பதிக்கே - விரைவுட - னோராயிவ்வழிதொடர்ந்தேன் (சித்தி)

சரணங்கள்.

பட்டணமெங்குஞ்சுற்றினேன் - கள்வர்களின் - பயமென்பதைக்காணேன்
கெட்டபகைவர்களுதர் - துன்மார்க்கர்கள் - இட்டிலதுங்கேளேன் (சித்தி)
குற்றமூன்றாஞ்சாமத்தி - லானதென்றே - கொற்றவனானைக்காலை
உற்றகொலுவிலறிந்தால் - என்றன்மிசை - யுளஞ்சினப்பாரவ்வேளை (சித்தி)
வடிவாகும்பள்ளியறை - மீதாருமேமன்னர் - மன்னன்றேவியுடனே
இடரின்றித்தூங்குகின்றார் - முழுதும்பார்த்தே - னெகுவதென்கடனே (சித்தி)

இராஜன்சொல் வசனம் (?)

பள்ளியைச்சுற்றி, மெள்ளவேபோவதார், கள்ளமில்லாமல், விள்ளுவின்பேர்.

போதவியாபகன்சொல் விருத்தம்.

வீசிடுங்கதிர்குலத்தின் வேந்தர்கள்மணிவிளக்காய்
மாசிலாப்புகழ்பெற்றோங்கு வள்ளலேயுமதுபாதம்
ஆசையாய்ச்சிரசிற்சூடி யமகிழுடன்றுதித்தே
[illegible]

இராஜன்சொல் விருத்தம்.

உற்றிடோரன்கமைச்சர்களில்மூன்ருமந்திரி, யோதுதற்குமனதில்வெருவீன மாகும், கற்றறிந்தமறைபுணர்ந்கவென்றே காதலுற்றதென்றுமுற்கசடறுகிச் சற்றேனும்பயமின்றிமுதலாமந்திரி சதிமனதாலிவிடம்வந்துதையலாளைக், குற்ற மவன்செய்துசென்றவழியாயத்தைக் கூறுதற்குநாணமிகக்கொண்டிட்டேனே.

வசனம்.

ஆ!ஆ! வாராய் போதவியாபகனே உங்களை விவேகநீதி யஸ்தர்களென்றெ ண்ணியிருக்க நானும் என்னரசியுஞ் சப்ரமஞ்சத்தின்மேல் வெருவாய் நித்திரை செய்யுந்தருணத்தில் முதலாமந்திரி போதவாதித்தன் மனக்கெருவனுகிச்செய்து போன வஞ்சனையைச்சொல்லுதற்கு மனம்பின்னுகுதே போதவியாபகனே.

போதவியாபகன்சொல் விருத்தம்.

ஆதரைமீதிலெங்க ளகத்திலிற்றுயரமின்றிப்
பாதுகாத்தாளுகின்ற பார்த்திபாவடியவன்பால்
ஒதியமொழியைக்கேட்டு உடல்நடுநடுங்குதையா
போதவாதித்தன்செய்த பொல்லாங்கென்சொல்லுவீரோ.

வசனம்.

எந்தநாளிலு மெங்கள்மனதில் விதனம்வராமல் காத்திரக்ஷிக்கு மதிபதியே தாங்களு மன்னையருந்தூங் கும்போது போதவாதித்தனானவர் செய்தகுற்றம்யா தோ அடியேனுக்குத் தெரியச் சொல்லவேண்டு மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

தரும்தகாதென்றுமிக்க சாற்றிடுமுக்கிமீலம்
புகலும்நான்மறையுணர்ந்த போதவியாபகனேகேளாய்
செகமிசையிந்தவஞ்சஞ் செய்திடநினைத்தானே
இகலவ்னென்னாந்தன்னை இயம்புவன்கேட்டிடாயே.

வசனம்.

கேளாய் மூன்ருமந்திரியே நூல்முறையறிந்த விவேகசீலன் நீயே அவன் செய்தகுற்றத்தைச் சொல்லுகின்றேன் இதுதரும் இதுதகாதென்று சொல்லவே ண்டும் போதவியாபகனே.

தரு. இராகம் - பந்துவராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

குற்றமவன்செய்ததைக்கேளாய் - மந்திரி - குற்றமவன்செய்ததைக்கேளாய்.

அநுபல்லவி.

பற்றதெனதுமனம்பகர்ந்தால்வெகு கோபம்
உற்றுநினைத்துப்பார்க்கமெத்தவுமனஸ் தாபம் (குற்ற)

சரணங்கள்.

மைந்தரில்லாதன்பினால்மாநிலமீ துங்களைச்
சிந்தையெண்ணியிருக்கச்செய்திர்சதி யெங்களை (குற்ற)
மஞ்சமிசையில்யானுமாதரசி வெருவாய்
மிஞ்சத்துயிலுறற்வேளைபார்த்து வெருவாய் (குற்ற)

என்றுக்கத்தையறிந்தேயேந்திழையாளின் மார்மேல்
தன்கைச்சுண்டுவிரலைத்தாக்கிப்போகவே மென்மேல் (குற்ற)
திடுக்கிட்டேமாதெழுந்தேசெல்வதாரெனக் கேட்க
அடுத்தபோதவாதித்தனென்றஞ்சாமல்சொல்லி நோக்க (குற்ற)
அழுதெழுதென்தனையுதட்டியேயெழுப் பினுள்
பழுதென்னவென்றுகேட்கப்பாவியின்குறை சொன்னுள் (குற்ற)
கொடியதுட்டனெண்ணங்கொண்டுவர் ததிதே
படியிலிதுநாயமோபதறுதென்தன் மனதே (குற்ற)

அமிர்தவல்லிசொல் கொச்சகம்.

அக்கினிமேல்பட்டமெழு காகுவதைப்போலென்மனம்
மிஞ்சிமிகைக்குதையோ மேதினிமேலுங்களையான்
மக்களென்றேயெண்ணிருக்க வஞ்சகனிவ் விடம்வந்தே
துக்கம்வரச்செய்துசென்ற அவனறிவாய்மந்திரியே.

வசனம்.

கேளாயப்பா மூன்ருமந்திரியே யென்மனதானது நெருப்பின்மேற்பட்ட மெழுகைப்போலுருகுகின்றதே உங்களைப் பிள்ளைகளென்றெண்ணியிருக்க பாத கனுகிய போதவாதித்தன் செய்தவஞ்சனையை என்னசொல்லுவதப்பா.

தரு. இராகம் - சங்கராபரணம். தாளம் - ஆதி.

பல்லவி.

சிந்தையுமிகநோகுதே - அப்பாமந்திரி - போதவியாபகா - செய்யவுந்துயராகுதே

அநுபல்லவி.

வந்துபோதவாதித்தமாபாவிசெய்த சூது
எந்தையென்னரசனையென்றுமலேதோ நீது
வர்மமோ - எனையிச்சிக்க - தர்மமோ - யானுமுன்செய்த
கர்மமோ - இதுவுந்தெய்வ - மர்மமோ - புவியிலென்போல்
மாதரைப்பழித்தேனோ ஆதலாலைவதேனோ (சிந்)

சரணங்கள்.

என்னென்றிதனையுரைப்பேன் - இத்துயரை - எந்தவிதத்திற்பொறுப்பேன்
அன்னஆரிமையவசைப்பேன் - என்தனவிதியை - ஆரிடத்திலிசைப்பேன்
மன்னவனுருரைத்தவஞ்சகனவ மானம்
இன்னம்புவியின்மிசையிருந்திடவெகு வீனம்
மாயமோ - செய்தொன்றச - காயமோ - அமைச்சனேசி
யாயமோ - இதென்னமோவ - பாயமோ - போதவாதித்தன்
வந்தெனைக்கற்பழிக்கவே - சிந்தித்தானவனுமெய்யே (சிந்)
பாலரையான்கொலைசெய்தேனோ - அல்லது - பாவையர்தாலியைக்கொய் தேனோ
குலிதார்க்கையைவைத்தேனோ - பெரியோர்வேத - அறவர்மேல்மண்ணையெய்தேனோ
சாலவுந்துயராத்தயங்குவதுஞ் சரியோ
ஆலமுறுதாயுண்டவராதுக்கென்ன குறையோ
சாபமோ - அவருக்கென்மேல் - கோபமோ - என்னவுமனஸ்

தாபமோ - இதேனுகொடும் - பாபமோ - அந்தத்துஷ்டனைச்
சதைத்துவெட்டியேகொல்ல - மிதித்தேனுன்னிடஞ்சொல்ல (சிந்)

கர்ப்பந்தனையழிக்க - மனதுற்றக் - கசடனையெவரும்பழிக்க
அற்பநாய்நரியிழுக்கக் கொலைஞர்வாளால் - அங்கமெல்லாங்கிழிக்க
இப்படிச்சித்திரவதையிட்டால்மகிழ்ந்திருப் பேன்
அப்படியாகாவிட்டாலாருயிரிழந்திறப் பேன்

ஏதிது - அவனெண்ணச் - சூதிது - மனதிலலல்
மோதுது - அன்னைத்துரோகி - நீதிது -ஐயையோமந்திரி
என்னைகினைந்தபாவி - தன்னைக்சொல்லுவாயேவி (சிந்)

போதவியாபகன்சொல் விருத்தம்.

மகவருக்கமுறுதந்தே வளர்த்திடுமன்னையைப்போல்
அகமகிழ்ந்தெந்தநாளு மடியனைப்பாதுகாக்குஞ்
செகபதிதேவியாரோ சிந்தனைகொள்ளவேண்டாம்
புகலுமுவார்த்தைகேட்டைம் புலனுமேநடுங்குதம்மா.

வசனம்.

அன்னையைப்போ லாதரிக்குந் தேவியாரே இக்கொடிய வார்த்தைகளைக் கேட்க வெனதுமனமிகுந்த சஞ்சலமாகின்றதம்மா.

இராஜன்சொல் விருத்தம்.

மனதிலச்சமில்லாமலிவிடம்வந்தே வசைபுரிந்துசென்றவஞ்சவஞ்சன்றனை
னைத்தினைகரமுறுதியாமுன்னின்றுகாலைதிரகொலையாளர்வசஞ்சினந்தொப்பித்தே
யினைவதிந்தேயுடல்நடுங்கியுயிரும்போக பிணங்களைநாய்நரிகளுண்ணியினிலத்தில்,
எனதகமேமிகக்களிக்குமென்றுமந்திரி இயம்பினனேயினிநீயிலைகாண்பாயே.

வசனம்.

கேளாய் மந்திரியே கொஞ்சமாகினு மனதினில்பயமில்லாமல் செய்தவஞ்சனை யனியாயத்திற்கு நானை உதையத்திற்குள் சித்திரவதையிட்டு நாய்நரிகளிழுத்துண்ண வெனதிருகண்ணாற்கண்டு சந்தோஷப்படுவேன் போதவியாபகா.

போதவியாபகன்சொல் விருத்தம்.

ஓதிடுவேன்மன்னவனேநானைக்காலை ஒருமையுடனவனையழைத்திங்குசெய்த தீதறிந்துநீமன்றசொல்வதைப்போல் சித்ரவதையாக்கிவிடத்திங்கொன்றில்லை, ஏதமும்நன்றறியாமலுயிர்வதைத்தே இவ்வுலகில்தாந்தாமேயிறந்தகாதை, பேதையடியேன்மகிழ்வாய்நவில்வதற்கேபெட்புடனேசெவிகொடுத்துப்பேறுவீரோ.

வசனம்.

இராஜாதிராஜனே அடியேன்சொல்லும் வார்த்தையைக் கிஞ்சித்தேற்றுக் கொள்ளும் நாளைக்காலை கொலுச்சமுகத்தில் போதவாதித்தமந்திரியை வரவழைத்து நன்றுந்தீமையுமறிந்து குற்றங் காண்போமானால் சாத்திரவிதிப்படி சித்திரவதையிடலாம் இவ்விரண்டுங் காணமல் வதைசெய்து தங்களாலே தாங்களிறந்தகதையொன்றுண்டு அதைச் சொல்லிவருவேன் கோபமின்றிக்கேட்பீராக.

போதவியாபகன்சொல் கதை.

தரு. இராகம் - தன்யாசி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

சொல்லுவன்கேளாய் - பூபதியே - சொல்லுவன்கேளாய்

அநுபல்லவி.

பல்லுயிரைக்காக்குமீசனுமைதேவர் பதியிருத்தநுதிசேர்காசியிலில் (சொல்)

சரணங்கள்.

ஆதலபிராமணனுன் - டவனுக் - கருமகவில்லாதால்
மாதுமவனுமனமகிழ்ந்தன்பொடு
வளர்த்தார்நகுலனுளமகிழ்வாக (சொல்)

சேசட்டினிவர்கண் - மடியின்மேல் - கிர்த்தயிடநகுலன்
காழிலின்வேசன் யிசாலாயுரியுங்கண்டு
காளைவரந்தந்தா சானுமன்னவனே (சொல்)

பிறந்திட்டமகவை - இருவரும் - பெட்புடனேவளர்த்தே
வருகின்றநாளிலூஞ்சல் மேற்பிள்ளையை
வைத்துமறையவன் பத்தினியாளன்று (சொல்)

நகுலனையழைத்தே - பிள்ளையிடம் - நான்வருமளவும்
மகிழ்வுடன்காத் திருப்பாயென்றுரைத்தே
வாகாய்த்தோட்டத்தினிற் கேகினளன்னவள் (சொல்)

அந்தவேர்சமையம் - பிராமணனு - மழுதவாங்கிடவே
விந்தையாய்நகர்க்குச் சென்றுவிட்டானவன்
வெகுகாளாவாழும் பழையுள்ளசர்ப்பம் (சொல்)

பாலனைக்கடிக்க - கொடும்விடப் - பாம்புபடவிரித்தே
காலனைப்போலுஞ்சற் சங்கிலிவழியாய்க்
கடுகவேவரத் திடஞ்சேர்நகுலன் (சொல்)

தீவிரமாய்த்தொடர்ந்தே - வந்தபாம்பைச் - சீறித்துண்டாடி
ஆவியைக்குடித்தே தன்னைவளர்த்திட்ட
அன்னையாளிடம் பன்னுதற்குச்செல்ல (சொல்)

மறையவன்மனவி - கீரிப்பிள்ளை - வாய்கொளிரத்தங்கண்டே
குறையேதோதன்சேயனைக் கொன்றதென்றுய்
கோபித்துவாளால் பாபீஷ்டிவெட்டினள் (சொல்)

வெட்டித்தன்பதிக்கே - அந்தணத்தி - விரைவாகவருக
கட்டியவூஞ்சலிற் குழந்தையாடிடக்
கண்டனள்பாம்பு துண்டங்களைச்சுற்றும் (சொல்)

நன்றிசெய்தகீரியை - அவளெண்ணி - நாடிடாமலேயதையும்
கொன்றுவிட்டானமனக் கடிதாச்சதே
குழந்தையைவெட்டிவிழுந்தாடன்றாயினா (சொல்)

யாசகஞ்செய்யச்சென்ற - மறையோனி - தனியாயமெல்லாங்கண்டே
கூசிடாமல்தன்னுயிர்குடித்துமாண்டான்
குவலயத்திலிவரவிவேசத்தால் (சொல்)

இராஜன்சொல் விருத்தம்.

நீதிசொல்லாறுசாத்ரம் நிகழும்நால்வேதந்தேர்ந்த
போதவாதித்தனென்றுய் பொற்கொலுச்சமுகம்நாளை
நீதிலேயறிந்தேபேத சிந்தனையின்றித்தட்டக்
காதகன்றனையான்கொல்லக் கருதினேனீசெல்வாயே.

வசனம்.

கேளாய் மூன்றுமந்திரியே நாளைக்காலை கொலுச்சமுகம் போதவாதித்தனை வரவழைத்து அவன்செய்த குற்றத்திற்குத் தாக்ஷண்யமில்லாமல் சித்திரவதைபண்ணுவதற்குச் சந்தேகமில்லை நல்லதுநீ யுன்னிருப்பிடஞ் சேரும் போதவியாபகா.

பொது விருத்தம்.

மந்திரிக்கண்முதலோன்போத வாதித்தவறினன்மீது
சிந்தனையாகவேந்தன் செப்பித்திடமூன்றுமந்திரி
பந்தமாங்கதையுரைத்தே பதிதனக்கேகும்வேளை
புந்தியுண்மிகமெலிந்து புலம்புவான்கலங்குவானே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக வந்தமூன்றுமந்திரி போதவியாபகனிடம் மகாராஜன் கொரேகோபத்துடன் பேசினதெல்லா மறிந்து நாளையதினம் போதவாதித்தனைக் கொலைசெய்துவிட்டா லென்னசெய்வதென்று புலம்பிக்கொண்டு தன்வளவிற்குப்போகின்ற விதங்காண்க.

போதவியாபகன்சொல் விருத்தம்.

வேதமாராகமங்கள் விளம்பிடுமொழியறிந்தே
பாதகம்நல்லதென்றும் பகர்ந்திடுமுதலாமந்திரி
போதவாதித்தன்றன்னைப் பூபதிநாளைக்காலை
வாதனைசெய்வேனென்றார் மனந்துயராகுதையோ.

வசனம்.

வேதாகம புராணகாவியங்களையாய்ந்தும் இதுதீமை இதுநன்மை யென்றுஞ்சொல்லும் நிபுணனாகிய முதலாமந்திரி போதவாதித்தனை மகாராஜன் துணிவோடுங் கொல்லுவேனென்றார் இதற்கென்ன செய்வேன் சிவனே.

புலம்பல் கண்ணி திபதை. இராகம்-ஆரபி. தாளம்-ரூபகம்.

நினைக்கநினைக்கத்துய ராகிமனம்நோகுதே
    நேசம்வைத்தருள்புரி   விடையாளா
சனகன்வியாசன் பராசன்றபோதனர்கணிதம்
    தாவிப்பூஜித்தும்   விடையாளா
நீதியாகத்தெரிந்த போதவாதித்தமந்திரி
    நினைத்தவெண்ணமறியேன்   விடையாளா
நரபதிதானுங்கலந்தே யரசிமார்மீதினிற்கை
    நகத்தைப்பதித்ததேனோ   விடையாளா
குறிதென்றரசனார் அடித்துவதைத்துக்கொல்லத்
    துணிந்திருக்கின்றார்மெய்யே   விடையாளா

அகளும்சன்றறியாமல் வெகுகோபமாகினார்
    சொல்லவகையறியேன்   விடையாளா
சதியெண்ணியிவிடம்வந்தே சாற்றுவரோதன்னுமம்
    தயங்குதென்றன்மனது   விடையாளா
சங்கையீதென்றுதோனேன் மங்கையரசிசொல்லும்
    சங்கதியைக்கூறியேன்   விடையாளா
விதமென்னமோவறியேன் வேந்தன்கோபமகற்ற
    விளம்பினேன்கதையொன்று   விடையாளா
மெத்தவுங்கேட்டதற்கு வெகுண்டரசனெழுந்தே
    வெட்டமனந்துணிந்தார்   விடையாளா
அகிலமிசையெங்களுக் கனுதினம்யுக்திசொல்லும்
    அண்ணலிறந்துவிட்டால்   விடையாளா
ஆருயிர்க்குடித்துச் சேருவேனுன்னடிக்கே
    அரசன்கோபந்தணிப்பாய்   விடையாளா
மகிபதியின்றுகாலை மந்திரிபோதவாதித்தனை
    வாட்டுவாரென்னசெய்வேன்   விடையாளா
வஞ்சனைசெய்தாரென்ற வார்த்தைகேட்டதையென்ன
    மனந்திடுக்கிட்டேங்குதே   விடையாளா

பொது வசனம்.

அகோ அதெப்படியென்றால் மூன்றுமந்திரி போதவியாபகன் வெகுவிதனத்துடன் புலம்பிக்கொண்டு தன்னிருப்பிடம் போனபிறகு நாலாஞ்சாம மானதால் நாலாமந்திரி போதவிபூஷணன் நகர்வலஞ்சுற்ற வருகின்றவிதங்காண்க.

ச - ம் சாமத்தில்போதவிபூஷணன்நகர்வலம்வருதல்.

தரு. இராகம் - தோடி. தாளம் - அட.

பல்லவி.

போதவிபூஷணனான் - நலாமந்திரி - போதவிபூஷணனான்.

அநுபல்லவி.

தாதகிமலர்சூடும்வேதநால்மிசை   யாடும்
நீதிவிசனையெப்போதுமனதிற்   றேடும்
திகழுங்கதிர்குலம்வருமொய்   யாரன்
அகிமேற்புகழ்பெறுஞ்   சூரன்
இருவளரளகையாளும்   போசன்
திருபர்துதிசெய்திடள   கேசன் (போத)

சரணங்கள்.

பதித்திடுங்கள்வர்கள்பட்டணத்தகப்   பட்டால்
சிரத்தைப்பஞ்சுபஞ்சாகச்செய்துடுவேனோர்   வெட்டால்
பெருத்தபுயவீரர்கள்போராடவெதிர்த்   திட்டால்
தரித்தநீண்மரம்போலேசாடுவேன்கை   பட்டால்

தரணியரசரும்கரிகள் சேனைகள்
அரசைமனதென்னவிவருநற் சூரர்கள்
சடுதியெமபுரிசெல்ல வோட்டுவேன்
சடிகைபொடிபடவடலைக் காட்டுவேன் (போத)
அங்கையேந்தும்வாளாலசுரர்களைக் சதைப்பேன்
பங்கமெண்ணியிருக்கும்பகைவர்களை வதைப்பேன்
திங்களணிசிவனுந்திருமாலையு மெதிர்ப்பேன்
எங்களரசன்கீர்த்தியெங்காளிலுங் துதிப்பேன்
இத்திதிம்வல்லுலக்கையா லதி
அடிக்கப்பகைவருயிரும்வின் பதி
ஏகவெங்கிறுமுடல்கள் அர்ரிட
காகம்நாய்நரிபூசை கொள்ளிட (போத)
தலைகள்குருதியாற்றிற்தாண்மிதந்தே யோட
உலகுளோரெனைக்கண்டேயுக்ரவீரனெனப் பாட
கலகஞ்செய்திடுமின்டர்கணைமெடுங்கி வாட
அலைகபூதமுனிகளடங்கித்தம்பதி தேட
ஆக்கரித்தடலேங்க மென்னவே
தாக்குவெனைமனென்னைப் பன்னவே
அரசைதகரினையாளுமதி பதி
உளமகிழ்ந்திடக்காவல்செய்யத் தநி (போத)

விருத்தம்.

எங்கினுஞ்சுற்றிப்பார்த்தே னெனதடத்காவலுக்குள்
சங்கைசெய்கள்வர்குது தரியலர்சப்தமில்லை
கங்குலேவிடியமுன்னங் கதிர்குலமன்னன்றாங்கும்
துங்கமஞ்சத்தைநோக்கித் துரிதமாய்ச்செல்லுவேனே.

வசனம்.

பட்டணமெங்குஞ் சுற்றிப்பார்த்தும் கள்வர்குது துன்மார்க்கர் சப்தமொன் றினுமில்லை இனிமகாராஜன்வாழும் பள்ளியறையைப்பார்த்து எனதுவளவிற்கே குவேனே.

தரு. இராகம் - அடாணா. தாளம் - ஆதி.

பல்லவி.

நடந்துபோகுவேன்விரைவாய் - மன்னன்மனைக்கு
நடந்துபோகுவேன்விரைவாய்

அநுபல்லவி.

வடிவிலகிடுமென்தன்மன்னவனள தேசன்
திடமுமோரெனென்றெனைச்செப்பிடமக ராஜன் (நடந்)

சரணங்கள்.

நிலவுமறைந்துபோனதே - சேவல்களெல்லாம் - கூடித்தொனித்துக்கூவுதே
கலகஞ்செய்திடுமிண்டர் கள்வர்பயமுந் தோணேன்
இல்குமிருகர்கூட்டங்கு ளொன்றேனும்வரக் காணேன் (நடந்)

எனக்குமுன்மூவர்கள்வந்தே - காவல்செய்தவ - ரேகியிருப்பார்மகிழ்ந்தே
நினைக்கின்றேனரசனூர் நித்திரைதெளிந் திருப்பார்
தனக்கேதாகிலும்வாய்த்த சதியையிப்போ தூைப்பார் (நடந்)
இரத்தினங்களாலிழைத்த - ஓவியச்சீரும் - எழின்மணிகளால்பதித்த
பெருத்தமேடையீதாகும் பெட்புடனே பார்த்தேன்
திருத்தமாயென்காவலிற் றீதணுகாமற் காத்தேன் (நடந்)

இராஜன்சொல் வஞ்சித்துறை.

அரண்மனைசுற்றி, விரைந்துபோவது, தெரியவேயாரென், றுரைகுழுமந்தே.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

வசுந்தராயரசரெல்லாம் வந்திருபுறமுஞ்சூழ
இசைபெருங்கீர்த்திபெற்ற வேந்தலேசரணம்போற்றி
வசையிலாதிக்தவேளை வந்துபோவதுமென்காவல்
புசபலாமந்திரிபோத விபூஷணனென்பேரையா.

இராஜன்சொல் விருத்தம்.

நிகழ்காலஞ்செல்காலம்வருங்காலம்பின் னிஜமிதுபொய்யென்றுரைக்கும்நி புணமந்திரி, அகிலமிசைமநுமுறையிற்றேர்ந்தோரொன்றென் னகத்திலளவில்லா தவாசைகொண்டே, மகிழ்வுற்றகொள்ளைக்கேவமைச்சன்போத வாதித்தன்முத லாஞ்சாமத்தில்வந்தே, இகலவனுய்மாதரசைச்செய்தவஞ்சம் இயம்புதற்குநான் மெத்தஇழிவுற்றேனே.

வசனம்.

வாராய் போத விபூஷணா புவியில் விளங்கும் வேதசாத்திரம் நூல் நுட்பங் களெல்லாம் தேர்ந்த விவேக சீலரான நுங்களை யெண்ணி யிருந்தேன் இன்றல்லவோ உங்கள் சீர்நடத்தை தெரியவந்தது கொடும்பாதகனாகிய போதவாதித்தன் இவிடம்வந்து பத்தினியைச்செய்த வஞ்சனையைச் சொல்லுதற்கு மனம்பின்னிடுகின்றதே.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

அருந்ததிதன்னையொக்கு மன்னையைமனக்துணிந்தே
பொருந்தியேவஞ்சஞ்செய்து போனானொன்றெந்தையேநீர்
வருந்தியேசொல்லும்வார்த்தை மடனுக்குத்தோற்றவில்லை
தெரிந்திடக்கோபமின்றிச் செப்புவீரடியேனுக்கே.

வசனம்.

அருந்ததிக்குச் சமானமாகிய அன்னையை முதலாமந்திரி போதவாதித்தன் வஞ்சித்துப் போனானென்று சொல்வது அடியேன்மனதிற் கின்னதென்று புலப்படாததலால் கோபமின்றி விஸ்தரித்துச் சொல்லவேண்டு மதிபதியே.

இராஜன்சொல். அகவல்.

என்னைநான்சொல்வதேந்திழைவிதியோ, ஐந்திலஞ்சுமுமவனிமேலரசர், மந்திரிகள்வஞ்சம்மனதிலிலெண்ணிச், சிங்குதரோகச்செய்வதுகலமோ, உங்களைப் போலுமுன்னைமசேரனமச்சர், எங்குமில்லையென்றென்னுளங்களித்தே, பிள்ளைகளாகப்பேணியேயிருக்கக், கொள்ளையிலுலோகொடுஞ்சதிசெய்தான், சஞ்சலமுரைக்கத்தயங்குதென்மனமும், வஞ்சனையானவார்த்தையைக்கேளாய், போதவா

சித்தன்பொல்லாப்பாவி, குதவனுகித்தோகையுநாளும், மஞ்சமேல்வெகுவாய் மாளாரித்திரை, யிருசியேயிருக்கயின்சாமத்தில், மாகுமேலிருந்தவன்கலையகற் றிப்படுகன்றனதுபாவியினைத்தைத், கொங்கைமேல்நாகமொப்பெனநடக் க, மங்கையாளுமனத்திடுக்கிட்டே, எழுந்துசெல்வதெவனெனக்கேட்கச், செழு மையாம்பெய்யனைக்கெடுப்பிச்சென்றனன், அந்தச்சணமேயறிவையானதட்டி, எ ன்தனையெழுப்பியும்பினனெல்லாம், நீஇதுல்யாவும்விபுணமுமறிந்த, வேதியரொ ருக்கமென்மையுள்ளவனீ, எண்ணியேபாராயிதாலேமோதான், மண்ணின்மேலித் தவஞ்சனைசரியோ.

* அமிர்தவல்லிசொல் விருத்தம்

அன்னையைப்போலுமென்னை யவன்மனதெண்ணிடாமல்
முன்னஞ்சாமத்தில்வந்தே மோகங்கொண்டந்தப்பாவி
பின்னஞ்செய்ததிதுவிப் பிழையினையென்னசொல்வேன்
மன்னுமிவ்வுலகிலென்று மாளாதகவலையாச்சே.

வசனம்.

பெற்றமாதாவைப்போ லென்னையெண்ணுமல் அந்தப்பாதகனுகிய போதவா தித்தன் என்னைநினைத்த மானபங்கத்தை யென்னசொல்லுவனப்பா போதவிபூ ஷணு.

தரு. இராகம் - நுசாவந்தி. தாளம் - ஆதி.

பல்லவி.

ஐயோநானென்னசெய்வேன் - நாலாமந்திரி - ஐயோநானென்னசெய்வேன்.

அநுபல்லவி.

வையகமீதங்கனைமைந்தனென்றே யிருக்கச்
செய்தவஞ்சகனிவனைக்கச்சிந்தைநோகு தனைக்க (ஐயோ)

சரணங்கள்.

கொடும்பாவியான்முனே - எசனுக்கென்மேல் - கோபம்வந்ததுமேனே
முடிவேந்தருருனிட்டமுனிவாய்ச்சொல்லத் தெரிந்தால்
கடுங்குதென்தன்சடலம்நன்றுநீது மறிந்தால் (ஐயோ)
பாதகனுயிரிழந்தே - அடிதடிக்கப் - பார்த்தாலென்னகுழந்தே
ஆதராதீதிருப்பதல்லால்வேறொன்று மில்லை
காதகன்செய்தசதிகலங்கிநேனென்ன தொல்லை (ஐயோ)
பெற்றமாதாவென்றெனையே - போதவாதித்தன் - பேணுமற்செய்தவினையே
உற்றுப்பார்த்தாலவனுக்கோதவுமில்லை நியாயம்
கற்றமனுமந்திரியேகாண்பாயிதனி யாயம் (ஐயோ)

இராஜன்சொல் விருத்தம்.

மாநுஷனும்பேதவாதித்தமந்திரி பள்ளியறைக்குள்வந்தபயமில்லாமல், ஏதி மவன்மாதர்சைச்செய்துசென்ற தியற்கையனவோவென்கையேந்தம்வாளால், வாதனைசெய்துயிர்பிரிக்கக்கொலைசெய்வோரின்வசம்விடுத்தேயுடன்சித்திரவதை யிடக்கொல்லப், புத்தியையியம்பிதற்குத்தியுண்டோ போதவிபூஷணமனத்திற் பூரிப்பேனே.

வசனம்.

கேளாய் மந்திரியே துரோகியாகிய போதவாதித்தன் பயமில்லாமல் செய் த வஞ்சனைக்கு நீதியில்லாமல் இதோ என்னு கையிலிருக்கு மிவ் வாளால் வெ ட்டுவது மல்லால் கொலையாளரையும்விட்டு சித்திரவதை செய்வதற்குச் சந்தேக மொன்று மில்லை போத விபூஷணு.

போதவிபூஷணன்சொல் விருத்தம்.

எண்ணரியநான்மறையோடாறுசாத்திரம் இயம்புமறவிக்யானங்களையெ ல்லாம், வண்ணமறிந்தறிவுளாய்போன்முதலமைச்சன் மனதிலணுப்பிரமாணவ ஞ்சமில்லான், அண்ணலேநலந்தீதுவிசம்பொய்யென்றே ஆராய்ந்துபாராமலவ னிமீது, இன்னமுடன்கொலைபுரியவகைநித்தீர்த் திட்டவர்நாணிட்டகதைசெப் புவேனே.

வசனம்.

கேளீர்மகிபதியே மநுமுறைநூல்களினுட்பமறிந்தும் இது தர்மம் இது அத ர்மமென்றுந்தெரிந்து மனதிலென்றும் வஞ்சனையில்லாதவருமாகிய போதவா தித்தன் துணிவுடன்செய்ததைக் குற்றமென்று சொல்லுதற்கு என்மனதையமா கின்றது ஈதன்றி தீர்க்கயோசிக்காமல் அவசிதிதீர்த்து பின் உண்மையையறிந்து வெட்கின வரசர்களுண்டு அந்தக் கதையைச் சொல்லுகிறேன் கோபமில்லாம ல் கேட்பீராசே.

போதவிபூஷணன்சொல் கதை.

விருத்தம்.

மன்னவனேமிதிலையென்றோர்நகரந்தன்னில் வாழ்மறையோன்றன்மாமனு டனேவாதாய், அந்நகரைவிட்டுவெளிதேசம்போக அன்பாகவரும்வழியிலந்தக ணமின், றன்மனவியாளுடனேயெதிர்நோக்கச் சந்த்ரமுகவிம்பவெழிற்றைய லான, யின்னிடையும்பிராமணனும்பால்யராகிவிரகமிகவாயிருவர்விருப்புற்றுரே.

வசனம்.

கேளீர் மகாராசனே மிதிலையென்ற பட்டணத்திலிருந்த ஓர்பிராமணன் த ன் மாமனுருடனே சச்சரவு பட்டுக்கொண்டு புறவூர்போகபிரயாணமாகி வரு கின்றபோது வழியெதிரில் பிறவிக் குருடனு மவன் பெண்சாதியும் வருகின்ற அ ளவில் பிறவிக்குருடன் பெண்சாதி எவ்வளப் பெண்ணுகையாலும் பிராமணனு முகிய வாலிபனுகையாலும் இவ்விருவரு மொருவர்க்கொருவர் சைகைசெய்து மோகங்கொண்டனர்.

விருத்தம்.

மோகத்தாலிருவர்சைகைசெய்துகொண்டே மோகஞ்செய்வோர்மரங்கீழ் மூன்னம்தின்றே, தாகத்தேமாங்கனியைத்தருவதாகச் சதிகாரிகுருடனுக்குச்சாற் றிப்பால, ஆகமத்தொன்றன்னுடனேகட்டியன்பாய் அதிசேக்ரமறுநகனையடுத்தார் மேலும், போகவழிதெரியாமற்றிகைத்துக்காலில் புல்ம்புசிதடன்றனியாய்க்கல ங்கினனே.

வசனம்.

இருவர்களுஞ் சைகை செய்துகொண்டு பிறவிக்குருடன் பெண்சாதி பிறவி க்குருடனை மோகஞ்செய்ய வெண்ணி ஓர்மரத்தின்கீழ் அவனை நிறுத்தவைத்து மாங்

கனியொன் றறுத்துவருகிற தாய்வனுக்குச் சொல்லி பாலபிராமண னுடன்கூடிக்கொண்டு மறுதேசம் போய்விட்டாள் குருடனானவன் திக்குகள் தெரியாமல் அந்தவனத்தில் ஆறுநாள் வரையிலும் அன்னந்தண்ணீ ரில்லாமல் புலம்பிக்கொண்டிருந்தானு மரசே.

விருத்தம்.

புலம்பிநீரன்னமின்றியாறுநாளாய்ப் புராந்தகனைந்தோத்திரித்துப்பு ளியமரக்கீழ், கலங்கியிருக்கின்றனவிலோர்தேசத்துக் கனவணிகன்றனதமனைக்கன்னியோடும், நல்முடனேமுன்மாமனூர்வாழூரை நாடிவரும்வழியெதிரில்நலிந்தாகின்றே, குலவந்தகனைக்கண்டசெட்டியாருங் குணமாகக்கேட்கவல்லலக்கூறினானே.

வசனம்.

இவ்விதங் குருடன் புலம்பிக் கொண்டிருக்க மறுதேசத்திலிருந் தோர்வணிகன் தன்மனையாளுடன் கூடிக்கொண்டு அவ்வழிநோக்கி வரவும் அழுதுகொண்டிருந்தகுருடனை நீயார்பிள்ளா யென்றுசெட்டியார் கேட்கவும் தன்பெண்சாதிசெய்த மோசத்தையும் ஆறுநாளா யன்னந்தண்ணீ ரில்லாத விதனத்தையுஞ் சொன்னானும் பூபதியே.

விருத்தம்.

கூறினபோதகமிளகிச்செட்டியாருங்கொண்டுவந்தசாதமிதிற்குருடனுக்கே
வாரியளித்துண்ணவைத்தாயாசந்திர மனவிகரங்கோல்தந்துவரவழைக்கப்
பாரிலிதுதர்மமென்றேசிதடன்சொல்லிப் பக்குவமாயவருடனேபரிந்துவந்தான்
சூரியன்மேற்றிசைமாறமச்சதேசம் சுருக்குடன்சேர்ந்தனரின்னஞ்சொல்லுவேனே.

வசனம்.

குருடன் சொன்னதெல்லாம் செட்டியானவர் கேட்டு மனதிரங்கி தான்கொண்டுவந்த கட்டுசாதத்தைக் கொடுத்துப் பசியாற்றி குருடன்கையி லுள்ளகோலைத் தனதுமனவி வசமேகொடுத்து அழைத்துக்கொண்டு வருகிறபோதுசூரியன் மறைந்து பொழுதுபோனதால் மச்சதேசஞ் சேர்ந்தனரா மன்னவனே.

விருத்தம்.

சேட்டிடுவீர்தங்கள்குலவணிகர்வீட்டில் சேண்மையுடன்சிதடனைக்கைவிடாமலின்றோர், வாட்டமுடனேயன்னஞ்சமைத்துக்கூட வந்தவன்றனக்களித்து மறுநாட்காலை; நாட்டிலத்தகனைவிட்டுவழிநடக்க நாடியந்தச்சண்டாளனவிதுவானால், பாட்டையெதிர்கண்டசெட்டியென துமாதைப் பரிந்தழைத்துப்போவதென்னபாவமென்றான்.

வசனம்.

செட்டியானவர் குருடனைக் கைவிடாமல் தங்கள் மதஸ்தர் வீட்டிலிறங்கி அன்றிரவிலுங் குருடனுக்குப் போசிப்புத்தந்து பொழுது விடிந்தபிறகு செட்டிதனது மனவியை யிட்டுக்கொண்டு பிரயாணமாகிப் போகச் சண்டாளனாகிய குருடன் கோ கோ வென்று கூச்சலிட்டு வழியெதிரில் கண்டு என்னுடன்வந்த செட்டியானவன் என் பெண்சாதியை யிட்டுக்கொண்டு போகின்றானே இதென்னபாபமென் றழுதானும் எந்தையே.

விருத்தம்.

பாபமென்றேபெருங்குரலிட்டழுதுகூவப் பட்டணத்தோரனியாயப்பகையேயென்று, பூபனிடஞ்சொல்லவவர்போவோர்தம்மைப் போயழைத்துவரவுனை

த்துப்புலையாயாமல், கோபமுற்றுவணிகனையுங்கொல்லுதற்கேகொலைஞர்வசமொப்பிவித்துக்கோதையாளைத், தீபமிடுஞ்சுண்ணாம்புக்காளவாயிற் சேர்த்துவிடமன்னன்மறுதீர்த்திட்டானே.

வசனம்.

குருடனானவ னழுவதை யங்குள்ள அயல்வீட்டார் கேட்டு அத்தேசத்தையாளுமரசனிடஞ் சொல்ல இராஜனானவன் ஓ! ஓ! இதென்ன கர்மமென்று குருடனையுஞ் செட்டியையும் செட்டிபெண்சாதியையும் வரவழைத்து யாதொன்றும் விசாரிக்காமல் செட்டியைக் கொலைக்காரர் வசமாக ஒப்பிவைத்தும் செட்டிபெண்சாதியைச் சுண்ணாம்புக் காளவாயிலிட அவநீதி தீர்த்தானும் கொற்றவனே.

விருத்தம்.

தீர்த்தமற்நேத்ரமில்லான்கேட்டிருந்தே திடுக்கிட்டுச்சொல்வதுவோதேவதேவா, பார்த்துவழிதனிலெனதுபசியகற்றிப் பட்டணமேகொண்டுவிட்டபண்புளோர்க்கே, காத்திருந்தேனினிவர்க்குத்திங்குசெய்யக் காசினிமேல்பாவமென்றேளரிக்கூவிச், சேர்த்திருகைகளையுமண்டைமீதுறைந்தே தேர்வேந்தைத்துதைனித்துச்செப்பினானே.

வசனம்.

மச்சதேசத்தரசன் செட்டியையும் செட்டிபெண்சாதியையும் ஆக்கினையிட அனுப்பின செய்தியைப் பிறவிக்குருடன்செவியிற்கேட்டு ஓ!ஓ! தேவனே வழிதெரியாம லலைந்திருந்த எனைக்காப்பாற்றினவர்க்கு நானேதீங்குஎண்ணினேன் அநியாயமாகச் செட்டிபெண்சாதியை விட்டுப் போவானென் றழுததற்கு மதிகெட்ட ராஜன் அவர்கட்கு ஆக்கினையிட் டிருக்கின்றானே யென்று பெருங்குரலிட்டழுதானும் வேந்தே.

விருத்தம்.

செப்பவுற்றநேத்ரமில்லான்வசனங்கேட்டுத் திரத்தூதர்கோனிடமிச்செய்திசொல்ல, அப்பொழுதேமன்னவனார்திடுக்கிட்டேங்கி ஆக்கினைக்குச்செல்பவரையழைக்கவிட்டு, ஒப்புடன்முன்னடந்தசங்கதிகளெல்லா முண்மையறிந்தந்தனையுயிர்வதைத்தார், இப்புவியில்கொற்றவனேநன்றுந்தீதும் எண்ணுமற்கொல்லுவதுமீனமையா.

வசனம்.

இவ்விதமாகக் குருடன் சொன்ன வார்த்தையை அருகிருந்த தூதவர்கேட்டு அவ்வரசனிடஞ் சொல்ல அரசனானவன் திடுக்கிட்டு ஆக்கினைக் கனுப்பிய செட்டியையுஞ் செட்டி பெண்சாதியையும் வரவழைத்து முன்னடந்த செய்தியெல்லாந் திரமாக விசாரித்து அபாண்டஞ் சொன்ன குருடனை யுயிர்வதைத்து அநியாயமா யிவர்கட்கு ஆக்கினை யிட்டோமே யென்று தன்னிலடங்காத விசனமுற்றான் ஆதலால் யாதொருகாரியமுந் தீரவிசாரித்து ஆக்கினை யிடவேண்டுமெயொலா.

விருத்தம்.

ஆதலாதனக்கோர்தாயா யாகுமன்னவனேபோற்றி
போதவாதித்தன்செய்த பொல்லாங்குமுழுதமிக்கே
வாதனையிடுவதற்கு மறுமுறைவழியேயாகும்
நாதனேயடியேனுக்கு நல்விடையருள்செய்வீரே.

வசனம்.

சேவீரன்னலெ எங்கள் மூத்தோனாகிய போதவாதித்த மந்திரிசெய்த குற்றத்தை முழுமையு மாராய்ந்து சாத்திரவிதிப்படி யுண்டாகிய தெண்டனை யிடுவதற்குக் குற்றமில்லை இப்பொழுது விடியுஞ்சமைய மானதால் - அடியேனுக்கு விடைதந்தருள்வீரரசே.

இராஜன்சொல் வசனம்.

நல்லதுன் பதிக்குப் போவாய் போத விபூஷணா.

போதவிபூஷணன்சொல் கொச்சகம்.

ஐந்திலஞ்சூழும்முலகி லனுதினமும்நலந்திகழும்
நன்னூல்புராணகலை நான்மறையோர்டாகமங்கள்
இன்னதெனச்சொன்னற்குணனெங்களண்ணலைவேந்தன்
சின்னபின்னமாய்வதைக்கச் சிந்தையுற்றார்கங்காளர்.

வசனம்.

சிவசிவா பார்வதிமனோகரா அன்பர்க்கருள்பராபரா மறுநீதிச த்திர நான்குவேதங் கலைக்கியானம் நன்றுந் தீதும் இவையவை யென்றெங்கட்கு நற்புத்திகளைச் சொல்லும் போதவாதித்தன் மீது அரசனேதோ குற்றஞ்சாற்றிக் கொல்லுதற்குத் தடி அடித்திருக்கின்றா னிதற்கென்ன செய்வேன் கைலையீசா.

கண்ணி. திபதை - பைரவி தாளம் - ஆதி

எப்படிமனஞ்சகித்திருப்பே னண்ணலிறந்தால்
  எந்தவிதம்பொறுப்பேன் என்டோளா.
இப்புவிமீதினிலெங்கண் மூவரில்மூத்தோன்
  எண்ணச்சங்கதியென்னமோ என்டோளா.
மன்னவனரசியு மஞ்சமிசைத்தூங்கையில்
  வந்தேமுதலாஞ்சாமம் என்டோளா.
அன்னைபத்தினிமார்மே லஞ்சாமற்றன்கைநக
  மழுத்திச்சென்றதென்னமோ என்டோளா.
சர்ப்பனையென்றுரைக்கச் சந்தேகமாகுதே
  சதுர்மறைநூலறிந்தோன் என்டோளா.
அற்பனதாகின துரியேனிந்தப்பிழையை
  ஆனால்வஞ்சனையெண்ணி என்டோளா.
தன்னுமமேயுரைத்த சங்கடமுரிதேதோ
  சதியென்றறையலாமோ என்டோளா.
நன்மைதீமையறிந்தே நவில்போதவாதித்தனை
  நானைவேந்தன்வதைக்க என்டோளா.
கோபமிகவாகின சொற்றவனுக்கோர்மறு
  கூறினன்முழுதறிய என்டோளா.
பாவிகடியெனத்தூற்றிப் பழிவாங்குவேனென்றே
  பாராமலரசனும் என்டோளா.
சித்திரவதையிட்டால் செப்புதற்கேதுமுண்டோ
  தேர்வேந்தனைத்தடுக்க என்டோளா.

மெத்தத்துயராகியே சித்தம்பிரமிக்குதையோ
  வெண்விடைமிசையேறும் என்டோளா.

பொது விருத்தம்

மன்னவன்முதலமைச்சை வாதிப்பானென்றேநாலான்
றன்னகமுருகிப்போகத் தையலாளமிர்தவல்லி
என்னதான்செய்வதென்று மேங்கியேதடி அடித்துப்
பின்னையுமரசனோடு பேதையும்புலம்புவாளே.

வசனம்.

முதலாமந்திரி போதவாதித்தனை இராஜன் கொலையிடுவாரோ வென்னமோ வென்று நாலாமந்திரி போதவிபூஷணன் புலம்பிக்கொண்டு தனவிருப்பிடம் போனபிறகு பின்னையும் இராசபத்தினியாகிய வமிர்தவல்லி புலம்புகின்ற விதங் காண்க.

அமிர்தவல்லிசொல் கொச்சகம்.

குற்றமப்பாவிசெய்த தைக்கூறிடவேயிம்மூவர்
உற்றநன்றுதிதென்றே யுபகதைகளையுமுரைத்தார்
பற்றுதையோயென்தனகம் பாதகனையிறந்தால்
கொற்றவாமனம்பூரிக் குவலயத்தில்வாழ்வேனே.

வசனம்.

ஐயையோ என்னசெய்வேன் பாதகனாகிய போதவாதித்தன் செய்த வார்த்தையை வந்தமூன்றுமந்திரிகளிடஞ்சொல்ல அவர்க ளொருவர்க்கொருவர் தாங்க கொள்ளாமையால் உபகதைகளைப் பினத்திவிட்டுப் போனார்கள் அதற்குத் தாங்க சிநேகராகையால் உபகதைகளைப் பினத்திவிட்டுப் போனார்கள் நான் பூலோகத்தில் பாரபக்ஷமா யிருக்கின்றீர் அவனைஉயிர் வதைக்காவிட்டால் நான் பூலோகத்தில் வாழ்வதில்லை மன்னவா.

புலம்பல். கண்ணி. திபதை-இராகம்-ஆனந்தபைரவி. தாளம்-ரூபகம்.

தேசதேசத்தரசர் திறைதந்தடியிற்சூழும்-திரா-என்தன்-மாரா
வாசமலரணிந்த நேசசவுந்தரிய-மகிழு-வல்ல-சுகுண
பஞ்சபாதகன்போத வாதித்தனெனையெண்ணப்-பாபம்-கொடும்-கோபம்
சஞ்சலத்தீவினையை வந்தமூன்றமைச்சர்பால் - சாற்ற - அவர் - போற்ற
கற்றகதைகளெதிர் கழறிச்சென்றாரிது - கன்மம் - என்ன - வன்மம்
முற்றுஞ்சிருட்டிக்குமயன் மூவிந்தென்சிரம்வரைந்த-முறையோ-என்தன்-குறை
வல்லக்கொலைஞரிட மாபாவியைவிடுத்தே - வதைக்க - அஞ்சம் - சதைக்க [யோ
கொல்லத்தடிஅடித்துக் கொடியவனுமழுது-கூவ-உயிர்-ஏவ
சித்திரவதையிட்டால் மெத்தமனமகிழ்வேன்-சீலா-வனு-கூலா
சத்துவனேயடியா ளுற்றகுறையுமக்குச் - சரியோ - இது - நெறியோ,
எண்ணிட்டீதியிலை யிப்படியாகாவிட்டால் - சனம் - அவ - மானம்
மண்ணின்மேலெவர்களும் வசைகூறிடுவாருனை - மன்று - இன்ன - மென்று
சொற்படியாகாவிடில் தனையாளுனிறந்திடத் - தாசமே - இது - நிசமே
பொற்பதம்பணிந்தேனிப் போதேமனந்தானிலீர்-புனாயே-என்தன்-முறையே.

இராஜன்சொல் விருத்தம்.

மனமுருகியழுதென்றனடியைப்போற்றும் வண்ணனமேயமிர்தவல்லிமயிலேகேளாய், தினகரனுமுதயவொளிர்சமையமாச்ச இடமுடனேபாதகனைச்சிறைசெய்வித்தே, உனதுமொழிப்படிக்கொலுவில்வரவழைத்திவ் வுளவறிந்தசண்டாளனுடல்துடிக்க, எனதுகரமேந்திடுமிக்கூர்மைவாளா லிருபிளவாகிடச்செய்வேனெழுந்திராயே.

வசனம்.

கேளாய்பெண்ணே யமிர்தவல்லி நீ இன்னம்புலம்பியழுவதேது இனி சூரியனுதையமாகுந்தருணமானதால் உன்சொற்படிக்கே அந்தப்பாதகனைச் சிறைசெய்வித்துக் கொலுச்சமுகம் வரவழைத்து இதோ நானேந்திடும்வாளால் அவனை இருபிளவாகப் பிளநதெறிவே னெழுந்திராயன்னமே.

பொதுவிருத்தம்.

செங்கதிருதையமாகச் சிருட்ளகேசேந்திரன்
கங்கைவேணியனைப்போற்றிக் கருதியேநேமநிஷ்டை
துங்கமாய்முடித்தபின்னர் துரிதமாயவமச்சன்செய்த
பங்கமேயறியவேண்டிப் பார்த்திபன்வருகின்றனே.

வசனம்.

அகோஅதெப்படிஎன்றால் சூரியனுதையமாகவும் அளகேசேந்த்ரன் நேமநிஷ்டைமுடித்துக்கொண்டு போதவாதித்தன்செய்ததை யறியவேண்டிக் கொலுவிற்கு வருகின்றவிதங்காண்க.

இரண்டாம்வகுப்பு முற்றிற்று.

மூன்றும் வகுப்பு.

☞ அளகேசன்வருகிறதருவையும் சிம்மாசனவிருத்தத்தையு மிவண்சொல்லிக்கொள்ளவேண்டியது.

இராஜன்சொல் விருத்தம்.

கொலுவினெதிரேயிருந்தங்கிலுமேவற் கொள்ளுமடாகட்டியனேகூறக்கேளாய், சலுதிநிடுதிடெனவிச்சணம்நீயோடிச் சண்டாளர்தமைச்சிறையிற்சாத்துவிக்கும், வலுமையுளகாவலர்கள்சூலம்பிண்டி வாதைசெயுமாயுதங்கள்வலமாயேந்தி, அனுவலுற்றதென்றவர்கள்சீக்ரமாயோ ரடியிலிவண்சேருதற்காக்ஞாபிப்பாயே.

வசனம்.

ஆடா அடாவீரகட்டியனே யதிகசீக்கிரமாகநீயோடி வல்லமைபொருந்திய காவற்காரர்கள் தங்கள் ஆயுதமுஸ்தீப்புடனே ஏதோ அலுவல்வந்ததென்றுநானழைத்ததாக இக்ஷணமே கொலுச்சமுகம் வரச்சொல்லி வருவாயடாகட்டியனே.

கட்டியன்சொல் வஞ்சித்துறை.

கற்பகமென்னும், மற்புயமன்னு, பொற்புடன்சொன்ன, சொற்படிசெய்வேன்,

காவற்காரர் தோற்றம்.

அந்திபின்மலரணிந்தே யரனிருபாதம்போற்றி
கோத்திரமெழுபுயங்கள் கொட்டியேதுடைகள்தட்டிப்
பாத்திரக்கூர்மைவேலும் பட்டையங்கையிலேந்திக்
காத்திரமிகுத்தகாவற் காரரும்வருகின்றனோ.

தரு. இராகம் - கலியாணி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

காவற்காரர்நாங்களே-வெகுகெட்டிக்-காவற்காரர்நாங்களே.

அநுபல்லவி.

மாவலனளகேசன் விசுவாசன்மகராஜன்
மகிழ்வுற்றிடத்தினமேவல்செய் தகமெச்சியேபுகழ்பெற்றிடும் (காவற்)

சரணங்கள்.

மகிபனுடனேயெதிர்த்துவாதாடு மடையரைச்சிறை யடைப்போம்-குருவஞ்சக்கள்வர்களெங்கள்கைச்சிக்கினால் மறுவின்றித்தலையுடைப்போம்
ஜெகமிசைமுனிவோர்கள்பிராமணரைத் தீதம்பாப்போருட்டிகடிப்போம் - பின்சென்றுசரசமொழிபேசுமூடரைச் சித்திரவதையிட் டடிப்போம்
மகிழ்வுடன்பெற்றவன்னைதந்தையரை வசைசெய்திடுங்கொடியசண்டாளரைத் தகுதியாயிடச்செக்கினிலெள்ளைப்போல் (காவற்)

ஜாடித்தறிவுகூறியே மூடத்தனமோடச்செயும் புலியைப்பார்த்துப்பூனைசூடிட்டதைப் போல்வருமீனரைத் தாக்குவோம் - வீண்பொய்பேசுமுழுத்தர்களுயிர்கால்வார்போசவானுக்கிரையாக்குவோம் [கொடு
வலிமையுள்ளோரொன்றெங்களையெதிர்க்கும்வண்டர்களின்சிரம்போக்குவோம்-வஞ்சவார்த்தையினால்நேசம்பிரிவிக்கும் வாயர்களைப்பற்றித் தாக்குவோம்
கலையறிந்துமனதிலிதையில்லாக் கசடர்கள்பூமேலிருப்பதுஞ்சொல்லாநலஞ்செயாதிடுருஜண்டிக்கிடாக்களை (காவற்)

நடலைபெறகெடும்வேலினு லுடலெங்கினும்உடன்சில்லிடும் கார்த்திகேயன்றந்தையரனடியினை கனவிலும்போற்றித்துதிப்போம்-சொல்லுங் கவிஞருக்குதவாதவசடரைக் கருவிக்கிரையாய்ச் சதைப்போம்
பார்த்திபனளகேசன்கட்டளைக்குப் பங்கஞ்செய்தோர்களையுதைப்போம்-கெடும் பாத்தையர்க்கேதனத்தையளித்திடும் பவ்விலாப்பேயரைவதைப்போம்
ஆர்த்தர்தனம்படைத்திருந்திறந்தென்ன சருணநால்வர்கதைவிலாசஞ்சொன்ன மூர்த்திகவிப்புகழ்க்கம்பத்தைநாட்டுவோம்
முகில்கொள்ளார்கவிசூழ்ந்திடு மகிலத்தினிலிதகைபெற்றிடுஞ் (காவற்)

முதற்காவற்காரன்சொல் விருத்தம்.

வையகமோர்குடைக்கீழ் மாநிலாச்செங்கோலோச்சும்
ஐயனேயுமதுபொற்று ளடியவர்சிரமமைத்துச்

செய்யகன்மலர்கள்தூவிச் சேவித்தோமெங்களைத்தாம்
பையவேயழைத்தசேதி பார்த்திபாசொல்லுவீரே.

வசனம்.

சரணம் சரணம் மகாராஜப்பிரபுவே தாங்களிவ் வடியோமையழைத்த சேதியைச் சொல்லுவீர் மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

காவலரே [illegible] சீங்கள் சராசனம்போல்பாய்ந்திடுவீர்கழறல்கேண்மின், மேவிமுதல்மந்திரிபோதவாதித்தன்முன் விளங்குமவன்பதிகடந்துவெளிவிடாமல், பாவிமுகம்பார்ப்பதில்லைமுக்ளாயித்தப் பார்த்திபனுருளாயிதென் பரிவில்லாமல், தீவிரமாய்க்காத்திருப்பீர்கொலுமுன்பாகத் தியன்வரலாகாது செல்லுவீரே.

வசனம்.

ஆ! ஆ! காவற் காரர்களே திடுதிடென்று நீங்களோடி மகாபாதகனுகிய முதலாமந்திரி போதவாதித்த னென்பவனை இந்தக் கொலுச்சமுகம் வரப்போகாதென்றும் அந்தச்சண்டாளன் முகத்தை நான்பார்க்கே னென்றும் அவனுக்குச் சொல்லி பிறகு அவனிருக்கும் அரமனையைவிட்டு வெளிவராமல் மகாசாக்கிரதையுடனே காவலிருந்து நான் மறுவுத்தரவு எவ்விதமனுப்புவேனே அவ்விதம் நடப்பீர்கள் காவற்காரரே.

உ - வது. காவற்காரன்சொல் வஞ்சித்துறை

வடிவுளவரசே, அடிபணிந்திட்டோம்
கொடியினிற்போய்ச்சொற், படியதாய்ச்செய்வோம்.

முதற்காவற்காரன்சொல் விருத்தம்.

இருவிழிபொறிபறக்க இறையவன்மிகச்சினத்துத்
தருமனுமுதலமைச்சன் றன்மிசைக்குற்றஞ்சாற்றி
வருகவும்போகாதென்றார் வஞ்சமீதென்னகாரணம்
ஒருமையாய்வீரசிங்கா ஓடுவோமென்பின்வாடா.

வசனம்.

அடாதம்பி வீரசிங்கா முதலாமந்திரி யின்மேல் மகாராஜன் கோபித்து நம்மை அவரிடம்போய்க் காவலிருக்க விடைகொடுத்தாரே ஓ! ஓ! இதென்னகாரணம் ஓடிவாடா.

தரு. இராகம் - மோகனம். தாளம் - ஆதி.

ப. ஏகலாமேவாடா - முதலமைச்சன் - இருந்திடும்பதிக்கேடா.
மாகோபமாகியவள்ளலுரைத் திட்டார்
ஓகோவிதென்னவென்றுணரோமேதுடித் திட்டார் (ஏக)

எவ்வென்றுசொல்வதண்ணேன் - அரசனுர் - இதயஞ்சினத்தார்நம்முன்னே
இ. அந்நாளிவ்வர்வரவரும்விவேகிக ளென்று
மன்னன்மிகமகிழ்வாய்மனம்பூரித்தாரே யன்று (என்ன)
தருமவான்முதல்மந்திரி - மறுமுறை - சாற்றிடவெகுதந்திரி

அருமறையாகமமாய்ந்தநல்லவல் லாளன்
வரும்போவதுமுறைப்போன்வாஞ்சைபெறுங்கு ணாளன் (ஏக)
திருபனுர்மனங்கொதிக்க - இருவிழியில் - நெருப்புப்பொறிகள்பரக்க
பெருங்கோபமாகினுர்பேதைமந்திரி மீது
அருஞ்சிறையாமிதுவராஞலிதென்ன சூது (என்ன)
காவலன்மருமொழியே - யனுப்பமட்டும் - காக்கமேவல்வழியே
சாவதும்பிறப்பதுஞ்சகரனரு ளாகும்
பூவுலகிலவனைப்போற்றினுல்துயர் போகும் (ஏக)
மன்னவனுனைமீதி - செய்தால்கம்மை - வாட்டுவாருடன்சீதி
சொன்னமொழிதடுத்தால்நுகளாயண்ணேன் வாராய்
மின்னிடமந்திரிவீடுவிளங்குவதே பாராய் (என்ன)

முதற்காவற்காரன்சொல் விருத்தம்.

நன்னவிலாகமங்க ளுண்மறையாவுமாய்ந்தே
இன்னதென்றேயுரைக்கு மெழில்முதலமைச்சேபோற்றி
மன்னனும்பதியைவிட்டு வந்திடப்போகாதென்றும்
உன்னையுங்காவலாக்க ஓதினுரறிந்திடரே.

வசனம்.

சரணம் சரணமையா முதலாமந்திரியே மகாராஜன் தாங்களிருக்கும் பதியைவிட்டுக் கொலுசமுகம் வரப்போகாதென்று காவலிருக்க எங்களை அனுப்பினுரையா மந்திரி.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

அல்லல்வாள்மனதைவாட்ட அறைந்தகாவலரோவாழி
வல்லவனளகேசர்க்கு வஞ்சம்நான்செய்ததென்ன
கொல்லுமம்பதுபோல்நீங்கள் கொப்பெனவந்ததேது
சொல்லுவீர்வேந்தன்சொன்ன துகளிதென்றெனதனுக்கே.

வசனம்.

சிரஞ்சீவியாயிருப்பீர் காவற் காரர்களே விசனமென்னும் வாளானது என் மனதை யறுக்கும்படியாய் நீங்கள் சொன்னதைக் கேட்டுத் திடுக்கிட்டேன் ஐயையோ தந்தையாகிய அளகேந்திர பூபதிக்கு நான் அடாதகுற்றஞ் செய்ததென்ன தெரியச்சொல்வீர் காவலர்களே.

உ - வது. காவற்காரன்சொல் விருத்தம்.

அறமுருவாயமைந்த அன்புளவமைச்சேகேளீர்
இறையவ்னகஞ்சினத்தே எங்களைவரவழைத்தே
விறலுடன்கொலுவுக்கும்மை விட்டிடலாகாதென்றார்
குறையவரொன்னமுற்ற கோதிதென்றறியோமையா.

வசனம்.

சரணம் சரணமையா முதலாமந்திரியே மகாராஜ னெங்களை வரவழைத்து இருகண்களிலும் நெருப்புப் பொறிபறக்க வொரே கோபத்துடன் உம்முடையமுகத்தைப் பார்ப்ப தில்லையென்றும் தாங்களிருக்கும் பதியைவிட்டு கொலுச்சமுக

ம் வரப்போகாதென்றும் எங்களைக் காவலாயிருக்க அனுப்பினதே யல்லாமல் தங்கள்மீது நேர்ந்திருக்குங் குற்றமேதோ அறியோமையா மந்திரியே.

போதவாதித்தன்சொல் வசனம்.

அப்படியே சாக்கிரதையுடன் காத்திருப்பீர் காவலரே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

நூன்முறைவிதிகடந்தே நுவன்றிட்டதேதுமுண்டேல்
கோன்மனதேற்றிடாத குற்றம்நான்செய்திலேனே
நான்முகனரியுமொன்று நக்கனேயடியேன்மீதே
ஏன்சினமுற்றுமிந்த வெண்ணத்தையறிகிலேனே.

வசனம்.

அரகரா சாமவேதம்பாடித் தாண்டவமாடிய சதாசிவப்பொருளே தருமசாத்திரங்கள் சொல்வதைத் தடுத்து அவநீதி சொன்னதுண்டோ அல்ல தெனதரசன் அளகேந்திரபூபதி மனதுக்கேற்காத குற்றம்நான் செய்ததுண்டோ இன்னதென்றறியேனே காவற்காரரை யனுப்பிச் சிறைக்கொப்பந்தமாயிருக்கும்படிச் செய்ததென்ன காரணமோ சிவசங்கரா.

கண்ணி திபதை - நாதநாமக்கிரிகை. தாளம் - ஆதி.

என்னென்றிதையெண்ணுவே னென்மனந்துயராகி
ஏங்கித்தவிக்கின்றனே சிவைபாகா
மின்னுந்தண்மதிபுனை வேணியனேமறை
மீதாடனம்புரி சிவைபாகா
அந்நாளில்மதுரேச னறிவிலாநீதிசெய்
ததனுவிளையோருடன் சிவைபாகா
அந்நகரினைவிட்டு அன்பாவரவழியில்
அளகாபுரிவணிகன் சிவைபாகா
ஒட்டகம்பார்த்ததுண்டோ வென்றேதியெங்களைக்கேட்க
உண்மைக்குறிப்புரைத்தோஞ் சிவைபாகா
திட்டமுடன்குறிப்பைச் செப்பினதாலெங்களைத்
திருடரென்றேபற்றினன் சிவைபாகா
வாதிட்டவளகேச மன்னன்சமுகம்வர
மறுநீதியையுணர்ந்தே சிவைபாகா
ஏதமொழிந்திடாம லெதிர்த்தவணிகனுக்கும்
இறையவனிதிதந்து சிவைபாகா
அன்னோன்றனையனுப்பி யறிவிற்சிறந்தயுத்தி
அமைச்சரென்றேதழுவி சிவைபாகா
முன்னோர்தர்ம்மமீதென்றே முகமலர்ந்தன்புடன்
முடிவேந்தனமைச்சராய் சிவைபாகா
ஆதீனத்திற்குடையவருஞ் சேயரென்றெங்களை
அரசனுந்தேவியுஞ் சிவைபாகா
ஆதரித்தமன்னனுக் கனுதினந்தீதல்ல
லாகாமலன்புடன் சிவைபாகா

பகைவர்களாகிய பார்த்திபால்குறை
பற்றுமெவ்ரேயிரவில் சிவைபாகா
ககையாயர்தந்தச்சாமஞ் சதுரவருங்காப்போஞ்
சங்கைசொல்லாமல்வேந்தன் சிவைபாகா
என்றிப்படியிருக்க இயம்பிடுமொன்றுநாள்
இரவுமுன்சாமத்தில் சிவைபாகா
நன்றுடனேகாவல் நகரமெங்குஞ்சுற்றி
நான்வரும்வேளையில் சிவைபாகா
வடதிசையமுஞ்சப்தம் வந்ததால்யான்சென்றேன்
வனதுலையத்துள்கவ சிவைபாகா
திடம்பேயோமுனியோயார் செய்வென்றெதிரில்கேட்கத்
திரிநேத்திரியைக்கண்டேன் சிவைபாகா
அழுவதென்னகொள்ளையென் றடிபணிந்திறைஞ்சிட
அரசனுக்காகுர்துன்பஞ் சிவைபாகா
பழுதிலாமலுரைத்த பகவதியருள்பெற்றுப்
பருந்துயரினிலாழ்ந்தேன் சிவைபாகா
தேவியுரைப்படியித் தேசக்குடித்தலைவன்
செழிந்தரவமென்று சிவைபாகா
காவலனுக்குநெற் கதிர்க்கோட்டைநேற்றுதைய
காலைக்கொணர்ந்தீய்ந்தான் சிவைபாகா
தரியலன்விஜயமார்த் தாண்டன்பொறிகளம்பு
தாழியிலடக்கிவிட்டான் சிவைபாகா
அரசனதிந்திடாம லதனைத்தடுத்தேன்பின்
பல்லிற்புதியசாதஞ் சிவைபாகா
மகிபாலன்பொசிக்குமுன் வந்தேமுதற்பிடியே
வாங்கினேன்விஷமின்றி சிவைபாகா
ஜெகபதியளகேசன் றெரிவையுடன்மஞ்சமேல்
சேராய்த்தூங்கும்வேளை சிவைபாகா
சங்கிலிவழியாகச் சர்ப்பமிறங்கிடவே
சதைத்தேனென்கைவாளால் சிவைபாகா
மங்கையரசியன்னை மார்மேற்குருதித்துளி
வாய்த்ததையுமெடுத்தே சிவைபாகா
திரும்புமவ்வேளையிற் றேவி துடித்தெழுந்து
செல்வதாரெனக்கேட்கச் சிவைபாகா
வருமென்னுமமுனாத்து வந்தேவிதாவிறைவன்
மனஞ்சினமுற்றதோ சிவைபாகா
பகர்ந்திடும்நீதியிற் பிழைதேறகண்டாரோ
பாவியொன்றுமறியேன் சிவைபாகா
இகலிதேதோவென் றெண்ணவுந்தோற்றிலே
இருகண்ணீர்சொரியுதே சிவைபாகா

இராஜபத்தினியென்மே லியம்பினரோகுற்ற
மின்னதென்றறிந்திடேன் — சிவைபாகா
நிராதாரப்பொருளே நீனையலர்மல்வேறு
நீணிலத்தெவருண்டு — சிவைபாகா

போதவாதித்தன்சொல் விருத்தம்.

இறைசெய்கின்றவீரர் தீவிரமாகவந்து
இறையவன்கொலுவுக்கென்னை யேகவுமாகாதென்றே
முறையுமிப்பதியிருக்க முன்வாயல்காக்கலுற்றார்
குறையிதென்றறியேனென்ன கொள்ளையோசூலபாணி.

வசனம்.

அரகரா காளகண்ட ருத்திராக்ஷ அரவாபரணமணிந்த கைலையங்கிரியீசனே அடியேனுமது பாதாம் புயத்திற்கர்ச் சனைச்செய்து மகாராஜன் கொலுவுக்குப் போக எண்ணங் கொண்டிருக்குஞ் சமையத்தில் காவற் காரர்கள்வந்து கொலுச்சமுகம் நான்போகக் கூடாதென்று நானிருக்கும் முன்வாசலிற் காத்திருக்கின்றார்களே இதெல்லாமுனது செயலென்று நம்புகின்றேன் கர்த்தனே.

புலம்பல். கண்ணி - திபதை - ஆகிரி. தாளம் - ஆதி.

பூமலரயனுந்தேவர் போராடியேகாணு	ஈசனே
மாமன்னவனென்மேல் வஞ்சமுற்றிருப்பதேன்	ஈசனே
கோதையரசியாள் குற்றமென்சொன்னாரோ	ஈசனே
ஏததென்றறியேனென் னிதையங்கலங்குதே	ஈசனே
கொடுங்காவலரைவிட்டுக் கொலுவரலாகாதென்றே	ஈசனே
அடியேன்பதியிருக்க அறைந்தார்சிறைபிதல்லோ	ஈசனே
பெரியோரைமதியாமற் பேசினதேதுண்டோ	ஈசனே
குருக்கள்மொழிகடந்து கூறினனோகுற்றம்	ஈசனே
மன்னன்சிறிற்றுனை மாநிலத்தெவருண்டு	ஈசனே
உன்னிருபொற்பத முளத்துதித்தேனேயான்	ஈசனே
கொல்லவேந்தனுலாகுங் கூறவெவர்களுண்டு	ஈசனே
அல்லாமலென்றனை ஆக்கினையிடுவரோ	ஈசனே
குற்றமீதென்று கொலுவில்வரவழைத்தே	ஈசனே
உற்றதறிந்துபின் னுயிர்வதைத்திடலாகும்	ஈசனே
அறியாமற்கொலைசெய்தா லவனியோர்கள்நகைப்பார்	ஈசனே
சிறியன்செய்தபிழையைத் தெரிந்தபின்னலமாகும்	ஈசனே
நகரிலுள்ளோரென்னை நகைத்திடலாச்சுதே	ஈசனே
வகையீதென்றறிந்திடேன் மனதுபுண்ணாகுதே	ஈசனே

தேவாரம்.

தீயிற்புழுகைப்போலுந் திகைக்குதென்மனதுமையோ
நேயமாயெனைரக்ஷிக்கும் நிருபனுக்கென்னகோபம்
மாயமோபிர்மன்றேடி மனதயர்வுற்றதேவா
சேயனையலையவிக்குஞ் செயலிதேவேறென்றில்லை.

பொது வசனம்.

இந்தப் பிரகாரமாக முதலாமந்திரி போதவாதித்தன் றன்வளவிற் புலம்பிக் கொண்டிருக்குந் தருணத்தில் அளகேந்திரன் கொலுவில் நடக்கிறவிதங்காண்க.

அளகேசன்சொல் விருத்தம்.

திரம்இருகட்டியா விக்ஷணத்திலேயேசென்று
சுருதியந்தணரும்நீதி சொல்லுமென்பழையமந்திரி
வரவுரைத்திட்டேனென்று வண்கொலுச்சமுகம்சேர
சரசமென்றேயழைத்துச் சாக்கிரதையாகவாடா.

வசனம்.

அடா வீரகட்டியனே யதிகதுரிதமாய் நீசென்று வேதநீதிகளைச் சொல்லும் பிராமணர்களும் பழையமந்திரியாகிய மநுநீதி யென்பவரையும் நான் அழைத்தேனென்று வெகு சாக்கிரதையா யழைத்தோடி வாடா கட்டியா.

கட்டியன்சொல் வஞ்சித்துறை.

தினகரமணியே, மநுநிறையரசே, உனதுசொற்படியே, இனியழைத்திடுவேன்.

தரு. இராகம் - தேசிகம். தாளம் - ரூபகம்.

பல்லவி.

வந்தானளகைமந்திரிமநுநீதி - கொலுவைநாடி - வந்தானளகைமந்திரிமநுநீதி.

அநுபல்லவி.

செந்தாமரைமலர்வதனசுந்தரன் நீதம்நன்றறிந்தரைக்குந்தந்திரன் — யோக்கியன்
விந்தையாகமந்தேர்ந்தநல் — றக்கோன் (வந்தா)
விபுதன்சாதனையிக்கோன் நிபுணன்விரதன்

சரணங்கள்.

வச்சிரமிழைத்தகுச்சுக்கொண்டைதுலங்க - ஒளிமிகுந்தகன்
மணிகள்பதித்தவிருபுஜங் — குலுங்க
பச்சைக்கல்லிழைத்தநுதலணி — யலங்க - மார்பதக்கத்தோடு
பண்பதாகவேகாதுக்கரா — இலங்க
உச்சிதமுடன்கடகங்கள் — மின்ன
ஒவ்வமைதரும்பசும்பொற்பணிகள்தன்ன மெச்சருமுத்துமாலைகளாடவே (வந்தா)
விளைவாய்த்திருக்கொலுநாடியே இறைவனுண்மகிழ்நீடியே

அரசர்க்குநன்மதியுரைக்கும் — யோக்கியன் - சன்றால்கண்டதி
னளவிலக்கமறிந்திசைக்குஞ்சிலாக்கியன்
தரையுளோர்மகிழும்படியா — வாக்கியன் - வஞ்சற்குநன்னெறி
சாற்றிமனகிருளறுத்திடும் — பாக்கியன்
புனைபெறவவநீதியென்றருஞ் — சொல்லான்
பொய்யைமறந்துமெய்யைச்சேர்ந்தநல்லான்பெருமைமிகுந்தவிவேகனிவனே (வந்தா)
பிறைசூடியசடையோன்பதம் மறவாததுதிபுரிவோனிதம்

அளகைப்புரியையாளு — மகிபாலன் - நாலமைச்சர்க்குமுன்
னுதிமந்திரியான — நயசீலன்

ளங்கமெள்ளளவில்லாதான்னூலன் - பரவைசூழுங்
காசினியரசர்க்கு மறுகூலன்
தளிர்மலர்மிசைவாழ்ந்திடும் பகவன் } நற்றவம்புரிந்தளித்தவனிவன்
இளையர்மனதுள்ள வீரன் }
இசைபெற்றுயர்வெகுமானி விசையம்பெறும்பிரதானி (வந்தா)

மருநீதிமந்திரிசொல் விருத்தம்.

பரவைசூழ்ந்திலகுமிந்தப் பாருலகரசர்வந்தே
இருபுறந்தாவிப்போற்றி எண்ணருமணிகள்குப்பை
திறைகொணர்ந்தஞ்சலென்னுந் தின்புயத்தவனேதர்ம்ம
நெறிதவறுமலாளும் நிருபனேசரணமையா.

இராஜன்சொல் வெண்செந்துறை.

வந்தமந்திரியே வண்மையாயிந்த
விந்தையாசனத்தில் வீற்றிருப்பாயே.

பொது விருத்தம்.

விரகட்டியனுஞ்சென்று விரைவுடனளகேசேந்திரன்
நேருடனழைத்தசேதி நிபுணவந்தணர்க்குரைக்கச்
சீருடன்வேதசாத்திரந் திகழும்பஞ்சாங்கமேந்தி
ஏருடன்கொலுவைநாடி இயம்பும்பூசுரர்வந்தாரே.

வசனம்.

அகோ அதெப்படியென்றால் கட்டியக்காரனானவன் மன்னவ னழைத்தசேதியைப் பிராமணர்களுக்குச்சொல்ல வேதசாத்திரந் தருமநூல் பஞ்சாங்க மெடுத்துக்கொண்டு பூசுரர்வருகிற விதங்காண்க.

தரு. இராகம் - சங்கராபரணம். தாளம் - ஆதி.

பல்லவி.

பூசுரர்நாங்களே - வேதஞ்சொல்லும் - பூசுரர்நாங்களே.

அநுபல்லவி.

மாசிலாதஜெகத்தீசனைத் — துதிப்போம்
மனுநீதியில்தவறும்வஞ்சகரைச் — சினப்போம் (பூசுரர்)

சரணங்கள்.

ஏதமகிந்திடாமல்வீண்தண்டனை செயுந்
இறையவர்க்குநீதிநூல் — படிப்போம் - பூவில்
இந்திரஜாலமயேந்திரஜாலத்தால்
ஏமாத்துமமைச்சரைக் — கடிப்போம்
குருடன்சபைதனில்படுவழக்குரைத்திடுந்
துட்டர்வந்தாலெட்ட — நடப்போம் - வேதஞ்
சொல்லுமொழிமரவாவல்லவருடனுந்
துணையாகவேநேசந் — தொடுப்போம்
பூததயையிலாதபொல்லாத — வசடரை
வாத்தையிடனாயம்வழுத்துவோர் — கசடரை (பூசுரர்)

பிராமணர்சொல் விருத்தம்.

விரதநீதியில்வழாத வேந்தனேஆசீர்வாதம்
கரகபாலனைத்துதிக்குங் காவலாஆசீர்வாதம்
தருமமும்புகழ்நிறைந்த சாம்ராஜ்யாஆசீர்வாதம்
திருவளரளகேசேந்திர தீரனேஆசீர்வாதம்.

வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் சுகிபவா சுகிபவா அளகேந்திர மகாபிரபுவே.

இராஜன்சொல் வெண்செந்துறை.

புண்ணியமிகுத்த பூசுரோத்தமரே
வண்ணமாமிந்த வாசனத்திருப்பீர்.

மருநீதிமந்திரிசொல் விருத்தம்.

மருவலர்களுயர்கவர்ந்தவெற்றிபூண்டு மாநிலந்திற்கோலோச்சுமன்னனுகே வீர், அருமையுளநந்தேசக்குடிகளுக்கே அல்லலேதாகிலுண்டோஅவனிமீது, செருவமிகக்கொண்டிருக்குமரசர்சேதிகேள்வியுண்டோயாதொன்றுங்கிளத்திடாமல், திருவிழிகள்பொறிபறக்கமுகஞ்சினத்துத் தேவரீரிருப்பதென்னசெப்புவீரே.

வசனம்.

கேளீ ரளகேந்திரபூபதியே நமதுதேசத்தில் வாழப்பட்ட குடிகளுக்கு யேதாகிலும் விசனமுண்டா அல்லது உமது செங்கோலி லடங்கிய இராஜர்கள் செருவங்கொண்டு வாதிட்வெண்ணங் கொண்டிருக்கக் கேள்வியுண்டோ ஓ? ஓ? இருவிழிகளிலும் நெருப்புப்பொறி பறக்கத்தக்க கொடூரமுகத்துடன் யாதொன்றுஞ் சொல்லாமல் மவுனத்தோ டிருக்குங் காரணத்தை தெரியச்சொல்வீர் மகிபனே.

இராஜன்சொல் விருத்தம்.

அகிலசராசரங்களையன்றளித்தபிர்ம்மன் அரிவைதலையினிலிவ்வாறமைத்திட்டானோ, வகையிதென்னவென்றறியேனிரவில்யானும் மாதரசியிருவருமாய்மஞ்சமீது, மிகமகிழ்வாய்நித்திரையுற்றமுதலாஞ்சாமம்வெகுமெதுவாய்ப்போதவாதித்தமந்திரி, அகசெருவங்கொண்டவனுயிவிடத்தில்வந் தக்கொடியோன்செய்ததினன்மறைகுவேனே.

இதுவுமது.

சுரிகுழலாள்மீதிருந்தநகிலேற்றிச் சுண்டுவிரல்தனைமுலைமேற்றுணிவாய்த் தாக்கித், திருகவவன்போஞ்சமையமாதெழுந்து செல்வதாரோவென்றுசேதிக்கேட்க, அரியதன்பேர்போதவாதித்தனென்றும் அஞ்சாமற்சொன்னானுமரிவைகூவிக், குரலெடுத்துப்பகுதிசைத்தாள்நீங்களாய்ந்து குற்றமுணர்ந்தாக்கினையைக் கூறுவீரே.

வசனம்.

ஆ! ஆ! ஆ! கேளாய் மருநீதிமந்திரியே ஐயா பிராமணர்களே நீதியறிந்த பெரியோர்களே ஓ! ஓ! நான் என்விசனத்தை யென்னென்று சொல்லுவது உலகெலாமளித்த பிர்மதேவனந்நாள்லெழுதின விதியோ இதென்னவகையென்றுதெரியேன் இரவில்யானும் பத்தினியாளும் சப்ரமஞ்சத்தின்மீது வெகுவாய் நித்திரைசெய்யும்போது முதலாஞ்சாமத்தில் போதவாதித்தனென்று மந்திரியான

வன் அஞ்சாமல் மனத்துணிவோடு பள்ளியறைக்குள்வந்து என்வித்திரையைச் சோதித்து மகாபாதகன் பெண்ணாள்மீதிலிருந்த வஸ்திரத்தைநீக்கி தன்னியத்தின்மீது சுண்டுவிரலாற் குறிப்பிட்டு திரும்பியவன்போகுஞ்சமையம் பெண்ணாள் திடுக்கிட்டெழுந்து போவதார்டாவென்று கேட்க பயமில்லாமல் போதவாதித்தனென்றவன் பேரைச்சொல்லிப்போனானாம் உடனே கூக்குரலிட்டு எனையெழுப்பி இந்தவர்த்தங்களைச் சொன்னாள் ஆகலால் நீங்களே இதையாராய்ந்து அந்தத்துரோகனுக்கு தண்டனையிடுவீராக.

மறுநீதிசொல் விருத்தம்.

பெரும்பாவஞ்சம்பவிக்கும் பேருலகதனிலிவ்வா
றருகவுங்கேட்டதில்லை ஐயையோஎன்னநீதி
ஒருமையாயரசன்மாதை யுளத்தினிலாசைகொண்டு
வரிசைகெட்டேநடக்க மந்திரிகட்கடுத்திடாதே.

வசனம்.

ஐயையோ இந்தப்பூலோகத்தில் இதுவே பெரும்பாவமென்று சொல்லலாம் இராஜன்பத்தினியை மந்திரிகளாயிருப்பவர் இச்சைகொண்டு துர்நடத்தை நடக்கல் ஏற்காதே.

பிராமணாள்சொல் விருத்தம்.

செப்பவும்பாவமாருஞ் செவியினிற்கேட்டிட்டாலும்
ஒப்புமோபர்மனுக்கும் ஓ ஓ ஒ என்னகர்மம்
தப்பிலையரசன்றேவி தாயாகுமெய்யேமெய்யே
இப்படிமுதலாமந்திரி யெண்ணினதொன்லையேதோ.

வசனம்.

ஐயையோ இந்தவார்த்தையைச்சொலவும்பாவம் செவியிற்கேட்டபோதிலும்பாவம் தேவனுக்கும்அடுக்காதே ஓ! ஓ! கொடியவநீதி இராஜபத்தினி தாயாச்சுதே அந்தப்போதவாதித்த னென்னினசெய்கை இன்னவிதமென்றறியோமே.

மறுநீதிசொல் விருத்தம்.

ஆதாரமேல்வாழ்பலநூல்நுட்பமெல்லாம் ஆய்ந்தயருணசிலனறிவில்மிக்கோன், போதவாதித்தனெனப்பெரியோர்யாரும் புகலவும்நான்கேட்டதுண்டுபுவிதனின்றே, ஓதிடுமிக்கொடியகுற்றமன்னோன்மீதே ஒப்பிடவேமனதில்லையமொன்றுங்கானேன், வேதியரோயவனகத்திலுற்றவந்த விபரமறிந்தாக்கினையைவிளம்புவீரோ.

வசனம்.

ஆ! ஆ! கேளீர்களையா வேதியர்களே பூலோகத்தின் கண்வழங்கும் பலநீதிநூல் சாரமெல்லாமறிந்தவனென்று மிகுந்தவிவேகசாலியென்றும் அறிவினிற்சிறந்தவனென்று மநுநிறைந்தபெரியோர்கள் சொல்லவும் நானுமறிந்திருக்கிறேன் இவ்வாறிருக்க போதவாதித்தன்செய்த குற்றத்தையவன்மீது பாரிக்கஇடமில்லையே ஆதலால் அவனெண்ணிச்செய்த வரலாறெவ்விதமோ அதையறிந்துபின்பு ஆக்கினையைச் சொல்வீர்களையா பூசுரர்களே.

பிராமணாள்சொல் விருத்தம்.

நீதிநூல்சொல்லும்நியாய நிறையறிந்துரைத்தமந்திரி
ஏதவன்மீதுகுற்ற மெண்ணிடவவிவேகம்

போதவாதித்தன்வாழும் பொறபதிக்கினிநாம்சென்று
நிதறிந்தாக்கினைக்குச் செப்பிடலாந்தானையா.

வசனம்.

ஆம்! ஆம்! மெய்தான் அவன் வாய்மொழி யறியாமல் குற்றஞ்சாட்டுவது அநியாயம் ஆதலால் போதவாதித்தனிருப்பிடஞ் சென்றுவரலாறுகளை யெல்லாமறிந்து தெண்டனையிடவேண்டும்.

மறுநீதிசொல் தரு. இராகம் - முகாரி. தாளம் - திரிபுடை.

பல்லவி.

வாரீர்பெரியோர்களே - நாம்போகலாம் - வாரீர்பெரியோர்களே.

அநுபல்லவி.

பாருலகாள்வேந்தன்பத்திச்சினந்துரைத்த
பழியே பழியே பழியே யறிய (வாரீர்)

சரணங்கள்.

கொற்றவன்றேவிதாயாச்சே - மனங் - குறிக்கவீதென்னபேச்சே
உற்றசங்கதியீதென்றுறுதியா யவனுரை
உணர்வோம் உணர்வோம் உணர்வோம் தெரிய (வாரீர்)
என்னென்றிதனைப்பேண - மனதினிற் - கெட்டலைதகள்காண
அக்காளிவிவனையரியவிவேகி யென்
றறிந்தோம் அறிந்தோம் அறிந்தோம் வெருவாய் (வாரீர்)
இதாகமனத்துணிந்தான் - போதவாதித்தன் - நீராப்பழியைச்சுமந்தான்
வேதியரோயவன்விளங்கும்பதியைப் பாரீர்
விரைவாய் விரைவாய் விரைவாய் நடவீர் (வாரீர்)

மறுநீதிமந்திரிசொல் விருத்தம்.

புரவலன்மொழிப்ரகாரம் போதவாதித்தன்வாழும்
உரமனைவாயில்காக்கு மரியகாவலரோகேளீர்
பரிவுடன்யானும்வேத பாலருடனேவந்த
உரிமையைமுதலமைச்சுக் கோடியேசொல்லுவீரோ.

வசனம்.

இராஜகட்டளைதவறுமல் காத்திருக்குங் காவற்காரர்களே யானும் வேதப்பிராமணர்களும் வந்தசங்கதியை போதவாதித்தனுக்குச் சொல்லுவீர்கள் காவற்காரரே.

முதற்காவல்காரன்சொல் வஞ்சித்துறை.

செப்பியபடியே, ஒப்புளவமைச்சே, தப்பிதமின்றி, இப்பொழுதுரைப்பேன்.

முதற்காவல்காரன்சொல் விருத்தம்.

அந்தாவதனம்வாடித் தன்னந்தனிருந்திருக்கும்
மந்திரியேசரணமையா மறுநீதியமைச்சனும்பின்
விந்தையாய்மறையுரைக்கும் வேதியருடனேகூடி
வந்தனருமமைக்காண மகிழ்வுடனெழுந்திடீரே.

வசனம்.

சரணம் சரணமையா போதவாதித்தமந்திரியே நற்குணசீலராகிய மதுநீதி மந்திரியும் அவருடனே வேதபிராமணர்களுமாய் தங்களைக்காண வந்தாரையா

போதவாதித்தன்சொல் விருத்தம்.

அறிஞருக்கறிஞனகி யறிவினிற்சேடனென்னத்
தறையுளோர்புகழநாளுஞ் சரதமுநியாயவாஞ்சை
நிறைமதுநீதியென்னும் நிபுணனேசரணம்வேத
மறையுமல்பூசுரேசஜயரேதெண்டம்வாரீர்.

பிராமணருஞ் மதுநீதியும்சொல் விருத்தம்.

சுகிபவாஆசீர்வாதந் தொல்லுலகதனில்நீதி
மகிபர்கள்மகிழுந்தூய மந்திரியேவாழிவாழி.
நிகிலவாகமங்களெல்லாம் நேயமாயாய்ந்தகத்திற்
றுகளணுவேனுமில்லாத் துணைவனேவாழிவாழி.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

நாயினுங்கடையேன்வாழும் நற்பதிதன்னைநாடித்
தூயவேதியருந்தாமுந் துரிதமாய்வந்ததென்ன
நேயமோவன்றிக்குற்றம் நேரினதேதுமுண்டோ
ஆயுநான்முறையறிந்த அண்ணலேசொல்லுவாயே.

வசனம்.

அடியேன்வாழு மிருப்பிடத்தை நாடிதாங்களும் புண்ணியவேதியரும் வந்த காரணமேது இன்னகுற்றம் இன்னகாரணமென்று தெரியச்சொல்வீர் அண்ணலே மதுநீதி.

மதுநீதிமந்திரிசொல் விருத்தம்.

என்னிலுஞ்சிறந்தோனீயென் றெண்ணிநானிருந்தனையோ
மன்னவனுரின்றுன்மேல் மனஞ்சினமுற்றதேதோ
அன்னதைத்தெரியநன்று யஞ்சாமலென்தனுக்குப்
பன்னுவாயையந்தீரப் பரிவுடனறிவுள்ளோனே.

வசனம்.

ஆ ஆ போதவாதித்தனே என்னிலுஞ் சிறந்தநக்கோ னென்றுனையெண்ணியிருந்தேனே ஏதுமகாராஜனுன்மீது கொரேமாகிய கோபங்கொண்டிருக்கின்றுரோ இதென்னகாரணம் ஒளியாமலெனக்குச் சொல்வாய் நண்பனே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

கொற்றவனரசத்திற் கோபமாயென்தன்மீது
னுற்றிடும்வஞ்சந்தன்னை உண்மையாயறியேன்மெய்யே
வெற்றிக்காவலர்கள்காலை வெகுண்டிவண்வந்துகாக்கும்
குற்றத்தைக்கண்டேனல்லால் குறையொன்றுந்தெரிகிலேனே.

வசனம்.

ஐயையோ இதேது மகாராஜனென்மீதிற் கோபங் கொண்டிருக்குங் காரணத்தையறியேனே இதென்ன கொள்ளை இன்றுகாலை காவற்காரர்கள் வந்தெனை

இராஜசமுகம்வரப் போகாதென்ற குற்றத்தைக் கண்டேனே யன்றிவேறொன்றில்லை யண்ணேன்.

மதுநீதியும் போதவாதித்தனுஞ்சொல்

தரு. இராகம் - சுருட்டி. தாளம் - ஆதி.

பல்லவி.

அன்பனேயிதுபாபம் - நம - தன்னவனுர்பெருங்கோபம்.

அநுபல்லவி.

அன்பமெய்யிதைசொல்லவெகுயீனம் - தொல்லுலகிலமைச்சர்க்கவமானம் (அன்)

சரணங்கள்.

அவமானமென்பதேது - என - தங்கந்தடிக்குதென்றுது
குவலயத்திலடாதகுற்றந்தன்னைக்-கொற்றவன்றனக்குக்குறித்ததுவென்னை(அ)
குறித்திட்டவஞ்சம்நினைக்க - இதைக் - கொடுமையென்றெல்லோர்நகைக்க
விரித்துரைத்திடவெட்கமெலிகுதே - விகாதமீதல்லோவிசனமாகுதே (அன்)
விகாதமென்றுரைத்திட்டீர் - ஏனை - விகடமாயெடுத்திட்டீர்
நிகாதன்யான்குறேகிருபனந்நாளில் - நேயமாக்காத்தநினைவுண்டோஇந்நாளில்
இந்நாளினிசெய்தகுது - அதை - என்னென்றுசொல்வதிப்போது
அந்நாளுன்தனையறிவுள்ளோனென்றே-அகமெண்ணினேனறிந்தேன்வஞ்சமின்றே (அன்)
இந்நறைக்காலையில்வினாவாய் - நா - னிருந்திடும்பதியெதிராய்
வெற்றிக்காவலர்வெகுண்டுவந்ததன்றி - வேறொன்றறியேன்விளம்பீரோதயின்றி
மந்திரிகட்குஆசிரியோ - நீ - மறுகடந்தநெறியோ
தந்தையரசனுந்தாய்பத்தினியாஞ் - சாத்திரவிதியுஞ்சாற்றுமுண்மையாக (அன்)
சாற்றிடுங்குறையென்னமோ - மனந் - தயங்குகின்றதுபின்னமோ
சிந்தைநடுங்கித்தியங்கிறேன்பொறுப்பீர்(அ)
சீற்றமில்லாமனத்திங்கினையுரைப்பீர்-

மதுநீதிமந்திரிசொல் அகவல்.

நண்பனேவாராய்நராதிபன்றனத்த அன்பமனையான்சொல்லியும்பாபம், நவின்றிடமனதானுறுமெய்யே அவனியிலமைச்சர்க்கடுக்குமோவையோ, போதவாதித்தாபுகலுவேனதனை, இதென்றெனக்குநீயியம்புவாயுண்மை, இரவினில்வேந்தனிராஜபத்தினியுமாய் பரிவுடன்றூங்கும்பள்ளிக்குள்ளேபோய், ஏன்றமாதென்றுமென்றுமலேது தோன்றல்நித்திரைசோதித்திடனே, அன்னையீதிருந்தவணிகலையகற்றித் தன்பமேல்நகத்தைத்தாக்கினீவந்த, குற்றமதனுக்கோளகருங்கெங்கு வெற்றிக்காவலரைவெகுண்டிவணுப்பி, எங்களைவரவழைத்திசைத்தனரிவைகள் சங்கையென்றுணரத்தயங்கிறோமென்றே, மன்னனுக்குரைத்தவந்தமுன்னிடமே இன்னதென்றதனையியம்பிடுவாயே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

கொடியதோரிடரகற்றிக் கொற்றவன்றன்னைக்காத்த
அடியவனென்றுவேந்தனுயாமற்கோபமானுர்
படியிசையென்தன்பாக்கியம் பாமனுர்செயலீதாகும்
வடிவுளோரய் பள்ளிக்குள்ளே வந்ததைச்சொல்லுவேனே.

வசனம்.

கேளீரண்ணலே இராஜனுக்குவந்த இடர்களையகற்றி அடியேன்காத்ததல்லால் வேறொன்றில்லை யாதுமறியாமல் கொடுங்கோபமாகினார் தேவன்கிருபையும் எனதுபாக்கியமு மிவ்வாறாய்ச்சுது ஆனால்பள்ளியறைக்குள்வந்ததை ஒருவாறு சொல்லுவேன்கேளீர் மநுநீதி.

கண்ணி. திபதை. இராகம் - புன்னாகவராளி. தாளம்-ஆதி.

ஐயையோவிவ்விதம்பழியுளைப்பாரென்றறியாமற் போனனே - இந்த
அகிலத்தெவரும்நகைத்திடப்பஞ்சத்தினிற்காளாகி னேனே
வையகத்தில்விளங்கும்நூல்யாவையுமாய்ந்தமநு நீதியே - மன்னன்
மனதினில்மிகக்கோபங்கொண்டானெனச்சொல்வதென்னசேதியே
இந்தப்பிழைக்கோகாவலனாவேந்தனெனைவிட்டார் காலே - இன்ன
மென்னவெனைச்செய்யவெண்ணியிருக்கின்றாரோவதி ஞாலே
தந்தையாமனுகேசற்காளசற்பனையை யறைய - இது
சமையமல்லவேயானுவிரவின்சங்கதி தெரிய
பகுத்துச்சொல்லுவேன்மெய்யதாகப்பரமற்குச் சாக்ஷியாய் - இந்தப்
பாரிலரசன்வாழவேசெய்தபயனே மாக்ஷியாய்
அகத்தினில்மிகமகிழ்வுடனேயானுயுதக் கோலமாய் - நம
நகைபுரியைக்காவற்செய்தேன்முதலாஞ்சாமத்தில் வலமாய்
பட்டணத்தையெங்குஞ்சுற்றிவேந்தன்பள்ளியறைக்குள் சென்றேன்-அண்ணல்
பத்தினியுடன்மஞ்சமிசைத்தூங்கும்பவ்பிணையுங் கண்டேன்
திட்டமுடனேசங்கிலிவழியாய்ச்சிறியர வம்வர - என்
செங்கைவாளினால்வெட்டியேதுண்டங்கள்செய்தேன் விதனமற
மங்கையரசிமார்மீதினுதிரம்வாய்த்திட்டதோர் திவலை
சங்கையேதுண்டோபெற்றவள்மார்பைத்தனயர்கள் பற்றியே - யமு
தருந்திடும்பாவனையாகத்தானைய கற்றியே
எனதுகரத்தின்சுண்டுவிரல்நகமதினால் விளைவாய்-அளி
இரத்தந்தன்னையெடுத்தேன்மகிழ்வாயின்னஞ்சொல்வெ னறிவாய்
மனதயர்ந்திட்டேனன்னைமார்மேல்வைத்தவிரற் றனையே - இவ்
வாளால்வெட்டினேன்மெய்யிதுபாரீர்வசைச்சொன்னீ ரெனையே - மஞ்சம்
வெட்டினம்பாம்புத்துண்டங்களுடனென்விரற்றனைச் சேர்த்தே
திட்டமாகவருகுஞ்சமையத்தேவியா ரெழுந்தே - ஆடா
செல்வதாரெனவினவவென்பெயர்செப்பிவந்தேன் அணிந்தே
இரவிலானசங்கதியிதல்லாலேதொன்றும் குற்றமில்லை - ஆறு
விறையவன்சினந்தெனைவதைத்திட்டாலென்றன் பாக்கிய-கீலை
பெருமைபெறுமென்னண்ணலேநிர்பேதமில்லாமற் சென்றே - இந்தப்
பிழையைவேந்தன்றனக்குரைத்தெனைப்பின் னழைத்திடவேண்டுமே

மநுநீதிமந்திரிசொல் விருத்தம்.

பாரினையாள்வேந்தருக்கிரன்றிசெய்யும் பவ்பமைச்சரானோரைப்பார்த்தது இல்லை, சீரிலகுமெனதரியநல்லோனீ சிரியசகாயனெனத்தெரிந்தேனால், காரி

கையாள்சொற்கேட்டேயரசன்சொன்னகாரணமும்நீயுரைத்தகருத்துமொன்றே ஏரிலகும்வேதியரேயிவர்க்கொப்பாக இத்தரையிலெவருண்டோவியம்புவீரே.

வசனம்.

ஓ! எனதரிய நண்பனாகிய போதவாதித்தனே பூலோகத்தி லுன்னைப்போல் சகாயஸ்தர்க ளெவரையும் பார்த்ததில்லை ஆனால் இராஜபத்திவிசொன்ன சொற்படியே மகாராஜன் சொன்னதும் நீ சொன்னதும் ஒப்புக்கொண்டேன் ஐயா வேதியர்களே இந்நிபுணனைப்போல் பூலோகத்தி லெவராகிலு மிருப்பார்களா.

பிராமணாள்சொல் விருத்தம்.

பூதலத்திலிவர்களைப்போலெவருமில்லை புகன்றிடுகாலமைச்சர்களில்முதலோன்போத, வாதித்தன்றனைநிகராயொப்புரைக்க வழிகாணோம்சற்குணமாமநுவிவேகி, பேதமுறுமரசனையந்திரவேயிப் பிரபலனைவரவழைக்கும்பெட்பைநாடி, கோதலவென்றெல்லோருந்தேர்ந்தானந்தங் கூர்ந்துபுகழ்சொலவேகொண்டாடுவோமே.

வசனம்.

கேளீரையா மநுநீதியே உலகத்தினி லிந்தநால்வரைப்போ லெவருமில்லை ஆனா லிந்தப் போதவாதித்தனுக்கு நிகராக மற்றெவரையும் ஒப்பிட்டுச் சொல்ல வழியில்லை நற்குணசீலன் நீதியாய்ந்த மஹானுபாவன் மனபேதங் கொண்டிருக்கு மன்னவன் விசனந்தீரக் கொலுச்சமுக மிவரை வரவழைத்து இவர்செய்த நன்றியை அங்குள்ள பெரியோர்கள்கேட்டு சந்தோஷிக்கும் வகையைத் தேடுவோமையா மநுநீதியே.

மநுநீதிசொல் விருத்தம்.

மன்னவனைக்கொன்றிடவந்திட்டபாம்பை வாளினாற்றுண்டாடமருவுந்தேவி, தன்னியமேல்வீழ்ந்திட்டவிரத்தந் தனைச்சுண்டுவிரல்நகத்தாற்சேர்ந்தெடுத்தே, இந்நிலத்திலிருவரையுங்காத்தமேலோய் இதயத்திற்கவலையனுவெண்ணவேண்டாம், உன்னையேகொலுச்சமுகம்வரவழைப்பேன் உரைதருவாய்நாம்போகவுணர்வுள்ளோனே.

வசனம்.

கேளாய் நண்பனே இப்பூலோகத்தில் வாழும்பொருட்டாக இராஜனையும் பத்தினி பத்தினியாளையுங் காக்கவேண்டி கொல்லவந்த பாம்பை வெட்டவும் பத்தினிமார்மேல்வீழ்ந்த இரத்தத்துளியை உனது சுண்டுவிரலா லெடுத்ததுமன்றி அதனையும் வெட்டிஎறிந்த மஹானுபாவனே உன்மனதில் யாதொன்றும் விதனங்கொள்ளாதே கொலுச்சமுகம் வரவழைத்து வேந்தன் கொண்டாடச்செய்வேன் இனி நான்போக விடைகொடுப்பாய் போதவாதித்தா.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

சொல்லருநீதிதேர்ந்தோய் தோன்றுமெய்யை வதைத்தக்
கொல்லவுமவர்க்கேசொந்தங் குற்றமொன்றுமாயேனால்
அல்லினில்வந்ததீது மல்லாமலின்னமுண்டு
வல்லவாவியம்புவேனுபின் வந்தனஞ்செல்லுவீரே.

வசனம்.

கேளீரண்ணே மறுநீதியே இன்னம் மகாராஜனெனே வதைத்துக் சொல்லு தற்கு அவர்க்கேசொந்தம் யாரென்றுஞ் சொல்வதில்லை ஆனாலன்றிரவில் வந்த தீமையல்லாம வின்னயிரண்டு கொடியதுன்பம் நேரிட்டது பின்விட்டுக் கொலுச்சமுகம் வந்தெல்லா வற்றையுஞ் சொல்லுவே னெழுந்தருள்வீர்.

மறுநீதிசொல் விருத்தம்.

எழுந்திடீர்மறையோரோநாம் ஏகுவோம்கொலுவைநாடிப்
பழுதுரைத்திட்டவேந்தன் பரிவுபெற்றகங்களிக்க
வழிபடுமுவமானங்கள் வழுத்தியிவ்வல்லோன்றன்னை
அழைத்திடும்வகையைப்பார்ப்போம் ஐயரேவருகுவீரே.

வசனம்.

ஐயாவேதியர்களே, துரிதமாககாம் கொலுச்சமுகம்போய் குற்றஞ்சொன்ன மகாராஜன் மனங் களிக்கும்படியாய் உவமானக்கதைகளைச் சொல்லி இந்த புணை வரவழைக்கும் யோசனையைத் தேடுவோம் எழுந்துவருவீர்.

தரு. இராகம் - தோடி. தாளம் - ஆதி.

பல்லவி.

ஈதல்லவோசகாயம் - பூசுரரோநாம் - ஏகிச்சொல்லுவோம்ஞாயம்.

அநுபல்லவி.

ஆதரைமீதினிலரசரைக்காக்குந் தன்மை
போதவாதித்தனல்லாலபுகன்றிடுமின் னன்மை (ஈதல்ல)

சரணங்கள்.

உவமானமெவர்களுண்டு - இவன்றனக்கா - வொப்பிட்டுரைத்திடக்கண்டு
தவஞ்செய்தானரசனன்று - இவ்வுபகாரி - சார்ந்திருப்பதுவேநன்று
அவமானமிவன்மீதுஅரிவைசொன்னதும் பொய்யே
இவையென்றறிந்தால்வேந்தனிதயங்களிப்பார் மெய்யே (ஈதல்ல)
புரவலனுற்றகோபம் - ஆனவிதைப் - புனையென்றுரைக்கப்பாபம்.
தெரியாமல்மனஸ்தாபம் - கொண்டோமோநாம் - சிரியோன்வெற்றிச்சோபம்
பெருமையுந்திறமையும்பேசுவோமர சன்பால்
தருமஞ்செய்திட்டோரைச்சதிநினைக்கா வகைபோல் (ஈதல்ல)
அகற்றிடாரென்றறுரையே - அளகேந்திர - அண்ணல்கொள்ளுவார்சரியே
வகுப்போம்நாம்நீதிமுறையே - மறையவரே - மன்னன்போக்கிடக்குறையே
ஜெகத்துளோர்போதவாதித்தன்றனைப் புகழ
அகத்திலுற்றதுயர்போயரசியாளு மகிழ (ஈதல்ல)

மறுநீதியும்-பிராமணருஞ்சொல்விருத்தம்.

திருவளருலகைநாளுஞ் செழிப்புறச்செங்கோலோச்சி
மருவலர்தம்மைவாட்டு மன்னவாசரணம்போற்றி.
தருமமும்புகழ்நிறைந்தோய் தஞ்சமென்றவரைக்காப்போய்
பெருமைசேரளகேசேந்திர பிரபலாஆசிர்வாதம்.

இராஜன்சொல் விருத்தம்.

ஏகினநன்மறுநீதியெனுமமைச்சே என்னுரையைப்பகுத்தறிந்தவற்றைக்காண
பன்னுமறையாகமங்கள்தேர்ந்தவேத பாரகரேசரணமையாபாவையாளை
உன்னியவத்துரோகியிடஞ்சென்றுவர்தஉண்மையுடனவனுரைத்தஉளவுமென்றே
நன்னயமோபின்னமுண்டோநீங்களாய்ந்த நற்கருத்தைஇன்னதெனநவிலுவீரே.

வசனம்.

ஆ! ஆ! வாராய் மறுநீதிமந்திரியே ஐயா வேதியர்களே நான் சொன்னதை யறிந்து குற்றத்தைக் காணவேண்டி மகாபாதகனாகிய போதவாதித்தன் வாழுமிடத்திற்கு நீங்கள்போனதும் அவன்சொன்ன உண்மையும் இரகசியமும் நன்மையுந் தீமையுந் தெரியச் சொல்வீர்களையா.

பிராமணர்சொல் விருத்தம்.

உலகினினீதிச்செங்கோ லொருமையதாநடாத்தி
இலகியசீர்த்திபெற்ற வேந்தலேசொல்லக்கேளாய்
வலவனுமந்திரிபோத வாதித்தன்மீதுகுற்ற
நிலையுளதென்றுரைத்தால் நிருபனேபாபமையா.

வசனம்.

நீதியாகச்செங்கோல் நடாத்துமளகேந்திரபூபதியே ஆசீர்வாதம் வல்லவனாகியபோதவாதித்தன்மீது குற்றஞ்சொன்னால் பாபஞ்சம்பவிக்கு மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

தேசிகரோநீங்கள் செப்பியமொழிதமைத்தப்
பேசிடவல்லோனல்ல பெட்புறுமந்திரிகேளாய்
மாசிலானென்றுபோத வாதித்தன்றனையுரைக்கும்
ஆசையெவ்வாறேவந்த அந்தரங்கஞ்சொல்வாயே.

வசனம்.

கேளீர்ஐயர்களே போதவாதித்தன்மீது குற்றமில்லையென்று சொல்வதை நான் தடுத்துச் சொல்வதில்லை ஆ! ஆ! மந்திரி மறுநீதியே இவ்வந்தரங்கமேதோ சொல்வாயப்பா.

மறுநீதிசொல் விருத்தம்.

அந்தரங்கமென்னசொல்வேன்புகழ்பெற்றோங்கு மளகேந்திரபூபதியேயறையக்கேளாய், இந்தவுலகத்திலெல்லாந்தெரிந்ததோரல்ல இறையவனேசக்கிரவாதித்தனென்போன், விந்தையுடனரசியற்றும்நாளிற்றீமை விளைந்ததுநன்மை செய்யமேன்மையாக, வந்தவினைபோனவிவையிரண்டுங்கேளீர் வசையல்லமகிழ்வீர்மன்னர்மன்னா.

வசனம்.

கேளீரளகேந்திரபூபனே இவ்வதிசய ரகசியத்தை என்னசொல்லுவேன் ஓ! ஓ! இவ்வுகத்திலெல்லாந் தெரிந்தவரில்லை அதெப்படியென்றால் முன்னாளிருவடமதுராபுரியில் சக்கிரவாதித்தனென்ற மன்னன் அரசாட்சி செய்யுங்காலத்தில் நன்றிசெய்யத் தீமைவிளைந்த கதையொன்றுண்டு அதனைவிஸ்தரித்துச் சொல்லுவேன் செவிசாய்த்து மனமகிழ்வீர் ராஜனே.

மருநீதிசொல்கதை.

தரு. இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - ஆதி.

பல்லவி.

விளம்புவேன்கேளாய் - மகிபதியே - விளம்புவேன்கேளாய்.

அநுபல்லவி.

அளகைப்புரியைராளுமரசியற்றுங்கெம் பீரா
அன்பென்பதில்லாதவசட்டைவாட்டுந் தீரா
உளத்தினிலணுக்குற்றமுன்னிடாதவ ஜீரா
உலகினிற்புகழ்பெற்றேயோங்குந்தனக்கு பேரா
உணர்வீரிக் கதையே - மன்னவனேநா
ளுதவே னதையே - மருளாபொன்னும்
ஒருமைநகரதனிற்சுருதிசொல்லந்தணன்
பெருமையுடனோர்கிள்ளையருமையதாவளர்த்தே
தருமசாத்திரவிதிமுறைமையாவுங்கற்பித்தே
வருகின்றநாளிற்றத்தைபரிவினையினியன்பாய் (விளம்பு)

சரணங்கள்.

பூசுரன்றன்னகமேல்மாசிலாதகிள்ளை
வீசுங்கதிர்ச்சுடர்காய்ந்தாசையாயிருக்கவூ
காசமாய்த்தத்தைகளும்பேசிச்செல்வதறிந்து
நேசர்களேநீங்கள்போகுந்தேசமெவ்விடமென
நிகழ்த்திட்ட தேளுங் - கிள்ளைகளெல்லாம்
வருத்தது போகும் - விதமேதென்னில்
நீணிலத்தில்விருத்தமானிடர்களுண்டால்
ஞானமூர்த்தியருளால்மேனிபாலியராகும்
தேனினியமாம்பழமானதைத்தருமரம்
காணுதேழாழிக்கப்பாலேநாங்கள்செல்வதென்றே
கழறத்தம் பாஷையால் - இக்கிள்ளையும்
எழுந்ததவ் வாசையால் - இனங்களுடன்
கடல்கடந்தப்புறந்தொடர்ந்ததெல்லாமொன்றாய்
அடர்ந்தமாஞ்சோலையில்படர்ந்தகனிமரத்தில்
இடரின்றிக்கிள்ளையெல்லாந்திட்முடனேபொசிக்க
சடுதியுடனிக்கிரம்வடிவாயோர்கனிதனைத்
தாவிவாய்க் கொண்டு - தனதுநகர்
மேவின தூண்டு - வளர்த்திட்ட
தந்தைதாய்வயதுமுதிர்ந்தினவராகையால்
இந்தப்பழத்தினைமகிழ்ந்துபொசிக்கத்தந்து
அந்தவரலாறெல்லாம்விந்தையதாயுரைக்க
புந்தியுவகையாகஅந்தணனுங்கைக்கொண்டான்
மறையோன்பொசித்திடாமலரசனுக்குக்கனியை (விளம்பு)
வரிசைதந்தேபெருமைத்திறமையெலாமுரைக்க

நிருபனகமகிழ்ந்துபரிசளித்தேயனுப்பி
அருமைக்குடிகளெல்லாமொருமையாயுண்ணவேண்டி
அன்பாய்த்தன் னந்த - வனந்தனிலே
இன்பாக விந்த - மாங்கனிதனை
அழகுடனேநாட்டத்தழைமிகுந்துமாமரஞ்
செழித்துவளர்ந்துக்காய்பழமிகுத்திருந்திட
பழிதராச்சர்ப்பம்வெய்யோன்வழியார்த்துவாய்திறந்தே
எழிலாயிருக்கவிஷமுழுமையானதோர்கனி
இடருற்ற தென்று - இலையுதிர்வா
முடிவேந்த னன்று - மனமகிழ்வா
ஏவலாவிட்டுப்பூங்காவனமாங்கனியைத்
தாவியொன்றறுத்திடஆவலுடனுனாக்க
மேவியக்காவலர்கள்பாலவிஷக்கனியை
தீவிரமாய்க்கொணர்ந்துகாதலன்பாலீய
தேசிகன் மூந்து - பொசித்திட்ட
வாசையாற் புந்தி - மயங்கிவீழ்ந்தே
நீறுகொண்டிறந்தகஇதேதென்றரசனும்
வேதியனன்றுதந்தகுதாகமனதென்னனி
பேதித்தவனைமழத்தேதமாயிருவிழி
சோதிப்பிடுங்கியேபாதகத்திற்காளானூர் (விளம்பு)
இருவிழிகளும்போனவிருத்தமறையோனும்
கரகபாலனைப்போற்றித்திருசுத்தன்பதிநாடி
அருங்கிள்ளையாலிந்தப்பெருங்கொள்ளைவந்ததென்று
பரிவின்றதனைப்பற்றிசிரமறுத்தெறிந்திட்டான்
பாரினில் முன்னம் - இவர்கள்பழி
பேருற்று ரின்னம் - வருகும்நன்மைப்
பகருவேனளகேசமகிபதியேயந்நாட்டில்
அகமெலிந்தோர்கிழவிமிகச்சலித்துயிர்விட
வெகுவாய்க்கனியுண்டுவகைதப்பியேஇறக்க
மகிழ்வாய்வருஞ்சமையமிகவுற்றன்றுவேதியன்
வதைத்திட்ட கிரம் - மறுபிறவி
யுதித்ததப் பாரம் - நீக்கவேண்டி
வடிவாம்பஞ்சவர்னம்படர்ந்தருபமாகி
நடந்திடும்பாள்முன்னுடனக்கனியிலொன்றை
இடரின்றெதிரில்வீழ்த்தமுடிந்ததெண்ணமென்று
மடமகன்றக்கிழவிஇடமாகவெடுத்துண்ண
வாலைப்பெண் ணாகி - தன்பதிக்குச்
சீலமா யேகி - வரலாறெல்லாம்
வந்தவரிடத்தினிலந்தக்கனிப்பெருமை
விந்தையதாயுரைக்கவிந்தநற்செதியை

முந்திசக்ரவாதித்தனதிந்திவளையழைத்து
பந்தமாயாவுங்கேட்டுச்சிக்கைதமகிழ்ந்தனராம் (விளம்பு)
மன்னன்சக்ரவர்த்திதவின்னமறியவேண்டி
அன்னுள்சிறையிலிட்டகன்ருரவிருத்தனை
முன்னுலழைத்தக்கனிதன்னையுண்ணக்கொடுக்க
நன்னயமாயவன்றின்னப்பாலியனுனன்
நரபதிமகிழ் வாய் - இவ்வதிசயப்
பெருமையைப்புக ழாய் - எல்லவர்க்கும்
நவின்றுநன்மைசெய்வதிவையென்றுணர்ந்திடாமல்
பவத்திற்காளாகிமறையவன்விழிகள்பிடுங்கிக்
குவலயத்தினிற்பழிக்கவலையிருந்ததிந்தத்
தவறுபோம்வழியெவ்வாறேசிவனேயென்றுஞளித்து
தயங்கியேகொற் றவன் - இன்னையாலிரு
நயனம கற்ற - வேதியன்
றன்னைவரவழைத்துப்பன்னுமாங்கனியொன்றும்
மின்னுமாடைகள்பலசின்னங்களுடன்மணி
பொன்னுமுத்துவேண்டுசொன்னங்கள்தந்தனுப்பி
பின்னுங்குடிகளெல்லாமுன்னமாம்பழக்கனிப்
பேருடன வித்தே - நீதிச்செங்கோல்
சீருடன் களித்தே - நடாத்தினுர்
பேதையுனாத்திட்டவிக்காதையைமனதுளாய்வீர்
போதவாதித்தன்மிசையேதமில்லையேயும்மைப்
பாதுகாத்ததல்லால்பேதங்காணுமறு
நீதிநிபுணப்ரக்கியாதவளகேசேந்திரா (விளம்பு)

இராஜன்சொல் விருத்தம்.

அரியவாகமங்களெல்லா மாய்ந்தநற்குணசிரேஷ்டம்
பெருமையுள்ளவனென்றென்றும் பேணினேனுலந்த
மருமம்நீசொல்லாமுன்னம் மகிழ்வெனுங்கடலிலாழ்ந்தேன்
சாதனும்போதவாதித் தன்னலஞ்சொல்லுவாயே.

வசனம்.

ஆ! ஆ! கேளாய் மறுநீதியே தருமசாத்திரங்க ளெல்லாமாய்ந்த சிரேஷ்ட னென்று எப்பொழுது மெண்ணினேன் ஆனல் சகாயஞ் செய்தவனென்று மர்மமாய் நீ சொல்வதை யறியாததற்குமுன்னமே ஆனந்தக்கடலில் மூழ்கினேன் என்றுனுஞ் செய்தஉபகாரமேதோ தெரியச்சொல்வாய் மறுநீதியே.

மறுநீதிசொல் விருத்தம்.

செய்தநன்றியென்னசொல்வேனளகேசேந்திர திண்புயனேவாரிதிகுழ்ஜெகத்தின்மீது செய்தவத்தாலந்நிபுணனுன்னைச்சேர்ந்தான் ஜெயதரனேகொலுச்சமுகங்கருணையோடு, மெய்தவருப்போதவாதித்தனென்னும் விர்ப்பனனைவரவழைத்துவினவிலன்றேன், பொய்யுனாயான்உரத்திட்டநிதையெல்லாம் புகலுவான்மனங்தேர்வீர்புகழ்தாமே.

வசனம்.

கேளி ரளகேசபூபனே நீர்செய்த தபோபலத்தினுல் போதவாதித்தனென் னும் சகாயபுருஷனுன்னைச் சேர்ந்திருக்கிறுன் செய்தஉபகாரத்தைச் சொல்லுத ற்குக் குற்றமுண்டோ தாங்கள் கருணைகூர்ந்து கொலுச்சமுக மவனையழைப்பி த்தால் பொய்யில்லாமல் செய்தநன்றியைச் சொன்னபிறகு மனமகிழ்வீர் மன் னவா.

இராஜன்சொல் விருத்தம்.

போர்க்குமனதிளையாதஉக்ரசிங்க புஜபலக்கட்டியக்காராபுகலக்கேளாய்
பார்க்குளறிருக்கறிஞனுகிக்கீர்த்திப் பண்புபெறும்போதவாதித்தன்றன்னை
காக்கவிருவீரர்களைவிட்டேநீபோய்க் காவலரோடவ்வமைச்சன்கனமதாகத்
தீர்க்கமுடன்கொலுச்சமுகஞ்சேரவேண்டுஞ் சீக்கிரமதாயோடிச்செப்புவாயே.

வசனம்.

புஜபலபராக்கிரம சிங்கக்கட்டியனே சிரேஷ்ட அதிகுணிய போதவாதி த்தனைக் காத்திருக்கும்படியாக இரண்டுகாவற்காரரை அனுப்பினேன் நீ யதிசீ க்கிரமாகப்போய் முதலாமந்திரி போதவாதித்தனும் காவற்காரரும் கொலுவில் வரவேண்டுமென்று அழைத்துவருவாயடா கட்டியனே.

கட்டியன்சொல் விருத்தம்.

தன்னிகரில்லாவேந்தே சாற்றியமொழியையென்தன்
சென்னிமேல்வைத்தேன்றெண்டம் திகழ்பெருமுதலாமந்திரி
தன்றெடுமவரைக்காக்குந் தாஷ்டீகவீராளுேர்
இந்கிமிடத்திற்சேர இதோவிரைந்தோடுவேனே.

வசனம்.

தேவரீர் சொன்னதைத் தலைமேற்கொண்டேன் தெண்டம் தெண்டம் இதோ சீக்கிரமாகஓடி முதலாமந்திரியையுங் காவற்காரரையு மழைத்தோடி வருகிறேனையா.

பொதுவிருத்தம்.

திருவவைமுன்முதலமைச்சைவரவழைக்கத் தீரகட்டியன்விரைவாய்ச்சென்றபின்னர், திருப்பனிரவினிலினருர்மூவர்போன நேரத்திலேகவின்றநிந்தைநன்றல், வரும்வினையையறிவதற்குமனதுவாடி வாருபெறும்போதசந்திரனுமற்றவர்களுமொருமையுடன்வேந்தன்சீற லெவ்வாருகுமென்றேவுருகின்றுரே.

வசனம்.

முதலாமந்திரியாகிய போதவாதித்தனைக் கொலுவில்வரும்படி மகாராஜன் ஆக்ஞாபித்தபிறகு மற்ற மூவர்களிடம் இரவில் இராஜன்சொன்ன நிந்தைக்கு என்ன தண்டனையாகுமோ வென் றொருவர்க் கொருவர் விதனமுற்று மூவர்களுங் கொலுச்சமுகம் வருகிறவிதங்காண்க.

உ - போதசந்திரன்சொல் விருத்தம்

இளையவரோபினிநாமென்செய்வதையோ இரவிலரசன்சினமாயிசைத்தாரந்த, அளகேசனுவறியோம்போதவாதித்தமந்திரியுண்மையுரையாமோவுக்ரமுற்று, தெனிசன்றண்டனைக்காக்ஞாபிப்பாரோ அன்றிமதண்ணயுமழைப்பிப்பாரோ, வுடனெல்லோருமொன்றாய்க்கொலுவைநாடிச் சீக்கிரமதாய்நடவீர்சிரியோரே.

வசனம்.

கேளாய் போதவியாபகனே தம்பி போதவிபூஷணா இனிநா மென்னசெய்வது மகாராஜன் இரவில்சொன்ன வஞ்சசிந்தனையை நமதண்ணன் போதவாதித்தன்மீது சுட்டியகுற்றத்தை யென்னுதற்கு வகையேதென்றுங் காணோமே அல்லது அவர் உண்மையாய்ச் சொல்லுங்காரமேதோ அல்லது யோசிக்காமல் மகாராஜன் தெண்டனையிடுவாரோ இனிக்கொலுவில் நடக்குங்காரியங்க ளேதோ தெரிந்துவரலாம் வருவீர்கள்.

தரு. இராகம் - ஆனந்தபைரவி. தாளம் - ஆதி.

௨. கொலுவைநாடிநாம்போவோம் - மதிபனுற்ற - குறைதேர்ந்துநீதிகூறுவோம்
கலைநிலையாவுமாய்ந்தகனிட்டரோயண்ணல் மீது
உலகமாளளகேந்திரனுரைத்தார்கொடிய தீது (கொலு)

௩. இன்னவகையென்றுன்னவே - மனதினிற் - கெட்டநிலைகுற்றம்பன்னவே
மன்னவனரசியும்வசைத்துத்துடி அடித்தார்
அண்ணல்செய்தவிதமேதென்றுயாமலே பதைத்தார் (கொலு)

௪. அவநீதிதீர்த்தகதையே - புனர்த்திட்டேனு - னரசன்தேவிக்குமதையே
உவமானஞ்சொல்வீர்நீங்களொருவர்க்கொருவ ரொன்றுர்
குவலயத்தினிற்பொல்லாக்கொடியோனென நவின்றுர் (கொலு)

௫. மறையோர்பெரியோர்அறிஞர் - கொலுவைநாடி - வந்திருப்பார்திருபர்
குறையென்றுபுரவலன்கூறுவதை யறிந்து
அருமைநமதண்ணலையழைப்பார்நீதி தெரிந்து (கொலு)

௬. அழைக்காமற்றண்டனையிட்டால்-நாமென்னசெய்வோ-மரசனீதிக்குட்பட்டால்
பழியென்றெவருரைப்பார்பகரவேறென்று மில்லை
அழகமர்பரவைசூழுவனிமீதென்ன தொல்லை (கொலு)

௭. வருவீர்விரைவாய்நடப்போம்-கொலுவில்மந்திரி - மநுநீதியைநாமடுப்போம்
பெருமைநிறைந்தவன்றானென்பேசும்வார்த்தையை மன்னன்
புரையென்றுரைக்கார்மெய்யேபுந்திமகிழ்வீர் சொன்னன் (கொலு)

௨. மந்திரிபோதசந்திரன்சொல் விருத்தம்.

வாதிடுமரசர்தங்கள் வல்லுயிர்குடித்துவெற்றி
ஒதியேமுரசறைந்தே உலகினையோர்குடைக்கீழ்
நீதறச்செங்கோலோச்சிச் சீருடனெம்மைநாளும்
பாதுகாத்தாளுகின்ற பார்த்திபாசரணம்போற்றி.

௩. மந்திரிபோதவியாபகன்சொல் விருத்தம்.

தஞ்சமென்றவரைக்காக்குந் தயாளமுமன்புமீவும்
இன்சொலுஞ்சரதமுற்ற இறைவருக்கிறைவனாகிச்
செஞ்சடைமதிபுனைந்த சிவனடி போற்றியெம்மைச்
சஞ்சலமின்றியாளும் சக்ரபூபாலாபோற்றி.

௪. மந்திரிபோதவிபூஷணன்சொல் விருத்தம்.

தந்தையுந்தாயுமாகத் தற்காத்தேயென்றுமெங்கள்
சிந்தையிற்றுயர்வராமற் சேர்த்தினியாதரித்தே

இந்நாலுலகையாளு மெழில்பெறும்ளகேசேந்திர
உந்தமெல்லடிபணிந்தே யுளங்களித்திறைஞ்சினேனே.

மூவருமநுநீதிக்குசொல் விருத்தம்.

சுடர்விடும்பாநுசித சோமன்சூழ்ந்திலகுமிந்தப்
படியினில்வாழும்வேந்தர் பரிவிருந்தறிவிலாத
மடமைகொண்டிடும்மைச்சர் மனவிருளகலநீதிக்
கடலெனுமயிர்சூழுட்டும் கனவானேசரணம்போற்றி.

மநுநீதிசொல் வஞ்சித்துறை.

வளைகடலுலகிற், களர்நிலஉப்பாய், வளருநன்னீதி, இளைஞரோனாநீர்.

பொது விருத்தம்.

மாமிலாமந்திரிமாரு மறையவர்நீதிதேர்ந்த
தேசிகர்பெரியோரெல்லாந் திருக்கொலுசூழ்ந்திருக்க
நேசமாய்முதலமைச்சை நிருபனுமழைத்தவாறும்
ஆசையாய்வந்ததிதாய்ந் தறிந்திட்டவகைசொல்வாமே.

வசனம்.

ஆகோ அதெப்படியென்றால் வேதவேதியரு மிராஜர்களு மந்திரிப்ரதானிகுருக்களிவர்களெல்லாங் கொலுவில் நிறைந்திருக்கவும் அளகேசமகாராஜன் முதலாமந்திரியாகிய போதவாதித்தனை யழைத்ததும் வந்ததுமன்பங்களை போதவாதித்தன்சொன்னது மினிமேல்நடக்கும் விதமுங்காண்க.

கட்டியன்சொல் விருத்தம்.

மதிநனியுயர்ந்தபோத வாதித்தமந்திரிவாழும்
பதியெதிர்வாயில்காக்கும் பாரவீரர்களேகேளீர்
அதிபனுர்முதலமைச்சை யழைத்தவருடனேநீங்கள்
சதிர்கொலுச்சமுகஞ்சேரச் சாற்றினுர்வருநுவீரோ.

வசனம்.

ஆனாயாகாவற்காரர்களே நமது அளகேந்திரமகாராஜன் நீதிமந்திரியாகிய போதவாதித்தனை யழைத்துக் கொண்டவருடனே நீங்களும்வர. உத்தரவுசெய்தாரையா.

முதற்காவற்காரன்சொல் விருத்தம்.

வரவுரைத்திடுமொழிக்கே வழிபார்த்துக்கொண்டிருந்தோம்
தருமசாத்திரங்களாய்ந்த சற்குணமுதலமைச்சன்
பெருதுயர்போக்கவேந்தன் பெட்புடனழைத்திட்டாரோ
இமயிகுகட்டியாயிக் கணக்கொலுச்சேருவேமே.

வசனம்.

வாருமையா கட்டியனே போதவாதித்த மந்திரிகொண்டிருக்கும் விதனம்போம்படி மன்னவனெப்போ தழைப்பாரோவென்று யாங்களுங் காத்திருக்கிறோம் நீரும் ஓடிவந்தீர் இதோ கொலுச்சமுகம் வந்துசேருவோம் கட்டியனே.

இரண்டாங்காவற்காரன்சொல் விருத்தம்.

பிறந்ததுநல்லநீதி பெருமைசேர்முதலமைச்சே
அறந்தரளகேந்திராஜன் அரிதமாய்க்கொலுவிற்சேர

விளாந்தகட்டியவளைவிட்டார் விப்பருமனமகிழ்ந்து
பரிந்தவன்வருகுவீர்நீர் பற்றியதுயரம்போமே.

வசனம்.

ஐயா! முதலாமந்திரியே நல்லகாலம்பிறந்தது மகாராஜனை யழைத்துவரச்சொன்னாராம் நீர்கொண்டிருக்குந் துயரம்போய் சந்தோஷத்தை யடைவீர் கொலுவுக் கேகலாமையனே.

போதவாதித்தன்சொல் தேவாரம்.

அன்றுனைவந்தடைந்தசிறுமார்க்கண்டேயர் அல்லலுற்றுதெமன்மண்மேல் விழவுதைத்தோய், நின்றுதிரிபுரமதனைச்சிரித்தெரித்தாய் நீணிலத்திலின்பபெறும்நோயருக்கே, என்றும்வினைவாரமற்காக்குமீசா இறைவனெனையாழ்த்தவன்தனென்னமாகும், நன்றுபெறவாண்டிடுவாயிருசெக்காளை நாயன்சிரமீதணிந்தநம்பினேனே.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

ஏற்றமெனுஞ்சண்டாளமதிஅற்ற திருவள்ருமளகேந்திரனையனென்னை, ஆற்றலுடன்வரவழைக்குஞ்செய்திசொன்ன அடல்பெருகுங்காவலரேயவையைக் கேளீர், ஏற்றமுடன்கொலுச்சமுகஞ்சென்றுவேந்தனெண்ணியதோர்குற்றத்தீதவாய்ச்சொல்லப், போற்றியவரையமறந்தகமகிழ்ந்து பூரிக்கச்செய்தநன்றி புகலுவேனே.

வசனம்.

சண்டாளமென்னுங் கோபத்தை மனதிற்கொண்டிருக்கு மளகேந்திரமகாராஜனென்னை யழைத்தானென வந்துரைத்த காவற்காரர்களே சந்தோஷம் இனியல்லவோ கொலுச்சமுகம்போய் அவனெண்ணியிருக்கும் ஐயமறந்திடும்படியாய் நான்செய்த நன்றியைச்சொல்லி மனமகிழச்செய்வேன் வாருங்காவலரே.

போதவாதித்தன்சொல் — தரு. இராகம் கல்யாணி. தாளம் - ரூபகம்.

வருவீர்காவலரே - போகலாம் - வருவீர்காவலரே.

பெருமைநிறைந்தபோஜன் - புகழ் - பெயர்வளர்விச	வாசன்
இருவளரளகேசன் - வரச் - செப்பினரோ	ராஜன் (வருவீர்)
அகமகிழ்ந்தழைத்தாரோ - அல்ல - தாக்கினைநினைத்	தாரோ
இகழ்வெனப்பகைத்தாரோ - குற்ற - மென்றெனைச்சினந்	தாரோ (வருவீர்)
மறையவர்தேசிகரும் - நன் - மன்னவர்மானி	யரும்
துரைகொலுவினிலெவரும் - அறியச் - சொல்லுவேனென்	றெவரும் (வருவீர்)
எய்தமூன்றுதுயரின்று - கொலு - இருப்பவர்முன்னம்	நின்று
ஐயமறவேநவின்று - மன்ன - னதிதிடநன்மை	யென்று (வருவீர்)
பத்திவியாளேதம் - என்மேல் - பகர்ந்தனரோ	பேதம்
இத்தனையிலதீதம் - நா - னென்னைவில்லையெப்	போதும் (வருவீர்)
தேரோமழ்வீதிகடந்தோம்-கொலு-சேர்ந்திடும்வழிதொடர்ந்	தோம்
சிருடனேநடந்தோம் - அங்கே - சேந்திரனைக்காணீர்மகிழ்ந்	தோம் (வருவீர்)

போதவாதித்தன்சொல் விருத்தம்.

பரிதியொளிவரவிலுக்காயனந்தங்கோடி பங்கயங்கள்காத்தலரும்பான்மையைப்போல், தரையினில்வாழட்டதிசைமன்னரெல்லார் தாவியெதிர்நிறைகொ

லாந்தேசஞ்சமென்றுன், திருவதனங்கண்டபின்னரகங்களித்துச் செங்கதிர மேற்கப்புஞ்சிர்த்தியர்க்கும், தருமஉருவாயமைந்தவளகேசேந்திரசாம்ராஜ்யா பொற்கழற்குச்சரணமையா.

இராஜன்சொல் விருத்தம்.

உறவாடிக்குடிகெடுக்குமித்திரபேதமுற்றவமைச்சர்களுன்போலுலகிலுண்டோ, சரிசரிநான்மெச்சினனேபோதவாதித் தாவினிநீயுண்மைமொழிசாற்றிடாமல், அறிவகன்றுலிக்கிபுணமறையோர்சொல்லும்ஆக்கினைக்குஆளாவாய்மெய்யருமைச்சேயென், றொருமைகொண்டவாசைக்கோமனந்துணிந்தா யோதும்வகையொன்றுமிலையுளாசெய்வாயே.

வசனம்.

அடாபோதவாதித்தா நேசித்துக்குடிகெடுக்கு மித்திரபேதமுள்ள மந்திரிகளுன்னைப்போலுண்டா சரிசரி உன்னைமெச்சினேன் இனிநான் சொல்லும்வார்த்தைக்கு நீ புண்மையைச் சொல்லாமற்போனால் இதோஇருக்கும் பெரியோர்களிடும் ஆக்கினைக்கு உள்ளாவாய் ஓ! ஓ! உன்னைப் பிள்ளையென்றெண்ணி யிருந்ததற்கோ துணிவுகொண்டாயடா பாதகா.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

ஆக்கினைசெய்துயர்செய்யவேந்தாய்நின்னை யல்லால்யார்க்குச்சொந்தமவனியாவுங், காக்குமகேசுரன்பெருமிதத்தவிர்த்திட்டேனோகழறுதன்மானனாலிக்கசடென்றேனோ, ஊக்கமுடனிரவில்நகர்சுற்றும்போதும் ஒருகுறைவுஞ்செய்திலனேஉளவுமேதோ, தாக்கும்வகையின்னதெனச்சினமகற்றித் தயங்குமடியேன்றனக்குச்சாற்றுவீரே.

வசனம்.

அடியேனைச்சதைத்துக்கொல்ல வுமக்குச் சொந்தமல்லாமல் மற்றவரொவர்க்குண்டு என்றும் பரமேசுரன் நதியைமறந்ததுண்டோ அல்லதுவேதாகம முனைகளைக் குற்றமென்றேனோ அல்லது இரவில் நகருஞ்சுற்றும்போது ஏதாகிலுந் தாழ்ச்சிநேரிட்டதோ இன்னவிதமென்று சொல்வீர் மன்னவா.

இராஜனுக்கும் போதவாதித்தனுக்குந்தர்க்கம்.

தரு. இராகம்-சஹானா. தாளம் - ஆதி.

சாற்றுதற்குமீதினம் - தாரணிமேலவமானம்.

போற்றன்மிருத்தவிவேகனென்றுனை பூரித்துமனதிற்புகழ்ந்திருந்தேனே	(சாற்)
மனதிலுற்றகிருபைவிட்டீர் வஞ்சனென்றெனைவசைத்திட்டீர்	
னெந்திருப்பதுளாயுமையா பிரியேனையாளுமையா	(மனதி)
அருமன்னனென்றெண்ணாமல் ஆதரித்தோனென்றுன்னாமல்	
தேளுக்குக்கடைவாலில்விஷமே தேகமெங்குமுனக்காகும்விஷமே	(சாற்று)
ஆனதிஜந்தனையுளாப்பீர் அரசேயினிமனம்பொறுப்பீர்	
சனமென்றகுற்றமேதோ எனைச்சேயென்றெண்ணத்தகாதோ	(மனதி)
சேயனென்றெண்ணியிருக்க - நீயுஞ்செய்தாய்மனம்வெறுக்க	
ஞாயமல்லவேபாரிலெல்லோரும் - நகைப்பாரோதிசொல்லார்	(சாற்று)

தகைப்பாருலகோடெனாரல் - நரபதியோன்மைகண்டால்
இகல்போமெனேப்புகழ்வீர் - ஏதுகுற்றமியம்பிமகிழ்வீர் (மனு)

இராஜன்சொல் விருத்தம்.

இரவினில்யானுனைவையுன்னைப்போகும்வேளை என்றும்வராதவன்விளைவா
யிலிடம்வந்தாய், பரிவுடனென்னுடனன்னமருந்தக்கூறப் பட்டணஞ்சுற்றிடவே
ண்டிப்பகர்ந்துசென்ருய், பிறகுமுதற்சாமத்திற்பள்ளிக்குள்ளே பேசாமல்வந்ததெ
ன்னபேணிடாமல், மருவும்நித்ரைசோதித்துப்போனதென்ன வாஸ்தவமாயுன
தென்னம்வசனிப்பாயே.

வசனம்.

அடாபோதவாதித்தா எப்போதும் வராதவன் நேற்றியஇரவில்யான் அன்ன
ம் பொசிக்கும்வேளையில் வந்தாய் என்னோடு போசனமுண்ணவேண்டினேன் ந
கரமெங்குஞ் சுற்றிப்பார்க்கப்போகிறேனென்று சொல்லிப்போனாய் பின்புமுத
லாஞ்சாமத்தில்பேசாமல் பள்ளியறைக்குள்வந்தென் நித்திரையைச்சோதித்துப்
போனதென்னமோ நிச்சயத்தைச் சொல்வாய்.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

அண்ணலேகேருலகையின்னமாளுதற்கே யடியவனன்றேசெய்தநன்றிக்குற்
றம், பண்ணியிலேன்கொடுங்கோபமானிரிதப் பான்மையெவ்வாறெனிற்பசியை
ப்பார்த்துமன்னம், உன்னைவைத்தகின்பின்னர்பழிசுமந்த ஒருமைசேர்கதையா
ச்சுதோதும்வார்த்தை, தின்னியனேயவ்விபரஞ்செப்புகின்றேன் சீற்றமின்றிய
கமிழ்வீர்சீர்த்தியோனே.

வசனம்.

கேளீரண்ணலே இன்னமிவ்வுலகத்தை நீராளவும் நின்னரசாட்சிக்குள்ளிரு
ப்பவரையாதரிக்கவும் அடியேன் செய்ததல்லாமல் வேறொன்றுமில்லை யென்மீ
து நீர்கோபித்திருப்பதெவ்வாறெனில் பசிபார்த்துப் பழிசுமந்தகதையைப்போ
லாச்சு அதைச் சொல்லுகின்றேன் கோபமில்லாமற் கேட்பீராக.

போதவாதித்தன்சொல் அகவல்.

பாவைசூழ்ந்திலகும்பாரினிற்றர்ம, உருவமைந்துதித்தேயொருமையாயுல
கைச், செங்கோலோச்சுந்திருவளகேந்திரா, மங்களாகரனேவழுத்திடுங்காதை,
தனையகக்களியாய்ச்சார்ந்திவிக்கேளீர், மறுநிறைவேந்தேவண்மைசேர்விஜய, ப
ட்டணம்வடதுபாரிசமேனில், கட்டியகுளமுங்கந்தமுஞ்சோலை, உண்டவ்வழியா
யோர்மறையோனக், குண்டமகனிற்குளித்தபின்னெதிரிற், சேற்றுமாமரங்கீழ்
தொன்னூருயுள்; சாற்றும்வேதியன்றனித்தவனிருக்க, வந்ததூரநீனிவன்வரலாறு
தேட்க, அந்தணக்கிழவனறைந்திடச்சக்தி, இல்லாதவனுயிருந்திடும்வகையின், ந
ல்லோனுயந்நாலமுடன்றன்பா, விருந்தசாதத்திலிதமுடன்பருத்தே, அருந்திட
வன்னேன்றனக்கம்மரங்கீழ், வைத்ததின்பின்னர்வந்திட்டநிதை, உத்தமவாசே
ஷதுவேன்க்குடன், நாகசற்பத்தைநகலித்திட்டதாவி, வாகுளமரத்தில்வைத்துடன்
கொத்த, விஷந்தெரித்தடியில்வீற்றிடுஞ்சாத, மிசையினில்விழுந்துவிகற்பமதினு
ல், பொசித்திட்டக்கிழவப்புரான்துடித்துப், பசிப்புறதுயிர்போய்ப்பாரினில்வீழ்ந்
தான், [illegible]மைசெய்திட்டமறையோனிச், [illegible]மையக்கண்டு[illegible]

வாடி, அமைன்னத்தாலவனிறத்திட்ட, கோலந்தன்னைக்குறித்திடாவகையால், இ
வலையுன்னைஅழுதத்திருவுயிர், எலிவிட்டதென்றெண்ணியம்மறையோன், இனத்
தாரின்றியிச்சவந்தன்னைத், தனித்தெடுத்திடத்தகாதெனவிளையாய், அடுத்திடும்
புரம்போயங்குள்ளமறையோர், இடத்திலிம்மூப்பனிறந்ததைக்கூற, அநதவேளா
ல்லாமடைவுடன்றிரளாய், வந்திறந்தவனைவண்மையாய்ப்பார்த்தே, பசிபார்த்தன
னம்பருத்தவன்மீது, வசைநினைத்தவனேவாட்டிறுனென்றே, அறிவின்றிமூடவந்
தனரெல்லாம், நெருங்கிவன்றிகைக்கநேர்ந்தவர்த்துடித்து, நகர்ப்புறமுற்றாயிரு
ர்க்கைவாழ், திகழாலயத்துள்திக்கிலேயடைத்தே, ஏகினரெல்லாமிறைவருக்கர
சே, வாகுளமறையோன்வண்மையைக்கேளீர், ஆகமமறையுமைந்திலக்கணமும்,
மாகனவாணிவரமருள்பெற்றோன், விற்பனசீலவிவேகனுகையால், அற்புதப்பதிக
மன்னைமேலியற்றிப், பின்னுமீனாந்துபிரபந்தங்களைப், பன்னியேமுடிக்கப்பரு
ந்தனைலாகி, எரிந்திடநகரமிருந்திடுங்குடிகள், சுருதியோர்களுஞ்சுற்றுடன்று
ர்க்கை, ஆலயந்தேடியபிஷேகம்பூசை, சாலவோடத்தச்சங்கரிமறையோன், செ
ய்தான்றியைத்திர்ப்திகரமாய், ஐயமறவேயறைந்தபின்யாரும், பேதமையான
பிழைபொறுத்தாளென், றேதியன்னையொளிர்கழல்போற்றி, மகிழ்ந்திடமறை
யோன்வந்தவரெல்லாம், புகழ்ந்தமென்மேலும்பூசித்தனராம், அன்னமேபசிபா
ர்த்தன்னம்பருந்த, புண்ணியன்றனக்குப்பொய்ப்பழியான, விதியெனக்காச்சு
வேந்தர்கள்வேந்தே, சதியிலைமெய்யுன்றுள்கதியென்கையே.

இராஜன்சொல் விருத்தம்.

சங்கைசெய்தாயென்றகத்திலுனைநானென்னிச் சார்ந்திருக்குமின்றேர்பா
ல்சாற்றுகின்மேல், பங்கமுறையாமுன்பின்னாய்ந்திடாமற் பழிசுமந்தபாவிகள்கள்
பலவுரைத்தார், இங்குனையான்வரவழைத்தேன்றானியான வெனைக்காத்தேனெ
ன்றுரைக்குமியல்புமேதோ, அங்கமிசப்பூரித்தேன்வந்ததினை அறைகுவாய்மனம்
சேறவறிவுளோனே.

வசனம்.

கேளாயப்பா போதவாதித்தா நீகுற்றஞ்செய்தவனே யென்றென்மனதிலெ
ண்ணி உனக்கினைஞராகிய இம்மூவரிடத்திலும் இப்புரோகிதரிடத்திலும் மதுசூதி
மந்திரியிடத்திலுஞ் சொன்னபோது உன்மீது குற்றஞ்சாற்றாமல் முன்பின்பாரா
மற் பழிசுமந்த கதைகளைச்சொன்னார் இதினாலுனையிவிடம் வரவழைத்தேன்
ஏதோ எனக்கான இடையூற்றிக் காத்தேனென்றுசொல்லுங் காரணமேதோ
ஆ! ஆ! சந்தோஷத்தால் வந்ததன்பமேதோ சொல்லும் பிள்ளாய். போதவாதி
த்தா.

போதவாதித்தன்சொல் விருத்தம்.

சிதமடற்கிரியொடுகமுருவானை தேசலவும்பொற்றிரட்சிதிகழ்வயற்சூழ்ந்
தோங்கியபுகழ்ப்பெருகுமூளைகைகாட்டி லுனைப்பவருக்கெஞ்ஞான்றுமுளத்திலல்ல
ற்பேதமனுவில்லாமற்காக்குமெந்தாய்பேதையடியான்மீதுபிழையாரயன்னே,மாத
ரசிசொன்னதையும்வந்ததினை யனுவகையாய்ப்புகழலுரைத்துவேனே.

வசனம்.

மேசங்களுயர்ந்தமலைகளும் கமுகுசெய்வானைகள் செழிப்பாய்வளரவும் அ
[illegible]பொருந்தியபொன்னும் [illegible]த்திலங்குங் [illegible]கள் குழுமனகாபுரி

ப்பட்டணத்தில் வாழும்குடிகளுக்கு மற்றவர்க்கும் விசனமென்பதில்லாமல் தந்தையைப்போல் காக்குமதிபதியே அலில்லாதசிற்பேன்மீது பத்தினியாகிய அன்னைசொன்ன குற்றத்தையும் வந்ததுன்பங்களையுஞ் சொல்லுகிறேன் மன்னவா.

இதுவுமது.

மதிபதியேயெனதிளைஞர்மூவர்யானும் மதுரேசபுரிகடந்துவருகும்போது, புகழ்பெறுநற்தேசம்வாழ்வணிகனுடனே போக்கடித்தகனசதத்தாற்போர்கொண்டந்த, இகலறவின் திருவடிகளிணையிறைஞ்ச இயல்கொளும்விவேகரெனவெண்ணியன்பாய், மகிழ்வுடனும்மருகிருந்தேயாசியற்ற வண்மையுடனுதரித்தோய்வசனிப்பேனே.

வசனம்.

மதுராபுரியைக்கடந்து எனக்கிளைஞராகிய இம்மூவரும்யானுமாய் வரும்போது நமதுதேசவர்த்தகன்போக்கடித்த ஒட்டகத்தால் வாதாடி உமது தெரிசனைகாண அடியோமறிவுள்ளவரென்று இன்றுமெய்களை யாதரிப்போமே.

விருத்தம்.

பெற்றமாதரசியெனத்தந்தைநீரே பேணியெனதிளையோரும்பெட்பாயானும், கொற்றவனேஇரவில்மருவலர்கள்சூதாங் குத்திரமுந்தீதுபகைகுறைகளேனும், உற்றிடுமுன்றனைக்கெண்ணியல்வில்யாங்க ளொவ்வொருசாமத்திலொருவர்களாய்மிக்க, வெற்றியுடனகர்வலஞ்செய்திடுவோமந்த விசயமறிவீர்மெய்யைவிளம்புவேனே.

வசனம்.

அரசியாள்பெற்றவளென்றும் தாங்கள்தந்தையென்றும் இளையவரும்யானும் வெகுவாய்மனதிலாசைகொண்டு இரவுகாலங்களில் பகைவராகிய வரசர்களுது வஞ்சனையாதொன்று மணுகிடாமல் ஒவ்வொருசாமத்திலொவ்வொருவராய் நகரமெங்குஞ் சுற்றிப்பார்த்து பொழுதுவிடிந்தபிறகு தங்கள்சமுகங்கொலுவின் சேர்ந்திருப்போமே மன்னவா.

விருத்தம்.

நகர்வலமிவ்வாறல்லிற்செய்யும்நாளில் நரபதியேநேற்றிரவில்நடுக்கமின்றி, அகமகிழ்வாயடியவன்கைக்கருவியேந்தி ஆயுதமுஸ்திப்புடனேயடல்வீரன்போல், முகில்இருள்சேர்முதற்சாமம்பட்டணத்தை முழுதும்வலம்வரும்வேளைமுனம்வடக்கில், மிகமெலிவாயாலயத்துள்ளோலமிட்டே விதனமுடனழுஞ்சப்தம்வினவிற்றேனே.

வசனம்.

இவ்விதமாய் நகர்வலஞ்செய்து வருந்தருணத்தில் நேற்றியதினமிரவில் முதலாஞ்சாமத்தில் அடியேன் ஆயுதமுஸ்திப்புடனே பட்டணத்தைச்சுற்றிவரும்போது வடபாரிசத்தில் ஆலயத்துள் கூச்சலிட்டு அழுகின்ற சப்தங்கேட்டேன் மன்னவா.

விருத்தம்.

அதிசிக்கிரமாகவடதிசையைநோக்கி யாலயத்தினருகிற்சென்றருளுகவும், விதிகுறையின்பயனோதோமுனியோபேயோ மெல்லியோநீயாரென்றுவெகுண்

டுகேட்க, அதிபதித்துர்க்கையமென்றுரைக்கத் தோத்திரித்தெய்வீராட்டியடிக்கணையாளுன்றன், சதியெனக்காம்பிகையேயுனக்குவாய்த்த கவையென்னவிதியறுக்கருளென்றேனே.

வசனம்.

வெகுசிக்கிரமாக வடதிசையாலயத்தருகிற்போய் நடுஜாம இரவில் அழப்பட்டவள் நீயார் உன்பெயரென்ன முனியோ பேயோ சொல்லென்றபோது பட்டணத்தைக்காக்குந்துர்க்கையம்மனென்றாள் அம்பிகையின்பாதங்களைத் தோத்தரித்து உனக்குவந்த விதனமேதம்மா சொல்லுமென்றுகேட்டேன் மன்னவா.

விருத்தம்.

ஜெகதம்பாளடியவன்மேற்கிருபையுற்றுத் தேர்வேந்தேகேள்நனக்குத்திருநாளை, வரைமோசமாவதினாலழுதேனென்றாள் மன்தயர்க்கேதுவருந்தயவாவமுத்தமாலி, திகழுமிருபொற்கழலைத்தாலிப்போற்றச் செஞ்சடைகென்மாரிசொன்ன தின்மைகேளீர், மதிபதியேயாமனைவேதாந்தியம்பாள் மாதவ்வியருணக்குவாய்த்ததையா.

வசனம்.

ஜெகதம்பாளானவளுதை நீருத்தி என்மீது தயையுற்று அரசனுக்கு நாளையதினம் அயர்வாய் போவதாலழுகிறேனென்றாள். அடியேன் மனங்கலங்கி தோத்திரித்து வருந்துன்பத்தைச் சொல்லென்றேன் மன்னவா.

விருத்தம்.

வளம்பெறும்நற்தேசம்வாழ்மணியக்கார னுவருந்தமுதலியென்பேர்வலவனையாக, உகமகிழ்வாயிவ்வாண்டிற்புனைச்செழித்த அயர்பாரிசாதநெற்கதிருகந்தேயீவான், அங்கேந்தாபூபனையத்தானியந்தி லாலம்சேர்த்திட்டதிராமைந்திருக்கும், களங்கமின்றிச்சமைத்துண்ணுமுதற்பிடிக்குள் காலவிடம்வருமென்றுகழறினாளே.

வசனம்.

உதையகாலத்தில் நமதுதேசத்தில்வாழும் மணியக்காரன் புதிதாய்விளைந்த பாரிசாதம் என்னும் நெல்லை மகாராஜனுக்குக் கொண்டுவந்து கொடுப்பான், அதைச்சமைத்து சாப்பிடும்போது முதற்பிடிக்குள் விஷஞ்சேர்ந்திருக்கும் நெல்லன்னம் வருமென்றுசொன்னாள் மன்னவா.

விருத்தம்.

சுடர்முடிபூண்டுலகாளும்வேந்தேயாள் தோய்ந்தவனைதிரிநேத்திரிசொன்னவாறே, அடியேனுன்னைமகிழுகவில்வன்கேளீர் நெல்விளைத்திட்டவயலதனிலந்நாள், திடமுளகார்க்கோடகனுங்குளிகனென்றும் சேர்ந்துகொள்ளிருவாராத்திற் குவாதாய்க், கடுமையமர்புரியவிடக்கொப்பளிக்கக் கதிர்விளைந்ததாமறிவீர்கருணையோனே.

வசனம்.

அந்தநெல்லில் விஷங்கலந்தவிதம் துர்க்கைசொன்ன விதமேசொல்லுகிறேன் நெற்களானவை விளைந்திருந்த வயலில்கார்க்கோடகன் குளிகனென்று பி

ருவருக்கும் வாதாகி ஒன்றுக்கொன்று கடித்தப்புரளுந் தருணத்தில் விஷம்வெளியாகி யோர்கதிரில் நனைந்ததா மன்னவா.

விருத்தம்.

எந்தையேகீமுதற்பிடிசாதத்தையுண்டால் இறப்பீரென்றன்னை னுர்க்கையியம்பவந்தப், பந்தமாந்நீதறுக்கவிரைந்தன்பின்யான் பரிந்துவந்தேன்சாதமருந்திடப்பகுத்தீர்,முந்துகைக்கொண்டிட்டவன்னத்தையான்வாங்கிமுடிந்திட்டேனிதைப்பாரீர்முயற்சியாகும், மைந்தனெனவெண்ணிடுயிரின்னமாலி வழுந்திட்டதில் லிரண்டின்வகைசொல்வேனே.

வசனம்.

முதலாம்பிடி சாதத்தையுண்டால் இறப்பீரென்று துர்க்கைசொன்னபடியால் கொலுக்கலைந்தபின் உமதுபிறகு அடியேன்வந்து நீருண்டபோன முதற்பிடி சாதத்தை யடியேன்வணங்கி வாங்கிக்கொண்டேனே அதைஇதோமுடிந்திருக்கிறேன் வாங்கிக்கொள்வீர் இவ்விடுக்கண்தப்பினால் பின்னுமிரண்டுதுன்பம் நேரிடுமென்றாள் மன்னவா.

விருத்தம்.

மருவலரும்விஜையபுரியாளுமன்னன்மணமுலவுமதிரசங்கள்மட்பாண்டத்துள், பெருகவைத்துவாசியம்புப்பொறியடக்கிப் பேணுமல்வாய்மூடிப்பேதமாக, ஒருமையுடன்சூத்ரம்வைத்தேதிறப்போர்மாள உபாயமதாயேவிடுவானுண்மையாய்நீர், அருமையுளவென்றதைநீக்கிடவிறக்கும் அந்தரங்கத்திணைத்துர்க்கையறைந்திட்டாளே.

வசனம்.

பகைவருகிய விஜையராஜன் இனிப்பைத்தருமதிரசங்கள்செய்து ஓர்பாண்டத்துள்வைத்து அம்புப்பொறிக ளதன்கண்ணடக்கி தந்திரமாகவாய்மூடிட்டு திறப்பவர்மாளும்படியான சூத்ரம்வைத்தனுப்புவான் மகாராஜன் திறந்திடாதிருப்பாரென்று துர்க்கையம்மன்சொன்னாள் மன்னவா.

விருத்தம்.

விஜையபுரியாள்கொடியோன்விட்டகுதை வேந்தேபான்றடுத்திட்டவிபரங்கேளீர் இசைவுடனேற்றுக்காலைகொலுவில்வந்தே எழிபெறுஞ்சேர்வையையழைத்தேயிறைவாயும்மை, உசிதமுடனேவர்காணவந்திட்டாலும், ஒலையுங்கப்பமுமென்னவுரைவந்தாலும், வசையாகுமெனையன்றிப்போவாராகில் வாட்டிடுவேனெனக்காவல்வைத்திட்டேனே.

வசனம்.

பகைவருகிய விஜையராஜன் விட்டகுதை நான்தடுத்திட்ட வகையைக் கேளீர்மன்னவா நேற்றியதினங்காலையில் கொலுச்சமுகம்வந்து வீரசேருவையையழைப்பித்து தங்களைக்காணவேண்டி யெவர்கள்வந்தபோதிலும், கப்பங்காணிக்கை ஓலை இன்னமேதாகிலும் எனைக்காணுமல் இராஜசமுகம் போவதானால் உன்மீதில் குற்றஞ்சாற்றி வதைத்திடுவேனென்று சேருவையைக் காவல்வைத்தேன் மன்னவா.

விருத்தம்.

விறல்பெருகுஞ்சேருவைகாத்திடமத்யானம்விசையபுரியினிலிருந்தேவினைவாய்விட்ட, பரிசமதிரசக்குடமுங்கொணர்ந்தோர்வாயிற் படியெதிரில்நின்றிருக்கப்பகர்ந்துசேர்வை, திறமுடனென்பாலுரைத்தா னடியான்சென்றத் திறைகளைத்தந்திடக்கேட்கத்தீராருதர், இறைவனின்றியீவதிலையெனநவின்றார் எழுதியஒலையைமாத்திரமேதந்தினேனே.

வசனம்.

சேருவைக்காரன் வாசற்படி யெதிரில் காத்திருக்க விஜயராஜன்விட்டபொதியம்புக்குடமும் கப்பங்களும்வர சேர்வைக்காரனவர்களை உள்விடாமல் வாசற்படியெதிரில் நிறுத்திவைத்து என்னிடம்ஓடிவந்து சொன்னான் நான்போய்கொண்டுவந்த அதிரசக்குடத்தையும் காணிக்கைகளையுங் கேட்க இராஜன்வசங்கொடுப்பதல்லாமல் மற்றவர் வசங்கொடுப்பதில்லையென்றார் கொண்டுவந்த ஓலையை மாத்திரம் வாங்கிவந்தேன் மன்னவா.

விருத்தம்.

வாங்கியவோலையைமதிபாவர்தனுதர் மறைவாகயான்பிரித்துவாசித்திட்டேன், பாங்களைப்போலக்கொடியோனெழுதிவிட்ட பரிவுரைசெய்திருப்பதைப்பாரீரையா, சங்கிதையான்றடுத்திட்டவகையைக்கேளீர் இதிஞ்சிறையிலிருந்தவனையிசைந்தழைத்தே, இக்கிலியென்றவனுக்குப்பொற்கிரீடஞ் சிரமணியவாய்ந்துவகைசெய்பினேனே.

வசனம்.

அடியான் ஓலையைவாங்கிக் கொண்டுவந்த வீரர்கள் காணுமற்படி சந்திரிகையைப்பிரித்து வாசித்துப்பார்த்தேன் அன்பனைப்போ லந்தப்பகைவனெழுதினதிதான் மன்னவா அம்புப் பொறிகளையுந்தடுக்க உபாய மெவ்விதமென்றுன்னுஞ் சிறைஇருந்தவனை யழைப்பித்து ஆடை ஆபரணமும் கிரீடமு மிவைகளைத்தந்து அவன் மனம்பூரிக்க அலங்கரித்துக் கொள்ளும் உபாயஞ் செய்தேன் மன்னவா.

விருத்தம்.

சிறையிருந்தோனிப்பணிகளெல்லாம்பூண்டான் தேர்வேந்தேவந்திருந்ததிறையும்பானை, சிறையவிருக்கின்றதையுமவிழ்த்துப்பார்க்க விகழ்த்திட்டேனவன்போஞ்னேயமாக, முறையுடனேசேருவையும்யானும்வாயில் முன்பதிபிற்காத்திருந்தோமுடுக்கச்செவ்றேன், அறியாமற்றுழ்பியன்வாய்திறக்கமாட்டான் அவனுடனேதுதருயிரகன்றானையா.

வசனம்.

சிறையிருந்தவன் ஆடையாபரணங்களை யலங்கரித்துக் கொண்டான்அதன்பின் விஜையனனுப்பின் காணிக்கைகளையும் வந்திருக்கும்பானையையும் திறந்துபார்த்து அவன்வளவிற்குப்போய் விடும்படிச் சொன்னேன் அவ்விதம் அவன் திறக்கப்போகுதற்கு முன்னமே யானும் சேருவையுமிச்சிறிய விடுதிக்குள் போயிருந்தோம் போன சிறைச்சாலையன் அதிரசக்குடத்தைத் திறக்கப படபடெனப்

பொறியம்புவாசிகள் இளம்பியவரும் வந்தனாதர்களும் இறந்துவிட்டார் மன்னவா.

விருத்தம்.

மெய்யிதுதான்மன்னவனேயென்றுரைத்த வீரசேர்வையையழைத்துவிடுவீரேல், பொய்நிஜம்யாவுந்தெரியீர்நீதிரண்டின் புரையுரைத்தேனடியாளும்விதாயின்னம், வையகத்தைநீராளச்செய்ததல்லால் வஞ்சகனென்றெனைநினைநீர்வசையிதல்லை, ஐயமுண்டோபள்ளியறைக்குள்வந்திட்ட தறைகுவேனைத்மையதிருவீரோ.

வசனம்.

இதுண்மையானவார்த்தையே வேண்டுமோனால் என்றேடிருந்த சேருவைகாரனை யழைத்து கேட்பீரானால் உள்ளத்தைச்சொல்லுவான் நாங்கள்பிழைக்கவகைதேடினே னல்லாமல் வேறொன்றில்லை அரமனைக்குள்வந்த பேதத்தைச்சொல்லுவேன் கேளீர்மன்னவா.

விருத்தம்.

திரிநேத்ரிகல்யாணிகௌரிஸ்ரீ ஜெகத்தாயிருவருணாற்றிரண்டை, புவாமத்தடுத்திட்டேவிருபாகீரும் மாதாசிஇருவருமாய்மஞ்சமீது, அருமையுடனமிலுற்றமுதலாஞ்சாமம் அரவமுமைவிதைப்பரிகைதயாக்குமென்றே. பெருந்துராய்த்தார்க்கைகவின்றிடயானந்தப் பிழைதவிர்த்ததல்லமையைப்பேசுவேனே.

வசனம்.

அகிலாண்டகோடிநாயகியாகிய தார்க்கையம்மனருளால் இரண்டுஜென்பகனையுந்தடுத்துவிட்டேன் மூன்றுவது பத்தினியுந்தாங்களும் மஞ்சமீதுதாங்கும்போதுசங்கிலிவழியாய் நாகசர்ப்பமிறங்கி விதைப்பரிகை செய்யுமென்றம்கைசொன்னபடியால் அதைத்தடுத்திட்ட உபாயத்தைக் கேளீர் மன்னவா.

விருத்தம்.

அதிபதியேநகர்வலம்யான்சென்றிடாம லரமனையட்காத்திருந்தேனனிமஞ்சத்தின், எதிரிருக்குத்தம்பம்வழியாகச்சற்ப மிறங்கிடக்கண்டேனென்கைவாளால், வீதிமுடிந்துபாம்பிறக்கத்துண்டுதுண்டாய் வெட்டிடவும்மோதுறைத்கயிருத்திருந்த, மதிவதனிபத்தினிமார்மீதிரத்தம் வாய்த்ததோர்திவலையாமனம்நொந்தேனே.

வசனம்.

நகர்வலம்போகாமல் பள்ளியறைக்குள் காத்திருந்தேன் கட்டிலின் அம்மனிதிக் கம்பவழியாய் நாகசற்பம் ஆக்ரமித்திறங்கினது உடனேயென்கையிலிருக்கு பிடிவாளால் துண்டதுண்டங்களாய் வெட்டினேன் அன்னையாகிய பத்தினிமார்மீது ஓர்துளிரத்தம் வீழ்ந்தமையால் இதனால் விஷமேறுமென்று மனம்நொந்தேன் மன்னவா.

விருத்தம்.

ஆதரைமேற்குருபத்தினியரசன்றேவி அரும்பண்டிதன்மனைவியன்னைன்பாரி, ஓதியபாதகனில்லாவிறைவாயின்னோர் ஒருமையுடன்பெற்றவளினுயர்ந்தோரன்றே, ஏதமின்றியாகமங்களறைவதையா இன்றவள்மார்பைக்கரத்தாலேந்தி

...செயர், விதமதாயமுதமுன்றுவதைப்போற்கண்டு விரனகத்தாற்கொணைவகைமிகவுற்றேனே.

வசனம்.

பூலோகத்திலில் குருபெண்சாதி இராஜன்தேவி பண்டிதன்மனைவி அன்னைன்மனைவி இவட்டன்மனைவி இவர்களெல்லாம் பெற்றவளினுமுயர்ந்தவராகையாலதினது மார்பை பிள்ளைகள்கையாலேந்தி பாலுண்ணவில்லையா அவ்வாறேதாயாகிய பத்தினிமார்மீதிருந்த இரத்தத்துளியை சுண்டுவிரல்நகத்தினலெடுத்திட்டேன் மன்னவா.

விருத்தம்.

துணிர்தகத்திலச்சமின்றியரசிமார்மேல் சுண்டுவிரற்பட்டதனுற்றுசனாமென்றே, பணிந்துடன்வெட்டினென்வாளாலிதனைப்பாரீர் பாம்புதுண்டமினவயெல்லாம்பஞ்சகத்தின், மணியிலகுமஞ்சமான்கிரிமேல்வைத்து வாயிற்றுண்டிப்பேதைவருகும்போது, அணிபெறும்பத்தினியெழுந்துசெல்வதாலொன் றதட்டிக்கேட்டிடவென்பேரனறத்திட்டேனே.

வசனம்

பத்தினியாள்மார்மீது விழுந்த இரத்தத்துளியை மனத்துணிவோடும் என்துசுண்டுவிரல்நகத்தினு லெடுத்தால் அவிடத்தில் பட்டகுற்றத்திற்காக இதோகைவிரலையும் வெட்டி பாம்புதுண்டங்களுடன்சேர்த்து மஞ்சத்தின் அம்மானகிரிமேல்வைத்து வாசற்படியைத் தாண்டிவருஞ் சமயம் அரசியாரெழுந்து போவதாரடாவென்று கேட்க நான்தான் போதவாநித்தனம்மாவென்றுசொல்லிவந்தேன் மன்னவா.

விருத்தம்.

மாதிரமாளதிபதியேசீருக்க வாய்த்ததுயர்தடுத்ததல்லால்வஞ்சமில்லை, திஅபுரிந்தேனெனவினாய்வசைத்திர் சேயர்மிசைதக்கதயர்கள்சினமிருந்தால், எவைகைச்செய்வதிலித்தஞ்சமுன்றன்எழில்பெருகுமிருதாள்களெந்நாளும், பாவாத்திமடனென்றகத்திலென்றுப் பழியேனுவடியனைக்கண்பாரீரையா.

வசனம்.

கேளிராசேந்திரபூபதியே சீறிக்கும்படியாய் நேரிட்டதுன்பங்களையடியேன் றடுத்ததல்லால் வஞ்சனையென்ன வேண்டாம் என்றாலும் பிள்ளைகள்மீது தந்தைகள் கோபித்திருந்தால் செய்யும்வகையேதாகிலுமுண்டோ அடியேன்மீது கொண்டிருக்குங் கோபங்களை யகற்றி ஆண்டருளு மாசே.

மநுநீதிமந்திரிசொல் விருத்தம்.

பூவுலகிற்கீர்த்திபெற்றவரசர்மேலாய் போதவாநித்தனைநாம்புரையுரைத்தாற்,பாவமென்றுஞ்சம்பவிக்குமனதனையம்பற்றறவிப்பிடியுனவைப்பரிகைதசெய்வீர், நிவிரமாய்விஜயன்விட்டவம்பின்செய்தி சேருவையையழைத்திட்டாற்பிறந்துசொல்வான், மாவலனேஇச்சபையுள்ளோருமன்னர் மந்திரிகளுமிவையதிந்துமகிழலாமே.

வசனம்.

கேளீர் அரகேந்திரபூபதியே வல்லவனுகிய போதவாநித்தன்மீது நாம்குற்றஞ்சொன்னு லென்றைக்கும்பாவம்சம்பவிக்கும் இன்னமுமக்கைய மிருந்தா

வர்கொடுத்த இவ்விஷச்சாதத்தையும் பரிக்ஷைசெய்வீர் சேருவைக்காரனையு மழைப்பித்து நீரவிசாரித்தால் எல்லாம் சொல்லுவான். சபையிலுள்ளோர் இயாவரு மறிவார்கள் மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

அறிவுயருமந்திரிகளில்மிக்கோனென்றேன் ஆளுகையிற் றுரந்தரனுயாத்திவின்றும், பரிவிருக்கவனைப்போதவாதித்தன்மேல்பாவைசொன்னகுற்றத்தாற்பதறிக்காய்ந்தேன், திறமைமிகுமருந்தியமைச்சேமுன்னாள் சிசுவதைத்தபாதகனைச்சிறைவைத்தோமே, விரைவுடனேயவனைவரவழைத்தாலிந்த விடவன்னம்புசிக்க விட்டவ்விதமாய்வோமே.

வசனம்.

ஆ! ஆ! கேளாய் மருந்திமந்திரியே அறிவுள்ளவமைச்சர்களில் சிறந்த நிபுணனென்று எனதாளுகை இராச்சியபாரந்தாங்கும் வல்லவனென்றும் போதவாதித்தனை இன்றைக்கு மென்மனதி லாசைகொண்டிருக்கிறேன் ஆனால் அமிர்தவல்லி சொன்னகுற்றத்தினு லல்லவோ கடுங்கோபங்கொண்டேன் நீசொல்லும்படியே முன்னஞ்சிசுவதைசெய்த பாதகனையழைத்து வரும்படி யாக்ஞாபித்தால் இந்தவிஷச்சாதத்தை யுண்ணக்கொடுத்து இவ்வுண்மையை யறியலா மருந்தியே.

மருந்திசொல் வஞ்சித்துறை.

திறல்கொள்கட்டியனே,துரிதமாயோடி,சிறையிருப்பவனை,பரிவுடனழைப்பாய்.

கட்டியன்சொல் வசனம்.

அப்படியே அழைத்தோடி வருவேனையா.

கட்டியன்சொல் வஞ்சித்துறை.

சிறைஇருப்பவரோ, விரைவுடனரசன், திருவளர்சமுகம், வரவுரைத்தனரோ.

சிறைச்சாலையன்சொல் விருத்தம்.

பாவியான்செய்தகுற்றம் பாருளோர்க்கேற்றிடாத
தீவிரத்திற்கேவேந்தன் சிறையிருத்திட்டாரென்னை
ஆவலாயழைத்ததுண்டோ அல்லதுவதைத்துக்கொல்லக்
காவலனெண்ணினரோ கனசபைப்போவோமையா.

கரு. இராகம் - கௌளிபந்து. தாளம் - ஆதி.

பல்லவி.

தெண்டம் - ஐயா - தெண்டம்.

அநுபல்லவி.

மண்டலமாளகேந்திர னின்றெனையழைத்ததேது (தெண்ட)

சரணங்கள்.

குற்றமே - கொடுங் - குற்றமே.

கொற்றவன்மனங்கொதித்து இற்றைவரைசிறையிட்டார் (தெண்ட)

பாலனே - யான் - பாலனே.

காலனைப்போல்வதைத்திட்ட கோலத்திற்கிவ்விதியாச்சு (தெண்ட)

ஈசனே - ஜெகத் - ஈசனே.

நேசம்வைத்தென்தனைக்காவாய் மாசிலாப்பரம்பொருளே (தெண்ட)

சிறைச்சாலையன்சொல் வஞ்சித்துறை.

சிறந்திடுமுலகைப், புரந்திடுதர்மம், பெருந்தகைவளருந், துரந்தராசரணம்.

இராஜன்சொல் விருத்தம்.

மந்திரிகளில்மிக்கோனென் மருந்திசொல்லக்கேளாய்
வந்ததோரிப்பாவிக்கு வாட்டிடுமாலவன்னம்
தந்திதையுண்ணவைப்பாய் சங்கையோசன்றேசாண்போம்
சுந்தரனவின்றமெய்யுஞ் சூதென்றறியலாமே.

வசனம்,

கேளாய் மருந்தியே இதோவந்த பாதகனாகிய சிறைச்சாலையனுக்கு அறிஞனாகிய போதவாதித்தன் கொடுத்த இவ்விடவன்னத்தைக் கொடுப்பாயாளு விதனைலாகுந் தீதும்நன்று மறியலா மந்திரியே.

மருந்திமந்திரிசொல் வசனம்.

இதோகொடுத் துண்ணவைப்பேன் மன்னவா.

மருந்திசொல் வஞ்சித்துறை.

சிசுவதைசெய்து, வசைமிகுத்தவனே, புஜபலன்றந்த சுசியுணவுண்பாய்.

சிறைச்சாலையன்சொல் விருத்தம்.

பாரினிலேற்றிடாத பழிசுமந்திட்டேன்மெய்யே
ஆருயிர்போக்குமால அன்னத்தையுண்பேன்றுரீர்
சீருளகைலைவாழுஞ் சிவபெருமானேஉன்தன்
ஏருளவடியைச்சேர இதனைநான்புசித்திட்டேனே.

பிராமணாள்சொல் விருத்தம்.

புண்ணியபுருஷனான போதவாதித்தன்சொன்ன
வண்ணமேயிவனிறந்தான் வாய்மையைப்பாரீர்வேந்தே
மண்ணுலகில்விலையிந்த வல்லவன்முகத்தைக்கண்டால்
பண்ணியபாபம்போமே பார்புகழ்கஜகேசேந்திரா.

வசனம்.

ஆ! ஆ! கேளீர் கஜகேந்திரமகாராஜனே புண்ணிய நிபுணனாகிய போதவாதித்தன் சொன்னதும் கொடுத்த விஷமன்னமும் இவனுண்டுமாண்டதும் பார்த்தோம் இல்லவா சகாயஞ்செய்தோனென்று சொல்லுதற்கு உண்மையாச்சேபோதவாதித்தன் முகத்தைக்கண்டபோதே செய்தபாபங்களெல்லாம் பறந்திடுமே மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

சிலனொருவம்போதவாதித்தன்சொன்னதிதுசெய்விடவன்னத்தின்றேன்மாண்டான், காலனைப்போலுயிர்கவரும்பொறிகொள்மைக் கருதலனாகியவிஜயன் கனமாய்விட்ட, கோலமினிநாமறியவேண்டுமையாசொலுக்காக்குங்கட்டியனே குணமாயோடி, சாலமின்றியிக்ஷணமேசேர்வைக்காரன் சாக்கிரதையாயிவிடம்வரச்சாற்றிடாயே.

வசனம்.

ஆ! ஆ! கேளீர்களையா பிராமணர்களே மந்திரிபிரதானி பெரியோர்களோர்

குணமேலுறிய போரவாதித்தன் சொன்னபடியே அன்னம்புசித்தவன்மாண்டா ன் ஆகுலின்னமொன்று பகைவருறிய விஜையராஜ னனுப்பிய அம்புப்பொதிகுடத்தின் விபரமறியவேண்டுமே அடாகட்டியனே சரசரொன்றோடிச்சேருவைக் காரனை யழைத்தேனென் றழைத்தோடிவாடா கட்டியனே.

கட்டியன்சொல் வஞ்சித்துறை.

செர்தாள்போற்றி,எந்தையேசொன்ன,விர்தைசேருவையே,அர்தமாயழைப்பேன்

விருத்தம்.

திகழ்மணியிலங்கும்,தகைசொள்சேருவையே,வெகுசுருக்காக,மகிபனுரழைத்தார்

சேருவைக்காரன்சொல் வஞ்சித்துறை.

மண்ணெலாம்புகழும், அண்ணனேக்கண
வண்ணமாவருவேன், திண்ணமாவாராய்.

சேருவைசொல் தரு. இராகம் - மோகனம். தாளம் - ஆதி.

பல்லவி.

விசயசேருவைவந்தான் - சுபசற்குண - விசயசேருவைவந்தான்.

அநுபல்லவி.

இசையெங்கும்புகழ்பெற்றதிண்புயனாள தேசன்
இசையுஞ்சபையைக்காப்போனின்புறமக ராஜன் (விசய)

சரணம்.

தலையிலணிந்ததங்கருச்சுப்பளபொன்னத் தவனமாலைக ளலங்க தெ
சந்த்ரமுகசுந்தரமுஞ்செங்னாரத்திலதஞ் சவியாய்நுத விலங்க
விலையுயர்பதக்கமும்இருபுஜக்கருஞ்சோதி வீசவெண்ணீறு துலங்க வெகு
விசித்திரகைக்கடகமும்வல்லவாட்டுமசைய வீரர்மனங் கலங்க
சிலைமாரன்வடிவிலுஞ்சிறந்த பேரழகினன்
கலையாகமமறிந்தகங்கயின் லகத்திலுன் (விசய)

சேருவைசொல் வஞ்சித்துறை.

மன்னவாசரணம், என்னையிங்கழைத்த, தென்னகாரணமோ, பன்னுவீரொந்தாய்.

இராஜன்சொல் விருத்தம்.

வந்தசேருவையேபோத வாதித்தனன்றிசெய்த
அந்தரங்கங்களேதோ அகத்தினிலேயின்றி
இந்தநற்சபையிலுள்ளோர் இயாவருமறியஉண்மைப்
பந்தமாய்கவெனுகப் பகருவநீயுன்மேலே.

வசனம்.

ஆ! ஆ! சேருவையே இச்சபையிலுள்ள மந்திரிபிரதானி சேனாதிபர்கள்வேத வேதியர்பெரியோர் இயாவருமறியும்படியாய் சத்தியந்தனு யுண்மையாக போதவாதித்தன்செய்த நன்றியேதோ தெரியச்சொல்வாய் சேருவையே.

சேருவைசொல் விருத்தம்.

மன்னர்தொழுமகிபர்லாகன்னுற்கண்ட வாய்மையினைக்கூறிடுவேன்மடியிதல்ல, இந்திபுணனேற்றியகாலையிலழைத்த இட்டகட்டளையிதேயிறைவர்வேதர், பன்னும்பட்டணக்குடிகண்மற்றதேச பார்த்திபர்கள்வரவிடுக்கும்பரிசேதேனும், தன்னையல்லாதுஞ்சேர்வையாருலென்னைச் சதைப்பதாய்க்கொலுகாக்கசாற்றிட்டாரே.

வசனம்.

கேளீ ரளகேந்திரபூபதியே அடியேன் கண்ணினுற்கண்டதை உண்மையாகச்சொல்லுவேன் அபத்தமென் றெண்ணவேண்டுவதில்லை நேற்றியகாலையில் இச்சற்குணன் யெனைவரவழைத்து ஆக்ஞாபித்த தென்னவெனில் அரசர்கள் மந்திரிப்பிரதானிகள் பட்டணக்குடிகள் மற்றயெவர்கள் வந்தபோதிலும் இவனையல்லாமல் அவர்களை உள்விட்டால் எனைச்சதைப்பதாய் மகாசாக்கிரதையோடும் உத்தரவுகொடுத்தார் மன்னவா.

விருத்தம்.

உராதவராமலேயடியான்காத்திருந்தேன் உதையகாலையில்முனம்கம்மூரில்வாழும், அருங்குடிகள்தலைவனும்நெற்கதிர்கொணர்ந்தா னறிவித்தேனவனைவிட ஆக்ஞாபித்தார், தராபுகழும்வேந்தேமத்யானவேளை தாவில்சிலவீரர்களுந்தாழியோடு, பரிசடனேஓலையைக்கையேந்திவந்தார் பரபரப்பாயோடிவர்பால்பகர்ந்திட்டேனே.

வசனம்.

அவ்விதமேயடியேன் காத்திருந்தேன் முன்னமே நமதூரில்வாழு மணியக்காரன் நெற்கதிர்கோட்டைக்கொண்டுவந்தான் அதைஇவற் கறிவித்தேன் பின்விட்டு மத்யானவேளையில் ஓர்பானையும் வெகுமதிகளும் ஓலையுங்கொண்டு வந்தா ரவர்களை வாசற்படியில்இருத்தி சீக்கிரமாயோடி இவர்க்குசொன்னேன் மன்னவா.

விருத்தம்.

பகர்ந்தவுடன்றுடித்தெழுந்துவந்தனுதர் பற்றியவோலையைவாங்கிபார்த்திபாநீர், மிகவலுவலுற்றிரொன்றவர்க்குரைத்து விரைந்துசந்தைப்பிரித்தார்விளம்புஞ்செய்தி, தகைமையுற்றெனையழைத்தார்யானுஞ்சென்றேன் குழியிலுள்ளிருப்பதுவுந்தந்திரமென்றார், புகழ்பெருந்தம்வேர்தேயவ்வமிடைவல்ல புண்யனிவர்தந்ததகைப்புகலுவேனே.

வசனம்.

நான்சொன்னவுடனே துடிதுடித்துவெளிவந்து வெளியில்வந்து மன்னவன்பேதோ அலுவலாஇருக்கிறார் நீங்கள்கொண்டுவந்த ஓலையைக்கொடுப்பீரென் றவரிடமிருந்த வோலையைமாத்திரமிவர்வாங்கி யாதொன்றுந்தெரியாமல் அதைப்பிரித்துவாசித்து எனையழைத்து யிதிலிருக்கும் பானையிலிருப்பது குதாகும் நிற்கும் வகைசொல்வேன் கேளென்றார் மன்னவா.

விருத்தம்.

இறையிருந்தபாதகனைவரவழைத்துச் சிரமணிபுங்கிரீடபூஷந்தசெழுமந்தி, இறைவர்கள்பூண்டிடும்பணிகள்தந்தன்றேனுக் கிதவுசொல்லியரசேநீயிந்தநின்றே,கிறைமனதாயவனையலங்காக்கச்செய்து சேர்மையுடன்வாயிலெதிர்நின்றிருக்கும், இறைபரிசங்கைக்கொண்டேவர்தபானைதிறந்ததைப்பார்த்தேகென்றுசெப்பினரே.

வசனம்

சிறையிருந்தவனை யழைத்துவரச்சொல்லி ஆடையாபரணம் புஜக்கிரீடம் அங்கி இவைகளெல்லா மெடுத்து இனியவார்த்தையோடுந் தாங்கள்கொடுத்ததாக அவனுக்குசொல்லி அரசர்களைப்போ லவனை அலங்கரித்து வெளியில்வந்திருக்கும் வெகுமதியையு மெடுத்துக்கொண்டு பரிவையில் வந்திருப்பதையுந் திறந்துபார்த்துப் போவாயென்று சொன்னார் மன்னவா.

விருத்தம்.

கொற்றவனேசிறையிருந்தோனகமகிழ்ந்தான் கொடுத்திட்டப்பணிகளெலாங்குணமாய்ப்பூண்டான், வெற்றிபெறுமுதலாமந்திரியும்யானிவ் விடுதிக்குள் சென்றிருந்தோம்விரைவாய்ப்போனேன், பற்றியேதாழிதிறக்கப்பொறிகளம்புபடபடென்தேகமெங்கும்பாய்ந்ததேவர், றற்றசிலவீரருடனிவனுமாண்டான் ஓடியிருவருங்கண்டோமுண்மையாமே.

வசனம்.

சிறையிருந்தவன் மகாசந்தோஷத்துடன் கொடுத்த ஆபரணங்களைப் பூண்டுகொண்டான் யானுமுதலாமந்திரியும் அந்தசிறியவிடுதிக்குள் போய்நின்றிருந்தோம் வந்திருக்குங்குடத்தை சிறைச்சாலையன் திறக்கவுடனே பொறியம்புகள் கிளம்பி திறந்தவன்தேகமெங்கும் பாய்ந்தது வந்தவீரர்களும் அவ்விதியேயாகி துடிதுடித்து மாண்டார் இதுவுண்மையேயன்றி சூதான தொன்றுமில்லை மன்னவா.

விருத்தம்.

பூசுரரேபெரியோரேதேசதேசப் புனிதர்களேயறிஞர்களேபுகலக்கேளீர், மாசிலாப்போதவாதித்தன்சொன்ன வாய்மொழிப்படிசேர்வைவசனித்திட்டான், ஆசைகுணமநுநீதியமைச்சேவாளா லறுப்புண்டவிரலுடனேயரவதுண்டம், தேசுயருங்கட்டிலஸ்மானத்தின்மேல்வைத்திருக்கின்றதாங்கொண்டுசீக்கிரம்வாராய்.

வசனம்.

ஆ! ஆ! பெரியோர்களேவேதியர்களே அரசர்களே கேட்டீரோ முதலாமந்திரி போதவாதித்தன் சொன்னபடியே இந்தசேருவைக்காரனும் உண்மையைச்சொன்னான் சந்தோஷம், பிரியமநுநீதிமந்திரியே வாளால் அறுப்புண்ட பாம்புதுண்டங்களும் இவ்வல்லவன் சுண்டுவிரலும் கட்டில் அஸ்மானகிரிமேல்வைத்திருக்கின்றதாமே அவ்வுண்மையையு மறியலாங் கொண்டுவருவாய் மநுநீதியே.

மநுநீதிசொல் வஞ்சித்துறை.

பரிவாயறைந்த, திருயாசமனார், விரைவாயோடி, வருவேன்பாரீர்.

மநுநீதிசொல் விருத்தம்.

ஓவியமழகால்தீட்டி ஒளிபெறுமணிபதித்தே
தாவுந்தம்பங்களும்பொற் றகட்டினால்முழுதுமூடி
மேவியேபதுமைசுற்றும் வீற்றிமெஞ்சமீதே
தூவிபோய்துண்டமான ஆலரவங்கண்டேனே.

வசனம்.

உச்சிதச்சித்திரங்களையழகாயெழுதி பிரகாசமிருந்த இரத்தினங்களைப் பதித்துகம்பங்களெல்லாந் தங்கத்தகட்டினால் முழுதுமூடி சிங்காரப்பதுமைகளைமா

டி யலங்காரமாயிருக்கும் மஞ்சமீதாமே இந்த அஸ்மானகிரிமேல் ஓ! ஓ! ஓ! வெட்டுண்ட பாம்புத் துண்டங்களை நேரகண்டிட்டேனே.

மநுநீதிசொல் தரு சுருட்டி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

துண்டங்கள்கண்டேனே - நாகசர்ப - துண்டங்கள்கண்டேனே.

அநுபல்லவி.

மண்டலத்திற்போதவாதித்தமந்திரி போல்
உண்டென்றுரைத்திடயென்றுமில்லை மெய்யே (துண்ட)

சரணங்கள்.

மன்னன்பூமியில்னம்வாழவகை செய்தான்
ஒன்னலன்விட்டஉபாயத்தையுஞ் செய்தான் (துண்ட)
கொல்லும்விடமன்னங்கொற்றேன்பொசிக் காமல்
வல்லவன்கைக்கொண்டான்வர்மமிசைக் காமல் (துண்ட)
வந்தசர்ப்பத்தைவாளாற்றுண்ட மிட்டானே
இந்தநிதெல்லாமின்றுவெளி விட்டானே (துண்ட)
அவனவன்செங்கரச்சுண்டுவிர லிதோ
பிணக்குற்றவேர்தன்பெட்டாவார்பார்த் திதோ (துண்ட)

மநுநீதிசொல்விருத்தம்.

சாதவிதரணிபுலபோதவாதித் தன்சொன்னதுண்மையையாதரணியாளும், புரவலனேவிடம்நிறைந்தபற்களுவும்புண்டலையுமுடலாறுப்போன துண்டம் அரவமுடன்வெட்டுப்பட்டவிரலும்பாரீர் ஐயோராம்பழியுனாக்கவடுத்திடாது, குரவர்களிலுங்காக்கவந்தோனல்லால் கோபமகன்றகமுவப்புக்கொள்ளுவீரே.

வசனம்.

கேளீர் அளகேந்திர பூபதியே மெத்தவல்லவனாகிய போதவாதித்தன் சொன்ன துண்மையே இதற்குதிட்டாந்திரம் வாளால் வெட்டுண்ட பாம்புத்துண்டங்களையும் பாரீர் ஐயையோ விஷமிருக்கும்பாந்தள துதானே இதோடுவெட்டுண்ட விரலிதோ பாரீர் நம்குற்றஞ்சொல்லுவது தருமமா இருக்குமந்திரிகளி லுண்மையானவ னந்தபோதவாதித்த னென்றெண்ணுவீர் மன்னவா.

இராஜன்சொல் பத்தியம்.

பேருலகிலெலெக்காத்தபெருமைகுணமந்திரியே பேதம்நானுன்மீதுபேணவில்லை, சிறிலனும்போதவாதித்தனேமடமையாற் சினந்துரைத்திட்டதுஞ்சீதினதெலாம், ஆரியரேஐயனேஆதாரமெய்யனே அரசேயென்னிருவிழியானசெய்தீ, தாருமனதிருகரந்தப்பிதம்பொறுத்திடாய் தையலாளுனாத்திட்டசங்கைபதனில், சாற்றிட்டமொழியெலாந்தந்தைமொழிபோல் சேற்றமில்லாமனுன்சிந்தைகளிப்பாய், போற்றிநீசெய்தநலம்பூவில்புகழே ஏற்றிடுஞ்சுடர்பெருமணியே.

இராஜன்சொல் கண்ணி ஆனந்தபைரவி. தாளம் - ஆதி.

கடல்சூழுலகையின்னங்கண்மாநானுனுதற்கு
காத்தமந்திரி போதவாதித்தா - எனக்

சான்றிதைத்தவிர்த்தமாளியேஉனைவீணாய்
 காடகனென்றேனே போதவாதித்தா
அடலூற்றமந்திரியுன்போலரியதவஞ்செய்தாலும்
 ஆர்கிடைப்பார் போதவாதித்தா - என
தப்பனேஉந்தனைஅசடனென்றும்பலவா
 றறைந்தேன்பொறுப்பாய் போதவாதித்தா
தந்தைதாய்செய்தபுண்யத்தானேஎனக்குக்கிடைத்தாய்
 சதிசெய்தாய்யென்றேன் போதவாதித்தா
சங்கரிதுர்க்கையன்னைசாற்றியவமடுகள்
 தடுத்தாஈதித்த போதவாதித்தா
இந்தநலங்காணுமலுந்தனைதூஷணித்தேன்
 இப்பிழைபொறு போதவாதித்தா - நா
னேகும்வேளையென்பின்னிவாகாவந்தன்னப்பிடி
 ஏந்திச்சென்றாய் போதவாதித்தா
ஆலமுற்றதறியேனருந்தாமலெனைக்காத்தாய்
 அறிவிற்சிறந்த போதவாதித்தா
அநியாயமாகவிஜயனம்புப்பொதியனுப்ப
 அதையுந்தடுத்தாய் போதவாதித்தா
மேலுமெனைக்கடிக்கவிஷவாய்வந்தபாம்பை
 வெட்டிக்கொன்றாயே போதவாதித்தா - மாது
மேல்விழுந்தஇரத்தம்விடமாகுமென்றதையும்
 விரலாலெடுத்தே போதவாதித்தா
விரல்பட்டகுற்றமென்றதையுந்துணித்தெறிந்தாய்
 வீரமிகுத்த போதவாதித்தா-ஓ! ஓ! ஓ!
மெத்தவலிக்குதோஉத்தமனேசெங்கரம்
 விளம்புமன்புறும் போதவாதித்தா
பரிவாய்சுண்டுவிரலைப்பாராமற்றுணித்திட்டு
 பதைபதைத்தாயோ போதவாதித்தா - இந்த
பாவத்திற்கென்னசெய்வோமாவலாயுன்னைவீணாய்
 பங்கமுரைத்தேன் போதவாதித்தா
இன்றல்லோநீசெய்தநன்றியறிந்தேனய்யா
 ஏதம்வையாதே போதவாதித்தா
என்னரசுந்தேசமெல்லாமுனதுசொந்தம்
 ஈதுண்மையே போதவாதித்தா
அன்றுதொட்டின்றுவரையென்றுமேநீயென்றென்
 அகத்திலெண்ணமே போதவாதித்தா - இவ்த
அரிவையுமறியாமற்புரையுமாத்தானிது
 அறிவின்மைகாண் போதவாதித்தா

போதவாதித்தன்சொல் விருத்தம்.

செயனுன்றந்தைநீயே சினந்தறைந்திட்டதெல்லாம்
நேயமுடன்தெண்ணிக்கொண்டேன் நிருபனேவுந்தனிந்த

மாயவன்றங்கைதுர்க்கை வரவருளாற்றடுத்தேன்
தாயமுடியபொற்றாளைச் சந்ததம்போற்றுவீரோ.

வசனம்.

கேளீர்மகாராஜனே அடியேன்பிள்ளையுந் தாங்களுந்தையுமா யிருக்கவோ பித்து சொன்னதெல்லாம் அன்பானவார்த்தை யென்றேயிருக்கிறேன் ஆகுல்வ ந்த துன்பங்களெல்லாம் ஜெகதம்பாவாகிய துர்க்கையருளால் தடுத்தேனன்றி எ ன்னாலொன்றுமில்லை துர்க்கையம்மனை யநுதினமு மறவாதிருப்பீர் மன்னவா.

இராஜன்சொல் விருத்தம்.

கொலுநிறைந்தபெரியோரேகுருக்கள்மாரே கொற்றவரேமறையோரே நீ றக்கேளீர், வலுமையிகும்போதவாதித்தனைப்போல் வரும்மிடைதடுத்திட்டோர் வனைகடற்சூழ் உலகிலுண்டோயிந்நிபுணன்செய்தநன்றிக் குபகாரம்நான்செ ய்வதொன்றுங்காணேன், தலைமையுடனெனதரசயாளுஞ்சொந்தந் தானிவனே யீதுண்மைசாற்றினேனே.

வசனம்.

கேளீர்க ளிராஜராஜர்களே பூசுரோத்தமர்களே பெரியோர்களே ஆ! ஆ!வ ல்லவனாகிய போதவாதித்த னெனக்குச்செய்த நன்றியைப்போ லெவர்கள்செ ய்வார் ஆ! ஆ! நான்செய்த தவப்பலனென் றெண்ணலாம் ஆகுலிந்நன்றிக்கு பிர தியுபகாரம் என்னரசாக்ஷி சுதந்தரமிவனுக்கல்லாமல் மற்றவரொவருக்குமில்லை யே இதுவேஉண்மை இதுவேஉண்மை.

இராஜன்சொல் விருத்தம்.

– சித்தாமீதிலென்னை ஆளவந்திட்டபோத
வாதித்தனென்றெண்ணாமல் வசைத்தவீண்பங்கஞ்சொன்ன
பேதையாளமிர்தவல்லி பெட்புறவந்த நிதை
ஓதவேண்டியதால்வீரா ஓடியழைத்திட்டாயே.

வசனம்.

பூலோகத்திலி லெனை ஆளவந்த போதவாதித்தனென் றெண்ணாமல் வீண்கு ற்றஞ்சொன்ன அமுர்தவல்லிக் கித்தீமனை செய்தநன்றியை சொல்லவேண்டும் அடாவீரகட்டி சீக்கிரமாயோடி அழைத்தோடி வாராயடா.

கட்டியன்சொல் வஞ்சித்துறை.

தன்னிகரில்லா, மன்னுசரணம், இக்கிடஞ்செல், உன்னையையழைப்பேன்.

விருத்தம்.

தெரிவையர்க்கரசே, இருசரண்சரணம், நிருபனுரைழைத்தார், வருகுவாயம்மா.

அமுர்தவல்லிசொல் கொச்சகம்.

வள்ளலெந்தனையழைத்த வர்மமென்னமோதெரியேன்
வெள்ளிவிடைமீதேறும் விமலாமுதலமைச்சன்
கள்ளிரவிற்செய்தசதி நாயகன்பாலோதினவக்
கள்ளமறிந்திடவேண்டிக் கருதினரோசிவமே.

வசனம்.

அரகரா சிவடபவாகன சங்கரனே மன்னவனெனை யழைத்த காரணமேது நடுஜாமவேளையில் பாதகனாகிய போதவாதித்தன் செய்தவஞ்சனையை யறியிலே ண்டியெனை யழைத்தாரோ.

அமுர்தவல்லிசொல் தரு - இராகம். எமுனா-கல்யாணி. தாளம் - ஆதி.

பல்லவி.

மன்னனழைத்ததேனோ - எனையினிவாய் - மன்னனழைத்ததேனோ.

அநுபல்லவி.

அன்னவர்த்தியெந்தனை அரிவையாய் படைத்ததும்
பின்னமாயுலகுளோர்பேசப்பே றெடுத்ததும் (மன்ன)

சரணங்கள்.

போதவாதித்தபாவி - எனைச்செய்த - பொல்லாங்கிற்குநான்கூவி
தேமன்னனைத்தாவி - வந்தவிதியை - நிகழ்த்தினனலோவி
வாதனையிட்டவனைவாங்குவேனுயி ரென்றுரர்
ஏதுகொலுசமுகமென்னைவர நவின்றுரர் (மன்ன)
குற்றஞ்செய்ததைவந்த - மந்திரிகளிடங் - கூறிடவேவின்பந்த
கற்றகதைகளந்த - பத்தர்களுங் - கழறிச்சென்றுரிந்த
உற்றத்திற்கோமகுணன் ஓ! ஓ! ஓ! மகிழ்ந்தாரோ
பற்றுதென்மனதுபாதகியென்றி கழந்தாரோ (மன்ன)
பாதியில்லாமனுவாச்சோ - நான்சொன்ன - பங்கம்வியர்த்தம்போச்சே.
முழுதும்பெண்களுகேச்சே - எனைநகைப்பார் - மூடன்செய்ததென்பேச்சே
அழுதபையமென்றசேய்க்காயெமனை புரைத்தோய்
செழுமதியொடுகெங்கைசெஞ்சடையிற் றரித்தோய் (மன்ன)

அமுர்தவல்லிசொல் கட்டளைக்கலிப்பா.

பல்லுயிரெலாமீன்றசதுர்முகன் பாவியைப்புவிமீதிற்படைத்ததும்
வல்லவாறடியாள்தனக்கிவ்விதி வாய்த்ததையெண்ணிமாளாக்கவலையாய்
சொல்லருமீசனைத்தொழும்வேளையிற் றுரிதமாய்வரச்சொன்னவிதமென்னே
அல்லதென்மிசைகுற்றமோமகுணா அஞ்சலித்தேனருள்புரியரசே.

இராஜன்சொல் கட்டளைக்கலிப்பா.

வந்தடிபணிந்திட்டவுயிர் மானேயமுர்தவல்லியேபூவினில்
மந்திரிபோதவாதித்தன்செய்தநன்றி வண்மையென்சொல்வேன்வஞ்சமதல்லவே
அந்தமாமறையாவும்வகுத்திட்ட அயனிவனையளித்தானமக்கென்றே
சிந்தைதனிமகிழ்வாயையம்நீக்கியே திங்கொன்றில்லையான்செப்பினதுண்மையே.

அமுர்தவல்லிசொல் கட்டளைக்கலிப்பா.

நன்மைசெய்தவ்மைச்சனென்றுரைக்கும் ஞாயமெவ்விதம்நானறியேன
தை, வன்மமானதென்றெண்ணியேமகிபா மாபாவிசொன்னவார்த்தையும்பொய
த்ததோ, தன்மமன்னெறியாய்ந்தப்பெரியோருஞ் சாத்திரமுமுண்மைசாற்றுவ
திந்தாரோ, என்மனதையம்போயுவப்பாகிட வியம்புவீருதாளிறைஞ்சினனே.

இராஜன்சொல் விருத்தம்.

அன்னமுதற்பிடியில்விடமானதிதும்அரவமெனத்தீண்டவந்ததல்லதும்பின்
ஒன்னலருகியவிஜையன்விட்டதும் ஒன்றுமெனைச்சேராமலுலகையாள, நன்
னயனும்போதவாதித்தமந்திரி நாயகியேதடுத்திட்டநன்மையெல்லாம், இன்னவ
கையென்றறைவேன்கெட்டியாய்கி இயம்பினதுகள்ளமென்றெண்ணுவாயே.

வசனம்.

கேளும்பெண்ணே யமுர்தவல்லி முதற்பிடிசாதத்தில் விடம்வந்ததும் நாக
சர்ப்பமெனைக் கடிக்கவந்ததும் பகைவருகிய விஜையனனுப்பிய அம்புப்பொறிவா
சிகளையுந்தடுத்துப் பூலோகத்திலெனை யிருக்கும்படி இரக்ஷித்த போதவாதித்
தன்மீது நீசொன்னகுற்றம் வந்ததன்பங்களை யெல்லாஞ் சொல்லுவேன் கே
ளாய்.பெண்ணே.

இராஜனுக்கும் அமுர்தவல்லிக்குந் தர்க்கம்.

தரு. இராகம் - கருட்டி. தாளம் - ரூபகம்.

அமி. அன்னத்தினில்விடமுமரவந்தீண்டவந்ததும்
அடியாள்கமகிழ மன்னவா - பொல்லா
வமநிம்விஜையன்றுதுமகன்றதெவ்விதமையோ
அன்பாயினியுரைப்பீர் மன்னவா
இரா. மின்னிடையேயிர்ம்மன்வெகுநாள்தவமிருந்து
வீரன்போதவாதித்தனை மயிலே - இந்த
மேதினில்மேல்நமையாளப்படைத்தாரே
விடையாளனார்கிருபையோ மயிலே
அமுர். போதவாதித்தன்பிழைபொய்த்ததோநமைக்காக்கப்
பூவிலுதித்தானென்றீர் மன்னவா - நீர்
புகழ்ந்துரைப்பதெவ்விதம்மதிபதியேவந்த
பொல்லாங்கைனைத்துஞ்சொல்வீர் மன்னவா
இரா. மாதரசியமுர்தவல்லியேநேற்றிரவில்
மந்திரிபோதவாதித்தன் மயிலே - நகர்
வலம்வரும்வேளையில்வடதிசைவாழ்நாக்கை
மாதரியமுதாளா மயிலே
அமுர். நாளுமிடரில்லாமல்நமைக்காக்குஞ்ஜெகதம்பாள்
நாரணியமுதனேன் மன்னவா - நாக்கை
நாயகியபிஷேகர்தானதியான நண்பட்டா
நவிலுவீரெனக்கதை மன்னவா
இரா. கேளும்பெண்ணேயமுதகூக்குரலதிர்ந்திட
கேண்மையாய்ப்போதவாதித்தன் மயிலே - சென்று
கேட்கநாக்கையென்றிடவுநாரியமுதனை
கொர்த்தவேண்டுமென்றுரை மயிலே
அமுர். பொற்றரியகௌமாரிபோதவாதித்தன்பால்
புகலியதென்ன மன்னவா - வந்த
பொல்லாங்குகளடுத்திட்டதெந்தவிதமெனக்கும்
புலன்மகிழவுரைப்பீர் மன்னவா
இரா. ஊற்றமுடனையகாலையில்நம்முர்வாழ்
ஒருவனிக்குடித்தலைவன் மயிலே - எனக்
கொண்டையாய்செற்றிர்க்கோட்டையிவாசலில்
உண்டாம்விஷமென்றுளா மயிலே

அமிர். குடித்தலைவன்றரும்நெற்கோட்டையில்விஷம்வந்த
குத்திரமெப்படியோ மன்னவா - இந்தக்
கொடுமையையறியாமல்கொல்லநினைந்ததைக்
கொடுத்தானேபாதகன் மன்னவா

இரா. கொடுத்ததானியம்வினைத்திட்டவயலிலன்று
நெளிகளுங்கார்க்கோடகன் மயிலே - இவர்
கோபமிருத்துசமராகிடவேவிடங்
கொப்பளித்தோர்கதிர்சேர மயிலே

அமிர். வந்தபுதியநெல்லைமகிபாநீர்பொசித்திட
மனதானீரோசொல்வீர் மன்னவா - விஷம்
வாய்த்தகுததிந்தன்னமருந்தாமற்போனீரோ
மாதங்கியருளுண்டோ மன்னவா

இரா. மந்திரிபோதவாதித்தன்பாலன்னைசொல்ல
வரும்விஷஅன்னத்தை மயிலே - எந்த
வகையாய்த்தடுப்பதென்றுமாலிபொற்கழலினை
வந்தனைபுரிந்தானு மயிலே

அமிர் கருணைமிருந்தநூர்க்கைகழல்பணிந்திடவம்பாள்
கழறினநலமென்ன மன்னவா - விடங்
கண்டீரோஅலல்தன்னமுண்டீரோஉமக்குமுக்
கண்ணன்றுணையானுரோ மன்னவா

இரா. பரிவாகவேயன்னமருந்துமுதற்பிடியில்
படும்விஷமாமென்று மயிலே - தூர்க்கை
பகரினதுண்டாமெய்யசனம்யான்பொசிக்காமுன்
பார்த்துவந்தானமைச்சன் மயிலே

அமிர். அசனம்நீருந்துமுன்னமைச்சன்போதவாதித்தன்
ஆலமுற்றிருப்பதை மன்னவா - உன்பா
லவறந்துத்தெத்துண்டோதூரந்தராநாம்செய்த
அருந்தவம்பலித்ததோ மன்னவா

இரா. இசைபெறுமந்திரியையென்றேடன்னமருந்த
இயம்புமுதற்பிடியை மயிலே - தந்தா
லீதென்பெரும்பாக்கியமெனதிருகரமேந்தி
ஈய்ந்தேன்விடவசன மயிலே

அமிர். ஜெகராஜர்போற்றிடுந்திண்புயனேசொன்ன
நீதறிந்தேனின்ன மன்னவா - விஜ
தேசத்தையாளுவோன்செய்தவஞ்சனையென்ன
செப்புவீரதனையு மன்னவா

இரா. அக்கொர்வளுகியபகைவன்விஜயராஜன்
அதிரசபாண்டமொன்று மயிலே - அதை
யனுப்புவான்மத்தியானந்திறந்தால்யானிறப்பதா
யம்பிகைசொன்னாள் மயிலே

அமிர். பகைவனும்விஜயன்பபோவிமேவிய
பாண்டத்தையறியாமல் மன்னவா - நீர்
பற்றித்திறந்ததுண்டோசத்திதுர்க்கைசொன்ன
படிவந்ததுமெய்யோ மன்னவா

இரா. மத்தியானமதிரசக்குடம்வந்ததைப்போத
வாதித்தன்றடுத்திட்டான் மயிலே - அந்த
வகைகேள்சிறையிருந்தொன்றனைத்திறக்கச்செய்தானும்
வந்ததுதருமாண்டார் மயிலே

அமிர். சித்திரமஞ்சமேலிருவோருந்துயிலும்போது
நிசம்பள்ளிக்குள்வந்தேன் மன்னவா - இந்த
செய்தியையறியாமல்மாபாவிகலங்கினேன்
செப்புவீரெனக்கினி மன்னவா

இரா. இஞ்சொல்லுடையமாதேஇரவில்முதற்சாமத்தி
லிருவருந்துங்கையில் மயிலே - சர்ப
மிறங்கியேயெனைவிஷப்பரிசைசெய்யுமென்றே
இயம்பினளாந்துர்க்கை மயிலே

அமிர். செஞ்சடையாள்துர்க்கைதிருவருளிருந்திட
நீதென்றுமாவதில்லை மன்னவா - சற்பஞ்
சேறியிறங்கினதோபாரினையாள்வேந்தே
தியங்கினதேயென்மன மன்னவா

இரா. மங்கையேயெனைத்தீண்டவரும்பாம்பைச்சதைக்க
மந்திரிபோதவாதித்தன் மயிலே - செங்கை
வாளால்துண்டமாடின்மார்மேலிரத்தத்துளி
வாய்த்ததாமீதுண்மை மயிலே

அமிர்தவல்லிசொல் கொச்சகம்.

பஞ்சணைமேல்நாமிருவர் பாரசித்திரைசெய்கையினில்
அஞ்சரவம்வந்ததுவும் காடிமுதலமைச்சன்
மிஞ்சிதுண்டாய்வெட்டிடவென் மீதிரத்தம்வீழ்ந்ததென்றீர்
வஞ்சயில்லையோமருளு மனதிலுவப்புற்றேனே.

வசனம்.

கேளீர் மன்னவா பஞ்சணைமேல் நாம்தூங்கும்போது பாம்பானது கடிக்க வந்ததும் அதைபோதவாதித்தன் வெட்டினதும் என்மார்மீது இரத்தத்துளி வீழ்ந்ததும் மெய்தானோ இக்கன்றிக்கு மிகுந்த சந்தோஷமானேன் மன்னவா.

இராஜன்சொல் ஆசிரியவிருத்தம்.

சுந்தரமிகுந்திலகுளவ் அரியவன்னமே சொல்லுவேனீதுண்மையே
துணைவளுகியபோதவாதித்தனேந்திய தோதகஞ்செப்பும்வசனம்
தந்திரமதிந்திடவெயிச்சிறைச்சாலையன் றுனுன்னைவீய்ந்தேனவனுந்
தயங்கியுயிர்போய்வீழ்ந்திறந்ததைப்பார்த்திடாய் சகசமாம்பொய்யல்லவே
அந்தமுடனேவிசையுனேதுதாழியிதே அறியவேண்டிச்சேர்வையை
அழைத்ததைவிளவினேனைவந்ததும்நடந்ததும் அறைந்தனன்னவெனுக

கந்தரக்குழலேநாம்ஞங்கையில்கழித்திடக் கருதிவந்திட்டபாம்பின்
கனத்ததுண்டங்களைப்பார்த்திடாய்சடையினில் கங்கையுடனேசீதனச
சந்திரனையணிபரமனாருருளும்மமைநாளுந் தாகூயில்லாமல்காக்குஞ்
சங்கரிசடாக்ஷரிகிருபாகரிமனோன்மணி சகலபுவனத்தாண்டவி
அந்தரியெனுந்துர்க்கைஅன்னை துயவும்சமது வாதியோர்செய்ததவமால்
அணிபெறும்போதவாதித்தனமைசேர்ந்தனன் ஐயமினிகொள்ளவேண்டாம்
பந்தமாயுனதுமார்மீதில்வீழ்ந்தக்குருதி படுமோசமாகுமென்றே
பாணியின்சுண்டுவிரல்நகத்தாலெடுத்தவன் பட்டதால்குற்றமென்றே.

அமிர்தவல்லிசொல் கொச்சகம்.

பாதமிரண்டினேன் பங்கமுறைத்தேன்வீணாய்
ஆதனைமேலெங்களை நீயாளவந்ததேவனென்றே
ஏதுமனதெண்ணும லியம்பினதெலாம்பொறுப்பாய்
போதவாதித்தனெனும் புண்யபுருஷோத்தமனே.

வசனம்.

ஐய்யயோ கொடும்பாதகிநானே வீணகுற்றங்களைச் சொன்னேனே அப்பா போதவாதித்தா பூலோகத்திலெங்களைரக்ஷிக்கவந்த தேவனியென்றெண்ணமல் சொன்னகுற்றங்களை பொறுப்பா யப்பனே.

சங்கராபரணம் கண்ணி.

ஐய்யயோபிழைபொறுப்பாய்மந்திரி-உன்னை-அறியாமல்பாவிநான் மந்திரி
வைதேன்குற்றங்களெண்ணிமந்திரி-இந்த-வையகமீதிருக்க மந்திரி
எங்களையாதரிக்கமந்திரி - வந்தாய் - என்றுநான்பேணமல் மந்திரி
சங்கைபலவுரைத்தேன்மந்திரி - இந்த-தப்பிதத்தைப்பொறுப்பாய் மந்திரி
உனையன்றித்துணையுண்டோமந்திரி-எங்க-ளுடற்குயிர்நீயல்லால் மந்திரி
மனதிற்கோபம்வையாதேமந்திரி-இந்த-மாபாவிசொன்னதெல்லா மந்திரி
வெகுநாள்தவஞ்செய்தாலுமந்திரி-உன்போல்-விற்லுற்றோர்கிடைப்பாரோமந்திரி
அகிலத்திலுன்புகழ்மந்திரி-என்று-மழியாமல்நிலைத்திடும் மந்திரி
சங்கரனாருளோமந்திரி-எங்கள்-தாய்தந்தையர்தர்மமோ மந்திரி
எங்களிடம்நீசேர்ந்தாய்மந்திரி-வந்த-இடரகற்றியேகாத்தாய் மந்திரி
மஞ்சமேலரசனுமந்திரி-யானும்-மாளாநித்திரைசெய்கையில் மந்திரி
நஞ்சரவம்வந்ததுமந்திரி-அதை-நாடிநீவெட்டினது மந்திரி
குருதித்துளியென்மார்மேல்மந்திரி-வீழ-கொல்லுமென்றேநினைந்து மந்திரி
விரல்நகத்தாலெடுத்தாய்மந்திரி-இந்த-மேன்மையையறியாமல் மந்திரி
அணிந்துன்மேல்வீண்பழிமந்திரி-சொன்ன-தோதகம்பொறுத்திடாய் மந்திரி
பணிந்துநீநகர்வலமந்திரி-வர-பகவதியமுதது மந்திரி
அன்னையருள்பதம்போற்றமந்திரி-வரும்-அமடையுனக்குச்சொல்ல மந்திரி
ஒர்னலன்செய்தகுதுமந்திரி-அன்ன-முன்னுவதில்லிடமு மந்திரி
வந்ததிங்குகளெல்லாமந்திரி-தடுத்த-வகையாவுமன்னன்சொல்ல மந்திரி
சிந்தைமிக்ககளித்தேன்மந்திரி-நின்போல-நீரொவருண்டில்லை மந்திரி

☞ கஅஈ-கஅச-வது பக்கத்தில் இராஜன்சொல் ஆசிரியவிருத்தத்தின்கீழே அமிர்தவல்லிசொல் கொச்சகத்தின்மேலே இந்த இரண்டுவரியையும் சேர்த்துப்பாடிக்கொள்க.

சிந்தித்துமதனையும்வெட்டினான்வல்லவன் செங்கைவிரலும்பார்த்திடாய்
தெரிவையேநீசொன்னமொழியெலாம்பிழையென்று நீரனைவழுத்திடாயே.

இராஜன்சொல் விருத்தம்.

சதுர்மறைமேனிர்த்தமிடுமநந்தசோதி சங்கரனாருளாலித்தரணிமீது, மதிபூகியாயெனக்குவாய்த்தபோத வாதித்தனின்றுசெய்தநலமெண்ணமல், அதிகசினமானதுவுந்தெரிவைகுற்ற மறைந்ததெவ்வாறெனில்ரக்ஷித்தவர்கடம்மை, விதியுடனேப்க்ஷித்தக்கதையீதாச்சே விற்பனரோவேந்தர்களோவிளம்புவேனே.

வசனம்.

நான்குவேதமீதும் நடனமிடுஞ் சோதியாகிய பரமசிவனருளாலிவ்வுலகமீதெனக்கருமையாய்க்கிடைத்த போதவாதித்தன் செய்தநன்றியை யெண்ணமல் கொடுங் கோபமானதும் பத்தினியாள் சொன்னகுற்றத்தையு மெண்ணில் இரக்ஷித்தவரைப் பக்ஷித்த கதையொன்றுண்டு கேட்டுவருவீர் சபையிலுள்ளோரே.

இராஜன்சொல் வெண்செந்துறை.

சாகரஞ்சூழ்ந்திடுமுலகிற் சாற்றுமுத்திரைநகர்வாழ்
ஆகமவேதியனொருவ னருஞ்சேயருடனே
யாசகஞ்செய்தேபிழைத்தெந் நாளுஞ்சீவித்திருக்கத்
தேசத்தைவிட்டேவனங்க டேடிச்சென்றான்விரைவாய்
ஆம்பலரிசிகொள்ள வகமகிழ்ந்தேகாத்திருந்தான்
நீம்புவர்தனைக்கேளீர் நிமிருத்துஅவ்வனமே
பற்றியெரிந்திடுஞ்சமையம் பாம்பொன்றுனதனலில்
சுற்றிவிழுந்தேதிகைக்குந் துயரிவன்பார்த்தாற்றமல்
பரிதனைக்கோலாலெடுத்தே பாரின்மிசைவிடுக்க
நிறைந்தபடும்விடப்பனகம் நின்றவனைமறுத்து
பசிக்குவெகுநாளாகப் பார்த்திருந்தேனீகிடைத்தாய்
பொசிக்கமனதானெனென்று புகன்றதேயரவம்
வேதியனிம்மொழிகேட்டு விளம்பிடுவதென்னென்னில்
ஓதியநற்பனகமேயென் னூர்க்கோடிப்பெண்டு
புத்திரர்களிடத்துரைத்துன் பொசிப்பாகுவேனீ
உத்தாரங்கொடுவென்று ளமகிழ்ந்தேசர்ப்பம்
தன்றலையில்வைத்திருந்த தாழ்விலாமாணிக்கந்தனை
அன்றவனுக்கீய்ந்துவர அரவமறைந்திடவே
தீனஞ்சியமறையோன் சிந்தைதனிற்களிப்பாய்
ஞானபரனருளென்றந் நகர்நாடிச்சென்றே
மனைவியையுடன்சேயர்களைவன் மையுடனேயழைத்து

கனமுடனேமாணிக்கக் கல்லையவர்பாலீய்ந்தே
பனகமிடம்போய்மறையோன் பசிக்குவந்தேனென்றனைந்தான்
மனமகிழ்ந்திரக்ஷித்தோய் வஞ்சமுனைச்செய்ய
ஏற்காதென்றரவமறைந் தேகினதாலவ்வகையாய்
பார்க்குளெந்தமைக்காத்த பண்புபெறும்போத
வாதித்தன்செய்தால வாய்மையறியாமல்
பேதித்துவஞ்சமெண்ணேன் பேதைமையுமீதாமே.

இராஜன்சொல் விருத்தம்.

நாளிலமேல்போதவாதித்தமந்திரி நன்றிசெய்ததறியாமல்நங்கைசொன்ன, தனமதாற்கொடுங்கோபமானேனென்ந னிதயத்திலுற்றவையமேதம்போக, அன்னபம்போனதையுமறிருன்சொல்ல அகமகிழ்ந்தோமாதவியென்னை நார்க்கை, ஞானியிருதாள்பணிவோமந்திரிமாரோ யவமிர்தவல்லியோடேப்போம்வாராய்.

வசனம்.

ஆ! ஆ! சபையிலுள்ளோரே போதவாதித்தன் செய்தநன்றியை யென்னு மல் கொடுங் கோபமானதும் போதவாதித்தனை அவமானமாகப் பேசினதும் இப்பாவந்திரும்படியாயும் எனக்காகும் துன்பத்தை முன்னிட்டுச்சொன்ன பரமேஸ்பரி நார்க்கையம்மனாலயந்தேடி தோத்திரித்து வருவோம் வாராய்பெண்ணே யமிர்தவல்லி அப்பா மந்திரிமார்களே.

தரு. இராகம் - காம்போதி. தாளம் - ஆதி.

பல்லவி.

நடப்போம்வருவீர்மந்திரிமாரே - நார்க்கை - நாயகிவாழாலயம்நேரே.

அநுபல்லவி.

அந்தத்துன்பமனைத்துமறைந்த வம்பிகை பதம்
பந்தித்திருகரத்தினு லேத்தித்துதிப்போ மிதம் (நடப்)

சரணங்கள்.

மந்திரிபோதவாதித்ததீரா - உன்னை - வசைத்ததெல்லாம்பொறுத்துவாராய்
சுந்தரமேனியென் றுனையல்லாலவ குண்டு
அந்தரியாமனை யாலயந்தேடி யின்று (நடப்)

மதுரிமையமைச்சேசிசொன்ன-உ.வ-மானக்கதைகளெலாமுன்னை
யினைநகர்நிலைகக்கின்ற திப்பபூனையச் சுபந்தேன்
உனதுமொழிப்படியாச் சுபகரமாய் மகிழ்ந்தேன் (நடப்)

கோபத்தாதுங்கலையுங்கடுத்தேனே-இந்த-துர்மம்பொறுப்பீர்கிறுவடித்தேனே
ஆபத்தறிந்தைகாத்ததறியாமலையையோ நான்
பாபத்துக்குள்ளாகினேன்பாருலகமீதிற் றுன் (நடப்)

வாத்ரீயமிர்தவல்லியே - போத - வாதித்தனன்றிகண்டாயோமெல்லியே
எதுமறிந்திடாமலியம்பினுய் கொடும்பழி
மாதங்கிதுர்க்கைவாழும்வண்பதிபோ மிவ்வழி

இராஜன்சொல் தேவாரம்.

திருவளருமண்டபகிரண்டமெல்லாம் திகழ்பெருகுமடியொளியுஞ்செஞ்சிலம்பும், சுருதியொடுமாகமங்களறையொணுத சுந்தரியேயன்பருக்குத்துணையாய்நாளும், வருமிடர்போக்கியேயாதரிக்குமாலி வாலையேசியமகளேமாரிவீரி, கருணைபுரிந்தெனையாளுஞ்சுகபவானி கடையேனுன்னடிதொழுதேன்கதியாளம்மா.

விருத்தம்.

உலகிலுளபலவுடலுக்குயிருநீயே ஓதரியமெய்ஞ்ஞானவுத்தியாயே,அலகைமுலையோடாலியருந்திமேனின் ஞயுதித்ததங்கையாமளைமுக்கண்ணி, கலகமிடுமசுரர்குலம்வேர்களைந்த கன்னிகையேயோகினிமாயக்கங்காளி, சலசமலரிருதாளைத்தாவிப்போற்றுந் தமியனிடர்கடிந்தாண்டதாயேபோற்றி.

தரு. இராகம் - சௌராஷ்டிரம். தாளம்-ஆதி.

பல்லவி.

பொன்னடிசரணம்-அன்னையேயுன்தன்-பொன்னடிசரணம்.

அநுபல்லவி.

செந்நெல்வளர்ந்திலகுஞ்சீராரளகைநகர்
தன்னில்வாழ்ந்திடுஞ்சகதம்பாவடியனையாள் (பொன்)

சரணங்கள்.

கருதலன்செய்த சூதும் - புதியநெற் - கதிரிலான தீதும்
அரவப்பரிட்சைக் கோதும் - கொடியதுன்ப - மனைத்தும்நன்னீதி யோதும்
அறிஞன்போதவாதித்தவமைச்சனிட மறைந்தே
பெருமிடரகற்றியேபிரகாசமாய் நிறைந்தே (பொன்)

போதவாதித்தன் மீது - தெரிவைசொன்ன-புரைதனக்கேவின் வாது
ஓதித்துடித்த போது-துணைவன்செய்த - உபகாரமாய்ந்த சூது
தீதனைத்துமறிந்தேசிந்தைமிகமகிழ்ந் தேன்
வேதபாராயணியேவீரனைப்போற்றிப்புகழ்ந் தேன் (பொன்)

பிழைபொறுப்பாய் மாலி - வேதாகமம் - பேசரியநன் னூலி
அழகொழுகுந்திரி சூலி - அன்பரிடரை - யகற்றும்பிரணவ மூலி
தொழுதிறைஞ்சிடுமுன்றொண்டனையெந் நாளும்
பழுதிலாதசோதிபரமேஸ்வரியே யாளும் (பொன்)

அமிர்தவல்லிசொல் தேவாரம்.

ஆதியேபோற்றிபோற்றியன்னையேபோற்றிபோத
வாதித்தன்மீதுரைத்தவசைபொறுத்திடுவாய்போற்றி
தீதுகளனைத்தும்போக்கிச்சித்தியோகாயாண்டமோன
சோதியேபோற்றிபோற்றிதுணையடிபோற்றிபோற்றி.

மநுநீதிமந்திரிசொல் தேவாரம்.

நங்கையர்க்கரசேபோற்றிநாரணிபோற்றிபோற்றி
சிங்கவாகினியேபோற்றிசீர்மிகுமம்பாபோற்றி
திங்கள்வேணியன்றன்னோடுசிதம்பரத்தினில்நடித்த
மங்கையேபோற்றிபோற்றிமலர்ப்பதம்போற்றிபோற்றி.

போதவாதித்தன்சொல் தேவாரம்.

சுந்தரிவேயெண்டோளிகலையானந்தி அடல்சிங்கவாகினியேயம்பணத்தி, சுந்தரியேசக்ரமொடுகதைவாளேந்தும் சூலியேஜயமகளேசுகுணசீலி, வந்தவிடர்கடிந்தாளுங்கௌரிவீரிமாதவத்தோர் நிதம்போற்றும்வாலைப்பெண்ணே, கர்தமலர்அவிரின்பொற்சரணைத்தாவும் கடையேனையாண்டருள்முக்கண்ணிபோற்றி.

போதசந்திரன்சொல் தேவாரம்.

தாரணியளந்தமாயன் றங்கையேசூலபாணி
காரணிவேதமூலி கருணைவாரிதியேபோற்றி
நீரணிசெஞ்சடைச்சி நிமலியேயமலியம்பா
ஏரணிசரணைப்போற்று மென்றனையாள்வாய்போற்றி.

போதவியாபகன்சொல் தேவாரம்.

மாதவத்தோர்துதிக்கும் வாலையேபோற்றிபோற்றி
ஆதரையுயிர்கட்கெல்லா மன்னையேபோற்றிபோற்றி
சீதபங்கயத்தடஞ்சூழ் திருவளரளகைவாழ்வே
ஏதமில்ஞானக்குன்றே யிருசரண்போற்றிபோற்றி.

போதவிபூஷணன்சொல் தேவாரம்.

அரிவையர்க்கரசேபோற்றி யங்கைவாளேந்திபோற்றி
வருமரக்கரைவதைத்தமங்கையேபோற்றிபோற்றி
சுருதிநான்குஞ்சிலம்பாய்த் துலங்கிடப்பரதமாடும்
பெருமையாகியநற்றுணைப் பேணினேனுள்வாயம்பா.

ம ங் க ள ம்.

தரு. இராகம் – சங்கராபரணம். தாளம் – ரூபகம்.

பல்லவி.

மங்களம் மங்களம் – நித்தியஜெய – மங்களம் மங்களம்.

அநுபல்லவி.

கங்கையணிசடையோன்கர்த்தன்பரசு பாணி
அங்கமதாயளித்தவைங்கரவைய னுக்கு (மங்க)

சரணங்கள்.

துலங்குங்கைலைவளர்சோதியீசன் றனக்கும்
தொல்வினையகற்றிடும்சுந்தரப்பார் வதிக்கும்

இலங்கும்வேலையங்கையேந்துஞ்செவ் வேளுக்கும்
இனியவசனநயவெழிலார்தெய் வானைக்கும் (மங்க)

தாரணியையளந்ததாமோதரன் றனக்கும்
சலசமலரினுறைதாயலர்மக ளுக்கும்
ஆரணமும்பலகலையளந்தநான்முக னுக்கும்
அருங்கவிவாணர்நாவலர்நாமக ளுக்கும் (மங்க)

வருமிடரையுரைத்தமாதங்கிதூர்க் கைக்கும்
மந்திரிபோதவாதித்தவல்லசிகா மணிக்கும்
அரும்பொதியமுனிநாராயணசாமி மாலுக்கும்
அலைகடல்சூழ்புவிவாழறிஞர்க்கும் யாவர்க்கும் (மங்க)

இந்தமங்களத்தை விலாசமுதலிலும்
சொல்லிக்கொள்க.

வா ழி வி ரு த் த ம்.

சீர்வாழிநான்மறையும்வாழிநீதி..............................*
செங்கோலோச்சிடுமரசர்தினமும்வாழி.....................*
ஏர்வாழியாமனைவேதாந்திநூர்க்கை.........................*
எஞ்ஞான்றும்வாழிமுனிவோர்கள்வாழி.....................*
தார்வாழியெழில்பெருகும்போதவாதித்......................*
தன்வாழியினையவர்மூவர்களும்வாழி......................*
கார்வாழியிதைப்படித்தோர்செவியாற்கேட்டோர்.........*
கனமுடனேவாழிகலைவாணிவாழி ....*
நாலுமந்திரிவிலாச நன்குகவாழிவாழி..........*
கோலிபோய்பதித்தஅச்சுக் கூடமும்வாழிவாழி *
சாலவேதயாளுவான குமரையர்சமூகம்வாழி *
ஏலவேயிதனைக்கேட்போரெல்லாரும்வாழிவாழி

நா லு ம ந் தி ரி வி லா ச ம்

முற்றிற்று.

116605

குறிப்பு.

இயலிசைநாடகமென்னு மூன்றுதமிழ்களி னிந்நூல் நாடகத்தமிழாற்செய்ததாதலிற் பலவிடங்களில் கிராமியமொழிகள், தேசிகமொழிகள், மரூஉமொழிகள்கலந்தும் அவ்வவ்வமயங்களில். இசைக்கும் பொருள்விளங்குதற்கு மிசையநோக்கிச் சொற்களைச்சந்திபிரித்து மிகவேண்டியவிடங்களில் ஒற்றுமிகாமலும், இயல்பாகவேண்டியவிடங்களில் ஒற்றுமிகுந்தும், செய்யுள் விகாரங்கள்பெற்றும், இனவெதுகைகள் சிலவிடங்களில் அருகியுமிருக்கின்றன. அருகிய அச்சுக்குற்றமுதலிய குற்றங்கடிந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.